ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஐந்தாம்வேதமாகிய

ஸ்ரீ மகாபாரதத்தில்

சொர்க்கரோகணப்பர்வசம்பிரதாயமான

மகாவிந்தமென்னும்

வைகுந்த அம்மானை

இஃது

ம-வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்.

P. N. C. கடைகாரியம்.

N. குருசாமிநாயுடு அவர்களால்

பிடாரித்தாங்கல்

நாராயணசாமிமுதலியா ரவர்கள் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1901

சென்னை-பிரம்பூர்குயப்பேட்டை·65-வதுநெ-வீடு

உ

கடவுள் துணை.

கேட்லாக்கிலுள்ள சாமான்களின்

விளம்பரம்.

கனவான்களே! சென்னை பிரம்பூர் குயப்பேட்டை படவட்டம்மன் கோவில்தெருவு 64-வது நெம்பருடைய வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வி-பி கம்பெனியில் தமிழ், தெலுங்கு, கிரந்தம், துலுக்குமுதலியபுஸ்தகங்களும் ஸ்மார்த்த வைஷ்ணவர்களுக்கு வேண்டும் புஸ்தகங்களும் பால்யர்களுக்கு வேண்டும் காலேஜிப் புஸ்தகங்களும் உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டும் ஆக்டுபுஸ்தகங்களும், இசுலாமானவர்களுக்கு வேண்டும் தமிழ் எழுத்தில் துலுக்குபுஸ்தகங்களும், காவலர், பாவலர், நாவலர்யாவருக்கும் வேண்டும் இலக்கணம், இலக்கியம், புராணம், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, அந்தாதி, கலம்பகம், கோவை, தூது, வெண்பா, சதகம், கும்மியெனும் அனேகம் தினுசுகளும், அத்வைத சாஸ்திரமும், ஆறுமுகநாவலர் புஷ்பரதசெட்டியார் சை-இரத்தினசெட்டியார் இவர்களுடைய அச்சுக்கூடங்களிற் பதிப்பித்த உயர்ந்தபுஸ்தகங்களும், வியாதிகள் சொஸ்தப்படும்படி தக்க அவிழ்தங்களும், அவரவர்பேர்களுக்குத் தக்கதாய் ரொம்பவும் அழகான வேலைசெய்த றப்பர் சீல்களும், ஜெர்மன் சில்வரால் செய்தநகைகளும், சாமான்களும், நல்ல வாசனை பொருந்தியதாம், நாள்படயிருந்தால் கெடாமலிருக்கும்படியாயும், உள்ள அத்தர்தினுசுகளும், பூசுபில்லைகளும், வாசனைவத்திகளும் இவைகளெல்லாம் தயாராயிருப்பதால் வேண்டியவர்கள் அடியிற்கண்ட எனது மேல் விலாசத்திற்கு எழுதினால் உடனே வி-பி தபாலில் அனுப்பக்கூடும் என்னுடைய கேட்லாக்கு வேண்டுமானால் இலவசமாய் அனுப்பப்படும்.

ஒவ்வொருவரும் எங்களுக்கு விஷயந் தெரியும்படி தெளிவாய் ஒவ்வொரு முறையினுந் தங்கள்பெயர் ஊர், இருப்பிடம், போஸ்டாபீஸ், தாலுக்கா, ஜில்லா முதலியவைகளோடே விலாசத்தை கட்டாய மெழுதவேண்டும்.

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்தலைவர்

பெரம்பூர்போஸ்டு மதராஸ்.

☞ பி. நா. சிதம்பரமுதலியார்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

மகாவிந்தமென்னும்

வைகுந்த அம்மானை.

விநாயகர் துதி

நேரிசை வெண்பா.

தக்கப்புகழ்செறியும் தருமரவர்வைகுந்தம்
புக்கபெருங்காதை புகலவே - மிக்க
வியமுகத்தாணபாரதத்தை மேலிடுகூத்தாடுங்
கயமுகத்தாண்பங்கயத்தாள் காப்பு.

வெண்செந்துறை.

கரிமுகப்பிள்ளையரே கணபதியேமுன்னடவாய்
அரியத்தவத்துதித்த ஐங்கரனேமுன்னடவாய்
ஏடுதவறுமல் எழுத்தாணிசாயாமல்
கோடுதவறுமல் கொழுந்தோலைசாயாமல்
நாவுதவறுமல் நல்லோசைதாருமம்மா
பரவிவழுவாமல் பரிந்தெனக்குமுன்னடவாய்
குரலில்குடியிருந்து குரலோசைதாருமம்மா
மறவியணுகாமல் வரமீய்ந்துகாருமம்மா
வெட்பாலைக்கீழிருக்கும் சப்பாணிப்பிள்ளையரே
சப்பாணிப்பிள்ளையரே பொற்பாதம்யான்மறவேன்
பொற்பாதம்யான்மறவேன் பொன்னின்கணபதியே
தப்பாமலிக்கதைக்குத் தக்கோனேமுன்னடவாய்
பஞ்சவர்கள்தன்கதையை பட்சமுடன்யான்படிக்க
செஞ்சொல்சிவனுடைய தேவிதிருமகனே
குற்றங்கள்வாராமல் குறையொன்றும்நேராமல்
கற்றமட்டுமேயான்படிக்க கணபதியேமுன்னடவாய்

சுப்பிரமணியர்-துதி.

தேவரெல்லாம்வணங்கும் தேவர்சேனாபதியே
மூவரெல்லாம்புகழும் முருகோனேமுன்னடவாய்
புள்ளிமயிலேறும் புனிதவடிவேலா
வள்ளிமணவாளா வந்தெனக்குமுன்னடவாய்
திருத்தணிவேலரேயுன் சீர்பாதம்யான்மறவேன்
கருத்துடனேபாடக் கட்டழகர்ஐவர்கதை
பஞ்சவர்கள்தன்கதையைப் பற்பலருந்தான்படிக்க
அஞ்சலொன்றில்லாமல் அடியேனும்யான்படிக்க

எம்பிரான்முன்னடக்க என்கதையும்பின்னடக்க
தம்பிரானானசிவ சண்முகனேமுன்னடவாய்

சரஸ்வதி-துதி.

நாவிற்சரஸ்வதியே நான்முகனார்தேவியரே
பூவிற்பிறந்தவளே பூலோகரட்சகியே
மாசற்றதீபமே மன்னர்புகழ்விளக்கே
நேசத்துடனெனக்கு நெஞ்சிற்குடியிருப்பாய்
பஞ்சவர்களைவரும் பட்சமுடன்வைகுந்தம்
தஞ்சமுடனெல்லோரும் தட்சணமேசேர்ந்தகதை
அல்லல்மிகநீங்கி ஐவர்களுஞ்சேர்ந்தகதை
புல்லனென்வாயில் புகழ்ச்சியாய்பாடுதற்கு
வல்லமகாமாயி வாக்கிற்குடியிருந்து
நல்லவரந்தருவாய் நாவிற்சரஸ்வதியே
சித்தமுமெந்தன் நினைவிற்குடியிருந்து
பதினியாள்யான்பாடப் பார்வதியேமுன்னடவாய்

ஈஸ்வரர் துதி.

ஆதிபரஞ்சுடரே அரியசிவனாரே
சோதிமணிவிளக்கே தூயவருட்கடலே
கற்கண்டேசற்கரையே கனிவுள்ளமுக்கனியே
சொர்க்கபதியரசே தூண்டாச்சுடரொளியே
எள்ளுக்குளெண்ணெய்போல் எங்கும்நிறைபொருளே
துள்ளுமெருதேறும் தோன்றாதமெய்ப்பொருளே
மாலுமயனறியா வண்ணப்பரஞ்சுடரே
ஆலவிடமுண்ட ஐயனேமெய்ப்பொருளே
பாண்டவர்கள்தன்கதையை பகவானேயான்பாட
ஆண்டவனேதிருமெந்தன் அடியேனிடனாவில்
இடருகள்வாராமல் இன்பமாயான்பாட
ஆடைவாகயென்னாவில் ஐயனேநீவருவாய்
இகழ்ச்சிகள்வாராமல் இம்ப்பொன்றுநேராமல்
மகிழ்ச்சியாயெந்தனுக்கு மகாதேவர்முன்னடவாய்

மகாவிஷ்ணு துதி.

அண்டமளந்தவரே ஆதிநாராயணரே
கொண்டல்நிறமுள்ள கோபாலமாயவரே
கஞ்சனவலதழித்த கார்மேகமுன்னடவாய்
செஞ்சொல்சோதையுடன் தேவிதன்பாலகனே
எல்லையளந்தவனே இரணியனைக்கொன்றவனே
கல்லைப்பெண்ணாக்கிவைத்த கர்த்தாவேமுன்னடவாய்
வெண்ணெய்திருடியே மிகவிடைச்சிகையாலே
வண்ணமுடனடியுண்ட மாயவனேமுன்னடவாய்
பாண்டவர்க்குத்தூதுபோன பகவானேமுன்னடவாய்

ஆண்டவனேயிக்கதைக்கு அருள்புரியவேண்டுமையா கதையின்வரலாறு.

காரணமாமுகனே கணபதியேகாப்பாக
சீரானமாமுகனே செல்வனேமுன்னடவாய்
எந்தன்குருவாழ்க ஏகாம்பராமுன்னடவாய்
தந்திமுகத்தோனே தற்பரனேமுன்னடவாய்
ஆத்திமதிசூடும் அரனார்திருமகனே
வந்துதவிசெய்வாய் மாபாரதக்கதைக்கு
முந்துபரமேசுரனார் மொழிந்தவசனமிது
இப்புவியிலுள்ளோ ரெழிதிப்படிப்பதற்கு
செப்புகிறேன்லட்சுமியாள் சிதேவியுமாக
ஞானமதில்மெஞ்ஞானம் நாளும்பரமபதம்
வாலச்சரஸ்வதியே வந்திருந்துகூத்தாட
மாபாரதக்கதையை வகுத்துரைத்தசாஸ்திரத்தில்
ஆகாதசேடன் அனியாயனிஷ்டூரன்
மாபாவிசெய்த வஞ்சகமெல்லாம்பொறுத்து
பூபாலரைவர் பொருந்துதுரியோதிரனும்
வென்றுபுவியாண்டு விஷ்ணுபதஞ்சேர்ந்தகதை
ஒன்றுமறியாதான் உரைத்தேன்புவிமீதில்
பெரியோர்பொருத்தருளும் பிள்ளையிவனெனவே
தெரியாதான்சொன்னமொழி செந்தமிழோர்தான்பொறுப்பீர்
பாவாணர்பாதம் பணிந்துநமஸ்கரித்து
சொல்லுகிறேனம்மானை துதிக்கத்துணையாக
சொல்லுகிறேன்ஞானமெனச் செப்புகிறேனம்மானை
வெல்லுகிறகாலமென்ன வேந்தன்துணையாயிருந்து
சீரார்புவிவாழ்க திசைகளெட்டுந்தான்வாழ்க
பார்புகழ்தமிழ்நேசர் பாவாணர்தான்வாழ்க
திங்கள்மும்மாரி சிறந்துமிகப்பொழிய
பொங்குபுகழ்காவேரி பொய்யாமலெந்நாளும்
தேசஞ்செழித்துவரச் செங்கோல்தழைத்தோங்க
ராசன்புவியாள நற்றவங்களுண்டாக
தேவாலயம்விளங்க திருப்பணிகளுண்டாக
மூவர்முதலாக முப்பத்துமுக்கோடி
தேவர்களும்வாழ்க செங்கதிரோனும்வாழ்க
நாராயணன்வாழ்க நான்மறையுந்தான்வாழ்க
தாராதலத்தோர் தபோதனருந்தான்வாழ்க
பஞ்சாட்சரமும் பகருமோரெட்டெழுத்தும்
துஞ்சாமலென்னாளுந் துதிப்போர்மிகவாழ்க
வீறுதிருநாமமுடல் வெண்ணீறுமுண்டாக
கூறுமுபதேசம் குன்றாமலென்னாளும்
நன்றாய்சிவன்றனையும் நாராயணன்றனையும்
ஒன்றாகக்காண்போ ருள்ளமகிழ்ந்திடவே

நல்லோருமிப்புவியில் நாட்டில்மிகவாழி
எல்லோருமுள்ளோரு மெளியோர்வழியோரும்
எண்ணரியஸ்ரீரங்க ராமரிடதன்சிஷன்
மண்ணுலகில்வெங்கியருள் வடவான்மனமகிழ்ந்து
அல்லலறவே அருவினைகள்தானறவே
சொல்லியவைகுந்தகதை சொல்லுறவேயான்பாட
தண்ணளிசேர்வீதியிலே தழைத்தாலின்கீழிருக்கும்
விண்ணவர்கள்போற்றும் விநாயகனேமுன்னடவாய்
சோராதசூரனையுந் தொலையாக்கிவஞ்சமதை
வேறோடறுத்தெரியும் வேலவனேமுன்னடவாய்
துள்ளுமிடையாளே சொற்கலைக்கும்வள்ளவளே
தவளங்கத்தாலே சரஸ்வதியேவாக்கருள்வாய்
தெரியும்கலைபகருஞ் செந்தமிழோர்கள்முன்னே
அரியவைகுந்த வம்மானைசொல்லுதற்கு
வரிசைபெறும்வையகத்தில் மாரிபொழிவதுபோல்
பேச்சரியாப்பிள்ளை புலம்புகிறேன்வாய்திறந்து
நாவிற்குயில்கூவக் கண்டேயதற்கிணையாய்
கூவிக்குளருமந்த கூகையொக்குமம்மானை
ஆதரவாயானுரைத்த வம்மானைதன்னிலொரு
ஏதுபிழைவந்தாலுமென்னைநிபஞ்சொல்லாமல்
வாசமுள்ளபாடலென்று மாநிலத்தோர்கொண்டாட
நேசமுடன்பெரியோர் நிந்தைமிகச்சொல்லாமல்
சிந்தைமகிழ்ந்துகொள்வீர் சிறியோனுரைத்ததமிழ்
சந்தேகங்கள்சொல்லாமல் தாரணியிலுள்ளோர்கள்
விண்ணவர்கள்போற்றும் விநாயகனேமுன்னடவாய்
ஆசையுடன்படித்து அன்புவைத்துகேட்டவர்கள்
ஓசையுடன்வாழ்ந்து உகந்திருப்பீர்கண்டீரோ
ஆறுமுகன்றுணையாய் அவையடக்கம்பாடுகிறேன்
பூருவமுள்ள புலனும்வெளியாகி
வையகத்தோர்கேட்க வாழ்த்துகிறேனிக்கதையை
சர்ப்பனைகள்செய்தறியார் தருமருந்தம்பியரும்
அத்திபுரநகரம் ஆளுகிறநாளையிலே
பத்தியுள்ளபஞ்சவரும் பாரளந்தமாயவரும்
நீதிமறவாமல் நெடுநாட்புவியாண்டு
ஆதிமகாவிஷ்ணுபதம் ஐவருமேசேர்ந்தகதை
காலதுவாபரம்போய் கலியுகமும்வந்ததினால்
சாளவேகோபாலர் சங்கையல்லவென்றுசொல்லி
உள்ளத்துக்குநல்ல வுபாயமனதிலெண்ணி
சீருடனேவைகுந்தஞ் சேரவென்றுசம்மதித்து
நாருடனேபூவும் நன்றாகச்சேர்ந்ததுபோல்
பஞ்சவர்களைவரையும் பார்த்தார்களப்பொழுது

தஞ்சமுடன்மாயவரும் தரணிதனிலெண்ணிச்
சிந்தைதனிலெண்ணித் திருமால்மனமகிழ்ந்து
விந்தையாயிக்கதையை மேதினியோர்தான்துதிக்க
அம்மானையென்று அரியவைகுந்தகதை
இம்மாநிலத்தோ ரெழுதிப்படிப்பதற்கு
வாக்கருளிச்செய்த வடவான்மொழிந்தகதை
பார்க்கவிருத்தமென்று பாடவேயிக்கதையை
சுருக்காகபாடினதை தோற்றமுடனேதெரிந்து
பெருக்கவிரிவுசெய்து பெருமாளபதம்போற்றி
ஒன்றுபத்துநூறு யொன்றுநூறுயிரமாம்
என்றுமுத்திசித்தி யிதுவேபொருளாக
திருத்தமுடன்கதையைச் சிறப்பாகச்சீருடனே
விருத்தமுடன்சொர்க்கமும் விபரீதமாய்ப்பாடி
பூலோகமெல்லாம் புதுமையெனக்கொண்டாட
மெய்க்கண்டவேத வியாசர்மொழிந்தகதை
வைகுந்தஅம்மானை மகாபாரதமுடித்து
குருகுலத்திலுள்ள கொற்றவர்கள் நூற்றொருவர்
போர்க்களத்தில்மாண்டு போனபின்பாண்டவர்கள்
தருமதுரையுந் தம்பியருந்தானிருந்து
வாழ்ந்தகதையு மற்றுமுள்ளோர்தன்கதையை
தாழ்ந்தகலிவருகுமுன் தங்களிலேதான்தெரிந்து
காளைமுகில்வண்ணன் கண்ணனருளாலே
வாளபிமனீன்ற மன்னன்பரிச்சித்துவுக்கு
பட்டந்தரித்துப் பாராளவைத்ததுவும்
நடந்தசெங்கோல் நடத்துந்திறமறிந்து

விருத்தம்.

ஓங்குருவாழ்கவென்று வுலகெலாமகலநீங்கி
பாங்குடனைந்துபேரும் பத்தினிதுரோபதையும்
ஈங்குள்ளகருமமெல்லா மெள்ளளவாசையற்று
தீங்குறுசெகமென்றெண்ணித் திரலீலேநடந்தஞாயம்
மண்ணுள்ளோர்வாழ்கவென்று மற்றுமுள்ளதேவர்மூவர்
விண்ணுள்ளோர்வாழ்கவென்று மேதினிமுனிவர்ஞானம்
அண்ணுள்ளோர்திருமால்பாத மைவருஞ்சேரவென்று
கண்ணுள்ளோர்வாழ்கவென்று கலைமகள்காப்பதாமே

சொல்லுகிறேனல்ல சோபலிங்கத்தாள்போற்றி
வெல்லுகின்றகாலம் வெகுளியின் தன்மையினால்
வைகைநதியான் வாழ்வீரையம்பதியான்
மெய்க்கமலர்பூத்த விபூதிபஞ்சாட்சரந்தான்
எளியோரவலியோர்க் கேழையிவனெனவே
தெளிவோர்க்கடிபணிந்து சீஷரில்சிஷனுமாய்
வணங்கிநமஸ்கரித்து வாழ்த்துகின்றாம்மானை
அணங்கினுடன்சீர்பாதம் ஆறுமலிப்போது
கூறுந்தமிழுடைய குருகுலத்தில்பஞ்சவர்கள்
பேருந்தவமும் பெருமைகளுமுண்டாக
சொன்னதமிழ்பொருகச் சொன்னதுவேயம்மானை
அன்னமெனுமீனாட்சி யம்மாள்துணையெனவே
விரித்துநான்சொல்லுகிறேன் மேதினியோர்தான்கேட்க
சிரித்துப்பழியால் சித்தமேதான்பார்த்து
ஆறுபெரியோ ரடியேனுரைத்ததமிழ்
கேட்பாய்வைகுந்தகதை கிருண யுடனேயிருந்து

பஞ்சவர்க ளத்திபுரத்தையரசுசெய்தல்.

இந்நாளளவும் இடத்திலிருந்தபடி
முன்னாளிற்பஞ்சவர்கள் மூர்க்கமுடனேயிருந்து
வேதமறவாமல் வேதியரும்பூசுரரும்
நாதமணிகீதம் நற்சங்குவிதானமுடன்
வேள்விகளோமம் மிகுந்தபுராணமதை
கேள்விசிவகதைகள் கீர்த்தனைக்கள்தான்முழங்க
நீதிநியாயம் நெறிமுறைமைதப்பாமல்
ஆதிமகாவிஷ்ணுபதம் ஐவருமேபோற்றிசெய்து
மந்திரிமார்சூழ்ந்திருக்க மகுடமுடிவேந்தருடன்
தந்திரிமார்வந்திருக்க தார்வேந்தர்காத்திருக்க
அந்தணரும்வேதியரு மானதபோதனரும்
செந்தமிழ்சேர்வாணர்களும் தேவரிஷிமாதர்களும்
அன்னசொர்னதானம் அறமேபெரிதாகி
மன்னர்தங்கள்செங்கோல் வாழுமனுநீதி
வழுவாதசெல்வ மனுநீதிதப்பாமல்
நழுவாதசொல்லும் நாள்தோறுந்தப்பாமல்
பூமிசெழித்துவர புவிராசன்வாழ்ந்திருக்க
சாமிதிருமால் சகாயமனதிலெண்ணி
சேனைரதஜெனங்கள் திக்கெங்குஞ்சூழ்ந்துவர
ஆனையின்மேல்முரசு அதிரப்பரிவாரம்
சங்கீதராகம் சகலகலைமுழங்க
இங்கிதமாய்நாளு மிடையூறுவாராமல்

கோத்திரங்களெல்லாம் குபேரனைப்போல்வாழ்ந்திருக்க
பார்த்திருந்ததருமர் பஞ்சவர்கள்தன்னுடனே
மக்கள்மனைவிசுற்ற மகிழ்ந்துசிலகாலம்
திக்கெங்கும்போற்றித் திசைகளெட்டுந்தானதிர
ஆளுகின்றஅத்திபுர வகையாய்மணிதரித்து

அபிமன்னனுக்குப் பிள்ளைபிறந்தது.

வாழ்கின்றநாளில் வாளபிமன்தன்தேவி
சுந்தரியுங்கெற்பமுடன் தோற்றமுடனேயிருந்து
மைந்தனையுமீன்றாள் மாணிக்கம்போலவேதான்
குழந்தைபிறந்ததென்று கொற்றவர்கள்தான்மகிழ்ந்து
வாழ்ந்தார்மனமகிழ்ந்து வாய்த்துதென்றைவருமே
திங்களொன்றுமாகித் தேமாங்கனிபோல
பூரித்துநாள்தோறும் பொன்போலவளக்கலுற்றார்
பார்த்துமேபுத்திரனும் பருவமாய்த்தானேறி
அன்னைமுகம்பார்த்து ஆளைவெளக்குளறி
தத்திவிளையாடித் தாவித்தவிழ்ந்திடுமாம்
வெற்றிவிஜயன் மிகமகிழ்ந்துபோனுக்கு
தண்டைசிலம்பு சதங்கையுடன்தான்பூட்டி
வண்டையமுமவச்சிரமணி விதம்விதமாய்த்தான்பூட்டி
பூஷணமும்பூட்டிப் பொன்னாலலங்கரித்து
வாசமுள்ளவாளபிமன் மைந்தனுக்குபூஷணங்கள்
தேடரியவில்விஜயன் சிந்தைமகிழ்ந்திருந்தான்
தும்பியமுதிடுமாஞ் சொல்லும்பயின்றிடுமாம்
அம்புவிளையவாவென்று ஆனையசைந்தாடி
செங்கீரையாடிச் சிலகாலந்தானொடி
வங்காரமுத்தமொரு மருமியதோசப்பாணி
சிற்றில்விளையாடி சிறுதேருந்தானுருட்டி
முத்தியொருவயது முழுதும்பருவமதாய்
தத்தடியுமிட்டுத் தம்பியிவனுமெனவே
பத்தடியுமிட்டு பருவமொருவயதாய்
தெர்ந்துமிகப்பஞ்சவர்கள் சிந்தைமகிழ்ந்திருந்தார்
மூன்றுவயதாகி முலைமறந்துவீதிசுற்றி
ஊன்றுஞ்சிறுதோலும் உண்டைவில்லுந்தான்பிடித்து
நாலுவயதாகி நடையுடையும்பாவனையும்
ஐந்துவயதாகி ஆனைரதமேறி
கொஞ்சும்பரியேறிக் கொற்றவனும்வித்தைகற்று
ஆறுவயதாகி யாடைவெகுபூஷணமும்
நீரும்புனைந்து நெடியோனைநெஞ்சில்வைத்து
ஆசானடிபணிந்து அறியசிலம்பணிந்து

ராசாதிராசனென்று நாற்றிசையுங்கொண்டாட
வில்வித்தைசாஸ்திரமும் விதம்விதமாய்தான்பிடித்து
கல்வித்தமிழரியக் கட்டழகன்வேணுமென்று
ஏழாம்வயதில் யெழுத்தரிந்தோதுதற்கு
வாளபிமன்னன் மகனும்படித்திடவே
ஆதிகுருவிடதநில் ஐவரிடஞ்சேதிசொல்லி

அபிமன்னன்பிள்ளையை ஐவர்கூட்டிப்பள்ளியில்வைத்தது.

ஓதுவிக்கவேணுமென்று ஒப்புவித்தாரம்மானை
அரிவோமென்றட்சரத்தை அரியோனறன்பேரனுக்கு
தெரியப்படுத்திச் சிற்றறியும்பேரரியும்
எழுத்தினிட அட்சரமு மெல்லாம்படித்தெழுதி
அழுத்தமுடனின்ற அன்பத்தோரட்சரமும
படித்துவிரைவில் பழநூலுந்தானரிந்து
வகுத்ததமிழால் வகையாசத்தானரிந்து
ஆசுமதுரமுதல் அவையடக்கமுள்ளதெல்லாம்
பேசுதமிழ்பலமும் பிரியமுடன்தான்படித்து
துலங்குமகிழ்நாகரமுஞ் சொல்லவேதான்படித்து
நால்வேதசாஸ்திரமும்பன்குரியபாஷைகளும்
மால்பேரன்தான்படித்து வயதுமீரெண்டாகி
தனுசாஸ்திரம்படித்து தரணியெல்லாமகிழ
மனுவுக்கியானமநீதி மனுவத்திவித்தைகளும்
பாஷைபதினெட்டும் பரிசித்துதான்படித்து
ஓசைபெரத்தேசம் உலகமெங்குந்தான்மகிழ
நல்லவித்தைகற்றிருந்தான் நாராயணன்பேரன்
செல்வவித்தைகற்று சிறுவருடனேகூடி

பரிட்சித்து வேட்டையாடப்போகிறது.

தான்வேட்டையாடவென்று தாரணியிற்பிள்ளையுடன்
வனவேட்டையாடிக் கையிற்சிலையெடுத்து
காளைகளாய்க்கூடி வனம்புகுந்து நாலிடமும்
சோலைகளுங்காவுகளும் சுனையும்மலைபலவும்
ஓடிவிளையாடி உயர்ந்தமலைதானேற
தேடிக்கரடிபுலி சிங்கங்களாளியுடன்
நான்மறைகள்புலிகள் வராகந்தான்வதைத்ததுவும்
மேன்மையுள்ளதேனும் விஷந்தாரும்நாகனியும்
வாழைப்பழமும் வருக்கைப்பலாக்கனியும்
விளையாடிப்பாலர் வெகுளிமிகவாகி
இளையாமற்சற்றும் இனமென்றும்பாராமல்
காடுகலைத்துக கடுகமலையேறி
ஓடுகிறபாய்ப்பை உயிர்வதைசெய்து
ஆடிவிளையாடி அலக்கழித்துநாசமதை

கோட்டிமிகப்பண்ணி கொன்றானுயிர்தனையும்
நாகமதுசெந்ததையும் நலமாகவேகிடந்து
வேகமுடனவ்வனத்தில் விளையாடிப்பாலர்களும்
அங்கேசடைமுனியும் ஆனதவமுனியும்
எங்கேசிவன்பாதம் என்றைக்குகாண்பேனென்று
இருகைவிரித்து யிருந்தார்சிவயோகி
அருகேசிறுவர் அவர்செயலைப்பாராமல்
சுடரில்விழும்விட்டிலைப்போல் துன்பமிகநினைந்து
இடர்வருமென்று யெண்ணமதுதோன்றாமல்
நையாண்டிபண்ணி நகைத்துவிளையாடி
ஐயாண்டிமாறுமென்று அரவையெடுத்துவந்து
கேடுவரும்போது கெடுமதிகள்தோன்றாமல்
பாடுவருமென்று பரிசித்தறியாமல்
ஏதுவருமென்று யெண்ணியவன்பாராமல்
தீதுவினைதன்னைச் சிறுவனறியாமல்
சர்ப்பத்தைத்தானெடுத்து சன்னியாசிதன்கழுத்தில்
உற்பத்திதானுனக்கு உடமையிதுவென்றணிந்தார்
கண்டந்தமாமுனியுங் கண்கள்பொரிபறக்க
விண்டந்தக்கோபம் வெளியிலேகோரமதாய்
ஏண்டாசிறுபயலே என்மீதிற்பாம்புதனை
வேண்டாதார்போல விடவனைபோட்டாயே
தீண்டாதோயுன்னைச் சிறும்பெரியரவம்
ஆனாலுனக்கு அரவால்மரணமென்று
ஞானபரனான ஞானமுனிசாபமிட்டார்
சொன்னமுனிசாபந் துடைக்கஅறியாமல்
என்னமோவென்று யேகினர்காணம்மானை
நன்னகரில்லாததொரு தனஞ்சயனென்பேரன்
சென்னிகவிழ்ந்து சிறுவருடன்தான்கூடி
அத்திபுரம்நோக்கி ஆரணியம்விட்டகன்று
வெற்றிமிகப்பேசி விளையாடிக்கொக்கரித்து
பட்டணமும்சேர்ந்து பரிச்சித்துவந்திருந்தான்
அட்டதிசைபுகழும் ஐவர்மிகமகிழ்ந்து
வில்லெடுத்துக்கானில் வேட்டைபோய்வந்ததுவும்
தொல்லெடுத்தான்பேரன் சூரனிவனெனவே
அங்கங்குளிர்ந்து அன்புமிகப்பேசி
சாபந்தெளிந்தைவர் தங்களிலேசம்மதித்து
நன்மைசெய்தநாயம் நமக்கேபலித்ததென்று

பரிசித்துவுக்குக் கலியாணம் செய்கிறது.

சிந்தைமகிழ்ந்து சிறுவன்மேலன்புவைத்து
கன்னிகலியாணங் காசினியோர்தாமறிய
சீராகஐவர் சிறப்பாகப்பேரனுக்கு

நேராகநாள்முகூர்த்தம் நிட்சயதாம்பூலமிட
வேதியரைத்தானழைத்து வேண்டுமுகூர்த்தமிட
ஆதிநாராயணனை ஐவரும்போய்தெண்டனிட்டார்
சுந்தரிதன்மைந்தனுக்கு சோபனமுந்தான்முடித்து
தந்திரமுமின்னதென்று சாத்துவீரெம்பெருமாள்
அழகுதிருமேனியனே அபிமன்னன்மைந்தனுக்கு
களபமுகின்மேனியனே கல்யாணந்தான்முடிய
வகையேதெனக்கு மாயோனேசெய்யுமென்றார்
தொகைவகையும்ஐவர்கரு தோற்றமுடனேநினைந்து
நால்வகையும்பார்த்து நாராயணர்தாமும்
பால்போலும்வங்கிஷத்தால் பண்பானகோத்திரத்தில்
இன்னபடியென்று இதமாகச்சம்மதித்து
சொன்னதொருமாயோனை தொழுதுமிகப்பணிந்து
சாத்தகியாழ்வார் தானீன்றமைந்தனெனும்
ஏத்ததுளசி மகாராசனீன்றெடுத்த
செல்வியெனும்பூமடந்தை சிறியாளைமாலையிட
நல்லவிஷயமென்று நாராயணனைப்பெண்கேட்க
நாடிகடந்தவர்கள் நல்லதொருபஞ்சவர்கள்
தேடித்துவாரகா புரிதனிலேசென்றுபுக்கி
கண்டார்கள்மாயவன் கமலமலர்பாதமதில்
தெண்டனிட்டுவாய்புதைத்துச் செப்பினாரம்மானை
அந்தமொழிகேட்டு ஆமென்றுகோபாலர்
சந்தோஷமாகச் சாத்தகியைவாவெனவே
உன்னுடையமைந்தன் உற்றதுளசியவன்
தன்னுடையதன்மகளைத் தனஞ்செயன்பேரனுக்கு
பூமடந்தையெனும் பொற்கொடியேயிப்போது
தாமனபிமன்னன் தன்னுடையமைந்தனுக்கு
மாலையிட்டுநன்றாய் மணஞ்செய்யுமென்றுசொல்லி
சேலைமஞ்சஞ் செலுத்துமென்றவனையும்
மாயனுரைக்க மன்னவர்களாமெனவே
தூயதொருமுகூர்த்தஞ் சொல்லுமென்றார்வேதியனை
கேட்டொருதினத்தில் கிருபையுடனெல்லோரும்
தீட்டுப்புகழைவர் திருமாலிடந்தனிலே
கொண்டுவந்துவைத்தார்கள் கூறையொடுபெரியம்
கண்டுமகிழ்ந்து சாயாம்புமேனியனார்
பாக்கியமாவெனவே பச்சைமால்கொண்டாடி
வாக்கியமுஞ்சொல்லி மகிழ்ந்துதான்பஞ்சவர்கள்
நின்றவரைப்பார்த்து நெடியோன்மனமகிழ்ந்து
நன்றனவேயிப்போது நாட்டமொசாணியென்றார்
ஆயன்றிருமால் அருளினார்காணம்மானை
அந்தமொழிகேட்டு ஆமென்றுபஞ்சவர்கள்

விந்தைமலர்பாதமதில் விழுந்துநமஸ்கரித்து
வந்தார்களத்திபுரம் வண்ணமணிமண்டபத்தில்
சந்தோஷமாகச் சகலரையுந்தானழைத்து
அத்திபுரத்திலுள்ள அன்னசுத்தவங்கிஷமும்
சித்திவிநாயகரைத் தெரிசித்தடிபணிந்து
மூலப்பொருளே மூர்க்கமுள்ளஐயாவே
ஞாலப்பொருளே நமஸ்கரித்துத்தான்தொழுது
பாலனெங்கள்மைந்தன் பரிசித்துவேந்தனுக்கு
காலபலமாயிருந்து கலியாணந்தான்முடித்து
முன்னிற்கவேண்டுமையா முக்கணனார்புத்திரனே
சென்னிக்குள்நிற்கிற சிரோமணியேமுன்னடவாய்
என்றுதுதிசெய்து இறையோனைத்தோத்திரித்து
சென்றுநகரில் சிறப்பானபட்டணத்தில்
வான்கமுகுநாட்டி வாழைமிகப்பந்தலிட்டு
தேங்காயிளநீர் தேன்கரும்புதானிரப்பி
வாழைக்கனியுடனே வாழைமரந்தானாட்டி
தாழைமடைமல்லிகைப்பூச் சாமரியாயிழைத்து
பட்டாலலங்கரித்து பட்டுமேற்கட்டிகட்டி
வட்டாரஞ்சூழ மாணிக்கமாலையிட்டு
கூடமலங்கரித்துக் கோபுரமாளிகையும்
தெருவீதியெல்லாஞ் சித்திரங்கள்தானெழுதி
சாந்துபுனுகுநல்ல சவ்வாதுகஸ்தூரி
எங்கும்பரிமளங்கள் பெருகுங்கமகமென
வாசமுள்ளதெல்லாம் வகைவகையாய்த்தானிறைத்து
தேசம்புகழத் தெய்வலோகம்போலே
வைகுந்தம்போலே வயிரவைடூரியத்தால்
செய்கின்றாரைவர் திருமால்மனமகிழ
மருவுமலரும் மருக்கொழுந்துவாசனையும்
நாளும்முகூர்த்தம் நல்முகூர்த்தவேளையிலே
வாழுமரசாணியது மாணிக்கத்தூணட்டி
அன்னசுற்றமெல்லாம் அலங்காரமாய்க்கூடி
தென்னவர்கள்மன்னவர்கள் தேசத்திலுள்ளவரும்
திக்கிலுள்ளகோத்திரமும் சிறப்பாகத்தான்கூடி
முக்கியமாய்க்கல்யாண முடிக்கவேவந்தார்கள்
வந்ததொருமன்னர் மகுடமுடிவேந்தரையும்
பந்திபந்தியாகப் பாவாணர்சிலருடன்
ஆனையொருகோடி அசுவமொருகோடி
சேனையொருகோடி தேருமிருகோடி
சங்கீதவீணை தவின்முரசுமல்லாரி
எங்குமுழங்க எக்காளம்பூரிகையும்
பேரிகைமத்தளமும் பேசுங்கிடுமுடியும்

வாரியொலியிட்டதுபோல் வானமுழக்கமுடன்
தித்திகவுரி திருச்சின்னந்தாரையுடன்
சத்திக்குமேக்மென்ன தம்புருவுங்கின்னரியும்
மூவர்முதலான முப்பத்துமுக்கோடி
தேவர்கள்மாதர்களும் செயசோபனமுழங்க
மங்களமும்பாடி மறையோர்கள்தான்றுதிக்க
சிங்காசனத்தில் திருமாலும்வந்திருக்க
மாப்பிள்ளைகோலமிட்டு மாளிகையுந்தான்புகுந்து
மூப்பிமார்தாதியர்கள் மொய்குழற்குபட்டுடுத்தி
ஆடையுடுத்தி ஆபரணந்தான்பூட்டி
வாடைபரிமளங்கள் வாசனையாய்த்தான்பூசி
காலுக்குமிஞ்சியிட்டுக் கடுக்கன்சவளியிட்டு
கோலச்சரப்பளியுங் கொத்துமுத்துதாழ்வடமும்
வேடிக்கையாக விசையனிடபேரனுக்கு
சோடித்கார்வேணதெல்லாம் சொர்ணமயமாக
நாராயணன்பேரன் ராசாதிராசனுக்கு
சிராகநால்வகையுந் தெரிந்துநல்லபூஷணங்கள்
அரிசித்தமேமகிழ்ந்து அன்பானபேரனுக்கு
பரிசித்துவேந்தனுக்குப் பலமணியுந்தான்பூட்டி
துளசிமகாராசன் துய்யதொருபெண்கொடிக்கு
வளையல்தரித்து வர்ணமிகப்பட்டுடுத்தி
பொன்னலலங்கரித்து பிறைபோலமையெழுதி
தேனுநும்சினனைமுல்லை செண்பகப்பூவாசமிட்டு
மாப்பிள்ளையும்பெண்ணும் மதனும்மாதிபோல
சீப்பிட்டுமையெழுதி சித்திரம்போல்பொட்டுமிட்டு
வைத்துமகிழ்ந்து வந்துசொன்னார்மாயரிடம்
மாயவனும்ஐவருமே வந்துமேபந்தலின்கீழ்
தாயானகுந்தியம்மாள் தேவிதனையழைத்து
உன்பேரனம்மா உத்தனபிமனிட
தன்பாலன்வீர சமர்த்தன்பரிசித்துவுக்கு
சுபசோபனமுடித்துத் தோகையரைநீபார்க்க
வேணுமிருமென்று விளம்பினார்பஞ்சவர்கள்
பூணுமெனவேயிருந்து பொற்கொடியாள்தான்மகிழ்ந்து
புகழ்பெரியதாயார் பொற்கோவில்சென்றுபுத்தி
திகழுமநவரசமே திவ்வியமேமாதாவே
கற்புடையமாதாவே காந்தாரித்தாயாரே
மைப்புடையோன்வாரபிமன் மைந்தன்பரிச்சித்துவுக்கு
அகஸாதிருந்து அபிமரிடபுத்திரர்க்கு
செகலோகமெய்க்கச் செய்யுங்கலியாணம்
மகாதேவர்தனனருளால் வருந்திமுடிப்பதற்கு
தாயாரேநீயுந் தருமருடனிருந்து

செல்வக்கலியாணஞ் செய்விக்கவேண்டுமென்றார்
சொன்னவுடன்காந்தாரி தோகையரும்ஆமெனவே
அன்னம்போல்தானடந்து ஐவருடன்கூடி
நல்லதென்றுபந்தலின் நடுவேதான்வந்துநின்றான்
செல்வக்கலியாணம் திருமால்தன்பேசனுக்கு
மணமுடிக்கவேணுமென்று மாயோனெழுந்தருளி
மணவறையிற்சென்று மாப்பிள்ளையைக்கைபிடித்து
கெண்டிநீர்வாங்கிக் கெம்பீரமாய்த்தான்வாங்கி
வண்டானமார்பன் மாயோன்மனமகிழ்ந்து
மனையைவலமாய்வந்தே கிழ்ந்துமனையேற்றி
இணையாகப்பெண்களையும் இப்படியேகூட்டிவந்து
நேரேமணமேற்றி நின்னயமாயுள்ளதெல்லாம்
நேரேமணமேற்றி நின்னயமாயுள்ளதெல்லாம்
செய்துமுடித்துச் சிறப்பாகப்பந்தலின்கீழ்
பைங்கொடிக்கும்மாப்பிள்ளைக்கும் பாங்குடனேநற்சடங்கு
சாத்திரத்திலுள்ள சடங்குமுடிந்தபின்பு
கோத்திரங்கள்சூழக் குறவைமுழக்கமிட்டு
ஆனைரதமேறி அலங்காரமாய்வரவே
சேனைதளத்துடனே தெருவீதிசுற்றிவந்து
மங்கிலியந்தானறிக்க வரவேணுமென்றுசொல்லி
இங்கிதமாயானையின்மேல் ஏற்றினார்மாப்பிள்ளையை
கன்னியுந்தேரேறிக் கணவனுடன்தான்வரவே
இரவுபகலாகி இந்திரன்பட்டணம்போல்
அரவுயர்த்தான்பட்டணந்தான் அடங்கலுஞ்செய்வேனுன்
இனபெரிய வானத்தின்மீன்போலே
காணவந்துநிற்பாருங் கண்டுமகிழ்வாரும்
வந்திரனேவென்பாரும் இறையவனேவென்பாரும்
சந்திரனேவென்பாருஞ் சரணங்களென்பாரும்
மன்மதனேவென்பாரும் மார்க்கண்டனென்பாரும்
தருமர்குலத்துதித்தார் தார்வேந்தனென்பாரும
பூவர்ணமெங்கும் பூமலர்போல்தானெறிய
பாவாணராகம படித்துவாசங்கீதம்
பட்டணத்திலுள்ள பலபேருந்தான்பார்த்து
கட்டழகன்தான்வார கட்டழகைப்பாருமென்ன
வீதிசுத்திதான்வாரான் வீமனுடதன்பேரன்
கோட்டையும்பட்டணம் குதிரைதளத்துடனே
நாட்டையுஞ்சுத்தி நகரவலமாக
வந்துமணப்பந்தலின்கீழ் மாப்பிள்ளையும்பெண்ணுடனே
மாயனருளாலே வந்தார்மணவறையில்
ஆயனுடனேவர் அருகிருந்துவேதியரை
ஜாமத்துக்குள்ளாக தாலிகட்டவேண்டுமென்று

ஓமம்வளர்த்தவென்று உத்தாரம்பண்ணினார்காண்
கும்பமுடன்மாவிலையுங் குசப்புல்லு நூலுடனே
இன்பமுடன்சோடித்து இருந்தார்கள்வேதியர்கள்
அக்கினியும்நெய்யும் ஆற்பரித்துமேற்புகைய
முக்கியமாயெங்கும் மூலமுதற்பொருளாம்
வைகுந்தமூர்த்தி யவர்காண் துணையெனவே
தேங்காயுடைத்து சித்திவிநாயகர்முன்

பரீட்சித்து மங்கிலியந்தரித்தது.

பாய்குடனேவைத்துப் பரீட்சித்துவேந்தனுக்கு
கங்கணங்கட்டி கன்னிக்குகாப்புமிட்டு
லக்கினமாய்பெண்கழுத்தில் மங்கிலியந்தான்றரிக்க
சந்தனம்பூசித் தானிருந்தாரம்மானை
தெய்வப்பிராமணரும் தேவர்களுஞ்சாட்சியதாய்
ஐவருமேதொட்டு அபிமனுபுத்திரற்கு
கண்ணர் திருக்கரத்தால் கற்பித்தார்மங்கிலியம்
விண்ணோர்கள்வாழிசொல்ல விரைவாகத்தான்வணங்கி
தரித்தானேமங்கிலியம் தையனல்லாள் தன்கழுத்தில்
பரிதேருடைய பரிச்சித்துமன்னனும்
வேதமுழங்க வெண்கவரிதான்வீச
நாதமுழங்கிவர நாகசுரமிகமுழங்க
செயஞ்செயமென்று சேனைகளுந்தானிரைக்க
ஆடனுடமாமுனிவர் அட்சதையுந்தான்கொடுக்க
மங்களமும்பாடி வாழ்த்திச்சாச்சோதி
திங்கள்முகவாணர் செயசோபனமுழங்க
சோபனமுஞ்சொல்லி துடியிடையுமாப்பிள்ளையுந்
தாமமுடன்கைகோர்த்துத் தங்களனைக்குத்தமுடன்
பண்ணினார்கோபாலர் பரீட்சித்துவேந்தனுக்கு
நண்ணினார்கண்ணர் நடவுமென்றுகைபிடித்து
மணவருடன்பொற்கொடியைக் கைகோர்த்துதான்கொடுத்து
கணவரையிற்போமென்று மாயோனுதவிசெய்ய
அந்தநாள்சென்று அலர்கதிரோன்வந்துதித்தான்
நந்தகேதாரவா நரசிங்கபரமூர்த்தி
மற்றநாள்சாமி மஞ்சாநீராடுமென்றார்
அத்தனார்சொற்படிக்கு மஞ்சநீர்த்தாடி
மாப்பிள்ளையும்பெண்ணும் வாழ்ந்திருந்தாரம்மானை
மூப்பிலுள்ளவங்கிஷமு முன்னோரும்பின்னோரும்
அல்லியுந்தாமரைப்போல் அனைசுத்தமுள்ளதெல்லாம
துல்லியமாய்வாழ்ந்து சுகமாயிருந்தார்கள்
தர்மருந்தம்பியரும் தாரணியை ஆண்டிருந்தார்
நன்மைவளர நாற்றிசையுந்தான்வாழ்க

துன்மையகலத் தேசந்தழைக்தோங்க
கர்மமகலக் காவேரிபொங்கிவர
கன்னல்விளைந்து கனகமணிதான்விளைந்து
கதலிபழுத்து கனிந்துடைந்துஆறோட
மதுரைப்பலாபழுத்து வழுந்தொழுகியேயோட
கமுகுகுலைசாய்ந்து கனிந்துபழமுதிர
தேங்குடனேமாதளையும் சேர்ந்துகலங்கிமிக
ஓங்குபுகழ்செல்வம் ஒருநாளுங்குன்றாமல்
நடுநீதிஞாயம் நாளுந்தவறாமல்
வாசமுடனேவர் மதுநீதிதப்பாமல்
தாரணியெல்லாமகிழ தாரணியோர்போற்றிசெய்ய

விருத்தம்.

ஐவருமிருந்துபாரி லனேகநாள்சீமையாண்டு
செல்வதுகருமஞாயம் தராசுபோல்நிறையாய்நின்று
கைவருங்கருமமெல்லாம் காரியமரியபின்பு
மெய்வரும்புதுமைகண்டு மேதினியாளும்நாளில். ௩
சித்தசுரூபமான தீரன்வாளபிமன்மைந்தன்
பத்தனார்தமதுபேரன் பரிசித்துமனேவியாளும்
எத்திசைபுகழவேதா னேந்திழைகர்ப்பமாகி
வெற்றிசெய்மாதம்பத்தும் விளங்கவேசுமந்தாள்மாது. ௪

(கதை) பார்த்தனிடபேரன் பரிச்சித்துவேந்தனுக்கு
நாற்றிசையுங்கொண்டாட நாயகியாள்கெர்ப்பமதாய்
மாதமுந்திங்களுமே வந்ததிட்டந்தானறிந்து
நீதமுடன்சங்கு நேசமதுதப்பாமல்
இதமானபூமடந்தைக் கெல்லாருந்தாமிருந்து
முதுகுநீர்வார்க்க மொய்குழலாள்பூமடந்தை
திங்களொருபத்தாகிச் செனமேசெயன்தான்பிறந்தான்
கங்குலிரவுதனில் கதிரோனுதித்தாப்போல்
வயிரமுடன்முத்து வகையாககோத்தாற்போல்
ஆணிக்கனகமுமாய் அழகுஜனமேயனுந்தான்
சீலமுடன்பாலன் செனமேசெயன்வாழ்ந்திடவே
காலம்துவாபரம்போய் கலியுகமும்வாரதினால்
வருகுதென்றுலோகம் வழங்குதுகாணிவ்வசனம்
பெருகுபுகழ்தருமருக்குப் பேரன்பிறந்ததினால்
வாளபிமன்றன்பேரன் வந்தானெனவேதான்
காளைமுகில்மேனியனார் கண்ணரவர்தானறிந்து
ராசிகளும்நல்ல நட்சத்திரம்பார்க்க
வாசியெனும்வேதியரை யன்பாவரவழைத்து
பாலன்பிறந்தான் பரிச்சித்துவேந்தனுக்கு
காலபாலமென்ன கருத்தென்னபாருமென்று
மாயனிதுசொல்ல மாமறையோனேதுசொல்வான்

தூயவரே இப்போது சொல்லுகிறேன்கேளுமென்றார்
செனமேசெயன்பிறந்தாள் சீறும்பலாபலனும்
கேளும்பெரிய கொடுமைகலியுகமும்
வருகுதையாவென்று மறையோனெடுத்துரைக்க
பருகுங்கனிவாயன் பச்சைமால்தானிருந்து
ஆனதுவாபரமும் ஆச்சுதென்றுதானினைந்து
கானகமேசெல்லக் கரியமேகவர்ணர்
ஐவர்க்குத்தூதர்க ளனுப்பினார்மாயவனார்

விருத்தம்.

காசினியளந்தமாயன் கலியுகம்வருமுன்னாகப்
பேசியேகொள்வோமென்று பிரபஞ்சவிபரமெல்லாம்
ரகசியமாகதூதாள் நாழிகைதன்னிற்சென்று
தேசிகரைவர்தன்னைச் சீக்கிரங்கொண்டுவாவென்றார். ௫
உய்த்தொருவசனங்கேட்டு ஒருநொடியதனில்தூதன்
அத்தினாபுரியிற்சென்று ஐவரைவணங்கிக்கொண்டு
கத்தனாருளிப்பாடல் கருதியேயுரைத்தபோது
சித்தமேமகிழ்ந்துதர்மர் சீக்கிரம்பயணமென்றார் ௬
தம்பிமார்நால்வர்தன்னைத் தருமரும்வருகவென்று
உம்பர்கோன்றம்பிரானு லுலகினையளந்தமாயன்
நம்பியேயுண்மையாக ரகசியமருளிச்செய்த
இன்பமாய்வருகவென்றா ரேதெனத்தெரியவேணும் ௭
ஆயனார்தூதன்வந்தா னருளினதெல்லாஞ்சொன்னான்
மாயனாருண்மைகண்டு வணங்கிதாம்வார்த்தைசொல்லி
நேயமாய்வருவோம்நீங்கள் நிமிஷத்தில்வருவோமென்று
தூயதோர்தருமராசன் துரகதமீதிலானார். ௮
வீமன்விஜயனகுலனுமாய் வேதராசன்சகாதேவன்
தாமோதரனார்தமைக்காணத் தருமருடனேபின்சொல்வார்
ராமமுகுந்தாகேசவா ஸ்ரீராமாஅரியென்று
சோமவாரத்திலந்நாள் துவாரகாபுரிவிட்டகன்றாரே. ௯
(கதை) வாசமுள்ளபஞ்சவர்கள் மாயன்வரச்சொல்லியொரு
நேசமுள்ளதூதனைப்போய் நிமிஷத்தில்வாவெனவே
சொல்லியனுப்பிவைத்த தூதனவனோடிவந்து
நல்லதொருதர்மரையும் நமஸ்கரித்துதான்வணங்கி
கண்ணன்திருமால் காயாம்புமேனியனார்
அண்ணல்வரச்சொல்லி யருளினாருங்களையும்
அந்தமொழிகேட்டு அடியேனுமோடிவந்து
விந்தமயாமல் விரவில்வரவேணுமென்று
தூதனுரைத்தமொழி தூயதருமர்தான்கேட்டு
போதமனமகிழ்ந்து பூரித்திருபுஜமும்
குந்திமாதேவிமுன்போய்த் தெண்டனிட்டாரைவருமே
துய்யபுகழ்மாதாவே தூதுவனுமோடிவந்து
மாயவனாரைவரையும் வரச்சொன்னாரென்றுசொல்லி

ஞாயமொருசேதிசொல்ல நாங்கள்வந்தோமதாலே
மறுத்துநான்செய்ய வகையேதுசொல்லுமென்றார்
தேடிமேபுகழ்குந்தியம்மன் சிந்தைமிகமகிழ்ந்து
நாடும்புகழ்மாயன் நமக்குதுணையாமெனவே
மைந்தர்களேநீங்கள் மனதிலொன்றுமெண்ணாமல்
செந்திருவாழ்மாயன்பக்கல் செல்லுமென்றுதானுரைத்தார்
கேட்டுமகிழ்ந்தைவர் கிருபையுடன்நமஸ்கரித்து
பூட்டுமேதவாளபிமன் புறப்பட்டாரைவருமே
பட்டவர்த்தனர்கோடி பார்த்திபர்கள்தான்கோடி
வட்டமதிக்குலத்தில் மகுடவர்த்தனர்கோடி
மந்திரிகளொருகோடி மற்றுமுள்ளோர்தான்கூடி
மத்தகசங்களணி வர்த்தகருமொருகோடி
மெத்தமகாசேனையுடன் வேந்தரைந்துபேர்களுடன்
அத்திபுரந்தன்னைவிட்டு அகன்றார்காணம்மானை
மரகதத்தேரென்றும் மகாமேருக்கொப்பான
துரகதங்கள்தான்பூட்டி துருசில்வந்தான்தேர்ப்பாகன்
ஏறிபரிதேர்மீதில் ஏறினார்தருமருமே
நாற்றிசையுந்தம்பியர்கள் நால்வருமேநன்றாக
ஏறியேதேர்மீதில் இருபுறமுஞ்சூழ்ந்துவர
எண்ணவொண்ணாச்சேனையர்களெங்கும்நிறைந்துவர
மன்னவர்மகுடர் மறுவேந்தர்சூழ்ந்துவர
வட்டக்குடையும் வைடூரியக்குடையும்
பட்டுக்குடையும் பவளமணிக்குடையும்
கட்டுநவரத்தினமணி கவரிகுஞ்சம்வீசிவர
கூறுகின்றசித்திரத்தால் குடைகள்பலசூழ
ஏறுகின்றயானையின்மேல் எங்குமில்லாவாத்தியமும்
வீரானைபட்டகமேல் விந்தையுள்ளட்டமாவும்
சேரவேயோசையுடன் திசைகளெட்டுந்தானதிர
வெள்ளியால்தம்பட்டம் வெண்கலத்தால்தம்பட்டம்
மூடிக்கானமேளம் முரசுடனேதானுடுக்கை
எடுக்கவொண்ணாபேரிகையும் மிராசக்கிரீடமுடியும்
வட்டமுடிதாள மத்தளமுமல்லாரி
ஒட்டியமேகாளம் உலகமெங்குந்தானதிர
கஞ்சக்கொம்புகள்சின்னம் காளமுடனேக்காளம்
பஞ்சைக்கருவி பலதிசையுந்தான்முழங்க
மண்ணதிரவிண்ணதிர மலைகளெங்குந்தானதிர
விண்ணதிரமேலே மிகுந்துகம்மல்தான்மூட
குருகுலத்திலைவர் கோபாலாநன்னருளால
மன்னவர்கள்மன்னவன்தான் வாழ்பாண்டிமைந்தன்வந்தான்
அன்னபரிபாலன்வந்தான் அத்திபுரிவேந்தன்வந்தான்
செய்யநெடுமால்பதத்தைச் சிந்தைதனில்கொண்டிருக்கும்
வையகந்தன்னில் தருமர்வந்தாரெனவே

நீடுதிரைகள் நிலைகள்குலைந்திடவே
மூடுபசும்பொற்காளம் முழங்குதுகாணம்மானே
தருமருடன்தம்பியரும் சதுரங்கசேனையுடன்
ஒருகோடிகட்டியங்கள் ஒன்றாகப்பாடிவர
பாடும்புலவர் பரிகாரர்முன்னடக்க
கடும்பரியின்மேலிருந்து கைவாங்கிகொண்டுவர
வங்காளராவுத்தர் மல்லகசிட்டியுடன்
சிங்காளராவுத்தர் சீனராவுத்தருடன்
ஆரியராவுததருடன் அதோவென்றார்ப்பறிக்க
பாறியசிங்காளர் பரியேறித்தானடக்க
வீரமணியோசையிட வீரானமானவர்க்கம்
மூர்க்கமதயானையுடன் முன்னணியாய்த்தானடக்க
அங்குமுரசக்கொடியும் அனுமகொடிதன்னுடனே
சிங்கக்கொடியுந் திசைகளெட்டுஞ்சூழ்ந்துவர
விண்ணதிரமண்ணதிர விண்ணிலுள்ளோர்தானடுங்க
எண்ணரியநீடுதிசை எட்டுந்திடுக்கிடவே
காடியநீள்தருமர் நடந்தார்காணம்மானே
அத்திபுரத்திலுள்ளோர் அங்கேவந்தவர்தாமும்
மெத்தவேதான்பட்டணத்தில் வீடுதிகளிற்போயிருந்தார்
தெரிந்தபுகழ்தருமர் சேனைபவுந்துடனே
பரிந்துதுவாரபுரி பதிவந்தாரைவருமே
மன்னனுக்துவாரபுரி பதியைவலமாய்வந்து
மன்னர்தருமர் மகிழ்ந்துவந்தாரம்மானே
மாதாக்கள்தான்சிலபேர் மன்னர்தனக்கெதிராய்
ஆதரவாய்க்கற்பூரம் ஆலாத்திகொண்டுவந்து
முரசக்கொடியோனை முன்பாய்பணிந்தவர்கள்
கைவளையல்தான்விழவும் காலில்சிலம்புவிழ
மெய்யிலணிகற்பணிகள் வெவ்வேறாய்தான்விழவும்
கூறையவிழ்ந்துவிழக் கூந்தல்குதிக்காலில்விழ
நாறுமலர்கள் நடுத்தெருவில்தானவிழவும்
மன்னவனேநாங்க ளடிமையாவோமெனவே
பொன்னனையார்பிடித்துப் போரார்களெல்லோரும்
மாதர்களெல்லா மன்னவனைத்தான்தொடர்ந்து
ஆதரவாய்த்தங்களிட ஆசைபலகூறலுற்றார்
தேசமெல்லாஞ்செங்கோல் செலுத்துந்திகிரிமன்னா
ஆசைகொண்டாற்புயமு மருளுவதுமாகாதோ
தேரும்பரியுடைய தோவேந்தேயெங்கள்துரை
பரிவுடனேநீதிரும்பிப் பார்த்தருளலாகாதோ
அன்புடையீர்நல்ல அறிவுடையீரெங்கள்துரை
பின்திரும்பிப்பார்த்தால் பிழைகள்வருமோதான்
பொங்குநெறியுடைய புண்ணியவானென்பார்கள்

இக்கெனமையேநீதிரும்பிப் பார்த்தாளிளப்பமுண்டோ
அடங்காதமய்யலாய் அறிவழிந்தோமெங்களையும்
இடங்கண்ணால்நீதிரும்பிப் பாருமென்றவேந்திழையே
கொங்கையசையநல்லக் கூந்தலகுலைந்தசைய
அங்கணனுந்தான்சிவப்பா யவர்தொடர்ந்தாரம்மானை
அறிவழிந்துபின்தொடர்ந்த அரிவையர்கள்தன்துயரம்
பரிவுடனேதானோக்கிப் பார்த்திபனுநீள்தருமன்
சேர்ந்ததேமயல்தீரச் சேயிழையார்தங்களுக்கு
பூந்துகில்தாமளித்துப் போனார்காணம்மானை
கொற்றவனுந்தானெருங்கிக் கோபுரவாசல்தனிலே
மற்றுமுள்ளமாசேனை மன்னரையுந்தானிறுத்தி
கூரரியவேந்தருந்தான் கோயில்தனிற்புகுந்தார்
சீரரியமால்பதத்தில் தெண்டனிட்டாரம்மானை
கண்ணன்தருமரையும் காதலுடனேயழைத்து
வண்ணமணிமார்பின் மகிழ்ந்தணைந்தாரம்மானை
அந்தரர்கோன்மைந்தருடன் ஐவரையுங்கொண்டுசென்று
மந்திரச்சாலையிலே மாயோனும்போயிருந்தான்
நெய்யண்டமாலே நெடியோனேயெங்களைத்தான்
வைகுண்டமூர்த்தி வரவழைத்தகாரியமேன்
என்றுதர்மர்கேட்க எம்பெருமானேதுசொல்வார்
மன்னுபுவியாளும் மன்னவனேசொல்லுகிறேன்
மன்னன்தருமனைத்தான் மாயன்முகம்நோக்கி
உற்றவிசனம உரைக்கலுற்றாரம்மானை
மண்டலத்தையாண்டு மனுநீதிதப்பாமல்
விண்டலத்தோர்கொண்டாட யேதினியில்தாமிருந்து
நீதிதவறாமல நெறிமுறைமைதப்பாமல்
சாதிவரம்பு தவநிலைகள்சோராமல்
வாழ்ந்தீரிதுவரையில் மன்னவரேயிப்போது
நான்தானொருசேதி நடத்துகிறேன்கேளுமென்றார்
நல்லதொருபஞ்சவர்கள் நாரணரேசொல்லுமென்றார்
வல்லதொருமாயன் வாய்திறந்தங்கேதுசொல்வார்
சொல்லுந்துவாபரமும் தொகையுஞ்சரியாச்சு
வெல்லுங்கலியுகமும் விபரீதமாய்த்தான்வரவே
பாதமுடன்பூமி பாரமதுதான்தீர்த்தோம்
ஆசையுடனிங்கிருக்க அடைவல்லவென்றுசொல்லி
மற்றுமுனிநாமுமிந்த வைகுந்தவாழ்பதிக்கு
போற்றுமிந்தமாநகரை விட்டுமிகல்போகிறோம்
ஆகையினால்மிகுந்த அவனியிடர்தீர்ப்பதற்கு
ஏசினிரநாளில் என்னுடனே நீங்களுந்தான்
நமதுபயில்வேந்தே வைகுந்தவாழ்பதிக்கு
போவீரோவென்று புகழினார்காணம்மானை
ஏசில்லாமன்னனே இன்னமொன்றுநீகேளு

காசினிதானுந்தனுக்கு கைவசமுந்தானாகி
மற்றுமினியுங்களுக்கு வலுமையுடன்வீரியங்கள்
உற்றுமிகமுன்னாட்போல் உதவாதுமன்னவனே
சத்தியமுமில்லாது தருமநெறியில்லாது
அத்திருவும்நில்லாள் அசத்தியமும்வந்துவிடும்
தாய்தனையும்பேணார் தந்தைதனை நினையார்
ஆயன்குருவின் அருளுமவர்நினையார்
தம்புவிதனிலேதான் பாரார்கள்தர்மமில்லை
அம்புவிதனிலேதான் அனியாயமேலாகும்
மாதவங்கள்தானழியும் வரமுமழிந்துவிடும்
வேதங்கள்தான்பலவும் பேதங்களாகிவிடும்
சாதிநிலைகுலைந்து சத்துருக்கள்மேலாவார்
நீதியழிந்துவிடும் நெஞ்சகமேவஞ்சகமாம்
மாசில்லாபூவுலகில் மாரியறுத்துவிடும்
காசினியில்நாரியர்கள் கற்புமழிந்துவிடும்
விடுத்தசிலகாலம் விசேஷமதுகண்டாயே
கடுத்தகலிகாலமென்று கட்டுரைத்தாரம்மானை
ஆதலாலுங்களுக்கு அரசேதானாகாது
போதுவீரரும்முடனே போந்தாமலிப்புவியை
ஆளல்லவோநூற்றுவரை அன்றுவதைத்தீரே
மீளவுமப்படியே மேதினியைக்காப்பீரோ
உங்களுக்குத்தோன்றினதை உண்மையாய்ச்சொல்லுமென்றார்
செங்கண்ணிருநெடுமால் செப்பினார்காணம்மானை
சாற்றுமொழிகேட்டு தருமர்மனமகிழ்ந்து
போற்றியேமாயனையும் புகலலுற்றாரம்மானை
சோதியேவேதச் சுருதிக்கதிபதியே
ஆதிவராக அரிகேசவாமுகுந்தா
அச்சுதாபஞ்சவர்கள ஐவருக்குந்நாயகமே
சச்சிதானந்தமெனும் சாரூபவாகமுள்ள
கற்பூரவாசகனே காயாம்பூமேனியனே
பொற்பூவும்வாசமுள்ள பூலோகமீதில்வந்து
தங்களுயிர்போலத் தற்காத்தீர்நாளும்
எங்களைத்தான்காக்க இவ்வடிவுதானெடுத்து
சீருஞ்சிறப்புஞ் செலுத்திமிகுசெல்வமெல்லாம்
பேருஞ்செலுத்திப் பிரபலமாய்த்தானிருக்க
வைததீரிதுவரையில் வாழ்ந்தோம்சிலகாலம்
மைத்துனர்போலெங்களுக்கு வராகமாய்த்தானிருந்து
ஆபாதகனெஞ்சன் அனியாயநிஷ்டூரன்
மாபாவியான வணங்காமுடிவேந்தன்
வாரிதனிற்கழுவை வைத்ததும்போதாமல்
பார்மீதில்நஞ்சைப் பரிந்தேவளித்ததுவும்
மாதர்க்குமாளிகையில் வன்னிவளர்த்ததுவும்

மூத்துமந்தவாரிதனில் மூழ்கிவரந்தானினோர்க்கு
பொய்சூதாலெங்கள் புவியவர்வாங்கினதும்
துற்சாதனன்சபையில் துகிலையுரிந்ததுவும்
பிறந்ததுகச்சுப்பொய்கை புதுசாய்சமைந்ததுவும்
துறந்துசபிக்கவென்று துறுவாசர்வந்ததுவும்
மற்றுமவர்செய்த வன்கொடுமையாலேயும்
சற்றுந்தளராமல் தற்காத்துபசரித்தீர்
தந்தையருந்நீயேகாண் சற்குருவுமநீயேகாண
குந்தியருந்நீயேகாண் கொண்டல்வண்ணனெங்களுக்கு
காலுதிக்குந்தான்பார்த்து நடப்பிரிருப்பீர்காண்
மேலுமிருப்பீர் மேதினியிற்றானிருப்பீர்
ஆறுமறியாமல் ஆலிலைமேற்பள்ளிகொள்வீர்
பாருலகையுண்டு படைப்பீருலகளப்பீர்
கோலமெல்லாநீயெடுத்த கோலமேயல்லாது
ஞாலமதிலுன்னையல்லால் நடப்பதுவும்வேறுமுண்டோ
ஏதோதிருக்கூத்து எத்தனையோவிஸ்தாரம்
சூதோஅவருடைய சூஸ்திரத்தையாரறிவார்
கண்ணுக்குள்பாவைபோல் கலந்திருந்தகாரணரே
நித்தனேயும்மைவிட்டு நிமிஷமிருப்போமோ
என்னமொழிபேசினீ ரெம்பெருமாளென்றுதர்மர்
பன்னகமேற்றுயின்ற பச்சைமுகில்மேனியரே
அட்டதிக்குந்தானறிய ஐவர்களையெப்போதும்
விட்டுப்பிரியாத மேகவண்ணர்தன்னைவிட்டு
மண்ணாசையாலே மறந்தார்களென்றுசொல்லி
விண்ணோரும்வானவரும் மேதினியுந்தானகைக்க
விருப்பமுடனுங்கள் மேதினியையுண்டெனவே
இருப்பதுவுமில்லையினி எந்தவிதமானாலும்
திருவுந்திபூத்தோனே திவ்வியமலர்பதத்தை
கண்டுவணங்கிஐவர் கைகட்டிவாய்புதைத்து
தொண்டுபண்ணிநாங்கள் தொழுதுவைகுந்தமதில்
காத்திருந்துஏவல்செய்யக் கற்பிக்கவேணுமையா
வீற்றிருப்போமும்மிடத்தில் மேதினியைவேண்டாங்காண்
அன்றுஅஸ்வத்தாமாவை அச்சமில்லைவைத்தாயே
வென்றுகதிர்மறைத்து விஜயனையுங்காத்தாயே
பாருலகிற்கஞ்சன்றன் பழிகாத்தநீர்தானும்
வீரன்சயிந்தனையும் வீமனால்கொன்றாயே
சிந்துபதிசாபஞ் சிதையவழித்தாயே
எந்தவகையானாலும் ஈரொன்பதுநாளில்
பார்த்திபர்நூற்றுவரும் பதினெண்ணக்குரோணிபடை
காற்றிசையோர்மன்னரையும் நற்படையோர்தங்களையும்
நீயேவதைத்தாயே நின்னையல்லால்வேறுமுண்டோ

நாருயணர்பாதம் நாள்தோறுங்காத்திருக்க
மாண்டுவைகுந்தம் வாழ்பதிக்குஐவரையுங்
கொண்டுசெல்லுமென்று கூறினர்தருமருமே
பின்னுந்திருமால் பேசலுற்ருரம்மானே
நாடுதனில்செய்தகுற்றம் நன்ருகஎங்களுக்கு
தெரியாதபடியெங்கள் செய்தபிழைதீர்த்திடவும்
பிரியாதுலகில் பேராசையற்றிடவும்
நண்ணும்பரகதியை நாங்களடைவதற்கு
அண்ணலேநீகிருபை அளித்திடென்ருரம்மானே
மாயவனுர்மனமகிழ்ந்து வைகுந்தவாழ்பதிக்கு
நேயமுடமை நினைந்துசெல்லுமப்போது
மன்னவனேதூது வரவிடுவேனுந்தனுக்கு
பின்னும்பார்த்தனுடன் பேரானபரிசித்துவையும்
போற்றுமேயத்தி புரத்துக்கதிபதியாய்
சாற்றும்புவிக்குத் தலைவனெனவுரைக்க
வைத்துமணிரத்தினம் மகுடமுடிசூட்டி
அத்திபுரந்தன்னில் அங்கவரைநீருத்தி
வீறுபுகழ்குந்தியையும் வேந்தனைநீயழைத்து
கூறும்பரிசித்துவின்றன் கொலுவிருமென்றுசொல்லி
கலியாணம்வருவதுமுன் காவலரேநீர்தாமும்
மெலியாமலேவருமே மெல்லிநல்லாள்தம்முடனே
பந்தமணிவைகுந்தம் பரகதியைப்பார்க்கவென்ருர்
மற்றுமகாவிந்தமோ வாருமென்ருரைவரையும்
மன்னவர்கள்தான்பணிந்து மாயோனைத்தானேக்கி
உன்னருளால்வேறே ஒருதுணைகளுண்டோதான்
தீதாலேநாங்கள் செய்தபிழையுள்ளதெல்லாம்
ஏதாகிலும்பொருத்து இரட்சிக்கவேண்டுமையா
ஐயாசுவாமி ஆதிகேசவமுகுந்தா
மெய்பாய்வைகுந்தபதம் வேண்டியேவாருேங்காண்
என்றுபணிந்து இயலாகஐவர்களும்

விருத்தம்.

எங்குமாநின்றமூர்த்தி ஈரேழுலகமெங்கும்
அங்குமாயிருக்குமாகி லாருயிர்க்கெல்லாந்தாளுய்
பொங்குபூரணமாய்நின்ற பொன்னலங்காராபோற்றி
தங்குவதில்லைநாங்கள் தரணியிலும்மைவிட்டு. ൬

ஆவதோர்காலமெல்லா மச்சுதன்செயலிஞலே
போவதோர்காலம்வந்தால் புத்தியுமலைக்கலாமோ
சாவதோர்காலம்வந்தால் சற்றிங்கேதரிப்போமேதான்
நாவதுரெண்டுஞ்சொல்வோம் நாருயணுபோற்றிபோற்றி. ௰௧

(கதை) என்றுதர்மராயரவ ரிருதாளைப்பூண்டுகொண்டு
சென்றுமகாசேனையுடன் திரும்பிஞரம்மானே

மற்றுமகாசேனையுடன் வேந்தருடனப்போது
சாற்றும்புகழ்தருமர் தான்திரும்பிப்போனதின்பின்
ஏற்றுந்துவாரகா பதிதனிலேமாயவனும்
வீற்றிருந்துசெங்கோல் விசாரிக்குமன்னாளில்
சாத்திரங்கள்சொல்லுஞ் சலமுனிவரந்தனருங்
காலங்கலியுகங்கள் கற்பனையும்வந்ததினால்
கோலக்குறுகிக் குணபேதமுமாகி
பொய்யுங்கொலையும் புலைசுருட்டுமேகளவும்
செய்யும்பரிகாசஞ் சின்னமுகாசனமும்
குண்டுணியுங்கோளுங் குடிகேடுவஞ்சனையும்
தெண்டம்பரும்பிடியும் தெண்டனையுங்கண்டிதமும்
மான்பரமழிந்து வரம்புதப்பிப்போவதுவும்
தானதவங்குலைந்து சத்தியமும்பொய்யாகி
மேல்குலமேகீழ்குலமாய்க் கீழ்குலமேமேல்குலமாய்
கால்மேலுந்தலைகீழாய்க் கலியன்பிறக்குமென்றான்
நால்வேதஞ்சொல்ல நாராயணனுந்தான்கேட்டு
பால்பொறுத்தும்வாயாற் படைத்தலைவர்மந்திரியார்
சாந்தகியாழ்வார் சகலரையுந்தானழைத்து
ஏத்தவிசாரமென்று இனியேதுசொல்லுமென்றார்
தேவர்செயலாலே தீங்கறியோநாமடியார்
ஏவல்செய்யுந்தொண்டர் ஏதென்றெடுத்துரைப்போம்
சொற்புத்திகேட்குந் தொண்டருக்குநீர்தாமும்
கற்பித்தருளியசொல் கர்த்தனேசித்தமையா
கேட்குமடியார்க்குக் கிருபையின்னதென்றுரைப்பீர்
தீர்க்கமுடனாழியர்கள் செப்புகிறோமென்றுரைத்தார்
ஆதரவாய்மாலும் அவர்கள்தனையாதரித்து
நீதமிக்கநாமும் நீணிலத்திலேயிருக்க
சோசியால்சொன்ன சொற்படியேநாமும்
வாதனைக்குள்ளாகாமல் வனத்தில்தவசிருக்க
நன்றாகத்தோணுதப்பா நம்முடையயோசனைக்கு
குன்றமல்நீங்கள் குவலயத்திலேயிருந்து
எப்போதும்போலே யிருப்பீர்சுகமாக
அப்போதிருந்தவர்கள் அகமுமிகவுருகி
இருக்குந்தருணத்தில் இன்னமொருசற்பனைதான்
பொருக்கும்பொருளே பிள்ளைகள்தான்செய்தபிழை
பச்சைமாலீன்ற பதினாயிரம்புதல்வர்
இச்சையுடன்கூடி யிசைந்துவிளையாடுகையில்
வீதிதனில்நின்று விளையாடுநேரமதில்
மாதுபயில்துர்வாச மாமுனிவன்தான்வரவே
சந்நாசிவேடமுமாய்த் தான்வரவேகண்டார்கள்
பின்னார்போல்வேட மிருந்ததொருகெர்ப்பமதாய்

ஒருகுமாரர்தன்னி லொருவனுக்கும்பெண்ணுடையாய்
நீதில்லாதவமூர்த்தி செய்தஉதாரமதில்
பார்த்திரையைவைத்துநல்ல பட்டாடையுமுடுத்தி
ஏற்றமுக்காடிட்டு எதிர்சென்றாரம்மானை
கோலஞ்சிறந்து குமாரர்களுடன் தான்கூடி
காலஞ்சிறந்துமவர் காரணங்களேமுடிய
குருமுனிகாலில் குமாரர்களும்போய்ப்பணிந்தார்
பெருமையுடனிவள்தான் பெண்பெறுமோ ஆண்பெருமோ
திருமுனியேசெப்புமென்று தெண்டனிட்டாரம்மானை
குருமுனியுந்தானகைத்து குமாரர்களைநோக்கி
சீறுகின்றவுங்கள் தவம் மெய்யாயழிந்திடவே
இந்தப்பெண்தன்வயிற்றில் இருப்புலக்கைதானுமொன்று
மூந்திப்பெறுவாளெனவே மொழிந்தனர்காணம்மானை
அச்சாபமிட்டு அறன்முனிவன்போனபின்பு
இச்சாபம்பே காமல் இருப்புலக்கைத்தானுமொன்று
மாயன்குமாரர் வயிற்றில்விழுந்திடவே
ஐவர்குமாரரெல்லாம் கண்டுதுயரமதாய்
இருப்புலக்கைதன்னை எடுத்தங்கேபோயினர்காண்
கொண்டல்வண்ணன்முன்புவைத்து கும்பிட்டாரம்மானை
கண்டுதிருமால் கருத்தில்துயரமதாய்
மீண்டுசொல்லவரவழைத்து மேன்மையுள்ளவாளரத்தால்
சல்லிப்பொடியாகத் தவிடுபொடிசெய்யுமென்றார்
அந்தப்படியாக அரத்தால்பொடியாக்கி
சிந்துபொடியுஞ் சிறுமணல்போலானபின்பு
அரத்திடரொவி அந்தறுகப்பொடியாய்
உதிர்த்தசிறுகணுவா யுச்சிதமாயமைத்ததென்றார்
கணுவையெடுத்துக் கடலிலேபோடுமென்றார்
அணுவாயுதிர்த்ததெல்லாம் அலையோரந்தூவுமென்றார்
ஆமென்றறிந்துவிட்டார் ஆயனுர்சொற்படியே
விரைத்தபொடியெல்லாம் மெல்லியுங்கோரையதாய்
உருத்திமுளைத்துமகா வுன்னதமாய்முளைத்து
நின்றதுகாணங்கே நெடியோனருளாலே
ஒன்றுமிச்சமான உருண்டகணுவதனை
மச்சம்விழுங்கி வலையிலவந்துசிக்கினதே
அச்சமில்லாவேட னந்தமச்சந்தான்வாங்கி
கீறிக்கிழிக்கில் கிடந்தெடுத்தானிக்கணுவை
மீறிச்சுரந்தனிலே விருப்பமுடன்தான்சேர்த்து
வைத்திருந்தான்வேடன் வகையாகஅம்புதனை
புத்திரரும்பார்த்து பூரித்துகொக்கரித்து
ஆற்றிலேசென்று அணிவகுத்தாரம்மானை
அடித்துவிளையாட அனைவோருஞ்சம்மதித்து
வருங்காரியமறியாமல் மதலைகளுங்கண்டுவிட்டார்

விளையாடவந்திடத்தில் விதிவசமுந்தான்சூழ்ந்து
இளையோடிருந்து கிடக்கிறதென்றுசொல்லி
கண்டபேரோடிக் கண்ணரிடந்தானுரைத்தார்
வந்தவொரு ஆறுவாச்சு மாமுனிவர்சாபத்தால்
ஆறாகவே நாறுமென்று அரியமுனிதானுரைத்தார்
பாராகவேயுமக்குப் பலித்ததேயச்சாபம
அண்டர்பிரானும் அதுவல்லாமிருந்ததென்று
செய்யுஞ்சடங்கு சீக்கிரமாய்த்தானமுடித்து
வைகுந்தஞ்சேர மனமுற்றாரம்மானை

விருத்தம்.

தம்பிமகுடமன்னர் சகலருமவாறுமென்று
எம்பிரானருளிச்செய்ய ஏவல்கட்டாதேதாவென்று
நம்பிநாராயணனேவந்தோம் நாதனேசரணமென்று
தம்பிமாரறியப்போற்றி சாத்தகிபாழ்வார்வந்தார். கஉ

நின்றதோர்மன்னர்தம்பி கிருபர்தன்முகத்தை நோக்கி
நன்றலார்கந்தகோபர் நானிலம்விட்டுகாணப்
பொன்றிடவேவறுமென்று புயிதலையாண்டநீங்கள்
தென்றலங்காரம்போலச் செகந்தனில்வாழுமென்றார். கங

கரியமாலருளிச்செய்த காரணமேதுவென்று
தெரியவேவிவரங்கேட்கத் தேசிகரிந்துரன்றாய்
ஆரியதோர்கலியனவாறு றானதால்வனத்திற்போமேம்
பெரியதோர்புவனமெந்தன் பேரனைச்சொல்லிவாழும். கச

இப்படி இறையோன்சொல்ல எங்கியேமுகமும்வாடி
அப்படிசொன்னானோ வடியருமவாறேமென்று
செப்பிடத்திருமால்தானும் தெரியவேவுண்மையாக
வைப்பினிலிருக்கவென்று வளம்புகட்டுத்தானுரையார். கரு

நடை.

வனத்தில்தவசிருக்க மாயவனார்தான்மகிழ்ந்து
கனத்துக்கிதமான தன்மைகளும்புத்திகளும்
சொல்லியுபசரித்துத் துயரமெல்லாந்தான்தீர்த்து
செல்வியதோர்காரிகையே விரும்பிமனையில்வண்ணி
சாத்தகியாழ்வார்க்குத் தனிமுடியுந்தான்தரித்து
நாற்றிசையும்போற்றும் நம்மைப்போல்தானிரென்று
முடிமகுடந்தான்தரித்து முறைமையாயிருந்து
விண்ணமிலாதபடி மேதினியிலெல்லோர்க்கும்
சொன்னபடிகேட்டுத் தொழுதுவணங்கியிருந்தும்
அன்னசுகமெல்லாம் பட்சமின்றித்தானிருக்கல்
காலங்கலியுகமாய்க் காரணமுந்தான்றுகையில்
ஞானங்கள்தானறியும் நம்முடையரூபமெல்லாம்
பொரியாதநட்புப் பொருமையதுபாரில்நின்று

சிறுமைவருமெங்களுக்குத் தேவரீர்போர்வதினால்
என்றுமயங்கி எழுந்துமன்னவர்தாமும்
நின்றுதகழ்ந்து நெடியோனைப்பின்றொடர்ந்தார்
தொடர்ந்தழுந்தம்பியையுந் துரைமகள்தங்களையும்
அடர்ந்துவாராதபடி அமர்த்தியேயச்சுதனார்
வானம்புவியளந்த மாலபதந்தானோக்கி
கானகமேநோக்கிக் கடுகநடந்தாரும்
நாடுவிட்டுத்தேசம் நன்னகரிதானும்
கூடுவிட்டுத்தேன்குழவி கொட்டாதபாவனைபோல்
காடுகரைகண்டார் கண்ணனைகண்ணனே
தேடுந்தலமீதில் சிவயோகம்நாட்டமதாய்
போழிவுகொண்டு புறப்பட்டாரம்மானை
ஊராருகாய்நின்ற உயர்ந்தமரங்களெல்லாம்
பூத்துச்சொரியும் புவமிழந்தழையும்
காய்த்துவிசிறியதாய் காளாஞ்சிபூமியதாய்
மயில்கள்தொடர்ந்தாட வானரங்கள்கூத்தாட
குயில்களிசைக்காடக் கொஞ்சுங்கிளிபேசிவர
புலிகளடிபணியாய்ப் பூதங்களாடிவர
கிளிகள்பிரண்டோட கீத்தனங்கள்தான்முழங்க
அரிகடடிபணிய அரியோனுந்தானடந்தார்
கரிகளடிபணிய கரியோனுந்தானடக்க
கஸ்தூரிவாசமென்று கஸ்தூரிவந்துதொழ
வஸ்துவிற்குள்வேண்டினதோர் வஸ்தெல்லாம்வந்துதொழ
கற்பூரவாசமென்றுங் கற்பூரஞ்சூழ்ந்துவர
கற்பூரமலர்களெல்லாம் நாற்றிசையும்பூத்துநிற்க
ஆலியத்தோன்றன்பாத மரவுபணிந்தாட
இரவுபகலாதி யெம்பெருமான்வந்தவிடம்
மேகநிறமேனிபற்கி யேகம்பணிமாற
ஆகங்குளிர்ந்து அனேகநெடுந்தூரம்
வந்துநெடுமால் வனமெல்லாமாராய்ந்து
கொத்துலவுசண்பகஞ்சேர்குளிர்ந்தவனச்சாலைகளும்
கந்தமலர்க்காவுங் கடம்பவனச்சிறப்பும்
ஆதவனுமாடாத ஆரணியமானதிலே
மாதவனுஞ்சம்மதியாய் மனதுமிகமகிழ்ந்து
நாலுதிக்கப்பார்க்க நடுவேயொருவிருட்சம்
ஆலுதித்துநின்ற அடவிகளைப்பார்த்து
இந்தவிருட்சம்போ லெங்கேயுங்கண்டதில்லை
நிற்போந்தவசு நிறைவேற்றமலனுமென்று
கற்பூரவாசம் கலையாசன்விரித்து
பொற்பூவும்வாசமும்மேபோல் பொருந்திமனமொன்றாகி
அட்டாட்சரத்தி லமர்ந்திருந்தார்மாயவனார்

கட்டாற்றிலன்று நடுக்கடலிற்போட்டதொரு
இருப்புக்கணுப்பதித்த எய்தஅம்புதானெடுத்து
கொருமாச்செடிதாங்கி சீராவுந்தானெடுத்து
சிலையெடுத்தவேடன் சிற்றரிவாள்கைபிடித்து
கலைமான்களைத்துக் கறவேடன்காடுசுற்றி
மான்மறைகள்தேடி வனத்துடன்சொல்லலுற்றான்
தேன்மருவுந்தாரன் திருவேங்கடப்பெருமாள்
ஆரணியந்தன்னில் ஆலமரத்தடியில்
தாரணியைவிட்டு தவசிருந்தகோலமதை
வேடனதுகண்ணுக்கு விரைந்துவந்தமானதுபோல்
அண்டர்பிரான்ரூபம் அவன்தனக்குமான்போலே
கண்டான்முடுக்கிக் கடுகச்சரந்தொடுத்தான்
விண்டானசரத்தை வேடனவன்மானெனவே
மார்புளவாங்கி வல்வேடனெய்துவிட்டான்
சீர்மருவுமாயனிட சீர்பாதந்தன்னில்வந்து
பட்டுருவிஅம்பு பரிந்துமறுபுறமும்
தட்டுருவியோடத் தண்டாமரைபதத்தில்
மண்ணையுண்டமாயன் மாக்கம்வந்துபூமியிலே
வெண்ணையுண்டமேனி விசனம்பொறுக்காமல்
மூச்சற்றுமேனி முகமும்வெளுப்பேறி
பேச்சயர்ந்துகாலயர்ந்து பிறக்கிலையுந்தோற்றாமல்
மாயோனசைந்து மதனிகிடக்கையிலே
மானெய்தோமென்று மகிழ்ந்துசிலைவேடன்
பதையாதமர்ந்ததென்று பாங்குடனேஓடிவந்து
வதைப்பட்டமர்ந்ததென்று வல்வேடன்பார்ப்பளவில்
கொதையும்பட்டுருவிக் கோபாலர்தான்கிடந்தார்
இதைவந்துபார்த்து ஏமாந்துவல்வேடன்
கதையோகதைப்பயனோ காலத்தின்வல்வினையோ
விதியோவிதிப்பயனோ பிர்மாவின்கற்பனையோ
மதியோமதிமயக்கோ மகாதேவர்கற்பனையோ
ஏதோவிதிப்பயனோ எம்பெருமாள்தன்மீதில்
தீதுவரக்காரியமேன் செய்ததவக்குறையோ
தானென்றுலகளந்த தம்பிரான்மானெனவே
பொய்மான்போல்வந்த புதுமையறியாமல்
மெய்மானென்றெண்ணி விரும்பவெய்துவிட்டேன்
என்னெஞ்சோஎன்செயலோ ஏதென்றறியாமல்
முன்செய்ததீவினையோ முகுந்தர்மேலம்புபட
வஞ்சனைகளல்ல மனதறியவந்ததல்ல
வஞ்சனைமுனவென்ற காரணமென்றறியேன்
பாவியானேனே பச்சைமால்காரணத்து
தீவினைகள்செய்தேனே ஜென்மமென்னசெய்வேனினி
என்றுசிலைவேடன் ஏங்கிவிழுந்தலறி

குன்றசைவறிக் குவலயத்தில் வீழ்ந்தாற்போல்
அல்லல் அபயமிட்டு ஐயோசிவனேயென்று
தலையிலேதானறைந்து தானழுதான் வில்வேடன்
வில்வேடன்றானழுக மெய்மகிழ்ந்து கோபாலர்
வல்லவனே நீயும் மயங்காதேயென்றுசொல்லி
அழுதவனைத் தேற்றி அரவணைத்து வாவெனவே
தொழுதனஞ்சேர்ந்து நாரணற்குத் தெண்டனிட்டு
எந்தன்பிராணனே எளியார்க்கெளியவனே
உந்தன்மலர்ப்பாதமதில் ஊன்றுவித்தம்புதைக்க
எய்தேனே பாவியெழுநரகில் வீழ்ந்தேனே
மையழகுமேனியிலே வில்லாலேயெய்தபோது
வைப்புடனேமேனியிலே வில்லாலேயெய்ததேது
அம்புதொட்டகையை அறுக்குமேழுவோரைப்போல்
அன்றுலகையெல்லாம் அளந்தபாதமல்லவோதான்
சென்றுதிசைகாண்முனோர் தேம்பதமல்லவோ
அகலிக்குமோட்சம் அளித்தபாதமல்லவோதான்
புல்லரியகல்லைப்புரித்தபாதமல்லவோதான்
பேசுமுருவசியாளைப்பிறந்தபாதமல்லவோதான்
பூசாருந்தேவர்கள் போற்றும்பாதமல்லவோ
வேடனிவைசொல்லி வெகுண்டழுகமாயவனும்
தோஷமில்லையுன்பேரில் சும்மாயலையாதே
முன்னாளில்நீயும் மிகுந்தகொடுவாலியென
அந்நாளில்நீயிருந்தாய் அப்போதானெய்துகொன்றேன்
முன்னாட்பழிவாங்க எய்துகொண்டாய்வில்வேடா
இந்தப்புவியில் இப்போதானத்தோநாம்
நமக்குமுடிவிதுகாண் நல்வேடா சொல்லுகிறேன்
சுமக்குங்கலியுகத்தில் துன்பமறுமென்றுசொல்லி
வைகுந்தஞ்சேரவென்று வந்தோமனத்திலேதானே
கைகொண்டெடுத்து கணைகாலில்தைத்ததுகாண்
முடிவுஞ்சரியாக முடிந்ததினிப்பதறல்
மடியஉயிரிழந்து வைகுந்தம்போய்ச்சேர
போறதறியாமல் புலம்புவதேனோவேடா
வாதுவிதிவந்தால் மாட்டேனென்றுவிடுமோ
உந்தன்மயக்கமதை யிப்போதேவிட்டுவிடு
உன்செய்திபார்க்கில் உன்மீதில்குற்றமில்லை
என்சேதிசொல்லுகிறேன் இதுவாயுதவிசெய்வாய்
நல்லதென்றுவேடன் நாரணனைத்தான்பணிந்து
சொல்லுமென்றுவாய்புதைத்துச் சோம்பிமுகம்வாடி
வாட்டமுடனின்று வல்வேடன்தானேகேட்க
நாட்டமுடன்மாயன் நம்பெருமானோதுசெ
வாராய்நீவேடா மன்னுபுகழ்பஞ்சவர்கள்
தாராரும்அத்திபுரம் தர்மருக்குந்தம்பியரும்

சேரகவாழும் சிறந்தநகர் தனிலே
கோரதமே போய நிமிஷத்திலுன்னையதாய்
தர்மர்க்குலம் சகாதேவனைக் காணாமல்
மவுனவெளி தனிலே வாராமல் நீகாரும்
வீமன்விசயனிடம் விளம்பிடாயென் செய்தி
தர்மரவர் சொன்னதுவாய் சாற்றுமென்று சொல்லி
வேறொன்றுஞ் சொல்லாமல் விபத்துவதென்று சொல்லி
கூறுமென்று சொல்லிவிட்டார் கூர்வேடன் தன்னில்
அவ்வசனங் கேட்டு அசந்துசிலை வேடனவன்
இவ்வசனங் கேட்டு இராவணனைக் கண்டுவிட்டு
வழிகூடத்தானடந்தான் மனதிடைந்து தானவேடன்
பழிபாவம் வந்ததென்று பயந்துதிசை கோயி
காடுகடந்து கருமலையுந்தான் கடந்து
காடுநகரி சென்று தண்ணிரிடைபோய்
காலுக்கருவும் [illegible] கடந்து
கொலுவும் மானமணையுங் கொற்றவர்கள் தானிருக்கும்
கோட்டைமதில் சென்று குருகுலத்தார் தங்களுடன்
வீட்டையுங்கண்டு வீமன்விசயனிடம்
அச்சுதனார் சொன்னபடி ஆக்கியமாளையெல்லாம்
உச்சிதமாய் வேடன் உரைத்தா[illegible]
அந்தமொழி தருமர் அனியாயமென்றுரைத்தார்
இந்தமொழி கேட்க என்செய்வோமென்றிவர்கள்
வேடனைத்தான் போமெனவே வீமன்விஜயனுந்தான்
தாடலந் தருமரிரு தாள்தனிலே பணிந்து
விதியோ விதிபயக்கோ மேகவண்ணரிப்போது
அதிசயமாயெங்களுக்கு ஆவனுப்பினைத்த கதை
ஏதோ தெரியாது இதுபுதுமைதான் கேட்பாம்
சூதா அவருடைய சூட்சமோ கற்பனையோ
தம்பிநகுலன சகாதேவன் தன்னுடனே
உம்பரோயுக்தனுக்கு உரையாயலிச்சேதி
அண்ணருக்குமெந்தனுக்கும் அனுப்பினைத்த கற்ப[illegible]ணை
என்னமெண்ணசாமி இனிமேல்மருமமென்ன
என்றுவிசையன் இவ்வசனந்தான் கேட்க
மன்றுபுகழ்தர்மர் மயங்கிமனமிடைந்து
தம்பிரானவர் சகாயந்தானிப்போது
எம்பிரான் கற்பனைக்கு என்னமென்று சொல்வேன்
காரணமாய்க் காணுதிந்த கார்வண்ணர் தன்சேதி
நாரணனார் சொற்கேட்டு நடக்கோமிவதுரையில்
என்னபிழைவந்தாலும் ஏதுவகைபானாலும்
சொன்னமொழி தப்புவரோ சோதனைகாண் தம்பியரே
எப்படியோ சித்தம் எம்பெருமான் தானினைவு

குன்றகமறிக் குலைபதறிவீழ்ந்தார்போல
அல்லே அபயமிட்டு ஐயோசிவனேயென்று
தலையிலேதானறைந்து தானழுதான்விகடன்
வில்வேடன்றானழுக மெய்மகிழ்ந்துகோபாலர்
வல்லவினையும் பிழையாதேயென்றுசொல்லி
அழுதவனைத்தேற்றி ஆதரவாய்த்தானவனே
தொழுவானுஞ்சேர்ந்து நாலவகுத்தனவிட்டு
எந்தனைப்பிராமணனை எளியவற்கெளியவனை
உந்தன்மலர்ப்பாதமதில் உயிர்துறவியமைக்க
எய்தேநினைப்பாரிடருரைகில்வீழ்ந்தேனே
மையமுதுமேனியிலே விலவாச்செய்தவிதாரு
வய்ப்புபடாமேனியிலே விலவசேய்தவிதாரு
அம்புதொட்டகையை அறுத்துமேமுனைவைப்பேன்
அன்றுலகையெல்லாம் அளந்தபாதமல்லேதான்
சென்றுதிசைநான்முகனார் தேம்பதமலவோ
அகலிக்குமோட்சம் அளித்தபாதமல்லோதான்
புல்லரியகங்கைபுரிந்தபாதமல்லவோதானே
பேசுமருகசியானமறந்தபாதமல்லவோதான்
பூசுருந்தேவர்களும்போற்றும்பாதமல்லவோ
வேடனிவைசொல்லி வெகுண்டழுகமாயவனும்
தோஷமில்லையென்பேரில் சும்மாயல்லவாதே
முன்னாளில்நீயும் மிகுந்திருந்தவாலியென
அக்காலில்நீயிருந்தாய் அப்போதுனெய்துகொன்றேன்
முன்னாட்பழிவாங்க எய்துகொண்டாய்விலவேடா
இந்தப்புவியில் இப்போதுவந்தோம்நாம்
நமக்குமுடிவிதுகாண் நல்வேடசொல்லுகிறேன்
சுமக்குங்கலியுகத்தில் துன்பமகலுமென்றுசொல்லி
வைகுந்தம்சேரவென்று வந்தோம்வனத்திலேதான
கைகொண்டெடுத்து கணைகாலில்தைத்ததுகாண்
முடிவுஞ்சரியாக முடிந்துவிடப்பயனும்
மடியவுயிரிழந்து வைகுந்தம்போய்சேர
போறதறியாமல் புலம்புவதேனோவேடா
வாரவிதிவந்தால் மாட்டேனென்றுவிடுமோ
உந்தன்மயக்கமிகுதயிப்போதேவிட்டுவிடு
உன்செய்திபார்க்கில் உனக்குக்குற்றமில்லை
என்சேதிசொல்லுகிறேன் இதவாயுதவிசெய்வாய்
நல்லதென்றுவேடன் நாரணனைத்தான்பணிந்து
சொல்லுமென்றவாய்புதைத்துச் செங்கமுகம்வாடி
வாட்டமுடனின்று வல்வேடன்தானேகேட்க
நாட்டமுடன்மாயன் நம்பெருமானேதுசெ
வாராய்நீவேடா மன்னுபுகழ்பஞ்சவர்கள்
தாராரும்அத்திபுரம் தர்மருந்தம்பியரும்

சேசகவாழும் சிறந்தநகர் தனிலே
சோரகமேபோய நிமிஷத்திலுண்மையதாய்
தர்மர்குலன் சகாதேவனகோமல்
மவுனம்வெளிதனிலே வாராமல் நீகாரும்
வீமன்விசையனிடம் விளம்பினாயென்செய்தி
தர்மரவர்சொன்னதுவாய் சாற்றுமென் றுசொல்லி
வேறொன்றுஞ்சொல்லாமல் விபத்துவதென்றுசொல்லி
கூறவென்றுசொல்லிவிட்டார் கூர்வேடன்தன்னில்
அவ்வசனங்கேட்டு அசந்துசிலைவேடன்
இவ்வசனங்கேட்டு இராகவனைக்கண்டனிட்டு
வழிகூடத்தாண்டுந்தான் மனமிடைந்தான்வேடன்
பழிபாவம்வந்ததென்று பயந்தாதிசைநோக்கி
காடுகடந்து கருமலையுந்தான்கடந்து
காடுநகரிசென்று தன்னனதிகளிடம்போய்
நாலுத்தெருவும் சித்திரத்தெருவுந்தான்கடந்து
கோலுவும் மாணமணையும் கொற்றவர்கள்தாமிருக்கும்
கோட்டைதனிற்சென்று குருகுலத்தோர்தங்களுடன்
வீட்டையுங்கண்டு வீமன்விசயனிடம்
அச்சுதனார்சொன்னதொரு ஆக்கினைகளெல்லாம்
உச்சிதமாய்வேடன் உரைத்தான்காணம்மானை
அந்தமொழிகேட்டு நமர் அதிசயமென்றுரைத்தார்
இந்தமொழிகேட்க என்செய்வோமென்றவர்கள்
வேடனைத்தான்போமெனவே வீமன்விஜயனுந்தான்
தாடலந்தருமரிருதாள்தனிலேபணிந்து
விதியோவிதியக்கோ மேகவண்ணரிப்போது
அதிசயமாயெங்களுக்கு ஆளனுப்பினைத்தகதை
ஏதோதெரியாது இதுபுதுமைதான்கேட்போம்
சூர்தாஅவருடைய சூட்சமோகற்பனையோ
தம்பிநகுலன சகாதேவன்தன்னுடனே
உம்பரேயுத்தனுக்கு உரையாமலிச்சேதி
அண்ணருக்குமெந்தனுக்கும் அனுப்பினைத்தகற்பனைதான்
என்னமெண்ணசாமி இனிமேல்மருமமென்ன
என்றுவிசையன் இவ்வசனந்தான்கேட்க
மன்றுபுகழ்தர்மர் மயங்கிமனமிடைந்து
தம்பிரானவர் சகாயந்தானிப்போது
எம்பிரான்கற்பனைக்கு என்னவென்றுசொல்வேன்
காரணமாய்க்காணுதிந்த கார்வண்ணர்தன்சேதி
நாரணனார்சொற்கேட்டு நடந்தோமிதுவரையில்
என்னபிழைவந்தாலும் ஏதுவகையானாலும்
சொன்னமொழிதப்புவரோ சோதனைகாண்தம்பியரே
எப்படியோசித்தம் எம்பெருமான்தானினைவு

அப்படியேயல்லாது அன்றுமுதலின்றளவும்
சொற்படியேநாமும் தொண்டுபண்ணியேதிரிவாய்
விற்பிடித்தசேவகனை வீமனையுங்களைத்தான்
வலுவுடையராகையினால் வரச்சொன்னாருங்களையும்
மெலியுடையராயிருந்து வீரியத்தைவாங்கிவைத்து
வரச்சொன்னீர்நீங்கள் வழிதுரையாய்க்கேட்பதற்கு
தரச்சொல்லுதுவாரகையை தானகலநின்றுவிடும்
அகலநின்றுகாரியங்கள் ஆசாரமாய்வணங்கி
சகலகலையறிந்த தாமோதரனிடத்தில்
போய்வாருமென்று பொருந்திவிடைகொடுத்தார்
செயம்போலிருவருமே தெண்டனிட்டாரம்மானை
நடந்தார்வனந்தனிலே நாரணரைத்தான்தேடி
தொடர்ந்தார்வனங்களெல்லாஞ் சோலையிலேவந்துகண்டார்
சந்தனச்சோலையிலே தனிக்காலின்கீழேதான்
அந்தணருமங்கே யழுதுபரிதாபம்
தோற்றுநகாவனன்றிருவர் துவளநடந்தோடி
மாற்றவரைவெற்றிகொள்ளு மன்னரிருபேரும்
அந்தவனந்தனிலே அருச்சுனனும்வீமனுமாய்
இந்தவனமென்றிசைந்தோடிவந்துநின்று
வந்தார்களாலடியில் மன்னரிருபேரும்
செந்தாமரைக்கண்ணர் தியங்கிமுகம்வாடி
கண்ணருந்தான்மண்மீதில் காயந்துடங்கிடக்க
கண்டார்விழுந்தார் கதறியபயமிட்டார்
விண்டார்மனத்துயரால் விண்ணுமண்ணுந்தானதிர

விருத்தம்

ஐயகோராமமாமா ஐவரைப்பிரிந்துகானில்
மெய்பதுடமுதிதானு மேனியுந்நிதமும்வேராய்
கையவும்வசமோவுந்தன் நாமமுமறந்துநாங்கள்
உய்யவேயினிமேற்பாரி லுண்ணவும்வேணுமோதான். கஎ
காயமும்வருமோவெங்கள் கண்ணுக்கண்ணனகண்ணு
ஞாயமுமிதுவோஐயா நாங்களுஞ்சகிப்போமோ
மாயமாயெய்ததாரோ மாயனென்றறிந்திலாரோ
ஆயனையெய்தார்சொல்லும் அவனுயிர்கொல்வோமென்றார். கஎ

வேறு.

பார்ப்பார்விழுவாரெழுந்திருப்பார்பழியோகுலையோமுடிந்ததெ
ன்பார், கேட்பார்திருமால்முகம்பார்ப்பார்கெடுதியோவிதியோ மதியெ
ன்பார், எற்பாரிதுதான்செய்தபிழைசெய்தார்சொல்லுமித்துயரம், கா
ர்ப்பார்திருமால்தனைநாளுங் கயிலைக்கடவுளவர்தாமே. கஅ

கதை.

என்றுபுலம்பி இருவருமேதானெழுந்து
குன்றுமலைபோலே குதித்துவிழுந்தழுது

அழுதுபுரண்டு ஐயோ அபயமென்று
புழுதியின்மேல்விழுந்து புலம்பிப்பரதவித்து
பூமியதிரப் புவனமெல்லாந்தானதிர
சுவாமியுந்தன்மீதில் சரந்தொடுக்கவல்லவரார்
தேவரசுரர்களோ திக்குள்ளபாலகரோ
மூவரோ அந்த முனிவரரக்கர்களோ
யாவரோஎப்தவர்க ளடுத்தேயழித்திடுவோம்
தேவரீர்தப்பாமல் செப்புமென்றாரம்மானை
கூர்பகழிவிட்டவனைக் கொல்வோங்காண்சொல்லுமையா
அவன்கையிலம்பா அவனையழித்திடுவோம்
எந்தவிதஞ்சுவாமி இடையூறுவந்ததென்று
அந்தமுள்ளவீமன் அருச்சுனனுந்தான்கேட்க
சுந்திரஞ்சேர்மாயன் சொல்லுவார்நல்வசனம்
விருபுகழ்வெற்றியுள்ள வீரருகிருக்க
பாருலகிலுள்ளோரும் பராபரங்கள்மூவோரும்
ஆருமென்மேலேதான் அம்புதொடமாட்டார்கள்
கேளீரருச்சுனரே கிலேசமதைவிட்டுவிடு
மீளாவலுவீமா விசாரங்கள்வேண்டாங்காண்
காலங்கள்தான்முடிந்த கற்பனையுந்தோன்றாமல்
ஞாலங்கடந்து நற்றவசுதானிருக்க
சிலமுடனுங்களுக்குத் தெரியவேசேதிசொல்லி
ஏலவந்துகானகத்தில் இருப்போந்தவமெனவே
நாமென்றுதானினைக்க நடுவிலிருந்தான்தன்செயலாகு
தாமென்றுந்தோன்றாமல் சாதகமாய்கூடனின்று
இந்தவுடலுயிரும் எப்போதுந்தன்னதாய்
சொந்தமெனப்பூவுலகில் சுமந்தலைந்தாய்காலமெல்லாம்
மெய்யென்றுதாமிருந்தோம மேதினியேயுண்டெனவே
பொய்யாய்முடிந்ததுகாண் புத்தியுள்ளோர்தான்கேளீர்
மோசம்வருவதற்கு முன்னரியநம்செயலே
பாசம்பிடித்திழுத்தால் பார்க்கவிளக்கமுண்டோ
நாசம்வருங்காலம் நல்லறிவுபோய்விடுமோ
நேசம்விளையாட்டால் நினைவுதடுமாறிவிடும்
வல்லமையாலே வாழ்வதுண்டோபூவுலகில்
நல்லவர்கள்நீங்கள் நமக்குதவியாகவந்தீர்
பயருமேவேலியதாய்ப் பஞ்சவர்கள்நாள்முதலாய்
உயிருமுடலதுபோல் உரவாகித்தாமிருந்தோம்
இப்போதுவந்த இடையூறுகானகத்தில்
செப்பமுடன்வேடன் சிலையெடுத்துமான்துரத்தி
ஒப்பமுடன்வந்திடத்தே ஓடிவந்துமானதுபோல
என்னுருவமான்போலே இருந்தபடியாலே
வின்னுருவவேடன் வில்பிடித்தெய்துவிட்டான்

வந்துவிழுந்தான் மண்ணுவிண்ணுந்தானதிர
விழுந்தமுதமேவடனேத்தான் விரைவிலருகழைத்து
அங்கேயனுப்பிவைத்தேன் அந்தரங்கமாயுனக்கு
இங்கேநீர்வந்தீர் என்துயரந்தீர்ந்ததிப்போ
வம்புபடாததேகம் வம்புபட்டிருக்கிறது
ஆணிநரம்பு அறுபட்டுத்தான்போச்சு
பேணியனைப்பார்த்துப் பிழைப்பிக்கவல்லீராய்
காயனைப்பார்த்துக் கீனநரம்புதான்பார்த்து
நேயதனுடனே நேராகத்தானிறுத்தி
சோதித்துப்பாருமென்று சொன்னாரேமாயவனார்
ஆதிகன்போலே அர்ச்சுனனும்வீமனுமாய்
உள்ளமுருகியொரு உடம்பெல்லாம்புண்ணாகி
கள்ளருந்தார்மொழி கடிந்துரைக்கமாட்டாமல்
கல்லாய்மரமாய்க் கருத்தசைந்துநின்றார்கள்
எல்லாவிதிவசமாய் இப்படியேநீங்களெல்லாம்
நடந்தோநகரிமெய்க்க நாமிருந்தகோலமென்ன
இடந்தோர்தனியே கிட்டவரவேபயந்தீர்
போதாதோயிவ்வளவு புதுமையதிசயங்கள்
காதாரக்கேட்டோமே கண்ணாரக்கண்டோமே
இனியார்சதநமக்கு இளைபபற்றவேளையிலே
தனியேயினிமானச் சங்கரனார்கற்பனையோ
தடையாயிருக்குதுகாண் தம்பியரேயிங்கெனக்கு
வகையாயிருக்குதுகாண் வந்திருந்தவர்களாரும்
இப்படியேசொல்ல சூழ்ந்துமெய்சோர்ந்து
அப்படியேநின்றார்கள் அர்ச்சுனனும்வீமனுமாய்
போகுதடாசிவன் புண்ணைக்குலையுதடா
ஆகுதடாசீவன் அர்ச்சுனரேவீமர்களே
காயம்விழிக்குமுன்னே கையாயுதத்தாலே
நேயமாய்த்தூக்கி நிலத்தில்வைக்கமாட்டீரோ
ஆபத்தைத்தான்காக்கும் ஐவரென்றுசொல்லுவார்கள்
தாபப்படுகையிலே தான்பார்த்துநிற்பீரோ
நிமிஷம்பொறுக்காது நிர்ச்சீவனாகுதடா
சமையமடாவீமரே தம்பியருச்சுனரே
இன்றுமூன்றுமாயன் இப்படியேசொல்லுகையில்
நின்றஅருச்சுனரும் நெடியதொருவீமனுமாய்
தங்கள்தெண்டாயுதமுந் தனுவையுமேநீட்டலுற்றார்
அங்கேயதுவழியா யவர்கள்பலம்வாங்கிவைத்தார்
தண்டுந்தனுவும் தானெடுக்கமாட்டாமல்
மீண்டுமனமிடைந்து வில்லாமனுள்ளடைந்து
ஒறுத்துப்பலங்குறைந்து உள்ளசைந்துமெய்சோர்ந்து
மறுத்துமொன்றுபேசாமல் வலுவிழந்துநிற்பளவில்
கறுத்ததிருமேனி காயாம்புமேகவண்ணர்

வெறுத்துப்புவியை மெய்மறந்து தானயர்ந்து
எங்கெங்குந்தானுகி இருந்தாரேயெம்பெருமாள்
பொங்குபுகழ்வைகுந்தமே போய்புகுந்தார்மாயவனுர்

விருத்தம்

நீலம்பரந்துவிழிசொருகி நெருப்புப்பறந்துநீர்மேலாய்
கோலம்பெரியவுடல்வேர்த்துக் கோழையுடனேசிலேட்டுமமும்
ஆலம்பெரியமிடறுமி ஆவியொடுங்கியறிவசைந்து
சீலம்பெருந்தம்வைகுந்தஞ் சேர்ந்தாருயர்ந்தார்செகத்தைவிட்டு. ௧௯

விட்டுப்பிரிந்ததிருமாலே வீமன்விஜயன்றனெடுத்து
தொட்டுப்புயத்துள் அடக்கித்துயரத்துடனேவிழுந்தழுது
கட்டுப்பிரிந்தாரணைவோங்கிக் காலந்தனையேவிட்டகன்று
பட்டுப்பறந்து ஆயுதத்தைப் பகையாயெடுத்தார்தலைமீதில். ௨௰

மாயனையிழந்தோமென்று மனமெல்லாமிடைந்துபுண்ணுய்
தூயதோர்தருமர்கே கச் சொல்லுவோம்வாருமென்று
ஆயுதந்தலைமேல்வைத்து அருச்சுனன்வீமன்றனும்
நேயமாய்க்காணவிட்டு நிமிஷத்தில்வருவதானுர். ௨௧

கதை.

சீரானவைகுந்தந் திருமாலுந்தான்பார்த்து
பேரானபார்த்தன் பெரியவலுவீமனுமாய்
மன்னிருபேரும் மாயவனுர்தம்முடைய
பொன்னடியில்விழுந்து புரண்டுபுரண்டழுது
மண்மேல்விழுந்தழுது மாயோனைக்காணுமல்
விண்மேல்முகம்நோக்கி மெய்சோர்ந்துவிண்டழுதார்
நின்றுநின்றுதான்துதிப்பார் நிலைதளர்ந்துதான்சோர்வார்
மன்றலருமாயோனே வாரியெடுத்தேவிஜயன்
கச்சுதோளூடி கசந்துநோகாங்களுக்குத்தான்
மைத்துனாரேயென்று வயிற்றிலறைந்தழுதான்
மெய்ச்சுடரோரு வெளியேவெளியாக்கி
கச்சரவில்பள்ளிகொள்ளும் காரணரேயிப்போது
அச்சமில்லாவெங்களுக்கு அலைச்சல்வைத்துப்போனீரே
மாயத்தாலருதாடி மன்னணிழக்க அன்றுமுதல்
தாயத்தார்செய்யுந் தருக்கையழித்தோனே
பாயும்புன்ரக்கழுவில் பதறிதான்பாயாமல்
தொடர்ந்துவரிவண்டாகி தோயத்தில்மாயவனே
அடர்ந்துகழுவிருந்த அடையாளங்காட்டினையே
பார்த்திபர்கள்தனசபையில் பாஞ்சாலிதன்னையங்கே
எற்றதுகிலுரிய எம்பெருமாள்காத்தீரே
பாருருவெண்ணிடத்தேர்ப் பாகனுயநின்றுயே
போதகம்நூற்றுவரைப் பொருந்திமிகவென்றீரே
தனியாமலெங்களுக்காய்த் தாரணிதனில்காப்பார்

இனியாரெமைக்காப்பா ரென்றழுதானேவிஜயன்
எங்கேயினிக்காண்போ மெப்பிறப்பிலும்மையென்றூர்
அஙகேவரும்வோம்நாம் ஐவருமேயுமிடத்தில்
இப்படியாய்நின்று இவாகள்புலம்புகையில்
தப்படியுஞ்சங்குஞ் சங்கிதச்செயகண்டி
தம்பூறுவீணை சாமண்டலிமுழங்க
கிம்புருவர்கின்னரமும் கீதமுதனுதமுமாய்
பூக்கேதருஞ்சங்கிதமும் பூவையருமாடல்செய்ய
வாழும்பெருமாள் வைகுந்தலோகமெல்லாம்
ஆளும்பெருமானே அச்சுதன்வாராரென்று
முழங்குதுகாண்சத்தமென்று முனிவர்மிகக்கொண்டாடி
காராளும்மேனியனைக் கமலமுகத்தோனை
சீராருஞ்சிங்காரத் திருவுறையுமாபோனை
வேதாவின்தந்தைதனை விண்ணவர்கள்கோமானை
சீதைக்குநாயகனைத் தெய்வசிகாமணியை
மேகவண்ணமேனியரை விடைகொள்ளவேணுமென்று
தாகமுடனோடிவந்து தாங்கள்கண்டாரம்மானை
ஆரணியந்தனனில் அருந்தவத்தோர்சொல்லுமொழி
பூரணமாய்நெஞ்சில் பொருந்தியிருவருக்கும
காதாரவேகேட்டுக் கலகமிகத்தெளிந்து
பாதாரந்தன்னில் பதமலர்கள்தான்றூவி
சேர்ந்தார்வைகுந்தஞ் செங்கணமாலென்றறிந்து
பூந்தேனொழுகும் புட்பவனச்சோலையிலே
கல்லடக்கமபண்ணி நமஸ்கரித்துமுக்காலும்
வல்லதொருமாயவர்க்கு வருகாகவாள்விசையன்
செய்யுஞ்சடங்குஞ் செய்கருமந்தான்முடித்து
கையுங்குவித்துக் கடுகிநடப்பதற்கு
வீமன்விசையன் வில்லுண்டுதானெடுக்க
தாமும்பலமிலலாமல தலையின்மேலதான்சுமந்து
வந்தவழிநோக்கி வருகின்றம்பலையிலே
அந்தவழிகடந்து அப்பாலும்போகையிலே
ஆடுகளைத்தானமேய்த்து ஆயனுந்தான்போனான்
வேடுவர்கள்கண்டு விரைந்தடுத்தாராடுகளை
அப்போஇடைய னர்ச்சுனர்வீமரென்று
இப்போதருச்சுனரே யிருவர்நீபோகையிலே
ஆடுகொள்ளைபோகையிலே ஐயோஅபயமென்று
நீடுய்புகழ்மாய நெடுங்கானகமுறைய
கொள்ளைகொண்டானவேடன கூகூவெனவிடையன்
துள்ளிவந்துசொன்னான் துடிவீமனைபார்த்தனிடம
இடையனிவைசொலல இவர்கள்மனமிடைந்து
தகைசெய்தவேடனையுங் காண்பொறுதவேணுமென்று
வீரத்துடனே வீமன்விசையனுமாய்

கோரத்துடனேவந்து கொல்லவென்றுவேடர்தமை
தாழ்ந்துபுகழ்வீமன் தான்வெகுண்டுவேடர்தன்மேல்
ஏற்றியதண்டை எடுக்கவலுமையற்று
பாரியிடும்பனையும் மகாசூரன்தனையுதைத்து
வீரக்குறைந்ததுவும் வேடர்வெலிவற்றதுவும்
கண்டுசிலைவிசையன் கனகமிகவெகுண்டு
விண்டலர்வேடர்தனைமேல் வில்லெடுத்தாரம்பானை
எடுக்கவில்லைதானிடத்தில் ஏற்றவலுமையற்று
கடுத்தசிலைவிசையன் கலங்கினனம்மானை
காண்டாவனத்தை கானலுக்களித்ததுவும்
மீண்டுபெருத்தவரை முக்கோடிதானவரை
வென்றவிசையனுக்கு வேடரெதிரானதுதான்
அன்றுகலியன் அருள்ரூபமானதுவே
வீமன்விசையன் வேடருடன்தான்பொருத
சேமமுடனாயுதங்கள் இல்லாமல்நின்றதுதான்
வேடரறிந்து வெகுண்டுசினந்தெழுந்து
சாடவேவீமனையுந் தம்பிவிசையனையும்
போடவெகுண்டு புறங்காட்டிபோகலுற்றார்
ஊழித்துவேடர் ஒருமிக்கஆடுகளை
பாரில்துவாரபுரி பட்டணமுங்கொள்ளையிட
காரில்புனவேடர் கருதியேவார்த்தைசொல்லி
சீரில்சிறந்த சிறைபிடிக்கவேணுமென்ன
ஊரில்வருவதற்கு உச்சாகமாய்ப்பேசி
போனார்கள்வேடனென்று போர்விசையன்வீமனுமாய்
கூறுமலொன்றுங் குறுகிமனம்புண்ணாகி
வீறானஐவரென்று மேதினியில்நாமிருந்தோம்
எண்ணமெல்லாம்போச்சே என்றுமனமுருகி
கண்ணரிடபட்டணமும் காவலழிந்ததுவும
என்னவென்றுசொல்வோம் எம்பிரான்கற்பனைக்கு
வின்னமொன்றும்வாறுமல்வின்னமேவந்துதென்றால்
ஆதிபிரானான அச்சுதற்குநேராது
பாதியிறையணிந்த பரமனுக்குநேராது
நமகருவலுக்குறைந்து நாணிநின்றோமாமாகில்
சுமக்கும்பழிபாவம் தோஷமிகவுண்டாகும்
அண்ணருக்குச்சேதி அறியவுரைக்கவென்று
தருமருமவீமன் தம்பி அருச்சுனனும்
ஏங்கிமுகம்வாடி இடந்துவழிகூடி
தாக்கிநடந்திடுவார் தானேவிசாரமுடன்
அத்திபுரஞ்சென்று அண்ணரையுங்கைதொழுது
சத்தியுள்ளவீமன் தனஞ்சயனுமேதுசொல்வான்
குருகுலத்தையாளும் கோபாலர்காத்தருளி
வமஞ்செருக்கருசாலைசொரமாய்த்தானிருந்து

ஆதிநாராயணற்கு ஆபத்துவந்ததென்று
செய்திசொல்லக்கேட்டுச் செய்திதனையறியீர்
போவென்றருளிச்செய்த புண்ணியரேநீர்கேளீர்
காவெங்குந்தேடிக் கானகமெல்லாந்திரிந்து
வனமும்வனாந்திரமு மலைபுடைபலதேடி
புவனமும்புகுந்தியுந்தி பூத்தோனைக்காணால்
தேடித்திரிந்தொரு செண்பகப்பூஞ்சாவனத்தில்
நாடித்திருமாலை நாங்கண்டோமண்ணாவே
அம்புபட்டலோகம் அளந்தகொருபாதமதில்
வம்புபட்டமேனி வாடிமெலிந்துகொந்து
மெய்க்கூடிதான்வெளி மேனியெல்லாம்புண்ணாகி
பொய்க்கூடுபோலே பூமியின்மேல்தான்கிடந்தார்
கண்டவுடனே கதறிவிழுந்தழுதோம்
புண்டரீகமேனியனார் போதமாய்த்தானமர்த்தி
என்னையெடுத்து இருத்துமென்றார்கோபாலர்
பின்னைநினைவுகொண்டு பேசாமல்நாங்கள்நின்றோம்
நின்றதையும்பார்த்து நெடியோனும்பூருவத்தில்
நன்றிசெய்தபேச்சும் நடத்துகின்றசொல்லுமுறை
உடம்புருகச்சொன்ன உத்தரங்கள்தான்கேட்டு
குடங்கவிழ்ந்துநீர்புரிந்த கும்பமதுபோலாகி
தேவரீர்சொன்னமொழி செய்திதனைமீறாமல்
நாவுலர்ந்துநின்றோம் நாரணரைநம்பாமல்
கருத்தழிந்துமாயன் கைதரவுஞ்சொன்னார்கள்
உருத்தழிந்துநாங்கள் ஒன்றுமறையாமல்
நின்றோம்பெருமாள் நினைவுதனைநம்பாமல்
குன்றுமனது குன்றிமனம்புண்ணாகி
அந்தநினைவறிந்து ஆயுதத்தைநீட்டவென்றார்
சந்தவிதமென்று எண்ணிஎங்களாயுதத்தை
நீட்டியிருப்போம் நின்றோமதுவழியாய்
வாட்டிவலுவை வாங்கிவைத்தார்மாயவரும்
பிலக்குசரந்துநாங்கள் பேசாதிருக்கையிலே
கலங்கிவிழிபுரட்டி கண்ணைருந்தான்மெய்சோர்ந்து
பாசங்கலங்கி பதறிஉடல்வேர்த்து
வாசக்கமலமண்ணில் வைகுந்தஞ்சேர்ந்தனர்காண்
சென்றுமலர்ப்பாதந் தீண்டியெடுத்தவ்வனத்தில்
அடங்கிச்சடங்கனைத்தும் முடிந்துவந்தோமண்ணாவே
வந்தோம்வழிகூடி வாடிமனதிடைந்து
அந்தவழியிலொரு ஆயனுந்தான்ஆவிட்டு
மேய்த்துவருகையிலே வேடர்புகுந்தடுக்க
பார்த்துநீர்போவீரோ பார்த்திரோவீமரோநீர்
அபயமபயமென்று ஆயனுந்தான்கூவெனவே
உபயமெனக்கென்று ஓடிவந்துவேந்தருடன்

தண்டிப்பெருந்தோளன் தாடாளர்வேடருடன்
மிண்டிப்பொருதவேகியேவந்தார்காணே
தரிப்பட்டுநிற்கத் தந்துவங்களில்லாமல்
அரியிட்டசாபமென்று அறிந்துவலுக்குரைந்து
முரிபட்டுவந்தோம் முதுகுப்புறங்காட்டி
நெரிப்பட்டுவந்துநமக்கு செய்தியெல்லாந்தானறிய
என்றிருவர்சொல்ல ஏங்கியேதருமருந்தான்
குன்றுதிர்ந்துவிழுந்தாற்போல் குதித்துவிழுந்தழுது
முகத்திலறைந்தழுது முடிகுலையத்தான்விழுந்து
வயற்றிலறைந்துகொண்டு மண்மேலேவிழுந்தழுதார்
வாழ்வேயெவரும் மதியாமணிவிளக்கே
தாழ்வேதுயெங்களை தான்தாமறப்பரோதான்
வாழ்ந்தார்தருந்தவமே வர்ணமணிவிளக்கே
பிரிந்தேதானிக்கிருக்க பிரபலமேநாயகமே
பூலோகநாயகனே புவனமளந்தோனே
சாலோகசாமீப சாரூபதேசிகனே
எள்ளுக்குளெண்ணெய்போல் எவ்வுயிர்க்குந்தாறுண
வள்ளலேயும்மைவிட்டு மறந்திருக்கக்கூடுமோதான
அழகுதிருமேனியனே ஆபத்துக்காத்தோனே
களபமணிமேனியனே கண்ணனே என்றழுதார்
துளபமணிமார்பழகா சுகந்தமணிதிண்புயனே
புளகமதகோமானே பூபாலர்கோபாலா
நாறுசென்றளங்களுக்கு தூதனுமாக
தீதுகொண்டநெஞ்சன துரியோதனனையும்
பாங்குடனேகொல்லப் பகைமுடித்தாங்களுடன்
சாங்கமாய்நின்று தளமுமவன்சேனையெல்லாம்
கர்ணன்சகுனிமுதல் காவலர்கள்நூற்றுவரும்
மன்னவர்களெல்லாம் இறந்தகளந்தனிலே
மடிந்துவிழுமட்டும் வராகமாய்நின்றீரே
முடிந்துதேகாலம் முகிலவண்ணனுக்[illegible]க்கு
மாறுகொண்டஐயாநீர் வைகுந்தா[illegible]
கூடிநின்றவெங்களையும[illegible]கொண்டு[illegible]
வாலிதனைக்கொன்ற [illegible]யனேயு[illegible]
கோலத்திருவழகை குறி[illegible]தன்றுகாண[illegible]
ஈரைந்துசென்னி இராவணனைவெஞ்சமரில்
போரஞ்சாவீரனே பொருந்தி[illegible]கொல்[illegible]
வாய்த்தஅரக்கர்குல மானமே[illegible]
எய்ததிருக்கோலம என்றுநாங்காண்[illegible]ணோ
தொடர்ந்துஇரணியனைத் தூணிலுதைத்[illegible]
அடர்ந்துகொன்றகோலமென்று ஐயாநான்காண்பேனோ

எங்கேயினிகாண்போம் இவ்வுலகிலும்மைதான்
அங்கேவைகுந்தம் அருகிருந்துகாண்போமோ
என்றுசொல்லித்தரும ரிருந்தார்மனமிலைந்து
நின்றுநகுலன் நெடுமாலைத்தானினைந்து
குந்திவிழுந்தழுது கோவென்றபாயமிட்டு
புத்திகலங்கி பதறிஉடல்வேர்த்து
விழுந்துபுரண்டழுது மெய்சோர்ந்துகைசோர்ந்து
செழுந்திருவாய்மாயவரே சினேகம்புரிந்தீரே
விந்தமலர்பாதமதில் மேதினியில்காண்போமே
அந்தமுள்ளமாலே அவனியாள்ந்தோனே
அரிகேசவாமுகுந்தா ஐயாஉனைப்பிரிந்து
சிரியாரோபூவுலகில் தேசத்திலுள்ளோர்கள்
பரியாசம்பண்ணுமட்டும் பஞ்சவர்களிருக்கும்
இரியோம்தரணியிலே யீத்தான்உம்மைவிட்டு
வருவோம்வைகுந்தமென்று வலக்குலன்சொல்லியபின்
தருவானநூல்வேந்தன் சகாதேவன்தான்சிறித்து
பொய்வாழ்வைமெய்யென்று போதமனமகிழ்ந்து
மெய்வாழ்வுபோல விரும்பினீர்மன்னவனே
தேசம்பொருளோ செகம்பொருளோஉங்களுக்கு
தாகம்பதியினைபபுஞ்சஞ்சலங்கள்தான்பொருளோ
தேடுந்திரவியங்கள் செல்வமதுதான்பொருளோ
ஈடுகருமிந்த நற்பணிகள்தான்பொருளோ
தந்தைதாய்சுற்ற தருமங்கிளைபொருளோ
மைந்தரும்வீடு மனையாட்டிதன்பொருளோ
ஆனைகுதிரை அலங்காரந்தான்பொருளோ
என்னப்பொருளென்று இடைகிறீரெல்லோரும்
தென்னைவரமாய்கைதன்னை எதிரென்றுநம்புவரோ
காதந்தரியாது கண்பொருளுநில்லாது
நேயந்தவராது நிலைநின்றோர்தங்களுக்கு
மேகந்தறுநிழலை மெய்யென்றுநம்புவரோ
காகுத்தன்செயலைக் காணமல்கண்டுகொண்டார்
பதையாதிருப்பீர்காண் பாசத்தைகம்பரமல்
காரணங்கள்தான்முடிக்கக் கரியமால்வந்துதித்து
நாராயணராய் நடத்துகின்றார்பாரதத்தை
உகந்துயுகம்பிறந்து ஒங்காதயேனையெல்லாம்
செகத்தோடேயொத்திருந்து செயம்பண்ணிப்படியாய்
எத்தனையோகாலமவர் எடுத்தஅவதாரம்
கர்த்தனர்தன்செயலைக் காணபதரிதெனவே
வேதங்கள்தானும் விளங்குநூகாணசாஸ்திரமும்
ஆதலால்மாயவனும ஆளவற்றகாலமெல்லாம்
அழிவதுமில்லையவர் ஆதிமகாமூலம்

தெளிவதுவேசித்தமென்று நிரஞ்சகாதேவன்
அப்போதுதிரௌபதையும் அடித்துவிழுந்தலறி
மைபரவுமேனியர்க்கு வந்தவிதிமோசமென்ன
கற்புக்கலையாமலெங்கள் கற்புநிலைநிறுத்தி
துற்புத்திசெய்தோரைச் சொல்லரியபாழ்நரகில்
வைப்பித்தபுண்ணியர்தான் மாளவந்தகாரணமேன்
மெய்ப்பித்தபஞ்சவரை மேதினியில்விட்டேகி
தப்பித்தனிவழியே தாம்போகக்காரியமேன்
தெய்வமேஞாயமிதோ செங்கண்ணெடுமாலே
ஐவர்சகாய ஆயரேயச்சுதரே
நாயகரேபஞ்சவர்க்கென் ஞளுந்துணையிருந்து
சாயகமாயென்னாளுஞ் சாங்கமாய்நின்றோனே
கணக்குப்புகழாய்க் காசினியோர்தாமறிய
எளக்குப்பிழைவாராம லேழைபங்கில்நின்றோனே
என்றைக்குக்காண்பேன் எங்கள்பெருமாளே
குன்றைக்குடைபிடித்துக் கோவுகளைக்காத்தோனே
ஐயா துணையெனக்கு ஆரினிதானிப்புவியில்
மெய்யாயெனைமறந்து விண்ணுலகில்போவீரோ
நானேதுணையிழந்தேன் நாரணரேயும்மைவிட்டு
வானோர்கள்போற்றவுந்தான் வைகுந்தஞ்சேர்ந்தீரோ
கிளிமொழியாளிவ்வசனம் கிலேசமாய்சொல்லியபின்
மொய்குழலிக்குந்தியம்மாள் முகத்திலறைந்துகொண்டு
என்மருகாவென்கோவே எல்லாருக்கும்நாயகமே
தருமருக்குங்கம்பியற்கும் சாங்கரேயென்நாளும்
இம்மைதனிலிருந்து எங்களையுங்காத்தோனே
நன்மைசெய்யக்கர்மம் நடுக்கானகந்தனிலே
மான்மறந்துபோன மகிமையென்னநாரணரே
வேண்டிவினைசெய்த விதிவசமோயிப்படியாய்
அந்தரத்தில்நீரும் அருந்தவசுபோயிருந்து
தந்திரத்தையின்னதென்று கருமாறிந்திலையோ
மந்திரவேதம் வரம்புதப்பிப்போனதுவோ
சந்திரருஞ்சூரியருந் தானறிந்துபோனாரோ
அண்டமளக்கும் அச்சுநிலைதான்பேர்ந்து
கொண்டால்கருவழிந்து குரைகடலுநீர்சுண்டி
ஆகாயம்பூமி யந்தரங்கள்தான்குலைந்து
வாகானநற்றலங்கள் மாசடைந்துபோனாலும்
பிறப்பேதுனக்குப் பிறந்துபிறப்பதுவும்
இரண்டுவிதொழிலாய் நடத்துகின்றபுண்ணியரே
பிரண்டுவுரையோன் விளம்பினேனொருவசனம்
என்றுகுந்திதேவி யித்தனையுந்தான்புலம்பி
சென்றுபுகுந்தாள் செய்யமணிமண்டபத்தில

தம்பியருக்தருமருடன் தானேமனமிடைந்து
வெம்பிழுகம்வாடி வேதநாராயணர்தாம்
சொல்லரியதேகமது துவாரகாபுரிதனிலே
வெல்லரியவேடர்சென்று வீரியங்கள்செய்யாமல்
இப்போதேசென்று எம்பெருமாள்பட்டணத்தை
மெய்யாகக்காருமென்று விடைகொடுத்தார்தருமருமே
வீமன்விஜயன் மிகுர்தசகாதேவன்
தர்மனகுலனுடன் தத்துபரிசேனைதளம்
சிறப்பாகச்சேனையுடன் சீக்கிரத்திலந்நேரம்
புறப்பட்டார்பூமி பேரண்டந்தானடுங்க
நடந்தார்வெகுதூரம் நன்னகரிதானோக்கி
விரைந்துபுகுமுன்னே வேடரங்கேதான்மூடுகி
நிறைந்துவளைத்தார் நெடுமால்தன்பட்டணத்தை
பச்சைமால்தேவி பதினாயிரவரையும்
இச்சையுடன்வேட ரெல்லாரையும்பிடிக்க
வளைத்தாரரண்மனையை மாயவனார்தேவியரே
நுழைந்தேபிடிக்கவென்று கோக்கின்றவேளையிலே
கங்குல்வந்துமூடிக் கதிரோனும்போய்மறைந்தான்
விடிந்தேயரண்மனையில் மெல்லியர்களெல்லோரும்
இடிந்துகரைந்து எம்பெருமாளென்றழுகர்
கங்குல்விடிந்து கதிரோனும்வந்துதித்தான்

விருத்தம்.

தேவிகளழுதபோதே செங்கண்மால்தனக்குத்தேற்று
பாவியர்வேடர்தாமும் பங்கமேசெய்யாவண்ணம்
ஓவியமானபெண்களுருவெலலாமாற்றிமுன்னாள்
தாவியரிஷிபோலாகித் தரணியில்வருகவென்றார். (உஉ)

தப்புடன்சங்குதாளம் தாதர்போல்வேஷங்கொண்டு
இப்புவிதனிலேவேட ரேங்கியேசடையேவாரும்
ஒப்புடன்தாதர்போல ஒருமித்துவரவேகண்டு
மெய்ப்புடனவர்தார்கண்டார் வேடருமலைந்துநின்றார். (உ௩)

கதை.

அழுதழுதொருதேவியர்க ளாரிழைமாரெல்லோரும்
தொழுதபயமிட்டுச் சொன்னதொருதோத்திரங்கள்
அந்தமொழிகேட்டு ஆயனார்சூத்திரமாய்
முந்தியிருந்த முனிவர்தபோதனர்போல்
ஆமென்றிசைந்தார் அப்போதுஆயிழைமார்
ஓமென்றுஅவ்வுருவ ருறுமாறியேயிருந்தார்
சடையுமுடியுடனே தான்வந்தார்வீதியிலே
படைகூடிக்காத்திருந்த பார்வேடரெல்லோரும்
விதிபோலசைந்து மெய்மறந்துதானிருந்தார்
சதிநடையபட்டணத்தைத் தான்கொள்ளையாடவென்று

நெருங்கிவரும்போது நிமிஷத்தில்தர்மர்படை
கருங்கடல்போல்சூழ்ந்து கைகலந்தாரம்மானை
தூரத்தியடித்துவிட்டுத் துன்பமறவேதிரும்பி
ஆரத்தியேசாத்தகிளை யாழ்வாருமுன்னடத்தி
வெற்றியுடன்சேனைதளம் வேந்தருடன்மந்திரிமார்
அத்திபுரந்தனக்கு அழைத்துவந்தாரம்மானை

விருத்தம்.

மாயவனுலகையாண்டு வனத்திலேபிறந்தாரென்று
நேயமில்வேடர்வந்து நிலைமைகைக்கொள்வோமென்று
தூயதோர்தருமர்தானுஞ் சொல்லியேயோர்விரலைமூக்கில்
ஞாயமோசிவனேயென்று நடந்துடலசேர்ந்திருந்தார். (௨௪)
இப்பவுஞ்சேதியென்ன வென்றுதான்தம்பிமாரை
ஒப்புடனழைத்துமுன்னே யுண்மையேதென்றுகேட்க
அப்புரமினிமேலென்ன அண்ணாவேயிருந்துஞாயம்
மெய்ப்புடனிவிடம்விட்டு விஜயவைகுந்தஞ்சேர்வோம். (௨௫)
இளையவர்நீங்களபாரி லிருந்துதான்புவனமெல்லாம்
கிளைவழியுடனுங்கூடிக் கிள்ளையேமகுடமன்னர்
பழையவரிருந்ததாயும் பாக்கியமனேகமெல்லாம்
குழைவரவிருந்துவாழ்ந்து குவலயத்திருங்களென்றார். (௨௬)

க தை.

தருமரிவைசொல்லத் தனஞ்சயனும்வீமனுமே
கருமமோவென்று கண்ணீர்மிகச்சொரிய
நகுலன்சகாதேவன் நாட்டமற்றுவாடமதாய்
வெகுகளையாகி விள்ளாமனுள்ளுழைந்து
எங்களையும்விட்டு இனம்பிரிந்தமான்போல
தங்குவதுயெங்கே தரிப்பதுவுமெவ்விடங்காண்
நாங்களேயும்மைவிட்டு நானிலத்திலேகிறோம்
தீங்கொன்றும்பேசாத திருவுளமேயல்லாது
இருந்துமென்னகோட்டை யிருப்பதுவுமிங்கேநாம்
வருந்துவோம்நாங்கள் வாடுவோமும்மைவிட்டு
என்னமொழிசொல்லி எடுத்துரைத்தீரண்ணாவே
இன்னமிதுவரையி லிணைபிரிந்துநின்றோமா
மாய்கையிதுவாழ்வு மாயமாய்போச்சுதிப்போ
சாய்கையிதுவென்று சதமென்றுநானிருந்தால்
இந்தவுயிர்தனக்கு மீட்டேற்றமெப்போதான்
பந்தமலர்ப்பாதம் பணிவோமெனவுரைத்தார்
அதுசருமமெங்களுக்கு அடைவுதானிப்போது
மதுரமொழிபயலும் வாசகனேயண்ணாவே
நடக்கும்வகைதெரிந்து நாயகமேஅண்ணாவே
அடக்குமுபாயம் அவனிதனிலுண்டுபண்ணி
விலக்குமுபாயம் வழங்குமென்றார்தம்பியர்கள்
கைபுகழ்தம்பியர்கள் விளம்புமொழிகேட்டு

தக்கபுகழ்தருமர் தம்பிமேலன்புவைத்து
சிறந்தபுகழவர் சேவகங்களுள்ளதெல்லாம்
பிறந்துமிகஅத்தி புரத்திருக்குநாள்தனிலே
தேசமிகவாழுமொரு தெய்வப்பிராமணரில்
முன்னாளில்வேதியன்றான் முழுதுங்குடியிருந்து
இன்னொருபார்ப்பான் பிரதேசம்விட்டுவந்து
இந்தப்பிராமணனை யிருக்கவிடந்தாருமென்றான்
அந்தமனையி லவனுக்கொருபுரத்தில்
விட்டுக்குடியிரென்று வேதியனுந்தான்கொடுக்க
கட்டிடனைவீடுமங்கே கட்டினான்வேதியனும்
பாப்பானுஞ்சம்மதித்துப் பதியில்குடியிருந்து
நேர்ப்பாகவவ்விடத்தில் நிலம்பிளந்துமண்ணெடுத்து
கட்டினான்வீடு கனத்தபுதையலொன்று
மண்ணணிலிருந்தெடுத்தான் மறையோனுமன்னேரம்
கண்ணிமேலகண்டபொருள் கருமமென்றுதானினைந்து
நமக்குத்தெரியாது நம்மிடத்திற்சிக்காது
சுமக்கும்பழிநமக்கு துன்பம்வருமென்றேதான்
மனைநமக்குத்தந்த மனையாளன்தன்னைசென்று
வினையொழியவேண்டி வேதியனைத்தானோக்கி
ஐயாவேவேதியரே அதிசயந்தான்கேட்டீரோ
உய்யமனைகட்டத் துடங்கினேதோர்மண்கிடங்கில்
கண்டேதிரவியமுங் கனகமணிபொட்டகத்தில்
கொண்டேகிவந்தேன் கூடத்திற்பணந்தனையும்
உந்தன்பொருளிதுகாண் வுற்றோர்கள்தான்புதைத்த
சொந்தமுனக்கென்று தோன்றுதுகாணென்மீதில்
உன்மனையிற்கண்டபொருள் வுன்னைவிட்டுப்போகாதே
ஆனதினாலுன்பொருளை ஐயரேவாங்குமென்றார்
வேதியனார்சொல்லவந்த வேதியனுமென்னசொல்வான்
அன்றுமக்குநாமும அன்பாகவீடுதந்தோம்
இன்றுமக்குத்தந்த இவ்விடத்திற்கண்டபொருள்
கண்டவர்க்கேயின்பம் காணாதிருந்தவர்க்கோ
உண்டவர்கசேயின்பம் வுறங்கினபேர்க்கென்றாலும்
வேண்டாங்காண்வேதியரே வீட்டிற்கொடுபோவீர்
தீண்டாப்பொருள்தனையுந் தீண்டுவரோநல்லோர்தான்
போங்காணுஞ்சும்மாப் பொருள்தனையுங்கொண்டேதான்
வாங்கேனொருநாளும் வறியேன்மனந்தனிலும்
என்றுமறையோன் இவ்வசனஞ்சொல்லுவதை
நின்றுபிராமணனும் நீர்சொல்லுவதுநாயமல்ல
பொருந்தாதகாரியத்தைப் பொருந்தவேசொல்லுகிறீர்
வருந்தாதாரென்று வருந்துவதுமாநிலத்தோர்
உந்தன்மனையெனக்கு உபகாரமாய்க்கொடுத்தீர்

சொந்தமெனக்கப்படியாஞ் சொல்லுங்கால் வேதியரே
அடைமனையிரத்துக் கன்னயிடங்கொடுத்தால்
எடைபொருளைநானெடுக்கக் கிட்டாதுவேதியரே
எந்தவிதிப்பயனோ இவ்வூரிலும்மிடத்தில்
வந்தவிதிப்பயனோ வழக்குரைக்கவேணுமென்று
உன்சமர்த்துமென்சமர்த்தும் ஊரறிய வேணுமென்று
பின்சமர்த்துப்பேசி புறப்பட்டாரந்நேரம்
சிரிவிழுந்து சிடிபிடியுஞ்சண்டையுமாய்
செரியுடையதருமரென்று நீதிவிளங்கவென்று
ஊசலிட்டுக்கொண்டு உருபூசல்தன்னுடனே
அந்தணர்கள்தருமரிட மவர்வழக்கைசொல்லலுற்றார்
வந்தவர்கள்சொல்லை வாகாகத்தான்கேட்டு
மந்திரிமாரை வாவென்றருகழைத்து
தந்திரிமாரெல்லோருஞ் சதிராகத்தான்கூடி
ஞாயம்நடுக்கண்டு நமக்குறையுமென்றுரைத்தார்
தூயதருமர்சொல்லத் துறந்தீர்களெல்லோரும்
அடுக்காயிருந்து அவர்வருகைகேட்கலுற்றார்
தொடுத்தமனைவேதியரே தொடர்ந்தவரேசொல்லுமென்றார்
குடியிருக்கவந்தோன் கூறினான்தன்வழக்கை
மடியிலடிபட்டு வேளூரில்தானிருந்து
இவரிடத்தில்வந்து இருக்கவிடங்கேட்டேன்
ஆரெனக்குவீடுகட்ட ஆமென்றிடங்கொடுத்தார்
அவ்விடத்தில்மண்ணெடுத்து அவையாய்சுவரேற்றி
இவ்விடத்தில்வீடு இதமாய்முடித்திருந்தேன
மண்ணெடுத்தகோணியிலே மறைப்பொருளாய்த்தானிருந்து
கணணிடத்திலேதெரிந்து கரகத்திற்பொன்னெடுத்து
எடுத்தவுடனே இவரிடத்தில்கொண்டேகி
கொடுத்தேன்பொருள்கையில்கொள்ளேனெனவுரைத்தார்
மூன்றுமிவருடைய மூதாக்கள்வைத்தபொருள்
மன்னவனேநாமெடுத்தால் மாபாவம்வந்துவிடும்
ஆதலால்மன்னவனே ஆரொருத்தர்வைத்தபொருள்
காதலுடனஞ்சா தெடுத்துவிட்டுக்கையாண்டால்
எடுத்தபுதையல்தன்னை எப்போதுமன்னவரே
அடுத்தயாகளுக்கடிமை யாழ்நரகில்வீழ்ந்திடுவார்
ஆகையினிப்பொருளாம் ஆகாதேயென்றுசொல்லி
வேகமுடனேமறையோரை [illegible]துதிகளுரைத்து
அதிதியாதேசி அடுத்துக்குடியிருந்தால்
பகுதிபெரும்பிடியாய்ப் பண்ணுகிறானென்றுரைத்தார்
மற்றுமந்தருமர் மனையுடையவேதியரை
உற்றுமிகநோக்கி உன்னினைவைச்சொல்லுமென்றார்
பாராளும்நீள்தருமர் பாக்கியவானேகேளீர்
ஏதக்கமனையை இவர்க்குஇடங்கொடுத்தே

அந்தமனையும் அதிற்கொண்டவாழ்பொருளும்
இந்தவுலகறிய இவர்க்கென்றுநானகொடுத்தேன்
எடுத்துரைத்துமன்னவரே இன்னமொன்றுநீகேளாய்
கொடுத்தபொருள்மீளக் கொள்ளுவார்தாமுமுண்டோ
அடுத்தோர்நமக்குவினை அங்கேநினைப்பாரும்
தொடுத்தகருமமவை தொடர்ந்தேயளித்தவரும்
கெட்டுவிடுவார் கேடில்லாமன்னவரே
வட்டவருநிதியும் வாங்கெனவுரைத்தார்
மூட்டவேவேதியனும் மொழிந்தனர்காணம்மானை
சேர்க்கபுகழ்தருமன தெரிந்துசிலமந்திரியை
ஏற்கவேநோக்கி இவரதுமுகத்தையுமே
ஏகிபோய்மறையோர் இருபேருந்தான்வெகுண்டு
மற்றுமவர்தங்களிலே வணமைமிகப்பேசி
உற்றுமிகமுன்னுள் உரைத்தமொழிதவறி
சொன்னபடியைந்தாநாள் தோற்றமுடனவந்துநின்று
மன்னவர்கள்தர்மர்முன்னே வாக்ாகவந்துநின்று
அன்புடனேமாமறையோர் அரசுபலகூடி
இனபமுடன்தர்மர் எடுததுரையுமென்றுரைக்க
பெருமையுடனேக்கிப் பேர்பெரியவேந்தர்முன்னே
அருமறையோனதன்வழக்கு அற்றதோவெனறுரைக்க
திருமுனிவர்தாமுமிகச் செப்பலுற்றாரம்மானை
மனனவனேஎம்மனையிற் கண்டதொருவான்பொருளை
என்னவென்றுசொல்லி எடுத்துரைத்தாரம்மானை
எந்தன்மனையில் இவருக்கிடங்கொடுத்தேன்
செந்தபுதையல்தனனைச் சுகமுடனேகொள்ளைகொண்டும்
கொடுக்கமனஞ்சலித்து குறிபாதவார்த்தைசொல்லி
பிடிக்கிறான்சண்டையிவன போகவுந்தானஞாயமுண்டோ
உன்செய்தியென்னவென்று உகர்ந்துதர்மர்கேட்க
என்செய்தியென்னசொல்வேன் எடுத்தபுதயலையைத்தான்
கொடுப்பேனோநானுங் குடத்துபணத்தையெல்லாம்
குடியிருந்தேனானல் குவலயந்திலேயிவர்கள்
அடியிருப்பிற்கணட ஆனதொருவான்பொருளை
கொடுத்துக்குடியிருக்க வந்தேனோகொற்றவனே
அடுத்துககுடியிருக்க வந்தேனோஐவரிடம்
நிஷ்டூரமபணணுகிறீர் நீதியோமன்னவனே
எட்டூரிய இருக்கிறான்சந்நியிலே
நீதியுடனசொல்லுமையா நிருபனேயென்றுரைத்தார்
வேதியன்றனிவ்வசனம் விளம்புவதைத்தான்கேட்டு
இனியென்னஞாயம் எடுத்துரைக்கவாயேது
அனியாயமிப்போது அந்தணாகளதன்வழக்கு
கணடோமதிசயந்தான கலியினிடகீர்த்தி
விண்டோம்புவனம வெறுத்தோங்கலியாலே

தக்கப்புகழுஞ் சகாதேவன்கண்டானே
புக்கானமாகலியின புதுமையிதுவென்று

விருத்தம்.

அந்தணர்வழக்குங்கண்டோ மடிக்கடிபுரட்டுங்கண்டோம்
இந்தமாநிலத்தில்நாமு மிருப்பதுதர்மமல்ல
அந்தநாயராசுகால மாண்டுநாள்முடிந்துமுற்றும்
வந்தநாள்வந்துதானால் வழக்கெனவழக்குநாயம். ௨௭

பஞ்சமாகாலங்கொண்டிப் பாரினில்கலிபண்பங்கால
என்செய்வோம்தம்பிமாரே எப்படிபுலகந்தன்னில்
முன்செய்தநாயமேபோலே முற்றுமேவினிமேல்நம்மால்
பஞ்சவரென்றுசொன்ன பாவினைமுடிபாதென்றே. ௨௮

ஆண்டவர்நடந்தாரிந்த வதிசயம்வருமென்றெண்ணி
நீண்டவர்மொழிந்ததென்று நிச்சயமிசமுங்கண்டோம்
பாண்டவாபுதல்வர்நாமும் பாரினிலிருந்தோமானால்
மூண்டதோர்கலிவிடாது முடிந்ததுநமக்குக்காலம். ௨௯

வாழ்ந்ததுவாபரத்தில் மனுநெறிமுறைமைநீதி
தாழ்ந்ததுகலியுகத்தில் தருமரேபெயரும்போகும்
சூழ்ந்ததோர்புவியைவிட்டு சொல்லுமவைகுந்தஞ்சேர
ஆழ்ந்ததோர்கலியைவிட்டு அகலுவோமகலுவோமே. ௩௰

நாரணர்நம்மைவிட்டு நடந்ததோர்காரியந்தான்
காரணர்முடிந்தகாலங் கலியுகம்வருமென்றெண்ணி
ஆரணன்தன்னையீன்ற அச்சுதன்பச்சைமால்தான்
பூரணகடாந்தமார்க்கம் போவதுகருமமின்றே. ௩௧

வானவரிவையோர்மற்ற மாதவர்முனிவர்தேவர்
தானவரிஷிகள்வேதத் தபோதனர்புகழ்தல்செய்ய
நாமினிக்கரிகாரக நல்லிசைமிகவும்பாட
மேனகைபணிகள்மாற வெகுசுகம்வருகுந்தானே. ௩௨

வீமனேவிசையன்தம்பி மேதினிதன்னிலுங்கள்
நேமமும்பலமும்வாங்கி நெடியமால்போனாரன்றே
சாமமாய்வேடர்முன்போய்ச் சமரினிற்பலமுங்காட்டி
நாமினியுலகில்வாழ்க நமக்கிதுசகியாதென்றார். ௩௩

கதை.

தன்மருந்தம்பி சகாதேவனைநோக்கி
வன்மமறவேதான் வகைவகையாய்செப்பலுற்றார்
நீதியும்பொய்த்து நெறியுந்தவறிவிடும்
வேதமும்பொய்த்து வினைகளுமேவுண்டாகும்
மற்றுமசத்தியமாய் மைந்தாதவறிவிடும்
கொற்றவரையத்துமுன்னாட் கூறினாரெம்பெருமாள்
தப்பாதுசொன்னமொழி சதுர்மறையோர்தன்னிடத்தில்

இப்போதுகண்டோ மெனவுரைத்தாரம்மானை
தருமர்தனைப்பணிந்து சகாதேவனப்போது
வருங்கலியன்வாசகத்தை மன்னவனேகேட்டருள்வீர்
அறந்தானகுன்றும் அநுவினைகள்மேலாகும்
பறந்தான்மிகத்தாழ்வும் பாண்மைகளும்பேதகமாம்
மெய்யுமழிந்துவிடும் வீரியமுங்குன்றிவிடும்
பொய்யுங்குலையும் புவிதனிலேமேலாகும்
காசினியில்மாதர்களின் கற்புமழிந்துவிடும்
பூசுரர்கள்சீரியர்கள் புல்லர்களாய்த்தானுவார்
சீறியவேந்தரிட செங்கோலுங்குன்றிவிடும்
பூரியர்கள்புல்லர்களும் புவிதனுமேயாண்டுவர
வேந்தகலியன் விசேடமிதுவென்றுசொல்லி
சேர்ந்தசகாதேவன்தெண்டனிட்டாரம்மானை
உள்ளபடிதப்பாது உரைத்தாய்நீதம்பியரே
வள்ளலாரன்றுரைத்த மாற்றம்போலானதுவே
தாரணிதனில்காமிருந்தால் சத்தியமுங்குன்றிவிடும்
முரணிழந்தவேடருக்கு முதுகிட்டார்தம்பியரும்
அவனிதனிலக்கிருந்தால் அசத்தியமும்வந்துவிடும்
புவனமுண்ணுமால்பதத்தைப் போற்றியேஐவருமே
நன்றால்மகாவிர்தம் நடப்பதேசெய்தியென்று
குன்றாப்புகழ்தருமர் கூறினாரம்மானை
போரார்தருமருந்தான் புரோகிதனைத்தானோக்கி
போர்விஜயனிட பேரன்பரிசித்துவையும்
மண்ணுலகையாளுதற்கு மகுடமதுசூட்டி
எண்ணுமியமுகூர்த்த மிதென்றாரம்மானை
நெரியுடனேபோக நினைத்தநினைவுள்ளதெல்லாம்
குறியுடனேசொல்லக் கோபாலர்சந்நிதிக்கு
பயணமென்றுசொல்லிப் பரிசளித்துநால்வருக்கும்
சுயசனமுள்ள சுற்றத்தாரெல்லோரும்
மன்னர்மகுடமுடி மற்றவர்களெல்லோரும்
தென்னல்பயணமென்று செப்புகின்றாரம்மானை
சீட்டெழுதிவிட்டார்கள் திசையுள்ளமன்னவற்கு
ஏட்டெழுத்தைவாசித்து எல்லோருமேகூடி
என்னவிதிவசமோ என்றுமன்னரெல்லோரும்
மன்னர்சமூகத்தில் வந்துகண்டாரம்மானை
ஆண்டவரேநீர்தான் அழைத்தபணிவிடையேன்
அப்போதுதருமர் அரசர்தனைநோக்கி
இப்போதுகொடுங்கலியன் இவ்வுலகில்வந்துவிட்டான்
இனிமேல்கலியுகத்தில் இருக்கவும்போகாது
தனியேவனவாசஞ் சஞ்சரிக்கமெத்தநன்று
ஆனதினாலுங்களைநாம் அருகேவரவழைத்தோம்

மாணமுடனீங்கள் வரம்புதப்பிப்போகாமல்
காலமறிந்து காணிக்குள்நீங்களுமே
காலத்துக்கேற்ற கணக்கின்படியாக
தெரிந்துநடந்துகொண்டே செங்கோல்தவறாமல்
பிரிந்தொருத்தர்போகாமல் பிள்ளைசிறுபாலனிடம்
கலந்தசெகமுழுதுங் கட்டாகநீரிருந்து
துலங்குபரிசித்துவுக்குத் துரந்தரிக்குதான்தரித்து
வைக்கிறோம்நாங்கள் மகுடமுடிதரித்து
நிற்கிறோமும்மை நிகழ்ந்துபரிசித்துவையும்
வைக்கிறோம்பாரில் வணங்குகிறோமுள்ளபடி
நீங்களிருந்து நெடுவனமபுகுந்தால்
நாங்களிருந்து நடப்பதென்னகாரியந்தான்
எல்லோருமவாறோம் எந்திரபதிசேர்ந்தாலும்
பலபேரும்வந்து பணிவோமேபல்லாமல்
அரைநொடியிலும்மைவிட்டு அவதரியோம்பூவுலகில்
துரையேதுரையரசே துரந்தரிகயன்னவனே
என்றுமன்னன்சொல்லி இசைந்தலரியோலமிட
அன்றுதருமராசன் அவர்களையேதாணமர்த்தி
ஒன்றுக்குமஞ்சாமல் உலகளந்தோன்றன்னருளால்
கன்றுக்கிரங்குகின்ற காத்தபசுபோலே
நம்மையனுதினமும் நாள்தோறுங்காத்தார்போல்
செம்மையுடன்செங்கோல் செலுத்தும்பரிசித்துவுக்கு
ஆதரவாய்த்தானிருந்து அரசுநிலைதானிருத்தி
போதரவாய்வாழ்ந்தும் புவிமீதில்தானிருப்பீர்
வெய்யோனுமண்ணும் விண்ணுமுள்ளகாலமட்டும்
துய்யோர்மறையோர் துதித்துப்புகழ்ந்தேற்ற
இருமென்றுதருமர் எல்லோரும்வாறுமென்று
குருமின்னிலையாகக் கொற்றவனுமன்னேரம்
மாநகரஞ்சோடித்து வாழைபலநிரைத்து
தேனொழுகும்பூங்கரும்புந் தெங்குபலநிரைத்து
மரகதத்தோரணங்கள் வகைவகையாய்க்கட்டிவைத்தார்
உற்றபுகழ்பெற்ற உலகலதிகமென்ன
அத்திநகரந்தன்னை அலங்கரித்தாரம்மானை
முத்துநிறைப்பாலிகையில் முகந்துமுளைத்தெரிந்து
எத்திசைக்கேத்தும்போக ரிஷியிட்டமுகூர்த்தமதில்
தருமருடன்தம்பியருஞ் சதுர்மறையோர்தம்முடனும்
மீன்மருவுஞ்சேதி முடிவேந்தன்பார்த்திருக்க
வாழும்அபிமனிட மதலைதனையழைத்து
தாளரவேபூவுலகில் தருமநெறியுள்ளாக
மங்கையர்கள்கற்புமந்த மாமறையோர்வேள்விகளும்
செங்கோல்முதலாய்ச் சிவனேடுமொலையமும்

சைவநெறியுந் தழைக்கவரசாளுமென்று
பொய்யில்லாநீள்தருமன் புகன்றனாகாணம்மானை
பார்வேந்தன்சொல்லி பரிசித்துந்தான்கேட்டு
தார்வேந்தன்நீரிருக்கத் தம்பிமார்தானிருக்க
தேனேறுஞ்செங்கோல் தேசமெல்லாம்நன்றாக
நானாளேனென்று நகைத்தான்காணம்மானை
சிங்கந்தானாளுகின்ற தேசமெல்லாமாளுதற்கு
பங்கமன்றிநாய்தனக்கு பட்டம்பொருக்காதோ
செறிவாகவுந்தனிட தேசமெல்லாமாளுமென்றார்
அறிவாகஎன்கைதனில் ஆகாதேயென்றுரைத்தார்
பார்த்தனிடபேரன் பகருமொழிகேட்டு
வாய்த்தபுகழ்தருமர் மகிழ்ந்துரைத்தாரம்மானை
பன்னுபுகழ்வேந்தன் பரிச்சித்துவேகேளாய்
உன்னினைவாலே உலகாளதேவிடுமே
பன்னுகமேல்துயிலும் பராபரனூர்தர்மருக்கு
முன்னூருரைத்த மொழிதவறிப்போகாமல்
எம்பெருமாள்தன்னுடைய ஏவல்தொழில்மறந்தால்
நம்பெருமாள்தன்னுனை நரகத்திலேவிழுவோம்
மாசில்லாவாளபிமன் மைந்தனேனுமன்னவனே
பாசமுள்ளநல்ல பரிசித்துநீகேளாய்
வாழ்நெடுமால்தானுரைக்க வார்த்தைமறவாமல்
தாழ்வன்றிஇந்தத் தரணிதனில்வில்லுமென்று
சூழ்ந்தபுகழ்மன்னவன் சொன்னார்காணம்மானை
ஆழ்ந்தபுகழ்மன்னவன்சொல் கேட்டேமனமகிழ்ந்து
ஒன்றுமுறையாமலிவன் ஒப்பிநீயதானிருந்தான
தேசத்தரசரையுஞ் செழுமறையோர்தங்களையும்
பாசத்துடன்தருமர் பரிந்துமிகப்பார்த்தருளி
மற்றுமந்தவாளபிமன் மதலைபரிசித்துவுக்கு
வெற்றிமுடிசூட்டுதற்கு வேள்விதனைத்தொடங்கி
பத்தியாய்வேள்வியைப் பண்ணவைத்தாரம்மானை
தாரைமுரசுடனுஞ் சங்குமிகமுழங்க
பங்கமில்லாநல்ல பரிசித்தாசனுக்கு
கங்கைநதிகாட்டிக் கனகப்பட்டுதான்சாத்தி
எல்லவன்தன்னொளிபோல் இலங்குசங்கானகத்தில்
வல்லபரிசித்துவையும் வாழ்த்ததருமருந்தான்
கொல்லைமுடியவிழ்த்து கூட்டினாரம்மானை
மன்னவாகள்மந்திரிகள் மகுடவர்த்தனர்தமையும்
சின்னஞ்சிரியோர்முதலாய் தெரிவையர்கள்தங்களையும்
வாழ்விசையன்பேரனுக்கு மன்னவனுங்தானளித்து
தாழ்வின்றியிந்தத் தரணிதனையாண்டிடென்றார்
கோணிவந்தானென்று கோவிலிலேதானிருந்தான்
முத்துமுடிசூட்டி முடிமன்னாகாத்திருக்க

கொற்றக்குடைநிழற்ற கோவேந்தர்சூழ்ந்திருக்க
சத்தக்கடல்போலே சனங்கள்நெருங்கிருக்க
கட்டிம்புரியுடைய காவலர்கள்வந்துநிற்க
வெட்டும்பரிவீரர் விரவாள்கைபிடித்து
தத்தும்பரியேறித் தங்கஅரிமேலவந்திருக்க
சுற்றும்ரதமேறித் துரைமக்கள்வந்திருக்க
தாறுமதவாரணமேல் துரந்தரிகர்வந்திருக்க
கூறுதமிழ்வாணர் கொண்டாடிவந்திருக்க
தம்புருவீணை சரமண்டலமுழங்க
கிம்புருடகின்னரமுங் கீதங்கள்தான்முழங்க
சங்கீதராகமுடன் தாளமுடன்மத்தளமும்
இங்கிதராச்சின்னம் எக்காளம்பூரிகையும்
நவரியுடன்செயகண்டி நற்சங்குதான்முழங்க
பவரிகமாய்பேரிகைகள் பலதிக்குந்தான்முழங்க
சேனைதளமுஞ் சிறப்பாகத்தான்சூழ
ஆனைபரிரதமும் அணியாகத்தான்சூழ
சிங்காசனச்சிறப்பும் சேனைமன்னர்தன்சிறப்பும்
எங்கள்பரிசித்துடைய துரைபோலதுசிறப்பும்
கண்கள்களிகூரக் கண்டுதர்மர்தம்பியரும்
எங்கள்பதிகாக்கு மிவனேபுவிராஜன்
ஆனாலினிமேல் அச்சங்களொன்றுமில்லை
போனாலுநம்முடைய புவியாள்வானரிப்பாலன்
செலுத்துவானசெங்கோல் திருமாலருளாலே
ஆலித்துத்தானிருந்து ஆலோசனைகளெல்லாம்
இன்றைக்குதீர்ந்தோம் இனிமேல்கிலேசமென்ன
குன்றைக்குடைகவிழ்த்த கோபாலன்தன்னிடத்தில்
போகலாமென்று பூரித்துப்புத்திரர்கள்
ஏகலாமொன்றாய் இனிமேல்மயக்காமல்
என்றுபரிசித்துவையும் இங்கேவாவென்றழைத்து
ஒன்றுபதையாமல் உலகாள்வீரென்னரசே
நாங்கள்வைகுந்தம் நடக்கவழிகாட்டி
போங்களென்றுசொல்லும் புண்ணியரேநீர்தாமும்
மனதுசலியாமல வாழ்ந்திமிகமகிழ்ந்து
என்றுமனங்குளிர்ந்து இன்பமுடன்சொல்லுமென்ன
விம்மல்மிகுந்து மெலிந்துபரிசித்துவுந்தான்
செம்மல்மலர்விழியால இரண்டுகண்ணீர்தானோ
ஐயமார்என்னைவிட்டு ஐவருந்தான்போனக்கால்
உய்வேனோநானும் உடைந்திடந்துபோகவேதான்
விட்டுப்பிரிந்தீரானால் விளங்குவேனோநான்பாவி
மட்டுபடாச்செல்வம் வாழ்வுபலவிருந்தும்
என்னைத்தனிபவிட்டு ஏகினீராமாகில்
பின்னைப்பயனோ முடிந்தேனோநான்பாவி

தந்தையனைப்பெற்றவர்கள் தரணியிலாண்டிருந்து
விந்தையாயிந்த மேதினியைவிட்டிழந்து
நடந்தசடத்தோடேநாம்போமென்றுசொன்னான்
தொடர்ந்துநான்வருவேன் தூரவழிபோனாலும்
கண்டிருக்கநானும் காவலரேபோவோமென்றால்
விண்டிருக்கப்போமோ வித்தகரேயென்னுவில்
சடத்தையிங்கேவிட்டுவிட்டுத் தானடந்திராமானால்
சடத்துக்குள்ளதெல்லாம் தானதர்மங்கான்முடித்து
மறந்திருப்பேன்கண்டீரோ மானிலத்தோர்புத்திசொல்லி
உயிரோடேநாம்போமோம் உலகாளுமென்றுசொல்லி
தயிரோடேநீபுரிந்த தன்மைபோலாவேனு
ஊரிருக்கநாடிருக்க உற்சனந்தன்னிலுள்ள
மேரிருக்கநீர்போற் பேச்சரிவேணயாவே
எந்தவிதமென்று எனக்குவகைசொல்லுமிப்போ
அந்தவசனம் யறிந்துதர்மர்தான்கேட்டு
முந்திநடந்த முறைமைகளுந்தானுரைத்து
வந்தவரலாறும் மாயவனூர்போனதுவும்
பாரதப்போர்முடியப் பண்ணிவைத்தகாரியமும்
சாரதியாய்நின்று சகாயம்புரிந்ததுவும்
காரணங்கள்தான்முடித்து கரியமால்போனதுவும்
ஆரணனுமெங்களைத்தான் அப்போதழைத்ததுவும்
சிந்தைமகிழ்ந்து திருமாலருளினதும்
மைந்தனமனது மலையாமல்வார்த்தைசொல்லி
கந்தமலர்க்கைபால் கட்டியறவணைத்து
முகந்துமடியில்வைத்து முதுகுதனைத்தடவி
சுகந்துமணிந்து மேசம்பனமுந்தான்தவிர்த்து
மதலைகுழந்தை மனமதுவார்த்தைசொல்லி
அமர்த்தியிருமென்று அறவணைத்துக்கொண்டாடி
சமர்த்தன்பரிசித்துவுந்தான் சாதகமாய்நல்லதென்று
நல்லவழிசென்று நாரணனைத்தானோக்கி
சொல்லுமென்றுநல்வசனஞ் செப்பினாம்மானே
மற்றுமுள்ளமன்னர் மகுடமுடிவேந்தருக்கு
புத்தியுடன்சொல்லி புகுந்தாரண்மனையில்
தாயாரிருக்குமந்த தனிமாளிகைநோக்கி
ஆயாளிருக்குமந்த ஆசனத்துமுன்னேவந்தான்
விழுந்துநமஸ்கரித்தார் வேதிருந்தம்பியரும்
அழுந்தத்தழுவி ஐவரையுமுத்தமிட்டு
சூழவேமைந்தருடன் துயரற்றிருக்கையிலே
தாழுமொழிபேசித் தருமருந்தம்பியரும்
யோசையரணஞ் சலிப்பொன்றுஞ்செல்லாமல்
ஆதேநீஎங்களுக்கு அன்புடனேஇன்பமதாய்

மாயோனிடந்தனிலே வைகுந்தஞ்சேர்ந்திருக்க
நீயேறுமென்று நெற்றியிலேநீரணிந்து
சந்தோஷமாக தானனுப்பவேணுமென்று
என்தாயேயென்றும் என்னுமகனை புடனே
அனுப்புவீரென்று ஐவருந்தான்கேட்க
தனுப்பெரியதாயாறும் தயங்கிமுகம்வாடி
என்னைப்பிரிந்துமக்கள் பெண்ணையுந்தானிங்குவிட்டு
நடப்பதற்கோவந்து நன்றாயுபசரித்தீர்
நடப்பற்றுநானும நாடியுடல்தளர்ந்து
கூனிவிழிமயங்கிக் கோலூன்றியேதரையில்
வாநீரொழுகி வயதுஞ்சரியாகி
உடலுந்தளர்ந்து ஊனுஞ்செயல்குறைந்து
படருமிருமல் பாசத்திளைப்புடனே
முகமுஞ்சிறுத்து முழங்காற்பிடிப்பாகி
சுகமுஞ்சுவைமலக்கு தோற்றமதுவேராகி
உள்ளுநடைந்துமேனி யுடலும்பசையற்று
மெள்ளுடலுமாகி மெய்யுமிகத்தளர்ந்து
ஆக்கைகுலைந்து அவதிவருநாளையிலே
தீர்க்கடனும்நீர்க்கடனுஞ் செய்துமுடியாமல்
போறமென்றபுண்ணியரே புத்திரரேமித்திரரே
வாருமென்றமக்களுடன் மண்ணில்விழுந்தழுது
தந்தையருமில்லாமல் தனித்துநானுங்களையும்
சிந்தைமயங்காமல் சிறியோர்பெரியோராய்
ஆகமட்டுந்தான்வளர்த்த அன்னையல்லோவுந்தனையும்
சாகவிட்டுப்போகச் சம்மதியோயுங்களுக்கு
அந்தநாளெங்க ளன்னைபிதாவிடத்தில்
குந்திமகாதேவியென்று குழந்தையாய்நானிருந்தேன்
சொல்லரியவேந்த துருவாசமாமுனிவர்
வெல்லரியஅத்திபுரம வீதியிலேவந்தளவில்
எங்களையர்கண்டு யிருமென்றுஆதரித்து
அங்கேதான்வந்து அமர்ந்திருக்கும்வேளையிலே
அஞ்சுவயதான ஆரணங்குகையாலே
மிஞ்சுமொருசமயல் விதமாகத்தான்முடித்து
அன்னமபடைத்தால் அதுகொள்வோயாமாகில்
என்னமொழிசொன்னளவில் எங்களையரெந்தனையும்
அவர்க்குப்பணிவிடைசெய் அம்மாவெனவுரைத்தார்
அவர்கருமனதுவர யானுமிளையாமல்
அன்புடனேதான்சமைத்து அமுதுபடைத்துவந்தேன்
இன்பமுடன்சாப்பிட் டெழுந்திருக்கும்வேளையிலே
சந்தோஷமாகமுனி தனித்துவெனையழைத்து
மந்திரமுஞ்சொல்லி மகிழ்ந்துவரத்நாரெந்தனுக்கு
வேதமுனிசொன்ன வித்தைதனைவைத்திருந்தேன்

நீதமுள்ளபாண்டியர்தாம் நித்தியதாம்பூலமிட
கலியாணஞ்செய்தார் கருத்துடனேயுனமையதாய்
மண்ணாளநீங்கள் வருவதற்குமார்க்கமதாய்
உங்களையர்தம்மிடத்தில் உண்மைசொல்லிதான்கேட்க
அங்கேயவர்சொன்ன அன்பானமந்திரத்தை
வேண்டித்தவமிருந்து மேதினியிற்புத்திரரை
ஆண்டியிடசொற்படிக்கு அன்பாகஉங்களையும்
ஈன்றுமுலைகொடுத்து யிப்போதுவாழ்ந்திரென்றூர்
தோன்றுமொருமந்திரமுஞ் சொல்லிமுறைமுறையாய்
அப்படிபேதப்பாமல் அவர்சொல்லுமீறாமல்
தாமதிக்காரர் சதிகேடராச்சியத்தால்
மாயாதேயுங்களைதான் மன்றெடுத்துதான்வளர்த்து
இப்படியேயுங்களைநான் யீன்றெடுத்தகாரணங்கள்
என்னைவிட்டுப்போக வெழுந்ததோயுங்கள்மனம்
அன்னையென்றுசொல்லி அருகிருந்துபோற்றாமல்
பிள்ளையில்லாத பெருமலடிபோலாக
பிள்ளையில்லாதவர்போலக் கிலேசமாய்வாடுவனே
குந்திமைந்தரைவரென்று குவலயமெல்லாமறிய
பெற்றெடுத்ததாய்வயற்றில் பெருந்தணலைத்தான்மூட்டி
வைத்துவிட்டுப்போறேமென்ன வாய்வீணம்பேசுவரோ
மக்களல்லவோவெனக்கு மாற்றாய்தானவந்தீரோ
பக்கமுள்ளபேருதவி பண்ணுவரோவெந்தனுக்கு
தர்மரேவீமர் சகாதேவர்தம்பியரே
நன்மையிதுதானோ நகுலர்அருச்சுனரே
இன்மைதனிற்பாவ மெனக்குப்பலித்ததுவோ
சென்மமெடுத்தேனே சிரிப்பார்க்குள்ளானேனே
எனக்குவிதிதா னிதுவேனெழுதினது
உனக்குமைந்தரில்லையென்று உகந்தெழுதிவிட்டாரோ
அருமையுடன்பெற்றெடுத்த ஐவரேதம்பியரே
பெருமையுடன்பெற்றெடுத்த பேசவுந்தான்காரியமே
இத்தனையுஞ்சொல்லி இரைந்தழுதாள்குந்தியம்மாள்
கத்தனையேநொந்தழுதாள் கண்ணீர்களாரோட
கண்ணீர்துடைத்துமவர் காலிலேதான்விழுந்து
எந்தனிடமாதாவே எங்களைநீயறிக்க
வந்தான்கலியனுமே மாபாவியிப்போது
எங்களைபங்கம்பண்ண யியல்பாய்வந்தான்கலியன்
இங்கிருக்கநீதியல்ல யெந்தன்மிகமாயனுந்தான்
ஆயன்மொழிதப்பாமல் வைகுந்தஞ்சேர்வதற்கு
ஆபனுரைத்த அடைவுந்தான்தப்பாமல்
சத்தியமுமங்கே நீணிலத்தில்தானிருந்து

புத்திகலங்கி பொறிகலங்கிப்பொய்யாகி
மெய்வார்த்தைசொல்லி விரதம்பிடித்தவர்கள்
பொய்வார்த்தைசொல்லிப் புலையனாய்மாநிலத்தில்
சிரிக்கவுடம்பெடுத்து திரியாமலெங்களுக்கு
துதிக்கும்படியாகத் துயரமற்றுநீதானும்
விதிக்கும்படியாய் விளம்புவீர்மாதாவே
உனக்குப்பரிசித்துவந்தா னுமக்கபிள்ளைபெங்களைப்போல்
தனக்குத்தான் வேணுமென்ற சௌபாக்கியத்துடனே
அன்னசுற்றமெல்லா மருகிருந்துபோற்றிசெய்ய
சொன்னபடிகேட்கத் துரைமக்கள்காத்திருக்க
ஆனாலுனக்கு அச்சுதனார்தன்பாதம்
வாணாள்முடித்து வரும்போதுநாரணரும்
நாங்களுக்கூட வந்து நடந்தெதிராய்வந்தழைத்து
பாங்குடனேவைகுந்தம் பதிதனிலேநீயிருக்க
முன்னேபோய்நாங்கள் முழுதுரைப்பதாக
அன்னையேநாமிருப்போ மழைக்கண்டாந்தாயேநீ
தாயேதவங்குலைந்து தவங்கெட்டுப்போகாமல்
நீயேதுணையாக நேசமுடன்புத்திசொல்லி
கர்மக்கலியுகத்தை கடந்துகடைபேற
தர்மந்தவறாமல் தாயேநீகாப்பாற்றி
அக்காலஞ்சென்று அழைக்கவருமேமன்னையில்
சிக்காமல்நீயுஞ் சிந்தைமகிழ்ந்தலறி
இறப்பதுவுமெய்யாகும் இருப்பதுவும்பொய்யாகும்
சிறப்பதுகாண்மாதாவே செல்வர்தனையனுப்பும்
ஆகாசம்பூமி யந்தங்களுள்ளளவும்
போகாதுதர்மம் பொறுமைபெறுத்திடாது
எனக்குமென்தம்பியற்கு மிவ்விடஞ்சரியாது
உனக்குமிருக்க உதவிசெய்யநாங்களுந்தான்
இடம்பிடித்துமக்கே யிவ்விடமுந்தானழைத்து
உடம்படிக்கைபண்ணி உலகளந்தான் தன்னிடத்தில்
வீற்றிருக்கவேண்டி விரும்பியனுப்பிவிடும்
நேற்றிருந்தாரின்றிருக்க நிச்சயமில்லாதவுடல்
சதமில்லாவிவ்வாழ்வு சதமேயவிடமம்மா
நிதமுஞ்சிவபூசை நீயறிவுந்தப்பாமல்
அவ்விடஞ்சதமென்று ஆத்துமத்தைசுத்திபண்ணி
இவ்விடம்சதமல்ல வெங்களையுந்தானனுப்பும்
மாதாவேதாயே மனங்கள்சலியாமல்
நீதானனுப்புமென்று நீதியுடன்பாதமதில்
வீழ்ந்தார்சரணமென்று மெய்மகிழ்ந்துதாயாரும்
தாழ்ந்துமனமிரக்கித் தம்பியரேபோமெனவே
நீறுந்தரித்து நேரிழையாள்தான்மகிழ்ந்து
வேறுவினைவாராமல் வேதநாராயணரே

காருமெனவாழ்த்திக் கைநீறுந்தானணிந்து
சேருமும்மாதந் திருமாலேஐவரையும்
என்று-குந்திமாதேவி யின்பமுடன் தானனுப்ப
மன்றபுகழ்காந்தாரி மனைநோக்கிதானடந்தாள்
காந்தாரிவீற்றிருக்குங் கனகமணிமாளிகையில்
புகுந்தாரிருவர்கள் புதியமணிமண்டபத்தில்
கண்டாரடிதொழுதார் காந்தாரியம்மனுமே
கண்டாள்மைந்தரையுங் கட்டியுறவணைந்து
மைந்தருக்குநல்ல வார்த்தையுபசாரமுடன்
ஐந்தருபோற்றானிருந்து ஐவரையுங்கொண்டாடி
சிந்தைகளித்துநன்றாய்த் தேன்மொழியாள் தானிருக்கும்
என்தாயேமாதாவே யெங்களையுமிப்போது
சந்தோஷமாகத் தானனுப்பவேணுமிப்போ
தலியன்பிறந்து காரணமாயிங்குவந்தோம்
வைகுந்தஞ்சேர வாழ்த்திவிடைதாரும்
கைமொண்டுநீரணியுங் காந்தாரிநாயகமே
என்றுதர்மர்சொல்ல ஏங்கியேகாந்தாரி
ஒன்றுமுரையாமல் உறுதியுடன்பேசாமல்
என்னிடத்தில்நீங்க ளிதுகணக்கேவந்தீர்காண்
உன்னையேநாநம்பி உற்றதுணையென்றிருந்தேன்
மாபாவிவிட்டே மைந்தரென்றுவந்தீர்
பூபாலரைவர் போதுமென்றுநானிருந்தேன்
நூற்றுவருமாண்டிருந்து நொந்திடைந்துபோனார்கள்
காத்திருந்தேநானுங் காலமுடியுமட்டும்
நீங்கள்துணையென்று நீனிலத்தில்நானிருந்தேன்
நாங்கள்பயணமென்று நன்றாகச்சொன்னீரே
முன்செய்ததீவினையோ மூதாக்கள்சொன்னதுவோ
பின்செய்ததீவினையோ பெருமாள்தன்கற்பனையோ
அந்தமைந்தர்நூற்றுவரு மதகழிந்துபோனாலும்
இந்தமைந்தர்போலுமினி இங்கேநமக்குதவி
ஆமென்றுநம்பி ஐவரையுமுண்டெனவே
நாமொன்றுதானினைக்க நடுநின்றோர்கற்பனைதான்
தாமேமுடித்தால் தம்பியரேயென்னசொல்வேன்
நானேதுசெய்வேன் நாயகமேதம்பியரே
நானுஞ்சரியாச்சு நடையுடையவேறாச்சு
வாரும்புவியைவிட்டு வருவதுமக்காச்சு
போங்காலமெந்தனுக்குப் புத்திரருமில்லாமல்
சாகுங்காலம்வந்திருக்கத் தம்பியரேஎன்னைவிட்டு
ஏகிநீராமாகில் எந்தனுக்குவேறுதுணை
பெற்றும்பெருமலடி பிறதியோபோனேனே

சுற்றுமிரங்காமல்தருமரேபோவீரென்றீர்
மாளக்கொடுத்து மஞ்சலிப்புநீர்தீர்த்து
ஆழக்குழிதனிலே அழுந்தவிட்டுப்போவீரோ
பக்கத்துணையில்லை பரிந்தழுகபிள்ளையில்லை
துக்கத்துடனிருக்கச் சொல்லிவிட்டுப்போவீரோ
ஆரிருந்தாலென்ன ஆனைகட்டிவாழ்ந்தாலென்ன
தாராருமைவரைப்போல் சகாயமெனக்குண்டோ
செய்யுங்கடனுந் தீர்க்கடனும்நீர்க்கடனும்
கையுங்கணக்குங் கடனுங்கழியாமல்
போகவுங்கேட்டீரே புத்திரரேமித்திரரே
ஏகவழிபார்த்து இருந்துபுலம்புவனே
யோசனைகள்சொல்லெனக்கு உற்றவிசேஷமப்பா
வாசனைசேர்தர்மரே மகனேயுரையுமென்றாள்
அந்தமொழிகேட்டு அன்புடனேதருமருந்தான்
வந்தமொழிசொல்லுகிறேன் மாதாவேநீர்கேளும்
என்னுடையதன்பிறவி யேற்றமுள்ளநூற்றுவரும்
மன்னுகுருவாசாரி:மகுடமன்னருள்ளோரும்
உற்றதுணைமைத்துனனு மூரிலுள்ளமன்னரும்
பற்றரமேகொண்டு பாராண்டேனான்பாவி
ஆண்டுமுடிந்ததுகாண் அவர்களுடனான்போக
வேண்டுவிதிகாலம் விழியும்விதிவசமாம்
கோலஞ்சமைந்திருக்க கலியுகமும்வந்ததுகாண்
காலஞ்சமைந்திருக்க கூத்துஞ்சரியாச்சு
இனிமேல்கலியுகத்தி லிருந்தேனேயாமாகில்
அநியாயமேலாகும் யகந்தைமிகவுண்டாகும்
இடும்புங்கொலைகளவு மேராளமாகிவிடும்
கெடும்புவியிலுள்ள நீதிநடவாது
அந்ததுவாபரத்தி லனேகந்தயவுதாண்மை
இந்தகலியுகத்திலெய்தாதுதானதவம்
நன்றிசெய்வோமென்றால் நமக்கறிவுவேறாகும்
குன்றிவிடும்புத்தியது குறுகுங்கலிலாகம்
ஆனதில்தாயே அடியேனபயந்துவந்தேன்
தானதவமழிந்து தர்மரென்றபேர்போகும்
பேருந்தவமும் பிரபலமும்போகாமல்
காருமென்றுநாயேயென் கற்புநிலைபோகாமல்
உந்தனுக்குநல்ல உதவிசெய்தபாலன்காண்
மைந்தனபிமன்னன் மகன்பரிச்சித்துவுடன்
வேந்தர்மகுடமன்னர் வீரர்பரிபாலமுடன்
சேர்ந்ததுரைமக்கள் செகதலத்திலுள்ளோரும்
இருக்கிறாருந்தனுக்கு ஏவல்செய்யவேண்டியபேர்
உருக்கமாயெங்களைநீ ரொன்றுமுறையாமல்

வாக்குதரவேணுமம்மா மனதுநோகாதபடி
தீர்க்கமுடனெங்களுக்குத் திருவாய்மலர்ந்தருளி
சொல்லியனுப்புமது ரெளபதையுமெங்களையும்
மெல்லியரேதாயே விடைதாருமென்றுரைத்தார்
ஐவருந்தான்கேட்க ஆனந்தக்காரியம்மாள்
மெய்வருந்தினன்றாய் விரும்பிவிடைகொடுத்தார்
விடைவாங்கிஐவருந்தான விழுந்துநமஸ்கரித்து
அடைவோங்காண்வைகுந்தம் அச்சுதனார்தம்மிடத்தில்
வென்றுகலியுகத்தை விட்டுவெளியில்வந்தோம்
இன்றுபிழைத்தோமினிமேற்கிலேசமில்லை
நமக்குபயமில்லை நடப்போமிது துணிந்து
சுமக்குஞ்சுமையைவிட்டுத் துன்பமெல்லாந்தீர்ந்தது
கேட்டவரந்தருவாய் கிருஷ்ணாவுனக்கபயம்
நாட்டமுடனுங்கள் நல்லவழிபறிந்து
வாட்டமறவாரதற்கு மாயவனே நீர்துணியாய்
தேட்டமுடன்வந்து திருவுளமேகாத்தருள்வாய்
வழிதுணையாய்நில்லுமையா மாயவா சரணமென்று
களித்துமனமகிழ்ந்து கண்ணர்தனைநோக்கி
நாற்றிசையும்பார்த்து நமஸ்கரித்துநன்றாக
தோத்திரமுஞ்சொல்லித் துணிந்துநடக்கலுற்றார்

விருத்தம்.

மாத்திரைபொழுதானாலு மாயனைமறந்துபாரில்
தோத்திரத்துடனேகூடித் துடிப்போம்நாம்சிந்தைதன்னில்
பாத்திரமறிந்துவுன்னைப் பரகதிசேரவாரோம்
சூத்திரத்துடனேவந்து துணைசெய்வாய்கரியமாலே. ௩௪

நாடிநடந்துதான்வாரோம் நகரும்பதியைவிட்டேகி
கூடிகடந்துவழியே குறுத்துத்திசையைநாணோக்கி
வாடியிடைந்துமருகாம மனமேதானேயன்புவைத்து
தேடித்திசைத்துத்திரியாமல் செவ்வேநடந்துதிருமாலே. ௩௫

சித்தன்போக்குஞ்சிவன்போக்குஞ் சிவனும்போக்கிபோலாகி
மதத்தன்போக்கும்மதன்போக்கும வானந்திருந்தமனைபோக்கும்
கத்தன்போக்குங்காரணங்கள் கண்டார்விண்டங்கொண்டாரோ
சத்தம்போக்கேவிளிப்போசன் சமயமினிவரக்கோபாலா. ௩௬

சரணஞ்சரணங்கோபாலா சாமிசரணந்தருவாயே
கரணபொறிகள்புலன்கள் காமக்குரோதமணுகாமல்
திரணமதுவேசடமாகத் திரவியமதுவேபெரிதாக
மரணமறியாதுடலாகி வந்தாட்கொள்ளவருவாயே. ௩௭

மறியில்பயங்கள்கடையிடைகள் மற்றுமுள்ளவிக்கினங்கள்
வெளிபடுத்திவடியார்கள் திகைத்துமலைத்துநில்லாமற்
பழையவினைகளணுகாமல் பால்கோலுளமும்பூரணமாய்
தெளியிலறிவும்வெளியாக்கி வெளியேவருவாய்பெருமானே. ௩௮

கருதிப்பொருளாய்த்திறப்படுத்தி கன்மக்கூட்டையுரித்தெரிந்து
திருத்தியறிவைத்திலேநிறுத்தி திருப்பாம்புதனைவேரறுத்து
குருத்திக்கொழுந்தைச்சுழுனைகூட்டிக் குறியுங்காணும்வகைப்படுத்தி
இருத்தின்பத்தின்வழிகூட்டி யிறைக்கும்பெரியபெருமாளே. ௩௯

நானேவசமல்லாம லிரண்டுமிதமேசொல்லறியேன்
தானோரென்னை நீயாட்கொண்டா யிருத்திலெவர்க்குந்தெரிந்தறிய
வானோரறியவழிகாட்டி வருவாய்பெரியபெருமாள்தான்
ஞானோரறியபல்வழியை நடத்தும்பெரியதிருமாலே ௪௰

தேசமிழந்துசெகமிழந்து சேனைதளங்கள்தானிழந்து
வாசமிழந்துமனையிழந்து மைந்தர்பெண்டிர்தனையிழந்து
பாசமொழிந்தபகையொழிந்துன் பாதமலரேபொருளாகி
நேசமிழந்தவினைவதிலே நின்றுவளர்த்தாய்பெருமாளே. ௪௧

ஐவருந்துணிகுவாரோ மவிடமேகெதிகளென்று
தெய்வமேபொருளென்றெண்ணித் தெரிசனைகாணக்கண்கள்
மெய்வளர்திருமால்பாதம் வேண்டிவைகுந்தஞ்சேர
கைதருமாலேபோற்றி கருணையங்கடவுளாரே. ௪௨

இராகவாமுகுந்தாபோற்றி இராசகோபாலாபோற்றி
ஏகமாய்நின்றாய்போற்றி எம்பெருமானேபோற்றி
லோகநாயகனேபோற்றி நான்மறைதெரிந்தாய்போற்றி
நாகமேல்துயின்றாய்போற்றி ராமனேபோற்றிபோற்றி. ௪௩

மந்திரப்பொருளேயுன்னை வழுத்துநின்றுதித்துப்போற்றி
தந்திரத்துடனேயந்தன் தம்பிமார்நாலுபேரும்
அந்தமர்க்குழலினாளும் ஐவரோடாறுபேரும்
சந்திரபதிவைகுந்தந் தன்னையேநோக்கிவாறும். ௪௪

அரிகரிராமாராமா அச்சுதானந்தகோபா
கரியமாலுந்திபூத்தோன் கார்முகில்மேகவண்ணா
பெரியவானந்தசேஷா பிரமனைபெற்றமாயா
உரியவர்பஞ்சவர்க்கு உகந்தைவர்வாறும்வாறும். ௪௫

கதை.

பஞ்சவர்களைவருமாய் பத்தியுள்ளதுரோபதையும்
கஞ்சமலர்வைகுந்தங் காணவென்றுதானடந்தார்
நடந்தவொருபஞ்சவரை நல்லபரிசித்துவுந்தான்
தொடர்ந்துவழிவிட்டு தொழுதுநமஸ்கரித்து
சேனைபடைத்தலைவர் செகவீரரெல்லோரும்
ஆனைபரிதேவர் யவரையுந்தானதொழுது
வந்தார்களத்திபுரம் மகுடமுடிமன்னரெல்லாம்
நேர்ந்தாரிடைந்தார் நோக்கிவனமபோனவர்போல்
காசினியோரெல்லாங் கலங்கிமனமுருகி
வாசனைசேனைவர் வனம்போனாரென்றுசொல்லி
கோவென்றபயமிட்டு கொற்றவரைக்காணமல்

பாவமோவென்று பரதவித்துநிற்பாரும்
ஐயோசிவனேயென்று ஐவரையுந்தானினைந்து
மெய்யாய்புவியை விரும்பியிருப்போமோ
மன்னர்மன்னரெல்லா வனங்களிலேதானினைத்து
தென்னவனைக்காணாமல் தேடிநினைப்பாரும்
ஆரிருந்தாலென்ன ஆனைகட்டிவாழ்ந்தாலென்ன
காராருமைவரைப்போல் காசினியில்கிட்டாது
போனவழிபார்த்துப் புலம்பியேநிற்போரும்
தானவனேயென்று தலைவிரித்துநிற்பாரும்
வஞ்சனைசெய்தோமே மாபாவியானோமோ
பஞ்சவரேயுங்களுக்குப் பாவிகளுமானோமோ
உங்களையும்விட்டு வுலகிலிருப்போமோ
எங்களையும்விட்டு எழுந்தருளிப்போனீரோ
ஊரிருக்கச்சேனை யுகந்தமன்னர்தானிருக்க
சீரிருக்கநீங்கள் தேசமிழந்தீரோ
பாரிருக்கச்செல்வம் பரிகரிகள்தானிருக்க
தேரிருக்கவாழ்ந்த தேசம்விட்டுப்போவீரோ
தாரிருக்குமார்பர் தனஞ்செயனே இங்கிலுள்ளா
மேரிருக்கநீரும் பிரதேசம்போனீரே
மாடமிருக்க மனைவிமக்கள்தானிருக்க
கூடமிருக்க குடியிழந்துபோனீரோ
தாழ்வில்லாச்செல்வஞ் சகலபொருள்தானிருக்க
வாழ்விருக்கநீயும் வனவாசம்போவீரோ
தர்மரேவீமரே தனஞ்செயரேதம்பியரே
நன்மைசெய்துநீங்கள் நாடிழந்துபோவீரோ
துடியிடையாள்சேர துமரமக்கள்தான்சேர
குந்தியம்மாள்தானிருந்து குமாரர்களைத்தானினைந்து
அந்திசந்திதேடி யழுதகுரல்கேட்டீரோ
வேதாவிதியோ விதியின்பயனெனவே
மாதா அழுதகுரல வைகுந்தநகேட்கிலையோ
சாந்தசருமன தங்கிளையுஞ்சுற்றமுடன
காந்தாரிகூவென்று கதறினதுகேட்கிலையோ
காலங்கலியுகத்தைக் கடந்துவழிகூடி
கோலங்கொண்டுநீங்கள் கூட்டோடேபோவீரோ
கூடுகொண்டுபோன் குருகுலத்துமன்னனென்று
நாளுள்ளமட்டுமிது நடக்குமென்றுபோனீரோ
மெய்கொண்டஐவரென்று மேதினியோர்கொண்டாட
வைகுந்தஞ்சேர மனந்துணிந்துபோனீரோ
ஆனலினிமேலவர்செயலுண்டெனவே
மானாபிமானமுடன வாழ்வேபுவிமீதில்
என்றுமன்னன்கூடி இருந்தமதிமந்திரிமார்
சென்றுபரிச்சித்துமன்னர் தேற்றியுபசரித்து

பூலோகந்தாங்கும் புரந்தரனேயிப்போது
ஆலோசனைபேசி அழவேண்டாமென்றுசொல்லி
விதிவசமாய்நாள்தோறும் மனதைமிகத்தேற்றி
களிகூர்ந்திருமென்று காவலரும்காத்திருந்தார்
காத்திருந்தமன்னனையும் காவலர்கள்தங்களையும்
பார்த்திருந்துசொல்வான் பரிசித்துவேந்தனுந்தான்
குந்தியம்மாள்பாட்டியவள் கூவென்றழுதசத்தம்
புத்திகலங்கிப் பொறிகலங்கிப்போகுதையோ
அந்தமனக்கிலேசம் அனைவரும்போயகற்றுதற்கு
வந்துகுந்திமாதேவியிட மனஞ்சலிப்புதான்தீர்த்து
காந்தாரிமாளிகையில் கட்டுடனேதான்கடந்து
பூந்தார்களமண்டபத்தில் பொற்கொடியாள்தன்சலிப்பும்
வேண்டாமெனவுரைத்து வீற்றிருந்தாரம்மானை
காண்டாவனமெரித்த கண்ணுதலோன்தன்புதல்வன்
பார்வேந்தர்போற்ற பரிசித்துமன்னனுந்தான்
தார்வேந்தர்கொண்டாடத் தரணியையாண்டிருந்தோம்
தேசக்குறிப்புந் தெரியவெடுத்தெழுதி
வாசக்குடிதழைக்க மனுநீதிதப்பாமல்
அரசரொடுசீமை அடங்கலுமேதானெழுந்து
வீசும்படிக்கு விபரமாய்க்கண்டெழுதி
மன்னரமைச்சர் மந்திரிமார்தங்களுக்கு
அன்னசொர்ணமேடை ஆபரணந்தானணிந்து
ஆனைசேனைபரியுள்ள அடங்கலுக்குமிப்படியே
சேனைரதகஜங்கள் செகத்திலுள்ளமன்னவர்க்கு
வாசல்வழியுள்ள மனையாட்சியுள்ளவர்க்கும்
ரோசுபடிச்செலவு ரொக்கமாய்த்தானெழுதி
வேதியர்களந்தணர்கள் வீரனாவாள்பூசுரர்க்கு
ஆதியிலுள்ள ஐவர்கணக்குப்படியாய்
சோதிமணிமகுடர் துரைராசர்மன்னவர்க்கு
ஓதியதபோதனர்க்கு உள்ளபடிதான்கொடுத்து
நீதிதவராமல் நெறிமுறைமைதப்பாமல்
சாதிமுறைமை தவங்குலைந்துபோகாமல்
அதிதிபரதேசியரும் அவதியென்றுசொல்லாமல்
பகுதியுமோ ஆறிலொன்று படியேடுதப்பாமல்
தெய்வத்தலங்கள் சிறப்புமிகப்பூசைகளும்
ஐயரிருந்ததைப்போல் அவனியெங்குங்கொண்டாட
கொலுவிலிருந்தான் குவலயங்கள்போற்றிசெய்ய
வலுவானவீமன் மகனுடையசிங்காரம்
மன்மதனுமென்று வாழ்த்துசிலபேர்கள்
தர்மரவராமென்று சாற்றுஞ்சிலபேர்கள்
வில்லியுடன்பேரன் விசயன்காணென்பாரும்
சொல்லியபீமன் துந்திரிகனென்பாரும்

நல்லசகாதேவன் ராசனிவனென்பாரும்
வெல்லபுகழ்நகுலன் மன்னவன்காணென்பாரும்
ஐவர்குலந்தனக்கு அரசுநிலையென்பாரும்
சைவசமயந் தழைக்கவந்தானென்பாரும்
குருகுலத்தில்வந்த குலக்கொழுந்தோனென்பாரும்
இராசாதிராசனிவன் ராசசிங்கமென்பாரும்
போசனிவனென்று பூரித்துநிற்பாரும்
பாராளவந்த பார்த்திபனென்பாரும்
சீராளனெவ்வகைக்கும் சீமான்காணென்பாரும்
மீதானசெல்வம் விளங்கவந்தானெனபாரும்
ஆகாரப்புவியை ஆளவந்தானென்பாரும்
வங்கிசத்தைக்காட்டும வரமழிந்துபோகாமல்
அங்கிசங்காக்கவந்த ஆண்பிள்ளையென்பாரும்
பல்லோரும்வாழ்த்திய பார்த்திபன்போல்வீற்றிருந்தார்
தேசமெங்குங்கொண்டாடச் சிங்காதனத்திருந்தார்
இராசனென்னயோகம் நடத்தும்படிகேளீர்
நந்தவனத்தோப்பும் நாலுதிக்குமின்றிலங்க
சந்தனச்சோலைகளும் தானெங்குஞ்சூழ்ந்துநிற்க
செண்பகச்சோலைகளும் செங்கழுநீரோடைகளும்
பண்பானதேனிளநீர் பலதிக்குஞ்சூழ்ந்துநிற்க
பூமரங்களெங்கும் பூத்துமிகச்சொரிய
கோங்குகமுகுபுன்னை குவிந்தெங்குஞ்சூழ்ந்துநிற்க
ஓங்குபலாமரங்கள் உலகெலாமுன்பாக
கன்னல்கதலி கதிர்குலைகளீன்றுநிற்க
செந்நெல்வயலுஞ் செந்தாமரைமலரும்
வில்வசனஞ்சூழ வீற்றிருக்கும்லட்சுமியும்
பூங்காவனஞ்சூழ புதியமலர்பூத்துநிற்க
பாங்கானவாவிகளும் பறியுமலர்பூத்துநிற்க
கோபாலன்போன் கொற்றவன்போல்வீற்றிருக்க
டாலனுயிருந்து பூலோகமாளுகையில்
மந்திரிமார்வந்து வாய்புதைத்துவார்த்தைசொல்லி
தந்திரிமார்வந்து சரணமென்றுவார்த்தைசொல்லி
மன்னரிருக்க மண்டலத்தோர்காத்திருக்க
தென்னவர்கள்வந்து சிறையிட்டுகாத்திருக்க
அரசரொடுகாவலர்கள் ஆனைபரிரதமும்
முரசொலிகளார்ப்பரிக்க முடிமன்னர்காத்திருக்க
இடிபிடிகளார்ப்பரிக்க கொடிமன்னர்காத்திருக்க
துடியதிராவீரவனந் துலங்குந்தாணிடம்மாம்
காளமொடுபேரிகையுந் நகதப்புந்தான்முழங்க
மத்தளமுந்டப்ப மணிகள்மிகமுழங்க

ஜெயகண்டிகைச்சையோடு தத்திகளுந்தான்முழங்க
ஆகண்டதலம்போல அரசன்கொலுவிருந்தான
ஆலாத்திப்பெண்கள் அலங்காரமாயிருக்க
கோலத்திருவிளக்குஞ் சமுகத்தைசூழ்ந்துநிற்க
மெல்லியலாளெனப்பாரும் விசிறிகள்வீசிநிற்க
வல்லிமருங்கிடையார் மதுரகவிபாடிவர
மின்னனைப்பொற் கொடிமார் வெண்கவரிவீசிநிற்க
பொன்னணிசேர்மாதரெல்லாம் பூமலர்கள்தான்சொரிய
பாவாடைவீசப் பாவாணர்கொண்டாட
நாவாணர்கீதம ராகங்கள்பாடிவர
கொத்துகுடைநெருங்கக் குப்பைக்குழலுடனே
மத்தசெஜமீதேறி மன்னன்பவனிவர
ஆலவட்டஞ்சூழ்ந்துவர பேரணிகள்முன்னடக்க
தாலவட்டநின்றிலங்கத் தரணியர்கள்முன்னடக்க
சந்திராகாவிடால் தவத்துடனேசேர்ந்துவர
இந்திரவிமானமது இணையாய்நெருங்கிவர
சாந்துசவ்வாதுடனே சாம்பிராணிதான்வீச
ஏந்துமுலைமாதர் இருபுறமுமாடிவர
கட்டியக்கள்கூறக் கனவிருதுதானடக்க
செட்டியிவனெனவே கெம்பீரமாகவெகு
பட்டணமுஞ்சுற்றிப் பவனிவலமாகவந்து
கட்டழகனென்று காசினியோர்கொண்டாட
பார்த்துமனமகிழ்ந்து பரிசித்துமன்னனுந்தான்
மாற்றலர்கள்போற்றிசெய்ய மன்னன்சிங்காதனத்தில்
வந்துகொலுவில் மகாராசன்போலிருந்தான்
சாந்துபயிலசாத்திரங்கள் தான்கேட்கவேணுமென்று
ஓதினன்றூதுவனை ஒருநொடியில்வாவெனவே
அந்தணர்கள்தன்தெருவில் ஆராய்ந்துதூதுவனும்
கொந்தலரும்வேதியனார் குடிகளிருந்துவர
கண்டுநமஸ்கரித்துக் காவலர்கள்வேதியனை
அண்டர்பெருமாள் அழைத்துவரச்சொன்னார்காண்
என்றுசொல்லவேதியரு மேதென்றெழுந்திருந்து
நின்றுடையமாதனை நிமிஷத்தில்வாவெனவே
புத்தகத்தைதானெடுத்துப் பூவையரேவாருமென்றார்
வித்தகப்பெண்புத்தகத்தை விரைவுடனேகொண்டுவந்தான்
வந்ததொருபுத்தகத்தை மறையோனுந்தான்வாங்கி
அந்தநலக்கோட்டை அத்திபுரந்தன்னில்வந்து
பரிச்சித்துவேந்தனையும் பாங்காகவந்துகண்டு
தெரிசித்துஅட்சதையும் செபம்பண்ணித்தான்கொடுத்து
அராசாக்கரனே அசரசர்பெருமானே
முரசக்கொடியுடைய முடிபொறுத்தமன்னவனே
என்னைவரச்சொன்ன இயல்பேதெனக்கேட்டான்

உபாயமென்னசெய்வோம் ஒருவழியுங்காணோமே
சாபமிட்டகப்பனுக்குக் கார்க்கோடன்கார்க்கடலின்
தோணிபலவுஞ் சரிப்புடையதன்கோலம்
வாணிபங்கள்செய்யும் வளம்போலெடுப்போமோ
சப்பாணிரூபஞ் சாதித்தெடுப்போமோ
கம்பாய்மிதந்து கார்க்கடலில்போவோமோ
பட்சியாய்ச்சென்று பறந்துவிழுவோமோ
கச்சிக்கரியக் காகம்போல்போவோமோ
பாம்பாய்மிதந்து பழுதைபோல்சேர்வோமோ
நாம்போகநினைவு நால்வரையுங்காணோமே
வேருருவுங்கொள்ளா விபரமென்றுங்காணமல்
மாற்றுருவங்கொண்டு மன்னவனைத்தீண்டுதற்கு
என்னவழிவெடுத்து என்சபதந்தீர்ப்போமோ
மன்னவனைக்கொல்ல வகையொன்றுங்காணோமே
தனதுபோல்நாமும் சற்பனையாய்கொல்வதற்கு
முகந்துமனங்கொண்டு முகத்தோடறவணைத்து
மிருந்தகனியேதெனவே விசாரித்துப்பாற்பளவில்
தின்றூர்புளித்திருக்கும் தின்னவென்றால்பல்கூசும்
கண்டாற்களிகூறும் கண்மலரில்தானணையும்
தெய்வீகமானதொரு தேவகனிதானாகும்
திவ்வியமாமென்று தோற்றுநினைவுகொண்டு
எலுமிச்சம்நற்கனிதா னின்பமெனத்தோற்றுகையில்
வலுமிச்சமென்று வடிவெடுத்தான்கார்க்கோடன்
கனிரூபங்கொண்டு கடலிற்குதித்திறங்கி
தனியேமிதந்து தடையறவேபோகலுற்றான்
கப்பல்விட்டுசுத்திக் காத்திருந்தகாவலர்கள்
தெப்பமெனஓர்கனிதான் தெரியுதுகாணென்பாரும்
அந்தர்வருகுதுகாண் அதிசயங்காணென்பாரும்
வந்தாலெனக்கென்று மறகட்டிநிற்பாரும்
எனக்கென்றுசொல்லி இச்சித்துநிற்பாரும்
உனக்கேன்கிடைக்குமென்று உபாயமிட்டுநிற்பாரும்
ஆர்கண்டாலென்ன அமையாதொருவருக்கு
பார்கொண்டராசன் பரிட்சித்துவேந்தனுக்கு
தக்குமேயல்லாது தர்க்கமிட்டுநின்றாலும்
சிக்குமோஉங்களுக்குத் தெய்வகனியென்பாரும்
இப்படியாய்ச்சொல்லி இசைவாய்வெகுஜனங்கள்
நிற்பளவில்கம்பமதாய் நிலைபாச்சமுத்திரத்தில்
அடியிலடிபட்டு அசைந்தசைந்துதானகுதித்தார்
குலைசெய்யவாரதொரு குருமாங்கனியதுதான்
ஒதுங்கிவழிவிலகி ஒருவிடமும்போகாமல்
பிதுங்கிநெகிழாமல் பிடித்தார்பழந்தனையும்
எடுத்துக்கனியதனை இன்பமுற்றெல்லோரும்

அமிர்தக்கனிதன்னை அனைவோருந்தான்பார்த்து
போசனைகள்பண்ணி ஒருமித்துஎல்லோரும்
இராசனுக்காகுமென்று கடந்தார்சமுகமதில்
மன்னன்பரிட்சித்து மகாராசன்தன்கொலுவில்
தென்னவர்கள்காரியப்பேர் சென்றுதொழுதேற்றி
ஆண்டவனேயெங்கள் அரசர்பெருமானே
நீண்டவனேநாங்கள் நீணிலத்திற்கண்டதில்லை
கண்டரியக்காட்சியெங்கள் கையில்வந்துசிக்கியதே
புண்டரிகர்மார்பா புவியாரேயுன்யோகம்
அதிசயமாய்க்கண்டெடுத்தோம் ஐயாபுதுமையிது
மதிசேருபுண்ணியனே மகாயோகமுந்தனுக்கு
வந்ததுகாணென்று வாழ்த்தியேஎல்லோரும்
சந்துபயில்மன்னன் தார்வேந்தன்தன்னிடத்தில்
கொண்டாடிக்கொண்டு கொடுத்தார்களெல்லோரும்
கண்டான்துரைராசன் கண்பிரியமாய்மகிழ்ந்து
நல்லகனியென்று நகைத்துமுகமலர்ந்து
செல்வமகன்வாங்கிச் செந்தாமரைமுகத்தில்
ஒத்தினான்கண்ணில் ஊடுருவநாகமது
கொத்தினான்சீறிக் குதித்தான்கடல்தனிலே
பழிமக்குவந்துதென்றுபடவரவந்தானினைந்து
வழிகூடியேநடந்து மறைந்ததுவேவாளரவம்
மதியுடனேவந்தொளித்த மன்னவனும்பட்டுவிட்டான்

விருத்தம்.

விதியின்பயனைவிலக்கவென விரும்பியொருவன்முந்நாளில்
அதிபத்தலையைந்தான்சிரைத்து அகன்றுபிழைத்துவருவமென்று
சதியேவருவதறியாமல் தாலமேறிப்போயிருக்க
விதிதான்மொட்டைத்தலைதனிலே விழுமாம்பனிதானே.
தலையில்விதித்தவிதிதனக்குத் தலையைச்சிரைத்தோனபட்டதுபோல்
அலையிலொளித்தபரிசிந்தும் அமர்ந்தானரவுவிஷத்தாலே
குலையேசெய்தபழிபாவங் குலையாய்முடிந்ததெனவேங்கி
மலையாதிருந்தமன்னரெல்லா மலைந்துகுலைந்துடலைந்தாரே.
ஏகினார்முகங்கள்வாடி என்செய்வோமென்றுசொல்லித்
தூக்கினார்தலைகவிழ்ந்து துயரமுமெத்தவாகி
வாங்கினார்கடலைவிட்டு வருகிறோமென்றுசொல்லி
ஏகினார்சன்மங்கேட்க உத்தரமெழுதுமென்றார்

கதை.

பட்டுக்கிடக்கின்ற பரிச்சித்துவேந்தனையும்
கட்டிலுக்குள்வைத்து கனகபட்டுமேற்போர்த்து
சாந்துபுனுகு சவ்வாதுசந்தனமும்
கமகமென்றிருக்கின்ற களபமெல்லாந்தான்பூசி
போமெனவேநல்ல பொட்டமதிற்றானிருந்து
முன்னேயெழுதிவிட்டார் முடிபொருந்தமன்னனுக்கு

பின்னேபபணமென்று பெருக்கடலையிட்டகன்று
ஓலைதனைக்கொண்டு ஒருகொடியிற்றூதுவனும்
சேனைதலைகுலைபச் செனமேசெயராசன்வந்தான்
தெண்டனிட்டதூதன் சென்னிகவிழ்ந்துரைப்பான்
தொண்டனுக்குவாய்த்தான் துணியுமேஎன்துரையே
என்றோலைதன்னை எடுத்துமுன்னேவைக்கலுற்றார்
நின்றோலைவாசித்து நிலையில்விழுந்தது
மண்ணதிரவிண்ணதிர வயிற்றிலறைந்தழுதான்
கண்ணீர்களாறோடக் கதறிவனுத்தழுது
வந்தவொருதூதுவனை வகையேதெனக்கேட்க
அந்தவிவரமெல்லாமவன் வகைவகையாய்ச்சொல்லியபின்
கேட்டுச்செனமேசெயன் கிலேசமிகவுண்டாகி
நாட்டும்புகழ்மன்னனையும் நாழிகையிலிங்கேதான்
கொண்டுவரவேணுமென்று கொற்றவனுந்தானுரைத்தார்
சென்றுசிவிகையின்மேல் தென்னவனைக்கொண்டுவந்தார்
வந்தார்களத்திபுரம் மன்னவனைக்கொண்டேகி
சந்தானமான சனங்கள்விழுந்தலறி
கொல்லென்றசத்தங் கூக்குரலைதானமர்த்தி
நில்லென்றமர்த்தி நினையாதெல்லாநினைந்து
அழுதுபுலம்பியதா லாவதுகாரென்றுமில்லை
பழுதுசெய்துபோனதொரு பாம்புதனையழைத்து
எந்தன்பிதாவை எழுப்புவேனல்லது
அந்தவிஷங்கொல்வதற்கு யாகாதுமக்குள்ளதெல்லாம்
எழுப்பினாற்பிள்ளை எழுப்பாதாலென்னபிள்ளை
மழுப்பியதால் வருமோஉயிர்தானும்
தந்தையரைவைத்து சமத்தாகதானிருத்தி
விந்தையுடன்வேள்வி விதமாய்வளர்க்கலுற்றான்
சாத்திரத்திலுள்ள சகலகலைகளுமே
சூத்திரமாய்சேகரித்துச் சூழதிரைவளைத்து
வேதியரைத்தானழைத்து வேணதெல்லாங்கொடுத்து
ஓதியவேதமதி லொன்றுங்குறையாமல்
சொல்லிமுயிர்திருப்பச் சூட்டுமென்றார்வேதாந்தம்
கல்லுமுருகிவிழக் கதித்ததொருமந்திரத்தால்
உற்பத்தியாகவொரு ஓமம்அனல்வளர்த்தி
சர்ப்பத்தைவென்றுவிழத் தாக்குமென்றாரம்மானை
ஆமென்றுவேதியரு மந்தணருந்தான்கூடி
ஓமென்றுவேள்விசெய்ய ஒருத்தீய்மூட்டினரே
யாகத்தீமூண்டுதுகாண் அண்டகடாகமட்டும்
சாகத்தான்சர்ப்பந் தவிடுபொடியாக
நீறுகிவந்து நெருப்புதணலாகி
வேறுக்கிச்சர்ப்பம் வெந்துநீறுவதற்கு
எங்கேயெனத்தேடிஎழுக்கதுகானக்கினியும்

அங்கேயரவம் அக்கினிக்குள்ளாற்றாமல்
ஈரேழுலோகமெல்லாம் வெங்கெங்குந்தான்தேடி
பாரெங்குந்தான்தேடி பட அரவுஆற்றாமல்
மேலலைசந்துநாகம் வெருவிப்பயந்தேகி
காலலைசந்துகாணேடிக் கனலிலகப்பட்டிடைந்து
பார்த்தவிடமெல்லாம் பயந்தெழுந்த அக்கினியும்
ஆற்றமுடியாமல் அயிராவதத்தினியும்
ஓடிச்சிங்காதனத்தில் ஊடேநுழைந்துக்கொண்டு
நாடியசீர்பாதம் நமஸ்கரித்துதெண்டனிட்டு
அபயமுனக்கபய மடைக்கலங்காணென்றுசொல்லி
தேவேந்திரன்சபையில் சென்றுவிழுந்தமையால்
ஐவருடன்பேரன் ஆனபரிசித்துவையும்
முற்பழிசெய்தானெனவே முயன்றநான்தேடி
பிற்பழிநான்கேட்டு பிராணனையேவாங்கிவிட்டேன
அந்தபழிகேட்க அடியேனையேதொடர்ந்து
இந்தச்சனமேசெயன் என்மீதிலக்கினியை
ஏவிவிட்டான்தாங்க எம்மால்முடியாமல்
தாவியேவந்தடைந்தேன் சரணமெனக்காரும்
என்றரவஞ்சொல்ல இந்திரனுமப்போது
மன்றலருந்திண்புயத்தா மன்னன்செனமேசெனுக்கும்
இந்திரனுஞ்சீட்டெழுதி ஏவினான்தூதுவனை
அந்தரத்துத்தூதுவனும் அரைநொடியிலோடிவந்து
சீட்டுகொடுத்துச் சேதிசொன்னான்தூதுவனும்
நம்மிடத்தில்வந்தவனை நாமேவதைகள்செய்தால்
தம்மிடத்தில்வந்தவனை தான்கொல்லுவாருமுண்டோ
முன்னால்தவசிருந்த முனிவன்மேல்நாகமதை
மன்னனாஉன்தகப்பன் மாதவர்மேற்றானணிந்தார்
கோபமடக்காமல்ரிஷி கூறினார்சாபமதை
பூபனைசாவுக்குப் போய்வரலாமென்றுசொன்னார்
அந்தமுனிசாப மருகேகுடியிருந்து
வந்தவிதிவசந்தான் வருமளவும்தான்பார்த்து
எழுத்துமுடிவிதுகாண் இம்மட்டேயல்லாமல்
கொழுந்துமரலிவந்து கூடுகின்றகாலமதில்
சமையமிதுவென்று சர்பமுந்தான்தீண்டினது
அமையுமோஉன்னாலே அமையாதெவராலும்
யாகத்தைதானமர்த்தி யகன்றுமென்றார்கோபமதை
வாகாகயாகம் வளர்த்தாயேயாமாகில்
ஏகமாய்ப்பற்றி எரியும்புவனமெல்லாம்
நாகத்துமட்டு நடவாதுஅக்கினியும்
அண்டமனைத்துமுதல் அகண்டமுதலக்கினியும்
விண்டலமும்வெந்து வெளியாய்முடிந்துவிடுமே
உனக்குநிலையில்லை உலகத்திலெவ்வுயிர்க்கும்

எனக்குநிலையுமில்லை இந்திரனென்பாருமில்லை
செத்தாற்பிழைப்புமுண்டோ தேசத்திலுள்ளோர்கள்
மற்றுருஞ்சொல்லார் மயக்கத்தைவிட்டுவிடு
தந்தைதனைபடக்கிச் சாத்திரங்கள்தான்முடித்து
விந்தையாய்நீயிருந்து மேதினியையாளுமென்றார்
வாசவன்தன்கைசீட்டு வாசகத்தைமீறாமல்
இராசன்செனமேசெயன் நல்லதெனறுசம்மதித்து
ஆறியமர்ந்து அனைவோருந்தான்கூடி
தேறித்தெளிந்து தெய்வமேயென்றுசொல்லி
மந்திரிமாரும் மகுடமுடிவேந்தர்களும
தந்திரமாய்க்கூடிச் சடங்குதனைமுடித்து
மாதானம்பூதானம் வஸ்திரதானமுதல்
கோதானமீய்ந்தான் கொற்றவன்கையாலே
சடங்குமுடித்தான்காண் சாத்திரத்திலுள்ளபடி
அடங்காகிலேசமெல்லா மாறித்தெளிந்தபின்பு
மன்னரமைச்சர் மகுடமுடிவேந்தருடன்
தென்னவர்களெல்லோரும செனமேசெயராசனுக்கு
பட்டந்தரித்துப் பாராளுமென்றுசொல்லி
திட்டப்படுத்திச் செகப்வந்தராகத்திரிந்தார்
இருக்குந்தருவாயில் ஏலவேசாபமிட
வருக்கமுள்ளமாமுனிவன் மன்னன்பரிசித்துவையும்
நாகமதுதீண்டுகையால் ராசன்மடிந்திடுவான்
சாகுமுன்னேசென்று சர்ப்பத்தின்கனவிஷத்தை
திரிப்பிவிஷத்தை தென்னவனைநாமெழுப்பி
விருப்பமுடன்வைப்போ மேதினியையாளுமென்று
தன்சாபந்தீர்க்கத் தவசிவருகையிலே
வம்பானசர்ப்பம் வழியிலெதிர்வருமாம்
எதிராகவந்தொரு ஏற்றதவசிதனனை
சதிராகவந்தொரு ஏற்றதவசிதனனை
நாகமதுகேட்க நற்றவசியேதுசொல்வான்
லோகமுழுதாளு ரூபமதன்றன்னையொப்பாய்
இருக்கும்பரிசித்துவுக்கு என்னுடையசாபமதால்
பெருக்கவிஷந்தீண்டிப் பிடிக்கவருகுதென்று
தீர்த்துவிஷந்தன்னைத் திருப்பிவிடவேணுமென்று
ஏத்துந்திசைநோக்கி எவ்வந்தோங்கண்டீரோ
நின்றுமயங்கி நெடுமூச்சுக்கொண்டேகி
படவரவுதீண்டிப் பரிசித்துவேந்தனுந்தான்
சடமொழிந்துபாரில் தீய்க்கொளுத்திசுத்திவிட்டார்
சாம்பல்குவித்துச் சடங்குமுதல்சொல்லியபின்
என்போநீரென்றரவம் எதிராச்சுசொல்லியபின்
மெய்யோவென்சாபம் வினையாய்முடிந்ததுவோ
அய்யோ அரசழிக்க ஆமோபூவிமீதில்

நம்மாலரசனுக்கு நாசம்வந்ததாகையினால்
சும்மாவிடலாமோ தோஷமடக்குவரும்
அடக்கிபடக்கி அதுசரம்பலானாலும்
உத்தமமாய்நானும் ஹோமகனையுண்டுபண்ணி
இக்கெல்லாம்போற்றுந் தேசத்தையாளுமென்று
வைக்கலாமென்று மனதுகந்துவந்தேனகாண்
இல்லாதேபோனால் ஈட்டறுமெந்தனுக்கு
பொல்லாதசாபம் பொருந்தவுரைத்துவிட்டேன்

விருத்தம்.

வாக்கினாற்கண்ணாற்கையால் மனத்தினாற்செய்தபாவம்
வாக்கினாற்கண்ணாற்கையால் மனத்தினாற்றீரவேணும்
வாக்கினாற்கண்ணாற்கையால் மனத்தினாற்றீராவிட்டால்
வாக்கினாற்கண்ணாற்கையால் மனத்தினாலழியுந்தானே.

கதை.

நீரோதேபோனால் நிருவுளத்துக்கேறுது
வார்தசிவனையும் வரவழைத்துகப்பலையும்
உருவாய்வகுத்து உலகையுடல்பொருத்தா
குருவின்டமந்திரத்தால் கொள்ளலாங்காரியமும்
என்றுமுனிசொல்ல எற்றமுள்ளநாகமது
நன்றுகாமென்றுசொல்வோம் நமக்குசெயநீர்தாமும்
ஆமென்றுகேளும் அதிசயமாயென்றுசொல்வேன்
மாமரம்பூக்து வடிவுடனேமாங்கனியும்
பூமரமாய்நிற்கிரதைப் புகைந்தெரியதீண்டுகிறேன்
பங்கமாய்ப்போகும் பச்சைமரமானதுவும்
உற்பத்தியாக உயிர்மரம்போலாக்கிவைத்தால்
செத்தவனுந்தான்பிழைப்பார் செகத்திலுள்ளோர்கொண்டாட
வித்தகனேமாமுனியே மெய்யென்றுநானறிவேன்
சர்ப்பமிவைசொல்ல சன்னாசியாமெனவே
கற்பகமரத்தைக் கடியுமெனவுரைத்தார்
உரைத்தவுரைகேட்டு ஒருமித்துநாகமது
இறைந்தரவஞ்சீறி எழுந்துமிகக்கோபமதாய்
வாய்பிளந்துநாகம் மாமரத்தைக்கவ்வியதே
காய்கனிகள்தோறுங் கப்புக்கிளைதரனும்
வெந்துநீரானதொரு விருட்சமெனுமாமரத்தைச்
சந்துபழல்மாமுனிதான் தழைமரம்போலாக்கிவைத்தார்
அப்பொழுதுமாமுனியை அரவமதுகொண்டாடி
இப்போதுஉன்பழிக்கு ஈடாகபண்ணிவைத்தேன்
அஷ்டமாநாகமதில் நானொருத்தன்தானாகும்
இஷ்டமுடனீறும் எழுப்புவீர்மாமுனியே
எங்களதிகார மெல்லாந்தான்போய்விடுங்காண்
திங்களொளிபோல் சிறகிலிருந்தெடுத்து

பெரியவராமென்றுசொல்லிப்போரரவந்தான்கொடுத்து
அரியமணிவாங்கி அருந்தவசுயேகிவிட்டார்
ஏகமகிழ்ந்து நடந்ததுகாணம்மானை
சென்றரவம்போனபின்பு செனமேசராசனுந்தான்
அன்றலருந்தாமரைபோல் ஆதித்தன்தன்வடிவாய்
இருந்துசிலகாலம் இந்திரனைப்போலாகி
திருந்துபுகழ்கொண்ட செயவிஜயனவன்பேரன்
தேசமொருகுடைக்கீழ் செங்கோல்மனுநீதி
வாசமிகுபூவுலகில் மன்னவர்கள்போற்றிசெய்ய
தாகமுடனமன்னவனுஞ் சகலபரிவாரமுடன்
ஏகசிங்காதனத்தில் இருநதார்காணம்மானை

விருத்தம்.

பஞ்சவர்பேரனென்னும் பரிச்சித்தைவிஷங்கள்தீண்டி
துஞ்சினதாகையாலே சுத்தசெனமேசன்றனை
மிஞ்சுசிங்காதனத்தில்வைத்து வேந்தனமைச்சர்தானும்
அஞ்சலென்றடிகள்போற்றி யவனியிலிருந்தாரன்றே.
இப்படியனேககால மிருந்தனர்செங்கோல்செய்து
சொற்படிதவறுவண்மை சோர்வறநடத்திச்செய்து
முற்படிமுபரம்போல முனைவனிவனுமென்ன
அப்படியிருந்துபாரி லவனியையாளுநாளில்.
ஆகமவேதஞான மருந்தமிழ்க்கவிதைநூல்கள்
பாகமாயிருந்துகேட்டுப் பத்தியாய்பெரியோர்தன்பால்
போகமேபொதித்தனிமை புகழுதுமற்றுமோங்க
ஏகசிங்காதனத்தி லிருந்துடனவாழுநாளில்.

கதை.

பார்த்தனுடன்வாளபிமன் பாலன்பரிசித்துவுடன்
ஏற்றதொருபாலன் இராசனசெனமேசனுந்தான்
தோற்றமுள்ளநீதி துலக்கமாம்ராச்சியத்தில்
சுத்துங்கடல்சூழ் காசினியெல்லாம்விளங்க
முத்துநவமணிபோல் முன்னெழுந்தாத்தினம்போல்
வந்தமகாராஜன மன்னன்செனமேசனவன்
விந்தைமலர்போல் விதர்க்கமாஞ்சிங்காரம்
தந்திவிருக்குந் தவளமணிமார்பன்
பொங்குபூரணமாய் பூலோகநாயகனாய்
நிலமுறைபாலொளிறு எவ்வளவுமீறாமல்
புண்ணியமுடையதருமனென பூலோகமாளுகையில்
அத்திபுரமுற்றும் அரசாளுநாளையிலே
சத்தியவாக்கியர் தவறுதலேவுமுனி
நாற்றிசையுங்கொண்டாடும் நன்னகரிதன்னில்வந்தார்
வாழ்த்திப்படிபணிந்து மகுடமுடிவேந்தரெல்லாம்
தோத்திரமுஞ்செய்து தொழுதுவணங்கியபின்

இருக்குந்தருவாயி லிராவரசுதான்விளங்கி
உருக்கமுடன்கண்டு ஒழுக்கமாய்தெண்டனிட்டு
போற்றிச்செனமேசெயன் பூரித்தகமகிழ்ந்து
ஏற்றிச்சிங்காதனத்தி லிருத்தியேகைதொழுது
கனிவகைகள்சர்க்கரைதேன் கற்கண்டுசீனிமுதல்
வாழைக்கனியுஞ்சகலகனியுள்ளதெல்லாம்
வாழைப்பழமும் வருக்கைப்பலாக்கனியும்
கொணடுவந்துவைத்து குருவேசரணமென்று
தொண்டுபண்ணிநின்று தொழுதுமிகவணங்கி
நல்லதொருவேதமுனி ராசனையுங்கொண்டாட
வல்லதொருமாங்கனிதேன் வாரியமுதுசெய்து
தாகமுந்தீர்த்து தபோதனரும்வீற்றிருந்தார்
நாகரீகமானதொரு ராசன்சனமேசனுந்தான்
தாகமுடன்வேதமுனி தன்னிடத்தில்வந்துநின்று

விருத்தம்.

பாரதமுடியுமன்னாட் பயின்றதோர்வேதமெல்லாம்
வீரியனுதிபாகி விநாயகன்கோடுகொண்டு
சீரதுசிறந்தகீர்த்திச் செகத்தினிலுதிக்கவேந்தன்
போரதுமுடியவென்று புகன்றதுதேவர்தாமே.
குருகுலத்தோர்களெல்லாம் குருவெனவந்துதோன்றி
கருவுருவதுக்குக்காட்டிக் காசினியாளுமென்று
அருகுதானிருத்திபந்த வறிவுடன்வெளிவுசொல்லி
பெருகுசீர்புவனந்தன்னாற் பெரும்பகைமுடிந்தாய்போற்றி.
பஞ்சவர்நூற்றுவற்கு பகையதுவருவதுண்டோ
அஞ்சலென்றமர்த்திநீதா னறிவினால்விவாஞ்சொன்னால்
மிஞ்சரும்பகைசெய்வாரோ வேதமாமுனியேயுந்தன்
வஞ்சமேவஞ்சமல்லால் மற்றொன்றால்முடியுமோதான்.

க ை த.

எத்திசைகள்கொண்டாடஎங்கள்குலத்தரசே
சக்தியவண்மை தவராதமாமுனியே
சீரானஐவருடன் சிறந்ததுரியோதிரனும்
பாருளும்நாளில் பகைகளொன்றும்வாராமல்
தாராளமாகத் தண்மையென்றுசேகரமாய்
பேராளர்பூகலத்தில் பேதமொன்றும்வாராமல்
மார்க்கப்படுத்திவைக்க வாறுனேதேவருக்கு
தீர்க்கமுன்னுளான திருநகரத்திலுள்ளபடி
இன்னபடியென்று ஈசர்முன்னேதானுரைத்தீர்
எழுதும்விநாயகனே என்றிறைவர்தான்கூற
தொழுதும்விநாயகனார் சொன்னதொன்றுதப்பாமல்
ஒருகொம்பொடித்து ஊணிவைத்தார்மேருவதில்
நிகரில்லாவேதம் நிலைகண்டுகொண்டானே

பகருமொழிகேளாதார் பாருலகிலுண்டாமோ
குருகுலத்துக்கெல்லாங் குலக்கொழுந்தேநீயிருந்து
அருகிருந்துபுத்திசொல்லி அரசனுமாய்நீரிருந்து
வினனம்வாராதபடி வேதியரேசொன்னீரானல்
மன்னவருமாளாமல் வையகத்தில்தானிருப்பார்
எந்தவிதமோகிருபை ஏதொன்றறியேனே
உந்தன்வினோத மொருவருக்குந்தோன்றாமல்
வஞ்சனைகள்செய்தீரே மாமுனிவேயிப்படிதான்
உன்செயலேயல்லாது உலகத்தில்வேறுமுண்டோ
மற்றுமுள்ளமன்னர் மகுடமுடிவர்த்தகரும்
சுற்றமொடுராசர் துரைமக்களுள்ளோரும்
எண்ணவொண்ணுச்சேனை எழக்குரோணியத்தனையும்
மண்ணாசையற்று மாண்டிறந்துபோனதெல்லாம்
உன்னாலேயல்லவோ ஒருவர்மேற்குற்றமில்லை
அன்னாளிலேயவர்க்கு ஆமென்றகாரியந்தான்
தெரியவகைசொல்லிச் செப்பினீராமாகில்
பிரியா இருந்து பேதமற்றுவாழாரோ
இறந்தாரேநூற்றுவர்கள் இருந்தாரேபஞ்சவர்கள்
சிறந்திருந்தபஞ்சவர்தான் சடத்தோடேயிப்போது
விந்தகிரிவைகுந்தம் விரும்பியவர்சேர்ந்தாரே
அந்தவகைஎனக்கு அறியவேசொல்லுமையா
சொல்லுமென்றுகேட்ட துரைமகனேசெனமேசெயா
சொல்லுகிறேன்கேளும் தோற்றமுடனுள்ளதெல்லாம்
முன்னுலகிலுள்ள முன்னாள்வி இப்படியே
மீண்டொருவராலே விலக்கவல்லாருண்டோதான்
ஆகையினாலே அவர்கள்செய்ததீவினையால்
மாய்கையாய்வந்து விளைந்ததுகாண்செய்தவினை
என்றுமுனிதானு மெடுத்துரைக்கசெய்தியெல்லாம்
நின்றுசெனமேசெயன் நினைவாகத்தான்கேட்டு
நினையாதெல்லாநினைந்து நெடுமூச்சிவிட்டேகி
இனையைப்பயனுக்கித் இரணபகைமோருக்கி
கைக்குகணதயில்லாமல் கால்வேறுதலைவேறாய்
மெய்க்குமெய்யில்லாமல் விசனங்கள்தான்மூட்டி
ஆட்டுவித்துபாவைதனை ஆட்டிவிட்டுப்பார்த்திருந்து
மூட்டிவினைசெய்த முனிவேயினிகேளும்
தருமமென்றுபேரெடுத்துத்தாரணியிலில்லாமல்
கருமமேசெய்தவரைக் காசினியில்தருமரென்றால்
என்னவென்றுசொல்லி எடுத்துரைப்பேன்மாமுனியே
தன்மையுமற்றுச் சனமுமினமுமற்று
இன்மைதனிலுன்வாழ எல்லோருமாண்டிறந்து
மவுனம்பிடித்து வதைசெய்தமாபாவி

இருந்தரசையாளாம லின்னெநின்றுபாருமல்
வருந்தாமல்வைகுந்தம் வாழ்வேனிப்போனதென்ன
சொல்லுமையாஎந்தனுக்குத் தோற்றமெல்லாநீயாகி
வெல்லும்விதியாகி விதிப்பயனுக்காளுகி
ஏற்றுமொருவிபரம் இறைம்பானேநானகாணேன்
தோற்றுதுக்கமெனக்குத் தோஷமெல்லாம்நீசரணமே
புரையுடையதர்மமென்றும் பொய்சொல்லாமெய்யரென்றும்
நிரையுடையராகல் நீருரைத்தபுத்திதன்னை
கேளாரோசற்றும் கிரிகையொன்றும்பாராரோ
வாழாரோபாரில் மைந்தரொடுசெல்வமதாய்
துணைசெய்தோர்மாண்டு தேசமனைகளிழந்தால்
நன்மைசெய்தோர்பாரரசன்றி நாளுமிருக்காமல்
ஏன்காணும்பாரிழந்து எதிரோர்வைகுந்தமதில்
தானதாண்புவியாள நாயமேயோஎந்தனுக்கு
பாரதப்போருண்டுபண்ணி பகைமுடித்துமுன்னாளில்
மேருதனிலரசாளமுறை வைத்தவரும்நீர்தானோ
வினைதகயமுடிக்க நீர்விளைத்ததல்லாது
மனந்தனையேபுண்ணாக்கி வருத்துமாக்காமேது
புத்திதனைச்சொல்லப் பொருந்தவுபாயமதா
சத்துருவாய்மாமுனிவே சம்பனைகள்செய்தீரே
தாருரும்வேந்தர் சமர்முடிந்ததெல்லாமுன்
பாராய்முனிவேகேள் பாவமெல்லாமுந்தனுக்கு
சாராமற்சாந்துகாண் தப்பாமற்சொன்னவொன்யார்
தீரதபாவமிது செய்தீரோமாமுனிவே
என்றுசொன்னபேச்சை இவ்வார்த்தைதானுரைக்க
கன்றுதாமெனக்கு நகைத்தமுனிவேதுசொல்வான்
தம்பியரேயிப்படிநீர் சமர்த்தாகப்பேசியதால்
தம்பிபிணிக்கேதை மிகமாகச்சொல்லுகிறேன்
வெம்பியெனையுரைத்தீர் விட்டகுறைபாராமல்
நம்பியுயிர்க்கனையும நயன்றனையும்பாராமல்
தலையிலெழுதிவைத்த சதுர்முகனைப்பாராமல்
குலைசெய்யுமருந்தினைக் கூர்ந்துநீர்செப்பாமல்
மாய்கைபலசெய்யு மாயனையுஞ்சொல்லாமல்
தாயகமாமுண்மைச் சலித்துமிகச்சொன்னீரே
உள்ளவிதிபெனவே ஒருமித்துச்சொல்லாமல்
காளிபெலிகொண்ட கதையையுற்றுப்பாராமல்
பத்துபாய்ந்தலைமேல் பருந்தகையைப்பார்த்தேற்றி
முத்தாந்தமைதலையாய் மொழிந்தீர்வகைகேளும்
சுத்திவிளைத்து சூழ்ச்சமதாயுஞ்சொல்லுகிறோம
கொற்றவனைக்குருவென்று கூறினார்மாமுனியும்
மன்னுதேகாதாங்குவர்க்கு வாய்த்தமாசருக்கும்
முன்னாளிற்புகழ்ந்த மொழிந்தியோமென்றுரைத்தாய்

நூற்றுவர்க்குபுத்தி சொன்னேனே சொல்லிலையோ
வற்றாமழுது மீட்டரப்பஞ்சவரை
காட்டிலிருந்து கடனுக்குவேளைவரில்
நாடகமாய்புவியில் தற்காதீவன்றனையும்
நீட்டெனைக்கொண்டு வெளியேற்றிவிட்டாலும்
நாட்டில்வாராதேயன்று நடுங்கமொழிந்திடுவார்
தீதுசெய்தான்பாவி திரியோதனனானலனும்
ஏதுமறியாம லிருப்பார்கள்பஞ்சவர்கள்
பொருத்தாரரசாண்டார் போய்கிறார்காடுறைந்தார்
பொருத்தார்கள்பஞ்சவர்கள் உரைத்தார்கள்நூற்றுவர்கள்
அகந்தையழித்ததுகாண் ஐவர்மேற்குற்றமில்லை
இகந்தனிலேசூதுபண்ணி செகந்தனிலேமாண்டார்கள்
இப்படியாய்வந்தவற்கு என்னைநிபஞ்சொன்னையே
சொற்படியேகேட்டிருந்தும் துற்புத்திவிட்டாரே
தப்பிசெனமேசர் தார்வேந்தேநீதானும்
வெம்பிமனமிடைந்து வெடுமென்றுசொன்னீரே
கேட்டீரோநாயம் கேடுகெட்டார்தன்விசனம்
போட்டாரேபுத்தி புலியாட்டேன்பேசுகிறீர்
இவ்வசனம்மாமுனிதான் எடுத்துரைக்குந்நாயமதை
அவ்வசனங்கேட்டு அரசன்செனமேசனுந்தான்
வாரீர்முனியேயுன் மந்திரமுந்தந்திரமும்
பாரீர்புவியோர்பல பஞ்சவர்க்குநூற்றுவர்க்கும்
வின்னமதுபாராமல் விற்பனமாயுட்புகுந்து
தன்மைகள்பாராட்டித் தாக்கியேசொன்னீரே
இத்தனைக்குவின்னங்க ளின்னதொன்றும்வாரதில்லை
கர்த்தனேதோற்றாமல் கண்காட்சிபார்த்துவிட்டீர்
சித்தமதிற்சாத்திரங்கள் திணமதுவல்லாமல்
இருந்தபசியுனக் கிலபதுன்பமிரண்டுமில்லை
அருந்தவசியாயிருந்து ஆர்த்ததயவில்லாமல்
அவர்களுக்குகாலபலன் அடவுமனுச்சொல்லாமல்
இவர்களுக்குகாலபலன் இதமுடனீர்சொல்லாமல்
வருந்தினாலேதும் வாரக்கருமமுண்டோ
வேந்தனிலைசொல்ல வேதமுனிசொல்லுகிறார்
பாதம்வளர்க்கவென்று அரசனேநீநினைத்தாய்
பாகமதுயாகம் பலிக்காதுகாணுமக்கு
ஏற்றபிரமத்தி இதமாய்ப்பிடிக்குதுகாண்
மாற்றவுனக்கு வகையுண்டோயாமகில்
என்னைச்சலித்து மெள்ளவேகுற்றமில்லை
பின்னையுனக்குத் தெரியும்பிரமையினால்
உள்ளபடிசொன்ன முற்பனயாயுந்தனுக்கு
வள்ளலறிய வழுத்துகின்றேரிவ்வசனம்

போனோரும்புவிமீதில் பொன்னுலகந்தான்சேர
வானோருமினிமேலு மன்னுவுன்றன்னிடத்தில
என்றுசொல்லிமாமுனியும் ஏகினாரம்மானை
அன்றுஜெனமேசெய்னுந்தான் அவரைநமஸ்கரித்து
அனுப்பிச்சிலகாலம் ஆண்டிருந்தான்பூலோகம்
தனுபிடித்தகையான் தாரார்செனமேசெயனுந்தான்
யாகம்வளர்க்கவென்று அவனியெல்லாந்தானறிய
சேகரமாயுள்ளதெல்லாஞ் செலுத்துந்தளவாட முதல்
வரவேணுமென்றார் மந்திரிமார்தன்னுடனே
துரைராசமன்னவனுஞ் சொல்லலுற்றாரம்மானை
திறமுடையமந்திரிமார் தேசத்திலுள்ளோரை
பரவசமதாகப் பார்வேந்தர்சொற்படிக்கு
அந்தப்படியாக அவனிதனிலேயிருந்து
வந்தகளவாட மற்றுமுள்ளநால்வரையும்
சீராகசேகரித்துத் தெய்வப்பிராமணரை
நேராகஆயிரம்பேர் நேர்பாகமுள்ளோரராய்
வாகாகதானழைத்து வளப்பதற்குயாகமதை
யாகமுடன்செய்ய ஆவினிடநெய்யாக
நூறுகுடம்நெய்யும் நொடிக்குள்ளேதானழைத்து
வீறுடனேயாகம் வேதியரேசெய்யுமென்றார்
சாலைபதமுடித்துச் சதுரமாய்ப்பந்தலிட்டு
ஆலயமாய்க்குத்தான் அத்தருணந்தானிருக்க
விசாலமாயுண்டுபண்ணி வைத்தாரொருநொடியில்
பலாவரசும்பிளந்து பலவரைசோடினையால
அரசுபலாமாவிலுப்பை ஆல்விறகுதெர்ப்பையுடன்
பரசுமுதலுள்ளதெல்லாம் பாய்குசம்வேணதெலலாம்
சேகரித்துவைத்துச் செனமேஜெயன்முழுகி
யாசத்தடிவிவந்து அந்தணரைத்தெண்டனிட்டு
வேதியர்க்கெல்லாமிசைய வேணுமென்ற அஸ்திரமும
கீரியுடன்தான்கொடுத்து நிர்வாகம்பண்ணுமென்று
அக்கினியையுண்டுபண்ணி ஆகூதிதான்கொடுத்து
மெய்க்கினியமந்திரங்கள் வேதியர்கள்தான்றுதிக்க
சூழவேதானிருந்து சொல்வார்கள்மந்திரங்கள்
வாளபிமன்பேரனையும் வாருமென்றுதானழைத்து
பாகைதனைபரப்பி பரிசித்துமைந்தனுக்கு
இலகுமணிரத்னசனை மேலிருக்கவேணுமென்றான்
பூசைசபம்பண்ணுமென்று புகழ்ந்தார்கள்வேதியர்கள்
நேசமுடனிருந்து நேமமாயுள்ளதெல்லாம்
வாசனையாய்செய்யுமென்று வகுத்துரைத்தாரம்மானை
ஆசனத்தின்மேலிருந்து ஆட்சனைதயுந்தானோக்கி
யாகத்தைநோக்கி அப்பாகத்தானிருந்தான
யாகத்தொட்டையது யாகங்கேதானிருந்தான்

அழகுமணியாகம் அக்கினியுக்கான்வளர்த்தி
புஷ்பிகமாய்நாளவளரும் பூவாணரெக்கியமும்
எக்கியத்துக்கேற்ற இதமானவெக்குடமும்
முக்கியமாய்ச்செய்து முடிந்துவளர்யாகமதில்

விருத்தம்.

முன்னாள்முனிவன்சொற்படிக்கு முடிக்கயாகமதுதனிலே
இன்னாள்பயக்கம்வருவதுவும் மெய்யமறையோன்போயிருந்து
சொன்னவேதம்பாகமதில் தூக்கமிக்கத்துயன்றகந்து
கண்ணாலமயங்கிவிழாமல் கண்ணைசெய்வான்தானேவர்தன்
ஐயமறையோனக்கினியி லசந்துவிழவாவென்னவெண்ணிக்
கையாலதொப்பைதன்னைக்கொண்டு கழுத்திற்பிடரியதிற்கொடவே
மெய்பாப்புலிதானபாய்ந்துமேதன் றுவிசுவிப்பயந்துவேதியனும்
கெய்யில்லவிழுஞ்சுடர்தனிலே நேராய்விழுந்துமடிந்தானே.

கதை.

அருகிருந்தசாக்கிரங்களுட்டிக்கும்வேதியரில்
மருகிருந்துவேதம் வகுத்துரைக்குநேரமதில்
அசதிவந்துபாப்பானுந்துகண்ணைத்தான்மூடி
வசமாகவேதம் வழுத்தாமல்மெய்மறந்து
சித்திரைதானகொண்டு நிலத்தில்விழுவார்போல்
பித்திரமாய்த்தான்பார்ப்பான் மெய்மறந்துகொண்டலைந்து
உறங்கித்தலைகவிழ்ந்து உடலுமசைந்தாற்போல்
சிறங்களுமற்றசைந்து தேகம்விழுந்ததுபோல்
அந்தவுறக்கந்தில ஆணதொருசொற்பனமும்
வந்தவழிதன்னில் வலியகடுவாய்ப்புலியும்
எதிர்க்கவழிமறுத்து இவனைவதைசெய்ததுபோல்
அதுக்குவிழித்து அதட்டிபயமுறுத்தி
பிடிக்கிறதுபோல பிராமணனுந்தான்பார்த்து
நடுங்கியுடல்பதறி நஞ்சுண்டமீனதுபோல்
இறக்குந்திருமதனை யிளவரசுதான்தரித்து
வருத்தமுள்ளயாகம் வளர்க்கவென்றுவந்திருந்தோம்
அதற்குவிகாதம் அந்தணனுவிப்போது
ஏதுக்காயிருந்து இசைகேடுதான்முறிய
பார்த்திருக்கப்போகாது பாவம்வருமென்றுசொல்லி
ஏற்றிருக்குந்தர்ப்பையினால் யிவனைசண்டைபண்ணவென்று
நீட்டினதொர்ப்பையினால் நினைவுவருமென்றுசொல்லி
காட்டிற்புலிபாய்ந்ததென்று கலங்கியுடல்பதறி
மாட்டினான் தீயில மடிந்தான்பிராமணனும்
அட்டில்குதித்து அந்தணனுந்தீயில்விழ
கண்டுசெனமேசெயன் கலங்கிமுகம்வாடி
கண்டுவியாசர் பரிவாய்மொழிந்தபடி
வந்ததுகாண்பாவம் மதிநயவிதியிலக்க

நந்தனுபாதகபலன் களியன்பிடிக்கவென்று
வெந்துமனமிடைந்து பிரமைபற்றுதான்பிடித்து
இந்தவுலகாக யிருளதுபோற்றோற்ற
மாய்கைபிடித்திருக்க மனுநீதிமறந்து
பேயும்பிடித்ததுபோல் பிரமைகொண்டானம்மானை
மன்னன்செனமேசயன மாய்கைபிடித்திருக்க
தென்னவர்களெல்லாந் தீவினைபோமென்றுசொல்லி
ஆறுத்துயரம் அகலுந்து பரமவந்துறைதேபா
நீறுநிவெந்து நெஞ்சமெல்லாமபுண்ணாகி
என்னசெய்வோமென்று எங்கும்பரதவித்து
முன்செய்ததீவினைபோ முனிவிட்டசொப்படியோ
எந்தவிதமறியோமோ இன்னம்புருநாளைவந்து
வந்தவிதமோதான் மகாதேவர்கற்பனையோ
செய்யுமருந்துகள்தான் தேசத்திலுள்ளதெல்லாம்
வையமென்னபண்டிதர்கள் வைத்துமருந்தாலும்
சற்றுங்குணமில்லாமல் தரிசுற்றியாடுகையில்
சித்தங்கலங்கிப் பினத்துகிறானென்றுசொல்லி
கலிக்குமுறைத்து சனைனிவிட்டொன்றுமில்லை
பலிக்குமச்சியமிட்டுப் பார்த்தாலுமொன்றுமில்லை
தலையிற்கோடாரிவிட்டுக் தயிலந்தனைதேய்த்து
கலைபலிப்பிலைபித்தங் காலபலனைபாரும்
மருள்பிடித்ததென்று மந்திரங்கள்செய்வாரும்
இருள்பிடித்ததென்று யந்திரங்கள்கட்டுவாரும்
செய்பாவினைகளெல்லாஞ் செய்தலுக்குமொன்றுமில்லை
ஐயோசிவனேயென்று அபயமுறைக்கென்பாரும்
வெய்யோனுக்குள்ளே விளங்குமெய்தலாய்முடித்து
அதிதிபரதேசியர்க்கும் அன்னமிகக்கொடுத்து
நீதியுடன்தானதவம் நேமமுடன்கோயில்குளம்
சத்திரமடங்கள்கட்டி சாலையிலந்தணர்க்கு
சித்திரமாய்ப்பூசைபலன் தெய்வாரனுதினமும்
நால்வேதசாஸ்திரமும் நாளும்விளங்கிவர
பால்தயிர்கள்நெய்யும் பருப்புமரிசிமுதல்
வாகால்மறையோர்க்கு யாருமல்லித்திபமும்
பாகாயனுதினமும் படியளந்துவேதியர்க்கு
தானதவஞ்செய்து தவிப்பார்பரதவிப்பார்
ஞானசிவபூசை நடத்துவர்காரியர்கள்
தேசத்திலுள்ள செனமுஞ்செனமேசனுக்கு
வேகத்திருந்து மெய்சோர்ந்துகைசோர்ந்து
பாருலகந்தாங்கும் பரிசித்துமைந்தனுக்கு
காருலவுமேனியமே கண்ணாரேயிப்போது
தீதுவரக்காரியமேன் செய்ததவக்குறையோ
ஏதுசெய்வோமென்று யிருக்குந்தருவாயில்

பாராசமாமுனிவன் பயனறிந்தவேதியரும்
சாராசவேத சகலகலைவல்லவனாய்
வேதவியாசமுனி மேதினியிலேநடந்து
வந்தரிஷிபாத மன்னரெல்லாந்தான்வணங்கி
இந்தவிகாரம் யிவர்க்குவந்தகருமவினை
தீர்த்தருளவேணுமையா செனமேசராசனுக்கு
கார்த்தருளவேணுமையா கடவுளேதஞ்சமென்று
சிறியேனறியாத செய்தகுறையைப்பொறுத்து
வெறிபோகப்பாருமையா வேதவியாசரே
என்றுமன்னர்கூற யிறைபோன்மனமகிழ்ந்து
ஒன்றுமறியாமல் உரைத்தீரேமன்னவரே
காமேதுசெய்வோம் நாமோவிதிவுனக்கு
கோபமதுசெய்தாலும் போமோபிரமையது
அல்லவேசொல்லுகிறேன் அந்தபடியினதான்
சொல்லவேகேட்டால் துயர்பிரமைதீர்த்துவிடும்
முன்னாளிற்பஞ்சவர்கள் மூண்டுஞ்சமர்பொருதி
மின்னாள்பாரதப்போர் வென்றுமுடிந்தகதை
சொல்லவிவன்கேட்டால் சுருதிபதுவேதாந்தம்
மல்லெலன்றபோர்வீமன் வாகாய்ச்சமர்தனிலே
மத்தகெசந்தன்னை வாரிப்பிடித்தெறிந்து
சத்தமுகில்கடந்து தாண்டிவருவான்வெளியில்
போய்ச்சூழ்ந்துசென்று பூரித்தான்பாரதத்தில்
வாய்புககழியில் வளைவெட்டமத்தகெஜம்
வாராமலங்கே மறுத்துதென்றுனந்திரத்தில்
சீராய்ச்செனமேசன் செவியுற்றுதான்கேட்டு
பொய்யென்றுசொன்னான் புத்திசற்றுமில்லாமல்
மெய்யெங்குந்தாவி வெண்பொரியாய்க்கண்டாச்சு
இதற்குவகையேது என்னவென்றுகேட்டளவில்
அதற்குவகையாதும் அறிந்தோமெடுத்துரைக்க
புத்தியென்றுகேட்கப் பொருந்துமதிபுடனே
பத்தியாய்பாரதத்தைப் படிபடியாயினொருக்கால்
கேட்டுரோமனதையாகில் கிலேசமெல்லாந்தீர்த்துவிடும்
நாட்டுரோமனதையதில் நடுவேநிதானமதாய்
என்றுரைககவேதியர் யின்பமாய்வந்திருந்து
அன்றுசெனமேசன் ஆடுமென்றுபாரதத்தை
முடியுமட்டுந்தான்கேட்டு முற்றிலுமேஆராய்ந்து
வேலையுந்தீரலையோ வேந்தனிவனறனக்கு
கொள்ளைபிரமை குறையாலேபோவதற்கு
ஐவரரசாண்டு அவனிவிட்டுத்தானேகி
வைகுந்தஞ்சேர்ந்த கதையாகதானகேட்டால்
தீரும்பிரமையது தென்னவரேயென்றுரைத்தார்
பாரும்புதுமையிது பலிக்குஞ்சலிப்பறவே

கரும்பட்டுத்தான்போர்த்தி கருத்துடனேதான்கேட்டால்
அரும்பட்டுவெண்பட்டாய் ஆகுமதுசவ்வாது
அப்போபிரமையது அகன்றுவிடுங்கண்டீரே
இப்போதுகேளும் இன்பமுற்றுத்தானிருந்து
என்றுமுனிசொல்லி ஏகினர்காணம்மானை
நன்றுதானென்று நமஸ்கரித்தாரெல்லோரும்
ஆமென்றுசம்மதித்து அரிவோமெனவேதான்
ஓமென்றுசொல்லி உற்றசனமேசனுமே
வைகுந்தஅம்மானை வாகுடனேதான்கேட்க
செய்கின்றசாத்திரங்கள் சிறப்பாகத்தான்முடித்து
அம்மானைபாடிவைத்து அந்தகதைகளையும்
செம்மானைத்தான்றரித்த சிவனருளையுண்டெனவே
கதைதுவக்கக்கேட்க கருத்திலுற்றமன்னவனும்
பதையாமல்கேட்கப் பலநினைவுயில்லாமல்
நெஞ்சுமசையாமல் நினைவுதவறாமல்
அஞ்சுபஞ்சபூதம் அடக்கிப்பொறிபுலனை
வேரறுத்துக்கர்மம் வெகுளிதனைவிட்டேகி
காரூபமான கசடுதனைவிட்டொழிந்து
ஏகமனதாய் இருதயத்தைசொப்பனிட்டு
ஆகமுடன்கேட்க அரசன்கொலுவிருந்தான்

விருத்தம்

வேதவியாசர்முந்நாளில் விளம்பும்வசனமுள்ளபடி
தேசமுழுதுஞ்சிறப்புளதுந் தெரிந்துபார்க்கச்சமரசமாய்
பூதமனந்தவுயிர்போலே புவனமிருந்துவகைமோசம்
நீதமிருந்துநெறியிருந்தும் நிலையாவண்ணமெளிதாச்சே.
விதித்தவிதியைப்பாராமல் வேதவியாசர்தனைநோக்கி
எதிர்த்துச்செய்திகேட்டபல னிப்போதமக்குப்பலித்ததென்று
மதித்துநினைவிற்சனமேசெயன் மனதுகலங்கித்தெளிந்தறிவால்
துதித்துப்புகழ்ந்துமுனிதனையுஞ் சொன்னான்மகிழ்ந்துசொன்னேன்.
சொல்லியதைக்கேட்கச் சுருக்கமாய்மனதைத்தேற்றி
பல்லியமாகக்கேட்டுப் பலதுயர்பிரமைபோக
அல்லிருள்நீங்கவென்று ஆனசெனமேசெயனுந்தான்
மெல்லியபட்டுப்போர்த்தி வீற்றிருந்தரசன்கேட்டான்.
கருநிறம்பட்டுப்போர்த்தி கதைதனையுற்றுக்கேட்டால்
மருநிறவாங்கிவெள்ளை மதித்தவெண்பட்டதாகும்
வருமொருபிரமைநீங்கிமனத்துயர்தீருமென்று
குருமுனியிறைந்தநேசங் குணமெனக்கண்டான்வேந்தன்.

கதை.

வாகுடையபஞ்சவர்கள் வைகுந்தஞ்சேர்ந்தகதை
பாகுடையசொல்லான் பரிச்சித்துமன்னன்மகன்

சீராய்ச்செனமேசெயன் சிந்தைமகிழ்ந்தன்பாய்
நேராகக்கேட்க நீலவண்ணர்காப்பாமே
ஓதுபுகழிக்கதையை உரைக்கவேதான்கேளீர்
மாதுசரஸ்வதியாள் வழுத்துகின்றசொற்படியால்
மேருவில்விநாயகனர் வரைந்தெழுதுவேதாந்தம்
பாரிலுள்ளோர்கேட்க படிக்கிறேனம்மானை
ஐவர்சகாயன் அரிகேசவன்முகுந்தன்
சைவாசகாயன் தாமோதரனிருக்கும்
அரியவைகுந்தம் அடைவோமெனவேதான்
உரியதொருஐவர் ஒருமித்துஒமெனவே
நடக்கிறார்தேசம்விட்டு நன்னகரிதானும்விட்டு
வடக்குமுகமாக வடமேற்கோபுரமதாய்
தருமருடன்தம்பியரும் தாரார்துரோபதையும்
கருமத்தைவிட்டகன்று கங்கைக்கரையில்வந்தார்
மங்கைதுரோபதியும் வாகானஐவருமாய்
சங்கையாய்த்தான்தொழுது சரஸ்வதியைத்தான்வணங்கி
தலையிற்புனல்தெளித்து தாயேசரணமென்று
அலையிற்றலைமுழுகி அனுட்டானந்தான்முடித்து
ஆதித்தனைபூசைபண்ணி ஐவருந்தான்முடித்து
சாதித்தார்வேற்றுருவஞ் சந்நியாசிவேடமுமாய்
சாந்தமாய்முழ்கிச்சடைமுடியுந்தானுகி
பாந்தமாய்தேடப் பருவமுடன்தான்முடித்து
பாராசைத்தானும்விட்டுப் பைங்கொடியாளாசையற்று
ஊராசைத்தானுமற்று உற்றமன்னராசையற்று
மாதாவினசைவிட்டு மந்திரிமாராசையற்று
மீதானகானகத்தில் விரைவாகச்சென்றார்காண்
அப்போதுமாயன் அவர்மனதைத்தேற்றுதற்கு
இப்போதுஎதிரே இவர்காணவேகலியன்
தன்னுடையமாதாவின் தலையிற்சுமையேற்றி
மன்னன்மனைவிதன்னை வார்புயத்தின்மேலேற்றி
வந்தவனைக்கண்டு மன்னுதன்மார்வாய்புதைத்து
இந்தவகைதம்பியரே ஏதோசகாதேவர்
கண்டோம்புதுமையையா கலியுகமானதினுல்
அண்டாப்பெருஞ்சுமையை அன்னைதலைமேலேற்றி
பெண்டீர்தனைத்தோளில் பெருமையென்றுவைத்துவந்தேன்
பண்டுமொழிதவரில் பழுதுவருமேநமக்கு
மாநகரைவிட்டுவந்து வகையாய்ப்பிழைத்தோமே
ஆனதம்பியாரேஅறிகேசவன்பதத்தை
நன்றாகவுச்சரித்துநம்பியேயென்பிறகே
குன்றுமனதுடனே கோபாலருண்டெனவே
தாமேவுந்தம்பியர்க்குத் தயிரியமாய்வார்த்தைசொல்லி
சீர்மேவுங்கானகத்தினிற்சென்றுபுக்காரம்மா

கல்லுமுருகிவிடுங் கடுவிஷமுந்தோன்றிவிடும்
பல்லும்புகைபாலைவனம் போய்புகுந்தாரைவருமே
மெல்லியர்கள்தன்மதமு மின்னனையாள்தன்பரமும்
பூவலியமெல்லியதாள் பொருந்தாமலேதுரைப்பார்

விருத்தம்,

தேகமிழந்துவாராமற் சடத்தைமிகவேதான்சுமந்து
தாகமிருந்துதவிப்பினையுஞ் சாராதுடலிற்றயவுசெய்து
பாகஞ்சிறந்தவுமைபாகாபாதத்தினைமிகத்தேடி
மேகஞ்சிறந்தமேனியனே விடைதானந்தகோபாலா. ௬௨
ஒன்றுமறியோம்பொருளறியோ முன்னையல்லாதுணர்வறியோம்
நன்றுமறவோர்தீதறியோம் நந்தாமுகுந்தாநரசிம்மா
அன்றுசகாயமிகுதிருந்து வடியார்தங்களிடர்தீர்த்தாய்
குன்றுமனங்கள்குன்றுமற் குடிசார்ந்தகோபாலா ௬௩
உருவாயுருவிலோகுருவே யுடலிற்புகுந்துதனதாகி
வெருவாய்குடறியுரையாமல் வேறேகமனம்நினையாமல்
கருவாய்மலர்பிடியாமற் காத்தாய்கர்த்தசிறையெதிர்முன்
வருவாயடியார்வைகுந்தம் வாவென்றருவாய்கோபாலா. ௬௪
மனதுபிரமைபொல்லாது மாய்கைக்குரங்குபொறிபுலனைத்
தனதுதானென்றெண்ணமற் றுனேதானாய்தனித்துமனம்
எனதுபயமில்லாமல் யெங்கள்தனையேயீடேற்றும்
உனதுபதியேகெதியாக வுதவுநந்தகோபாலா. ௬௫

கதை.

கலக்கமில்லாதெங்களையும் கண்ணுதலேகாத்தருளும்
மலக்கமதைவிலக்கி வழிகூட்டியெங்களையும்
நடத்தும்பெருமாளே நாங்களொன்றுந்தானறியோம்
சடந்துக்குள்ளாழ்ந்த தத்துவமேபோற்றியென்று
நடந்தார்வழிதனிலே நமோநாராயணாவெனவே
மடந்தையுடனைவருமாய் மால்பதந்தானெக்கி
சோலைநிழலில்லாத சுடுவனங்களானதொரு
பாலைவனங்கடந்து பஞ்சவர்களப்பாலும்
அருமுனிவர்தான்வாழும் அதிசயங்கள்தான்பார்த்து
இருளிட்டுவந்து இரவியும்போய்மறைந்தான்
கார்மேவும்வல்லிருளில் காவலர்களைவருமே
பாராமீதிலோங்கும் பாரைவழிநடந்து
கொள்ளிக்குவில்லாத கூரிருளில்தானலைந்து
தள்ளிவழிநடக்க சற்றுந்தெரியாமல்
மனமிடைந்துபுண்ணாகி மாயோனைத்தானினைந்து
கனலில்மெழுகதுபோல் கானகத்திலேயுற்று
தம்பிமார்தன்மனது இனியறியவேணுமென்று
பார்த்தனெடுசால்வரையும் பாஞ்சாலிதன்னையுந்தான்
ஏற்றதொருவார்த்தைதனை இனிகூறக்கேளுமினி

தம்பியரைநோக்கித் தருமருந்தானேதுசொல்வார்
வெம்பிக்கலிப்பால் வெருண்டுபயந்துவந்தோம்
எதிர்த்துப்போர்மாட்டாமல் இளைத்தோடிப்போயினர்காண்
துதித்துலகமெல்லாந் தூஷணிப்பார்கண்டீரே
இருந்துசெயங்கொண்டு எதிர்த்துத்துரத்தாமல்
இருண்டுமிகபயர்து ஆரணியம்போய்புகுந்தார்
என்றுலகஞ்சொல்லி ஏசாமலிப்போது
மன்றுலகில்வாள்விஜயன் மைந்தன்மகன்பேரனுக்கு
சென்றுதவியாக திரும்பியநாள வருந்தான்
சேர்ந்துகலந்து சென்றுதவியாயிருந்து
எந்துசெனமேசெயனுக்கு எதிர்த்தொருவர்வாதுசெய்யில்
கலியனும்வந்து கைகலந்துதானிருக்கில்
வலியச்சனும்வந்து வளைந்துபோர்செய்தாக்கால்
சிறுவன்வினையறியான் செருக்களத்தில்சென்றறியான்
உறுபூசல்செய்தறியான உற்றோரொருவரில்லை
தானேதனியாய்த் தயங்கிமலையாமல்
தேனேஎன்தம்பியரே சேர்ந்துகலந்துகொண்டு
உற்றபரிசித்துமகன் உகந்தசெனமேசெயனுக்கு
வெற்றிசெய்துநீங்கள் மிரட்டியவனைச்செயித்து
செங்கோல்தழைத்தோங்கச் செனமேசெயனதான்வாழ்க
அங்கேயிருந்து அவனிதனையாளுமென்று
சீராருந்தருமர்தெரிந்துரைத்தாநால்வருக்கும்
நேராவிருந்துசென மேசனுக்குநீங்களுந்தான்
துணையாயிருந்து சுகமாகவாழுமென்றார்
மன்னாநீஎங்களைத்தான் மாநகரிற்போயிரென்றால்
அனுமோராங்க ளபசாரஞ்செய்ததுண்டோ
கர்த்தனுடசித்தங் கலங்கினதுஎந்தவிதம்
பெற்றபிதாவறியோம் பின்னையொன்றுந்தானறியோம்
வந்தவனைக்கொல்ல மறுப்படாதெங்களையும்
வளர்த்தஅருமையிதோ வனந்தனில்வந்திருந்து
அழுத்தமுடனெங்களைநீ அகலப்போமென்றுசொன்னீர்
அய்யாகுருகுலமேஅண்ணரேயெனறழுதார்
மெய்யோதானீரும் விட்டுப்பிரிவீரோ
எங்களையும்விட்டு இருப்பீரோதான்தனியே
திங்கள்முகத்தோருஞ் செப்புகின்றதிவ்வாறே
சித்தத்திற்கேறுகத் தீவினைகள்செய்தோமோ
குற்றமதுசெய்தபிழைக் கொண்டுபொருத்தருள்வாய்
செங்கோல்செலுத்துமென்று தேவரிடவாக்கதினால்
எங்கள்முகம்பார்த்துரைக்களழுந்தோசித்தமது
கணப்பொழுதுமும்மைவிட்டுக் காலந்தவறிப்போமோ
க்ஷணப்பொழுதுங்காணாமல் தரிக்குமோவெங்களுயிர்
அண்ணரேயெங்களைத்தா னவனிதனிற்போமெனவே

எண்ணிமனந்துணிந்து இப்போதுரைத்தீரே
தம்பியருமீதுரைக்கத் தருமருந்தானேதுசொல்வார்
அன்புடையதம்பியரே ஆளுகின்றதேசம்விட்டு
என்பிறகேவந்தால் யிளவரசுக்காருமில்லை
தம்பிமுகம்வாடிச் சலித்துமனம்புண்ணாகி
வெம்பியிருப்பான் வேந்தல்செலமேசெயனுந்தான்
அரசுநிலைநிறுத்தி அவனிதனிலேயிருந்து
விரசுடையவத்திபுரம் மேதினியைதாளுண்டு
குருகுலத்துமன்னரிட கோத்திரத்திற்றன்கூடி
மருவியிருந்து வாழுமென்றுதானுரைத்தான்
அந்தமொழிகேட்டு ஆனதம்பிநால்வருந்தான்
இந்தமொழியுரைத்தீர் எங்கோவேயண்ணாவே
மண்ணாசைபெண்ணாசை மற்றுமுள்ளபொன்னாசை
எல்லாம்வெறுத்து யிப்போதுமுடனே
எல்லாரும்வைகுந்தஞ்சேரவென்றுநாம்நினைத்து
வந்தோம்புவியைவிட்டு வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாய்வரவே சஞ்சலங்கள்சொல்வதென்ன
ஆண்டவனேயிப்போது அடியேனுஞ்செய்தபிழை
நீண்டபுரையுடைய நெறிசேருமண்ணாவே
சரணஞ்சரணமென்று தாளிணையைப்பூண்டுகொண்டு
அடிகளமிகசுடவும் ஆவிதளர்ந்திடவும்
கட்டியமணர்சுடவும் காலசைந்துநின்றிடவும்
மாய்கையிருள்வழியே வழிதிகைத்துநின்றிடவும்
சாய்கைதட்டுவந்து தட்டழிந்துநின்றிடவும்
பதியிழந்துகானகத்தில் பரதேசியாய்வரவும்
அதிகபவுசிழந்து அரும்பதிகொண்டேவரவும்
நீங்கள்படும்பாடுகண்டு நெஞ்சம்பொறுக்காமல்
தாங்கமுடியாமல் தானுரைத்தேன்தம்பியரே
இன்பமுடநீங்கள் என்னருகில்வந்தவரா
துன்பமதுநினைந்து சொல்லுவனோநான்பாவி
காருந்திருமால் நமக்குதவியாயிருந்து
ஆளுங்குருசுவாமி அரியோன்பதஞ்சேரே
நினைந்துவந்து நேசம்நிலைதவறுதோர்மனதாய்
மனந்துணிந்துவந்தீர்களா வைகுந்தஞ்சேரவேநாம்
என்றுதர்மர்சொல்ல ஏற்றதுரௌபதையும்
நின்றுமனதுருகி நெஞ்சமும்புண்ணாகி
கால்களடிச்சுடவும் கண்கள்சிவந்திடவும்
மேய்களயர்ந்து வெகுமெய்கைகள்சோர்ந்து
அருமைதலைகுலைய இவருக்குப்பின்னேதான்
பெருமைசிறுமையதாய்ப் பெண்ணரசேயிப்போது
உரிமையுடன்வரவும் உத்தமரேயெங்களுக்கு

தருமரென்றும்பேரேது தயவுசற்றுமில்லாமல்
ஆனதினால்பெண்கொடியே அன்னையர்தானுன்மாமி
தான்வாழுமாளிகையில தனியேயிருப்பாய்கேள்
மானனையீர்நீர்போய் மாமியுடன்சோந்திருந்து
ஞானசிவபூசைகள்தா னடத்தியனுதினமும்
குந்தியம்மாள்தன்னிடத்தில் கோதையரேசேர்ந்திருந்து
அந்தமொழிகேட்டு அருந்ததியுமேதுசொல்வாள்
மெய்யரேஎந்தனையும் வித்தகரோயிப்போது
பொய்சொல்லாவேந்தர் போவென்றுசொன்னதென்ன
நான்பாவியானேனோ நாயகனேவென்றழைத்தாள்
தேன்பயிலுங்கோவே சித்தத்தில்கண்டதென்ன
வாகாதவென்னை வரவேண்டாமென்றுசொல்ல
ஆகாப்புலைச்சி யழிபுலைச்சியானேனோ
சற்பனைகளான சதிகேடுசெய்தேனோ
கற்பழிந்துவேறு கண்டாரைகொண்டேனோ
ஐவர்துணையென்று அன்றுமுதலின்றளவும்
மெய்வருந்தினாலும் விட்டுப்பிரியாமல்
சித்தம்வரநடந்து சேவடியைப்பூண்டிருந்தேன்
கர்த்தனுக்கென்னால் கசடுவருவதுண்டோ
இனிமேலடியார்க்கு ஈடேறபுத்தியென்ன
பணிபானபொய்யுடலை பாரமென்றுசொல்வேனோ
வையகத்தோர்சொல்லி வம்பாய்நகையாரோ
மெய்யகத்திற்சேர்ந்து மேலும்பிரியாமல்
காத்தருளவேணும் கண்ணரிடதன்னருளால்
ஏற்றசிறைதன்னை யீடேறமுத்திலுமே
சீர்பாதந்தன்னைத் தினமும் பணிந்தேத்தி
ஒருமனதாயிங்கிரென்று உத்தரம்பண்ணுமையா
தர்மர்மனமகிழ்ந்து தையலையுங்கொண்டாடி
கர்மமெல்லாம்விட்டுக் கரையேறினோமினிமேல்
முத்துந்தெளிந்து மோகவலைவிட்டேகி
வந்தோமினிமேல் மலைகள்தான்சற்றுமில்லை
சந்தோஷமாகுதென்று தர்மர்மனமகிழ்ந்து
அல்லிருளுந்தானீந்தி ஆதித்தன்வந்துதித்தான்
வல்லிருளும்போனபின்பு வாய்த்தருமனைவருந்தான்
எழுந்திருந்துசூரியனை யின்பமுடன்பஞ்சவர்கள்
விழுந்துநமஸ்கரித்து மெய்மலருந்தான்றாவி
தானமுடன்சுத்திபண்ணித் தர்பணமுந்தான்முடித்து
ஞானமதுசினமும் நாரணரேதஞ்சமென்று
வெய்யோனைதெண்டனிட்டு மிக்கானஐவருந்தான்
மையிருண்டகானகத்தில் வனத்தில்வழிகூடி
புலிகரடியாளிசிங்கம பொல்லாதயானைமுதல்
மலையுண்டுதான்தட்டி நடந்தார்வனங்நடந்தார்

பார்த்திபனுங்காடுவிட்டுப் பரிவாய்வெளியில்வந்து
ஆற்றோரபவந்து ஆத்துமத்தைசுத்திபண்ணி
சிறானகாட்டினுள்ளே தீர்த்தமதுதானாடி
நாரருமாமுனிவர் தன்னையடிபணிந்து
மாமுனியேநாங்கள் வைகுந்தஞ்சேர்வதற்கு
பூமேவுமேனியரே பொருந்திவிடைதாருமென்றார்
நேசமுடனிப்போது நிமலர்பதம்சேருமையா
ஆமென்றுமாமுனியும் அருளினார்நல்வசனம்
நல்லதென்றுபாதைவழி நடந்தார்கள்பஞ்சவர்கள்
வல்லதொருகானல் வழிந்தோடும்நீரதுபோல்
காடுதனிலோடுங் கானலைநீரென்றுசொல்லி
ஓடுவாரள்ளிபுண்ண ஒண்டொடியும்ஐவருமாய்
பாலைவனக்கொடுமை பார்பிளந்துநீராகி
சாலையெனுமூங்கில்வனம் தானெரிந்துநீராக
விண்ணளவுந்தீயெறிந்து மேகநீர்வாரிடுமாம்
கண்கள்விழிக்கரிதாய்க் கனலுமகோரமதாய்
கண்டுபயந்து கடவுளரேதஞ்சமென்று
விஷ்ணுவின்பாதம் மென்மேலுமுண்டெனவே
நடந்தார்மலையாமல் நாரணரேதஞ்சமென்று
தொடர்ந்துமதுரவனந் தோமெள்ளவந்துதரம்
இருந்துதவிப்பார் எழுந்தொருமெள்ளவந்தோம்
வருந்துமைவர்கானகமும் வனமுங்கடந்தேகி
மதகரிதன்னைக்காத்த மாதவாவெங்கடேசா
இதுநல்லசமயமையா எங்களைநீர்காப்பதற்கு
பச்சைமாலென்றுசொல்லப் பாவங்கள்தீர்ந்துவிடும்
அச்சுதானந்தகோபாலா ஆயனேயென்றுசொன்னால்
விக்கினங்களின்றி விலகுமேயென்றுசொல்லி
அக்கினியுமன்னேரம் மறிவுடனேதான்விலகி
மற்றுமந்தஅக்கினிதான் வழிவிலகியப்பாலே
உத்தமருமகனுக் கொதுங்கின்றமாமியைப்போல்
விலகிவழிவிடவும் விரைந்துஐவர்தானடந்தார்
இலகுபுகழக்கினியும் விட்டகனறாரம்மானை
அவ்வனத்தைவிட்டு அநேகம்நெடுந்தூரம்
எவ்வனமுமாகி இக்கோலமாய்நடந்தார்
பாவமகலாது பார்த்தவருக்கடங்காது
செவ்வேதான்நாம்நடந்தால் திருமாலுதவிசெய்வார்
வரும்நமக்குஞானம் வழியேபுதுமையென்ன
தர்மருந்தானினைந்து தம்பியரைத்தானோக்கி
தாரார்புகழ்வீமர் தம்பியருச்சுனரே
நிருகாளொருசொல் செப்புகிறேன்கேளுமென்றார்
தம்பியரென்றெண்ணாது தமையனுமென்றெண்ணாது
நம்பியதோரன்னசுற்றம் நால்வரையுமெண்ணாது

கலங்கிமனமிடைந்து காவலர்களந்நேரம்
மயங்கியேதருமர் மாயோனைத்தானினைந்து

விருத்தம்.

ஆயனேநந்தகோபா ஆச்சுதாபச்சைமாலே
மாயனேசமையமிப்போ வந்துநீர்காக்கவேணும்
தூயனேநெருப்புவெள்ளஞ் சுழியெழுந்தோடக்கண்டோம்
நேயனேஆறுதாண்ட நெடியவாதுணைசெய்வாயே. ௬௬
நெருப்பாறுடையவனுவேகம் நீயேயறிவாய்நானறியேன்
கருப்பாறெணவேகனலதனைக் கையாலணைந்துதகையார்கள்
திருப்பாய்க்கனலைபுனலாக்கிச் செவ்வேவழியுந்திறந்துநல்ல
தருப்போலுதவுங்கோபாலா சரணஞ்சரணஞ்சரணுமக்கே ௬௭
அனலாய்வெந்துவருந்தியை அடியேன்கண்டுபயந்துநொந்து
கனலைகண்ணிலிருந்தொழுக கடுகமனங்கள்வெந்திடைந்து
தணலைபுனலக்காண்டருளிச் சமையம்வருவாய்கண்ணுதலே
எனவாயிரங்கிபடிபார்முன் னேகிவரந்தாகோபாலா ௬௮

கதை.

மாயன்றனைநினைந்து மனதிற்றியானமதாய்
நேயமுடனவர் நின்றதொருவவ்வசனம்
அரிகரிராமாராமா ஆபத்துக்காக்கும்ராமா
விரிகடல்துயன்றமாயா வித்தகாராமாராமா
வடமலைநந்தகோபா வந்துநீர்காக்கவேணும்
கடலைதனையடைத்தாம் யார்காவலுனகாவலையா
ஓடிப்பதினேழு யோசனையுந்தான்கடந்து
நாடித்திசைநோக்கி நடந்துவழிகூடி
பற்றிப்பரந்தெங்கும் பரித்துநிழலாடும்
வெள்ளையுள்ளவெள்ளை வெளியாகவேதோன்றும்
ஆடுத்தோர்கைகாட்டுகிற அன்றுற்றசெய்தியது
தெடுத்துவெகுதூரஞ் சுத்தவெளியானதொரு
பளிங்குக்கல்லபாறையின்மேல் பாங்குடனேமேலேறி
பொழிந்துபனிமழைபோல் பூமியின்மேல்தான்சொரிய
கண்டுபுதுமைதன்னைக் கன்னிடையதம்பியரும்
ஒண்டொடிக்குங்காட்டி உயர்கானகம்நடந்தார்
மேனிமிகக்குழைய மெல்லடிகள்கொப்பளிக்க
சோனைமழைபொழியக் கொலைகானகம்புகுந்தார்
வெகுதூரந்தான்கடந்து விசாரமிகதீர்ந்து
ரகுராமாவென்று ஏகினார்கானம்மானை
அங்கேவெகுதூரம் ஆறுமருவிகளும்
தங்காமலேநடந்து தாண்டிக்கரையேறி
ஓடும்நதிகடந்து உப்பாறுதான்கடந்து
காடும்புனல்கடந்து தகையாகநின்றளவில்
நெடுங்கானகந்தனனில் நெருப்பாறுதான்வரவே
கடுங்கானில்வாரதொரு கடுங்கொடுமைகண்டவர்

பெற்றபிள்ளையானாலும் பிரியமதையெண்ணாது
சுத்தமென்றேசற்றே துணையிதுவென்றெண்ணாதே
மன்னர்மகுடமுடி வந்தனரென்றெண்ணாது
தென்னர்குருவாசாரி தேவரையுமெண்ணாது
தானவனுமென்ற தவசியையுமெண்ணாது
ஞானசிவயோகியொரு நாதரையுமெண்ணாது
வாதுசமர்பொருத வந்துவிடுமிந்தமதம்
தீதுவருமல்லாது தெளிவுவரமாட்டாது
மூர்க்கமேவுண்டாகும் முனையவெகுவாதம்
தீர்க்கமுடனுண்மையிதுசெய்யுந்தொழிலுண்டாகும்
ஆசாரந்தோற்றாது அன்புசற்றும்வாராது
ராசாதிராசனென்னும் லாகிரியேயுண்டாகும்
வித்தைமதம்புத்திமதம் வேகமேயுண்டானால்
இத்தையெல்லாங்கொண்டு ஏகுவதுஞாயமல்ல
ஆயுதமாகாது அருந்தவசுவந்தவற்கு
வேயுதவிதம்பியரே வில்லுமெடுப்பார்களோ
வல்லதொருசிலையை வாரிதியில்போடுமென்றார்
அல்லலறநாமும் அவரேதுணையெனவே
போவதுவேஞாயம் புத்தியதுவேநமக்கு
தேவரீர்சொன்னமொழி சிறியோர்கள்கேளோமோ
அண்ணரேயெங்கள்சிலை ஆழ்கடலிலேயெறிந்து
எண்ணமறவாரோ எங்கோவேயென்றுசொல்லி
தருமருரைத்தமொழி தம்பியர்கள்தான்கேட்டு
பொருதுஞ்சிலைகொடுபோய் போட்டார்கடல்தனிலே
நடந்தார்வெகுதூரம் நல்லதம்பிதன்மருமாய்
கடந்தார்வெகுதூரங் காதமிருகாதவழி
அப்பால்வெகுதூர மானபிரமகிரி
மெய்ப்பாகவேகடந்து விரைவாகக்காதவழி
வந்துதவிப்பார் வானுதலுமைவருமாய்
சிந்துதரும்கண்ணரங்கர் தேவியுரைநாகமது
சருகாமல்வந்து சங்கரியைத்தான்றொழுது
இருகாமலங்கே ஏகினர்காணம்மானை
பூங்காவனம்புகுந்து போனார்களைவருமே
நீங்காதசெல்வம் நிறைந்தேகியேயிருந்து
அந்தவனந்தனிலே அநுகாவனமாகி
நொந்துவழிகாணமல் நொந்திடைந்துஐவருமாய்
மருகித்திகைத்து மாயோனைத்தஞ்சமென்று
முறையிடவேயந்திரத்தில் மொழிபிறந்தாரம்மானை
வேழமுகந்தானுடைய விக்கினங்களென்றுசொல்ல
காளமுகில்மேனியனார் கற்பித்தாரந்திரத்தில்
அவ்வசனங்கேட்டு ஆனதன்மருளமகிழ்ந்து

இவ்வசனஞ்சொல்லி இன்னமிவர்களெல்லாம்
விக்கினங்கள்தீர்க்கும்விநாயகனேதஞ்சமென்று
மைக்கினியமாங்கனிதேன் கடலைபயறுடனே
எள்பொரியுநல்ல இயல்பானசர்க்கரையும்
நெல்பொரியுமப்பளமுந் தெகிட்டாதுணவுசெய்வீர்
வைப்பேன்பலாச்சுளையும் வாழைப்பழந்திருத்தி
அப்பமுடனேதேங்காய் அவல்கொழுக்கட்டையுடன்
சீனியதிரசமுஞ் சிறந்தநல்லபச்சரிசி
நானியவன்தப்பாது நாதர்துணைசெய்வார்

விருத்தம்.

மூலப்பொருளேமுதற்பொருளேமுக்தேவித்தாய்மூலத்தெழுந்த
ஞாலப்பொருளேநடுநிலையாய் நடுவாயிருந்தநாயகமே
கோலத்துடனேயுள்ளிருந்து குருவாம்மூலக்கிழங்காகி
சாலத்திருநதியெனையாளுந் தம்பிசமயஞ்சமயமிதே ௨௬
வல்லபைதமக்குநேசம் வைத்துநின்நேசம்போல
நில்லாநெஞ்சில்நேசம் நினைவுடன்கலந்துபாரில்
மெல்லவேமயக்கிவிட்டப் பிரமையேமயக்கியப்பால்
செல்லவேகடத்துமையா திருவடிசரணந்தானே. ௨௭
ஐந்துகரமுமொருமருப்பு மண்டசெவியுஞ்சிறுகண்ணுந்
தொந்திவயிறும்புகர்முகமும் தூலத்துடனேயிருமதமுந்
தந்திவடிவுஞ்சிறுமணியுஞ் சுத்தமொலிப்பமத்தாரை
சிந்தியோர்களடியார்முன் றெரியவருவாய்கணபதியே. ௨௮
(கதை) என்றுதர்மர்தானினைந்து ஏற்றகணபதிக்கு
நன்றாகச்சொல்லி நாடுதிசைநோக்கி
நெஞ்சுதனில்வைத்து நேசத்தையுள்ளிறுத்தி
பஞ்சமலம்நீந்திப் பாசத்தையுள்ளிருத்தி
அடுக்காறும்பார்த்து அகண்டவெளிபார்த்து
நடுக்கமதுதவிர்த்து நமன்விதியைத்தள்ளிவைத்து
ரட்சித்துக்கும்பகத்தில் நினைவாகப்பூரகத்தில்
நாசித்துவாரம் நடுவணியைத்தானதிறந்து
ஆராய்ந்துதேடி ஐம்புலனையுள்ளடக்கி
சேராய்ந்துபூர்த்துத் திருக்கைமுருக்கெடுத்து
காலக்கனலெழுப்பிக் கணபதியைபார்பயனில்
மூலக்கிழங்காகி முத்திக்குவித்தாகி
மும்மண்டலமும் முடியடியுந்தானாகி
எம்மண்டலந்தனக்கு ஏகமுதலாகாசம்
அம்மண்டலந்தனக்கு ஆதியுமநாதியுமாய்
கம்மென்றநாதமணி கலகலெனத்தான்முழங்க
வந்தார்மரம்பிடுங்கி மலைகள்தகர்த்தெறிந்து
பந்தாடியேமலையைப் பாய்ந்துபிளந்தெறிந்து
கண்கள்சிவந்து கனலாய்ப்பொரிபறந்து
விண்களதிர்ந்திடவும் விநாயகனார்வந்துதித்தார்

விருத்தம்,

கடகடவிகடநடசரணங் கருமுடலரிதிருமுருகாசரணம்
வடவரையதிரிடவந்தாய்சரணம்மதகளிறெனவுருகொண்டாய்சரணம்
அடவியில்விடுதடமோர்சரணமடியேன்கவலையைத்தீர்ப்பாய்சரணம்
நடமிதுசிவந்தனுப்வந்தாய்சரணம்நாதாகணபதிசரணஞ்சரணம் ௭௨
இடைந்தேன்மனதுபுண்ணாகி யெங்கேயெவிடமென்றசைந்து
குடைந்தேனெனதுகுடர்கும்பிக் கொலையீரல்வழுவுனது
கடந்தேதொடர்ந்துமுன்சென்ற கர்த்தனேகணபதியே
அடைந்தேன்சரணம்வைகுந்த மடையும்படிக்குவழிகாட்டும் ௭௩

கதை,

தர்மர்துதித்துச் சரணமென்றுபோற்றிசெய்து
மும்மதவேளானை முகமுமனமகிழ்ந்து
என்பிள்ளாய்தம்பியடா இத்தூரம்நீங்கருந்தான்
தானபிறந்தமண்ணில் தலமும்நிலமும்விட்டு
கானகத்தில்வந்தமையால் கஸ்திநமக்குண்டாகி
மானகத்தேதான்தாமரிய மனதுமிகப்பதறி
தடுத்தோமநாமுங்களையும் தன்மமேயென்றுசொன்னார்
அடுத்துமிகத்தர்மர் ஐங்கரனைத்தெண்டனிட்டு
நடந்தவிபரிதமும் நாரணனார்கற்பனையும்
முடிந்தரகசியமும் முழுதுமெடுத்துரைத்து
தொடர்ந்துகலிவருமுன் தொல்லுலகைவிட்டெழுந்து
அடர்ந்துவனத்தூடே அடியார்வருகையிலே
வழிமடக்கித்தேவர் வாட்டப்படுத்துகையால்
தெளிவழிகாட்டவென்று தேவர்தமைநினைத்தோம்
என்றுதர்மர்சொல்ல ஏற்றவிநாயகரும்
நன்றுநான்தர்மரேநீர் நாரணனார்தம்மிடத்தில்
சென்றுவைகுந்தஞ் சேருதற்குநான்தாமும்
இன்றுவழிகாட்ட எழுந்தருளுமென்றுரைத்தார்
கானகத்தூடே கணபதியுந்தானடந்தார்
வானகத்துங்கெய்தி வைகுந்தஞ்சேர்வதற்கு
நல்லவழிகாட்டி நடந்தார்விநாயகனார்
வெல்லரியதர்மர் விநாயகனைத்தானெழுது
தம்பியருந்தர்மருமாய் தானடந்தாரம்மானை
நம்பிவெகுதூரம நடுக்காடுதான்கடந்து
காடுமலைசெடிகள் கல்லடர்ந்தபூமியுமாய்
இடுகிறதற்காடா மிக்கட்டாம்காதவழி
அதுத்துக்கடந்து அப்பாலும்போகையிலே
வதுத்துவெகுவுன்னிதமாய் மலைதெரியக்கண்டார்கள்
கண்டவுடன்தர்மர் கண்ணானதம்பியரோ
கொண்டல்செயிதுமளாய் நோதைதுமேரபதம்
அசந்தான்டர்நதியோவெனவேதான்
பசந்தான்மேனி பாதமிகசெந்தூருமி

தங்கியிருந்து தவிப்பாரிப்போமென்று
மங்கியிருள்வருமுன் மலைபடுப்போமென்றுசொல்லி
மலையைத்திசைநோக்கி வந்தனர்காணம்மானை
நிலையைத்தொடுத்து நெடுகெவளர்ந்தமலை
மேகம்படியும் விசாலமுள்ளதந்தமலை
மாகமுடனளவும் வளர்ந்தமலைதனிலே
காந்தருவனென்றொருவன் கண்டெதிரேவந்துநின்றான்
ஊர்ந்துவருமானிடரே உயிர்வெறுத்துவந்ததென்ன
மேகநாதனென்பேர் விடுவதில்லையுங்களையும்
சாகமுடன்பேறூர் சாற்றுமென்றான்காந்தருவன்
அப்போதுதர்மர் அவனைமுகநோக்கி
எப்போதுநாங்கள் ஏற்றகுருகுலத்தில்
சந்தனராசன் தன்னுடையவங்கிசத்தில்
வந்துதித்தோம்பஞ்சவராய் பார்வேடாநீர்கேளும்
எந்தன்பேர்தர்மர் எனக்கிளையநால்வரிவர்
வந்தோங்கலியதனால் வைகுந்தஞ்சேர்வதற்கு
இந்தவகையாக ஏகிவந்தோமென்றுரைத்தார்
அந்தமொழிகேட்டு அவனேதுசெப்பலுற்றான்
விந்தையுடனென்குலத்தில் வேந்தரையுங்கொன்றழக்கி
வந்தீர்களேதர்மர் வாய்த்தபழியதனை
தந்துவிட்டுப்போமெனவே தானுரைத்தான்காந்தருவன்
முன்னாளில்வானவர்க்காய் மூர்க்கமுள்ள அர்ச்சுனனை
மனம்பொருத்துவிட்டேன்வலியவந்தீரிப்போது
இன்னாளிலென்பழிக்கு எதிராகவந்துவிட்டீர்
மன்னவனையும் வலுவானநால்வரையும்
கொன்றுசினந்தீர்ப்பேன் கொற்றவரேயுங்களையும்
இன்றுபோர்வாருமென்று எதிர்த்தான்வனந்தனிலே
கலியைவிட்டுதப்பிக் காசினியைவிட்டகன்று
வலியவனந்தனிலே வைகுந்தந்தானோக்கி
போகையிலேநீமறுத்துப் போருக்குவாருமென்றாய்
ஆகையினாலுன்னுடனே அடர்ந்துபோர்செய்வதில்லை
என்றுதர்மர்சொல்ல ஏற்றதொருகந்தருவன்
நன்றுதான்தர்மரேநீர் நம்மோடெதிர்க்காவிட்டால்
ஆனாற்றிரும்பியுங்கள் அத்திபுரஞ்சேருமென்றார்
தேனாருந்தர்மர் சிறிதவனைதானோக்கி
ஏனேகெடுவாய் இவ்வசனந்தானுரைத்தாய்
ஈனேவுன்சொற்கேட்டு நடப்பதுபோலேயுரைத்தாய்
பேய்கொண்டகந்தருவா பேசாதிருபோடா
வாய்கொண்டதட்டாதே வழிவிலகிநீபோடா
மன்னாநீபோர்புரிய மாட்டாயேயாமாகில்
என்னோடெதிர்க்கவுந்தான் இளையோரையேவுமென்று
கடுகிபனுப்புமென்று காந்தருவன்தானுரைத்தான்

முடுகிப்பொருவனென்றமுடனவன்சொல்லுகையில்
தருமர்சினத்தெழுந்து தம்பியரைத்தானோக்கி
பொருமலுடன்மனது பொருமைமிகவாகி
வார்த்தைசொல்லுந்தம்பியர்கள் வணங்கிப்பதருமல்
கீர்த்திபல்லசுவாமி கேடுகெட்டானசொல்வதுதான்
என்றுசொல்லியிப்பால் இருக்கின்றநால்வரையும்
பன்றுமிகக்காந்தருவன் படைபொருதவாருமென்றார்
சாற்றும்புகழ்பார்த்தனையுஞ் சகாதேவன்வீமனையும்
ஏற்றப்பரிநகுலன் இவர்களையும்வாருமென்று
போருக்கழைத்தான் புத்திசற்றுமில்லாதான்
பாருக்குள்வானுன பதைக்கவுடல்வேர்த்து
இக்கணமேயுங்களையும் எமலோகமேற்றுதற்கு
தக்கமுடன்வாருமென்று தாலக்குதிபோட்டான்
இப்போதுநாங்களுமே யேற்பதில்லையானாலும்
தப்பாதசொலலுடையார் தன்வார்த்தைதள்ளாமல்
உன்மேலேயுத்தம ஒருநாளுஞ்செய்வதில்லை
தன்மமொழிதப்பத் தருமமோவெங்களுக்கு
என்றுரிளையோர்கள் என்சொல்வான்காந்தருவன்
நன்றாகக்கேட்டிலையோ நமன்சேதிவிண்ணுலகில்
முன்னாளிலிந்திரன்மேல் முடிகிசமர்பொருந்தீதன்
மனனுஅவன்பிறகே மாட்டாமற்போம்பொழுது
சொன்னான்காணவர் தோற்றமுடனிவ்வசனம்
அப்படியேநீங்கள் அண்ணவர்சொல்லைமீறுமல்
சொற்படியேவந்தீர் துவண்டுபறம்வாருமென்றான்
வேண்டாமடாகாந்தருவா வைகுந்தம்போறவரை
வண்டாதடைபண்ணி ஈடழிந்துபோகாதே
சொல்லக்கேளப்பா துடுக்கதனைவிட்டுவிட்டு
அல்லாக்காநீங்கள் அடர்ந்துபோராடாமல்
போவதறிவமென்று புத்திகெட்டகாந்தருவன்
தாவித்துரோபதையைத் தானெடுத்துத்தோளில்வைத்து
கொண்டுசெல்லமங்கையுந்தான் கோவிந்தாவென்றழுதாள்
கண்டுமிகவீமன் கண்கள்பொறிபறக்க
ஆகாசம்பூமி அதிரவேசத்தபண்ணி
போகாதேயென்று புறப்பட்டான்போர்வீமன்
காந்தருவன்தன்னைக் கட்டிமிகப்பிடித்து
சேர்ந்துபொருநி சினந்துரெண்டுமோர்பரித்து
காற்றுமழையுங் கலந்துபொழிவதுபோல்
ஏற்றமலைரெண்டு மெதிர்த்துபொருதாப்போல்
சிங்கமுடனாளி சினந்துபொருதாப்போல்
பொங்குகடலேழும் புயதூக்தலைவதுபோல்
வாலியுடன்சுக்ரீவன் வந்துபொருதாப்போல்
சோலையேமுன்னாளில் கோடபாலசிங்கமுமாய்

இரணியனைக்கொன்றதுபோல் யெற்றவனுவீமன்
தரணிதனிலவனைச் சங்கரிக்கவேநினைந்தான்
தன்மருந்தானதிந்து தம்பிடமேலாணையிட்டு
மின்மயிரும்பிடா விட்டுவிடுதம்பியென்றார்
அண்ணர்மொழிகேட்டு அவன்மயிரைத்தானும்விட்டு
மண்ணதிரவிண்ணதிர வாரியெடுத்திருந்து
குத்தினான்வீமன் கூவென்றான்சாந்தருவன்
புத்திவந்துசாந்தருவன போர்வீமனைத்தொழுது
தெண்டனிட்டெடஇற்றான் திரும்பியேபாராமல்
சண்டையிட்டசாந்தருன் தப்பிப்பிழைத்தானெனவே
மிக்காள்துரோபதைதான் வேந்தரைவர்தன்னுடனே
பாடுபட்டதெல்லாம் பாவியென்தன்னாலே
கேடுகெட்டன்யானுங் கிலேசமெல்லாம்விட்டுவிட்டேன்
என்றுசொல்லத்தருமர் ஏந்திழைக்குபுத்திசொல்லி
நன்றுதானென்று நடந்தாரவிடம்விட்டு
மலைகள்பருவதங்கள் வனமும்பலதான்கடந்து
குலைசெய்யுமாளிசிங்கம் கொடியபுலிகுஞ்சரமும்
வனமிருகம்வாழும் மலையும்வனாந்திரமும்
பலமிருகந்தானும் பஞ்சவர்களென்றறிந்து
விலகுமிருகமதை விந்தையென்றுபார்த்திருந்து
கலகமிடுமிருகங் கண்டோடுதுங்கிப்போகுமென்று
தங்களிலேதான்பேசிச் சந்தோஷமாய்நடந்தார்
பொங்குநதிபார்கடந்து பூபாலர்பொய்கையிலே
செங்கழுநீர்தாரை சேர்ந்தநீராபதுடன்
திங்கள்முகங்காணுத சிறந்தவனச்சோலைகளும்
வைகைநதியாயும் வாவிதடாகங்களும்
பொய்கையதுகண்டு புனலருந்தியங்கிருந்து
செய்யும்புகழாசாரி செய்யுந்தவங்கண்டு
வெய்யபுகழ்தர்மர் விசேஷமிதுவென்றறிந்து
கண்டுபணிந்தைவர் களிகூர்ந்துதெண்டனிட்டு
தொண்டுபண்ணிநின்றார்கள் துரைராசர்மாமுனியை
பார்த்தவர்கள்முனியைப் பணிந்தேதுகேட்கலுற்றார்
போர்த்தும்புவித்தோடுநீர் பொய்கைதானேதெனவே
ஆடுகின்றதீர்த்தமது இவேதோயென்றுசொன்னார்
அப்போதுமாமுனியை ஐவருமேதானோக்கி
செப்பாமுலைமடவார் தீர்த்தமிகவாடுதற்கு
எப்பவருவாரெனக்கேட்டாரம்மானை
தப்பாதமாமுனியும் தர்மர்க்குயேதுசொல்வார்
ஓதுகின்றநீள்பரிதி உதயமெனுமவேளையிலே
காதலாள்ங்கவரைக் காணலாமென்றுசொன்னார்
வாலவாயபமதில்வர்தாமடந்தையர்கள்

மேலானபொய்கைதனில் மெல்லிநல்லான்தான்மூழ்கி
கோதையர்கள்யாவரும் குழலாத்தித்தான்முடித்து
வந்தவரைக்கண்டு மங்கையர்களெல்லோரும்
இந்தவனத்தில் இவராரெனவேதான்
துங்கமுடிமன்னவரே துடியிடையாள்தன்னுடனே
எங்குவந்தீர்நீங்கள் எவ்வூரிடமென்றார்
பாரார்புகழுகின்ற பாண்டுமன்னன்தன்புதல்வர்
காராருந்தர்மரென்பேர் தம்பியர்கள்நால்வருந்தான்
அருமையுடனிப்போது ஐவரையுங்கண்டோமே
தருமருடதம்பியரும் சாந்தத்ரோபதையும்
வாய்ந்தகலியுகமு மண்ணுலகில்வந்ததனால்
ஆய்ந்தபுகழ்வைகுந்தம் அடையவென்றுசம்மதித்து
எங்களுக்குநற்காலம் இப்போதுநீங்களுந்தான
உங்களுக்குநாங்கள் உகந்தடிமைதானும்
புரந்தரன்தம்மிடத்தில் போவோமெனவுரைத்தீர்
வரந்தருவாரங்கே மகுடமுடிசூட்டிவைப்பார்
நாளைமுடிசூடி நாகலோகமானதெல்லாம்
ஆளும்படிக்கு அரசாளவைத்திடுவார்
நன்றாகவுங்களுக்கு நாங்களெல்லாமிப்போது
மன்னர்சபையறிய மணியாட்டியாயிடுவோம் .
சேருவோம்தானவர்முன் செல்லியுடனொருமாய்
வாருமையாவென்று மடந்தையர்கள்தானழைக்க
பாசமுள்ளபெண்களைநாம் பார்மீதிலாசைவிட்டு
நேசமுடனாங்கள் நெடுமால்தனைநோக்கி
போகையிலேநீங்கள்சொல்லப் புத்தியல்லமங்கையரே
தாபமுடன்சொல்லத் தகுமோதானுங்களுக்கு
என்றுதர்மர்சொல்ல ஏந்திழையார்தான்கேட்டு
ஒன்றுமில்லைநாமிவர்க்கு உள்ளாசைபட்டதெல்லாம்
ஒத்தாசையில்லாமல் தானுரைத்தானபஞ்சவர்கள்
சித்தாசைகொண்டபெண்கள் திரும்புமென்றுதான்போனார்
மன்னவரைவிட்டு மடந்தையர்கள்போனபின்பு
தென்னவர்களைவருமாய்ச் சேர்ந்தத்ரோபதையும்
மாமுனியைத்தான்வணங்கி வாழ்த்திவிடைதாருமென்று
பூமுனிவன்வாக்கருளிப் போமென்றுசொல்லுகையில்
தர்மரேநீங்கள் தாவும்வழிதனிலே
தென்மலைபோல்பாம்பு சீராவுந்தான்விழுங்கும்
எப்படிதான்போவீர் என்றுரைத்தார்மாமுனியும்
மெய்யுடையோர்தர்மர் விரைந்தேதுசெப்பலுற்றார்
விதிவசத்தையாராலும் விலக்கவல்லோருண்டோதான்
சதிரானமாமுனியைத் தானனுப்பியேநடந்தார்
மின்கொடியுந்தர்மருமாய் வீமனுடன்தம்பியரும்
மன்மிகுந்தபாலையில் வந்தனர்காணம்மானை

அந்தமலைச்சாரல் அருகேயொருபுறமாய்
சந்துசிருதாரைவழி தானடந்துப்போகையிலே
சித்தடமும்பாதையுமாய் சிறியமலைபோலே
புத்தரவமானதுதான் போர்வரைகள்போலேதான்
ஓங்கிவளர்ந்து உயர்வரையாமென்றுசொல்லி
தாங்கிநடவாமல் தாராளமாய்நடந்தார்
வந்தவர்களைவரையும் வனிதைதுரௌபதையும்
சந்தோஷமாய்நாகந் தானேவிழுங்கியதாம்
அப்போதுவீமன் அரையில்சிறுவாளதுவும
தப்பாமல்நாகமதைத் தான்பிளந்துசூரியதால்
மெய்யானதர்மருந்தான் விதிவசமே யீதெனவே
இப்பால்வெளியில்வந்து எச்சில்பட்டோமென்றுசொல்லி
மகாதீர்த்தமாடி வருங்கரையில்நீர்தனிலே
கோதிவிழுங்குகின்ற கொடியரவம்பார்ப்பானும்
வந்துபணிந்தான் மன்னவரைவரையும்
இந்தமகிமையிது ஏதென்றுதர்மருந்தான்
கேட்குமப்போது கிருபையுடன்பார்ப்பானும்
தாக்குமுதல்முன்னுள் சபித்தார்கள்மாமுனிவன்
சீக்கிரமேபோனேன் சிறந்திருக்குஞ்சோலையிலே
பூங்காவனந்தேடிப் போனவடபதியில்
மாங்குயில்போலரம்பையர்கள் வந்துமயக்கிவிட்டார்
பூசைசிவன்தனக்குப் புஷ்பம்வரவில்லையென்று
ராசரிஷிகோபமதாய் நாட்டமுடனெந்தனையும்
பாம்பாகவேசபித்தார் பாரமுனிகோபமதாய்
அப்போதுசாபம் அகலுவதெக்காலமென்றேன்
தப்பாதசொல்லுடைய தாமருடனைவருமாய்
வைகுந்தஞ்சேரவென்று வருவார்வழிதனிலே
தைவவனுவீமன் தாழமடிவாளரத்தால்
அப்போதுசாபம் அகலுமென்றார்மாமுனியும்
இப்போதுநானும் யீடேறயிங்குவந்தீர்
தர்மருடனைவரையும் தான்கண்டபோதெனக்கு
சென்மவிமோசனமாய்த் தேவர்சபைநான்சேர
போறேனென்றுபார்ப்பான் போயினர்காணம்மானை
நீரேதரித்தருளும் நிமலர்தனைநினைந்து
மார்க்கமுடநடந்த மலைகடந்தஅப்பாலும்
தீர்க்கமுடநடந்த திருமால்தனைநினைந்து
வாரவழிதனிலே மலைகளோராயிரமும்
ஏறியிரங்கியப்பால் எண்காதமேநடந்தார்
நடந்துவரும்வழியில் நல்லதொருஅஸ்தகிரி
அடர்ந்துமோராகாயம் அந்தமட்டுந்தான்வளர்ந்து
நீண்டமலைகண்டு நினைவயர்ந்துதருமருமே
ஆண்டவனேயிந்த அதிசயந்தானேதெனவே

தெண்டாயுதமெடுத்து திறவீமனப்போது
அண்டமதிர அடித்தான்மலைநகர
சாந்தாமலைவேகியனைத் தானின்றான்பார்ப்பானும்
பகர்ந்ததன்மரேதெனவே பார்ப்பான்தனைநோக்கி
இந்தவிசனம் ஏதென்றுதான்கேட்க
சிந்தைமகிழ்ந்து செப்பலுற்றான்வேதியனும்
முன்னாளரசருடன் மூர்க்கமுடன்நான்பொறுத்தேன்
என்றோடைவர்கள் எதிர்த்துபோர்மாட்டாமல்
உதைப்பட்டசுரா வுயிர்குலைந்துபோகையிலே
வதைப்பட்டுமாளுகிறோம் வைகுந்தம்தாருமென்றார்
வகைதெறியாமல் வைகுந்தந்தந்தேனென்றான்
பகைவருவதறியாமல் பாவிநான்சொன்னதினால்
சொல்லிவிட்டேன்வாய்வீணா சொன்னதைமாலறிந்து
கல்லாயெனைச்சபித்தார் கண்ணாறுந்தானப்போது
பண்டுவுருமாறிப் பாரமலைதானாகி
விண்டுயரந்தான்வளர்ந்து மேதினியிற்றனியென்றான்
ஆயரேஅச்சுதரே அடியேன்விமோசனந்தான்
நேயமுடனைவர் நினைத்துநம்மைத்தானோக்கி
மாயவரேதஞ்சமென்று வைகுந்தஞ்சேர்வதற்கு
வருவாரிதுவழியாய் மானனையாள்தன்னுடனே
தர்மருடதம்பியின் தார்வீமன்கண்டாலே
உறுமாரவுன்னை வுடையவனேதானடிப்பான்
பருவரையுந்தூளாய்ப் பழையவுருவாகி
வருவாய்போவென்று மாயவனார்சாபமிட்டார்
ஆனதினாலென்சாபம் ஐவரேதீர்த்துவிட்டீர்
நானதினாற்பிழைத்தேன நல்லவரேயுங்கள்தர்மம்
நான்போரேநீங்கள் நாரணனார்தம்மிடத்தில்
தான்போங்களென்று சதுர்மறையோன்தானடந்தார்
ஆமென்றுஐவர் அனேகநெடுந்தூரம்
தாமோதரனே சரணம்சரணமென்று
தருமரும்தம்பியரும் தாரார்துரௌபதையும்
இம்மைதனிலெல்லாம் இங்குகழித்தோமென்று
ஆதித்தனூடாடாத இருங்கானகம்புகுந்து
பேதிததுவன்மிருகம் பெரும்பூதனாதகணம்
ஊறும்பலசாதி வுயிர்பறவையாளிசிங்கம்
சாறும்பலவிருட்சந் தளதளென்னச்சோலைகளும்
மன்னுயிர் தன்னுயிர்போல் வாழுகின்றதர்மரென்று
மன்னுயிரெல்லாம் வணங்கும் பஞ்சவர்களைவரையும்
எண்பத்துநான்குயிரும் இவர்களுடனேபேசும்
பண்பெற்றுபஞ்சவர்கள் பலசலிப்புமில்லாமல்
நாற்றிசையுங்கானகமும் நல்லசுயஜெனமும்

வேற்றுமைகளின்றி விலாசமாமவ்வனத்தில்
வாழூர்களைவருடன் வனிதைதுரௌபதையும்
போகக்கண்டேதிரே பெண்கொடியாளென்றொருத்தி
அஸ்வமுகமாக ஐவர்முன்னேவந்துநின்றாள்
விஸ்வசொரூபமுடன் மேவலரேமெவனென்று
தருமருடன்தம்பி தார்வீமனுக்கிளையான்
வரும்விசையன்தோளை வந்துதழுவுகின்றாள்
புரவிமுகமானதும் பெண்போலேமுகமாகி
இரவிமதிபோலே ஏந்திழையும்நின்றளவில்
தாடலருந்தர்மர் தானேயதிசயமாய்
ஈதலருங்கன்னி இவ்வசனம்கூறுமென்றார்
காளிமுனிதேவிகாளி யென்பேர்முன்னுளில்
வானிலொருமுனிவன் வந்தென்னைச்சேருகையில்
அறிந்தெதிர் தன்பத்தாவும் அஸ்வமுகமாகையென்றார்
பிரிந்தேன்முனியைவிட்டுப் பேச்சொன்றுமில்லாமல்
ஐயாயிச்சாபம் அகலுகிறதேபோவென்றேன்
மெய்யாகநீயும் விசையனுடதன்தோளில்
சென்றுதழுவத் தீருமஸ்வமுகம்
என்றுமுனிசொற்படிக்கு இப்போதுதீர்ந்ததென்றாள்
பூவுலகில்வாழும் போர்வேந்தரைவருமாய்
தேவுலகில்வைகுந்தஞ் சேறுவீரெனமொழிந்து
போனாள்தன்சாபம் போச்சுதென்றுதான்மகிழ்ந்து
மானாளும்போனபின்பு மன்னவர்களைவருந்தான்
மானூர்வனம்நோக்கி கடுகிடக்கலுற்றார்
சேனாதிபதிவேந்தர் திருவுளமேயுண்டெனவே
நடந்தார்வெகுதூரம் நாலாறுகாதவழி
கடந்தப்பால்வந்துநின்று கண்டார்விமலமலை
அந்தமலைகடந்து அனேகநெடுந்தூரம்
சந்தணச்சோலைகளும் தடாகமதுதான்கடந்து
ஆலிலைமேற்றுயின்ற அச்சுதனைத்தானினைந்து
காலியாறென்று மாந்தியும்வந்துகண்டார்
ஆறுதனைக்கடந்து ஐவர்தானக்கரையில்
ஏறவென்றுதானும் இயல்தர்மர்தானுரைக்க
வீரிட்டுவீமன் விசையனையுந்தர்மரையும்
பூரித்திரண்டு புயத்தில்வைத்துமிக
ஒருகையிற்சகாதேவன் ஒருகையில்நகுலனையும்
மருவுமலர்முதுகில் மங்கையரைத்தானேற்றி
பிறவிப்பெருங்கடலைப் பெரியோர்கள்நீந்துதல்போல்
இரவியக்கரிய இரல்முனிவர்போலாகி
ஆறுதனைநீங்கி அந்தவைகுந்தபதில்
ஏறுகைம்பாலக்கரையிலேறினார்காணம்மானை
அந்தபுள்ளமேடோடு ஆரணங்குபோலாகி

வந்தவளுர்மிக்க மன்னவருந்தர்மருந்தான்
ஏதுகாண்பெண்கொடியே யிவ்வேஷமுந்தனுக்கு
ஓதுவீரென்றுதர்மர் உண்மையாய்த்தான்கேட்க
நீதமுனிதேவிநான் நித்தியகன்னியென்பேரு
சாதகமாய்நித்திரையில் தாளனந்தல்செய்துவிட்டேன்
ஆகையினுலென்னை ஆருவாயென்றுரைத்தார்
மாய்கையிதுசாபம் வாங்குவதெக்காலமென்றேன்
அரியபுகழ்தருமருடன் ஐவர்மபங்கிநிற்பார்
பெரியவர்களிந்தவழி பெண்ணேவருவார்கள்
ஆரென்றுசொல்லி ஐவர்துரௌபதையும
ஏரெனவேவீமன் யிவர்கள்தனைபிடிக்க
நீந்திவருகையிலே நீங்குமுந்தன்சாபமென்ருர்
ஆமந்தமுனிசொற்படிக்கு அச்சாபம்நீங்கியிட்போ
பாவாகன்றதுகாண் பதிகளக்குநான்போறேன்
தேவரீர்நீங்கள் சேரும்வைகுந்தமென்ருர்
காவிளங்குயிலாள் கணவன்பதிபோச்சேர்ந்தாள்
அந்தமொழிகேட்டு அதிசயமாயுளமகிழ்ந்து
வந்தார்வெகுதூரம் மலேயும்வனங்கடந்தார்
வரும்வழியிலேநிமித்தம் மதிமயக்கமாயுரைக்க
தருமரதுகேட்டு தானேவிசாரமதாய்த்
கன்னிதுரௌபதைக்குக் காலம்பொல்லாதென்றறிந்து
இன்னிமிந்தஞ்சொல்லுமென்று யிடைந்துமனமுழன்று
வருகையிலேநல்ல வாய்த்ததுரௌபதையும்
இருகைவிரித்தலறி எடுத்தடியும்வையாமல்
மெய்சோர்ந்துகைசோர்ந்து மேல்மூச்சுவேர்வையுமாய்
கைகாலசந்து கனேதாங்கிநின்றளவில
ஐவர்திரும்பி ஆரணங்கைதான்பார்த்து
கைதாங்கிமெள்ள கருத்தென்னவெனக்கேட்க
தனக்குவருமயக்கந் தானுரைத்தாரம்மானே
உனக்குவருமயக்கம் உள்ளபடியின்னதென்று
சொல்லென்றுகேட்கத் துரௌபதையும்வாய்தவறி
நில்லென்றுதாதி நெடுநாடியுள்ளசைந்து
தத்துவங்களற்றுத் தன்னினைவுதான்மாறி
பித்துகலங்கிப் பேரறிவுசிற்றறிவாய்
கண்டதில்சென்றுமாயக் காலனெனும்பாவி
அண்டத்தில்நின்று ஆரணங்குதானயர்ந்து
பிண்டத்தடுக்குலேந்து பிராணனெனும்வாயுவுந்தான்
விண்டத்தைநோக்கி விடையுமிகப்பதறி
பொறிகலங்கியந்தப் புலனுமதிமயங்கி
நெறிகலங்கியெந்தன் நினைவுதடுமாறி
வாதமொடுங்கி வன்பித்தமதிகரித்து
சிதப்பறந்து சிலேட்டுமமுமேலாகி

மண்ணுந்தண்ணீரதிலே வந்துமிகவொடுங்கி
தண்ணீருந்தீயில் தானொடுங்கிமேலாகி
வாயிலேவக்கினியும் வந்தெட்டிப்பார்க்குதிப்போ
காயத்துடனே கட்டுடனே ஆக்கைவிட்டு
அசதிகொடுக்குதே ஐவரேயென்றுரைத்தாள்
அசதியென்றசத்த மைவருமேதான்கேட்டு
வீமன்சகாதேவன் விசையனகுலனுமாய்
தாமுமயங்கி தயங்கையிலேதருமருந்தான்
நால்வர்க்குநேசம் நடுங்காமற்புத்திசொல்லி
வேல்விழியாள் துரௌபதைக்கு மெய்யேபதறாமல்
சொல்லுகிறார்தர்மர் துரௌபதைக்குநேசமுடன்
வில்லுக்குநல்ல விசையன்மனையாளே
பின்னே துரௌபதையே விட்டுப்பிரியாதே
பொன்னேநவமணியே புத்திசொல்லக்கேளுமென்று
நெடியோனேதஞ்சமென்று நெஞ்சிற்றியானமதாய்
பிடியேநினைவாகப் பிடியுமென்றுதர்மர்சொல்ல
துடியிடையாள்நல்ல துரௌபதையுந்தான்மகிழ்ந்து
யடியளந்தமாலே பஞ்சவர்க்குத்தஞ்சமென்று
மகிழ்ந்ததுரௌபதையும் வாழ்த்துகின்றாள்தோத்திரந்தான்
புகழ்ந்துபுவியிலுள்ளோர் புத்தியொன்றுதான்கேட்க

விருத்தம

பஞ்சவர்தனக்குநானும் பாஞ்சாலிவந்துதோன்றி
பஞ்சவரைந்துபேர்க்குப் பாரியாயிருந்துபாரில்
துஞ்சவேசூதுவென்று துற்சனன்துகிலைக்கொய்து
அஞ்சலென்றருளிச்செய்த அச்சுதாசரணமென்றேன்
ஐவர்க்கும்பிரியாதிந்த வவனியிலிருந்துவாழ்ந்து
ஐவர்க்குந்தேவியாகி யழியாதகன்னியாகி
ஐவர்க்குமடியாள் தானு மருந்தவஞ்சேரவந்தோம்
ஐவர்க்குமுன்னேவாறே னரியவைகுந்தந்தாரும்
வந்தவனத்திலிடைவழியில் மரணமெனக்குச்சரியெனவே
இந்தவனத்திலுடைந்து யெளியாள்தன்பதஞ்சேர
விந்தைகிரிக்குவழிகாட்டி வேறேதுன்பமணுகாமல்
நந்தாமுகுந்தாவைகுந்தா நாதாவரங்கந்தருள்வாயே
என்னையேமணுகாம லெதிரேவந்துபதம்நல்க
பின்னையனதுபதறாமல் பிடித்தபிடியுந்தவறாமல்
உன்னைமனதில்மறவாம லுறைமேவன்வரவும்வைகுந்தம்
முன்னேவருவாய்கோபாலா முகுந்தாசரணஞ்சரணுமக்கே

கதை

என்றதுரௌபதையும் யிறையோனைப்போற்றிசெய்து
ஒன்றுமறியேன்சிவனே உன்பாதமெந்தனுக்கு
தந்தருளவேணும் தரணிதனைப்போற்றியென்று
நந்தாமுதத்தா னடிக்காட்டிலென்னுடலை

இந்தரபிரிந்துயிர்தான் என்கோவேயும்மிடத்தில்
வந்தாலுமுன்னுடைய மலர்ப்பாதந்தருளும்
வைகுந்தஞ்சேருமையா மாயோனேயென்றுசொன்னாள்
மெய்யென்றுஉன்பாதம் வினையுமறவாமல்
தோத்திரங்கள்பண்ணித் தூபமறவாமல்
மாத்திரைப்போதாகிலும் மனதுமறவாமல்
தில்லைநகர்காசி திருவருணை அவனாசி
தொல்லையகலசிந்தாநதி தோற்றமுடன்முத்திநதி
செய்யதிருக்காவேரி திரிக்குடந்தைபொன்னரம
ஜபனேசெகனாதம் அனந்தசயனமுதல்
திரும்பதிசிதம்பரமும் சீர்காழிமாதலமும்
விருப்பமுடனுள்ள விசேஷதலமத்தனையும்
சிந்தைதனில்வைத்துத் தியானித்துநிற்களவில்
அந்தரத்திலுள்ள அரம்பையர்களெல்லோரும்
துய்யமலர்சொரியத் துந்துமிகளாடிநிற்க
வெய்யமணிபதிக்க விமானமதிலேதான்
ஆயாள் துரௌபதைதான் அரம்பையர்கள்சூழ்ந்துவர
நேயாள்வைகுந்தம் நிறைந்திருந்தாளம்மானை
மைக்கண்துரௌபதையும் வைகுந்தஞ்சேர்ந்தபின்பு
மிக்கதொருபஞ்சவர்கள் மெய்பதறியுள்ளசைந்து
வாடிதிடைந்து மழைகாணாப்பயிர்போல்
கூடிப்பிரியாத கொம்பிழந்தவானரம்போல்
காடுதனில்நின்று கவலைபெரிதாகி
தெய்வமேயுண்டெனவே தேறியேஐவருந்தான்
ஐவருங்கூடி அடக்கினாருத்தமியை
மெய்களையராமல் மேனிபதறாமல்
செய்யுஞ்சடங்குந் திருத்தமுடனேமுடித்து
நடந்தார்திசைநோக்கி நல்லபுகழைவருந்தான்
கடந்தார்வெகுதூரங் கானகமுமாறுகளும்
அப்பாலும்போகையிலே ஆங்கொருவீமனுந்தான்
தப்பாதசொல்லுடைய தார் வந்தரண்ணாவே
கற்புடையமாது கானகத்திலேமடிந்த
உற்பனமேதென்று உயர்வீமன்தான்கேட்க
வாசமுள்ளதர்மர் மகிழ்ந்தேதுசெப்பலுற்றார்
ஈசர்பதிவாழும் யிமையமடந்தையவள்
மாபாரதமுடிய வந்திருந்தாளைவருடன்
தீபாவியானதொரு திரியோதனன்மடிய
பாரதமும்போரும் பகையறவேதான்முடித்து
பாரதனையாண்டு பரலோகஞ்சேரவென்று
கலியுகத்தைதாண்டிக் காட்டகத்தேநாயவரவே
சலியாமல்நம்முடனே தானடந்தாளித்தூரம்

தேவர்முனிவர் திருமால்சபையறிய
பாவசரீரமதைப் பார்மீதிலேகிடத்தி
முன்னேநடக்துவிட்டாள் முகுந்தனிடதன்பதிக்கு
பின்னேதொடர்ந்து பிறகேவழிகூடி
நாமும்நடக்கவென்று நடந்தார்கள்வெகுதூரம்
தாமும்பின்தம்பியருந் தையலையுந்தான்பிரிந்து
கானகத்திநாடே கடுகிநடக்கையிலே
வானகத்தினுள்ளே மலைமுள்ளுக்குள்ளிருந்து
வந்துபதுங்கி வருவாரைத்தானபார்த்து
சிங்கந்தபசிதீரத் தின்னலாமென்றுசொல்லி
என்றுமனமகிழ்ந்து எதிரேதானுற்பரித்து
கொன்றுபசியாறக் கூர்முகங்கைகளுமாய்
கண்ணுமுகமும் கனல்போல்பொரியெழும்ப
விண்ணுருவப்பாய்ந்து விழுங்கவேஐவரையும்
சேர்ந்துபிடிக்கவென்று சிங்கம்வந்துதான்சீறி
பாய்ந்துபிடித்ததுகாண பருவீமன்றன்னையுந்தான்
சிங்கத்துவாயகலத் திறல்வீமன்றான்பிடித்து
பங்கப்படுத்தி பகிர்ந்திரண்டுகூறுக்கி
வகைத்தானடிவயற்றில் வருண்டோடச்சிங்கமது
உதைத்துத்திகைத்துப் பதறியுடல்நடுங்கி
வேதியர்போல்வந்து மெய்யுடையதர்மர்முன்னே
நீதிமறையோனும் நிற்பளவில்தர்மருந்தான்
ஏதுகாண்வேதியரே இப்படிநீவந்ததென்ன
தாதுவிசுவமுனி தன்பூசைக்கேமலர்கள்
நானெடுக்கப்போனேன் நடுக்கானகந்தனிலே
தேனிருக்குஞ்சோலையிலே சினந்திரண்டுசிங்கமது
ஆர்ப்பரித்துரெண்டும் அவர்கள்பெருமபேரை
தாப்பிரியமாய்ப்பார்த்துத் தாமசமாய்நின்றுவிட்டேன்
வேதித்துமாமுனியும் வேகமாயோடிவந்து
ஏகிற்றுச்சிங்கமென் இச்சாபமிட்டார்காண்
ஏற்றியசாபமெனச் செப்போதுதீருமென்றேன்
போற்றியேநான்துதிக்கப் புகல்முனியுமப்போது
ஐவருங்கானகத்தில் மால்பாதந்தான்தேடி
ஐவருந்தானந்தவழி அவர்களவருவார்கள்
பெருமையுள்ளதருமர்தம்பி போர்வீமன்கையாலே
திருமுனிவர்சொன்னார் தீர்ந்ததுகாணிச்சாபம்
ஆனதினுலிச்சாபம் ஐவரேதீர்த்துவிட்டார்
நான்போறேநீங்கள் நாரணனார்தம்மிடத்தில்
போங்களென்றுசொல்லிப் போனார்காண்வேதியரும்
வாங்களென்றுசொல்லி மன்னவர்களைவருமாய்
இறையோனைத்தஞ்சமென்று ஏகினார்காணம்மானே
கறையேறவேணுமென்று கடுகிநடக்கலுற்றார்

மலைகள்பலகடந்து மாயோனைத்தானினைந்து
கலைகள்மறைகள் காடிப்புலியாளிசிங்கம்
பெரியமதவாரணங்கள் பேராறுதான்கடந்து
அரியவனக்காரணமும் அதிசயமுந்தான்பார்த்து
பஞ்சலவுஞ்செண்டகிரி வட்டமலைபோர்புறமும
மிஞ்சுபுகழ்பஞ்சவர்கள் விரைந்துவருகையிலே
ஞானதவம்பூசைசெபம் தன்னுடனேயாமாகில்
ஏனமுனிவரிங்கே இருந்தாரவர்தனையும்
கண்டுவணங்கியிரு கையால்மலர்சொரிந்து
தொண்டுபண்ணிநிற்கையிலே தோற்றமுடன்மாமுனிவர்
மன்னவரேயெங்கிருந்து வந்தீரெனக்கேட்டார்
தென்னவர்கள்போற்றுஞ் சீராகஐவருந்தான்
பாண்டுமைந்தரைவர் பாருசைவிட்டகன்று
கண்டுசலிவருமுன் கரியமாற்கண்ணர்பதம்
தேடிவந்தோம்வைகுந்தஞ் சேரவென்றுநாங்களுந்தான்
நாடிவந்தோமும்முடைய நற்பாதந்தெண்டனிட்டோம்
என்றுதர்மர்சொல்ல இயல்முனிவரேதுசொல்வார்
நன்றுதான்பஞ்சவரே நாங்கள்சொல்நீர்கேளும்
வேகமுடனித்தூரம் விரைந்தோடிவந்ததினால
தாகம்பசியிளைப்பும் கரையார்வேணுமென்று
ஐவரையுந்தானிருத்தி அன்புடனேவார்த்தைசொல்லி
மெய்யவருமேல் பலாதிகள் தான்வேணுமென்று
போசனமும்பால்தயிரும் போகவுண்டாகுமென்று
வாசத்துடனேமுனிவர் மகிழ்ந்துரைத்துஐவரையும்
பார்த்தீபரேநீங்கள் பாருமென்றுதானுரைத்தார்
சாதிநீரென்று தயவாகமாமுனிவர்
தேனுங்கனியுந் தெவிட்டாதபால்பழமும்
தானுஞ்சிவமுனிவர் தன்னிடத்தில்தோற்றியதால்
அந்தக்கனிதேன்பழமும் அருந்துமென்றார்மாமுனியும்
இந்தக்கனிபலாபழமும் இப்போதழைத்தவிதம்
அதிசயந்தானென்று ஐவருந்தானுளமகிழ்ந்து
நதியிற்புனலருந்தி நமஸ்கரித்தார்மாமுனியை
இருந்துபசியாருமென்று இயல்முனிவர்தானுரைத்தார்
விருந்துண்டிளைப்பார்ந்தார் வீரரைவருந்தான்
கதிரோனும்போய்மறைந்தான் கங்குல்வந்துதோன்றியதே
சதிராகமாமுனிவர் தர்மர்கதைதான்கேட்டு
வேதவிதிசாஸ்திரமும் விளக்கமாயைவருக்கும்
போதமாய்ச்சொல்லிப் போதித்தார்மாமுனியுங்
கங்குலகன்று கதிரோனும்வந்துதித்தான்
பொங்குபுகழைவருந்தான் பூரித்தெழுந்திருந்து
வரித்துப்பரிதியுடன் காலைசெபந்தான்முடித்து
மதித்துமகிழ்ந்தவர் மாமுனிவர்தன்னிடத்தில்

வந்துவணங்கி வைகுந்தஞ்சேர்வதற்கு
சந்துபயில்வனத்தில் தான்வழியுஞ்சொல்லுமென்றார்
மூவர்முதலான முப்பத்துமுக்கோடி
தேவர்களுமச்சுதரைத் தேடியின்னங்காணுமல்
தள்ளுவதுஞாயமல்ல சரணஞ்சரணமையா
வேழமுகத்தோனே விக்கினங்கள் தீர்த்தோனே
காளமுகில்மேனியனுர் கண்ணன்மருகோனே
கதவுதிறவுமையா கணபதியேசரணமென்று
இதமுடனே தாமர் இருதாள்சரணமையா
மதகெஜமுகனும் வாசல்வழிதிறந்தார்
வித்தகவிநாயகனை விழுந்துநமஸ்கரித்து
வட்டமிதிக்குடையோன் மாநகரில்வந்து
பட்டணங்களெல்லாம் பளிங்கிநிறம்போலவேதான்
எங்குஞ்சிவாலயமும் எம்பெருமாளாலயமும்
பொங்குஞ்சிவமுடையோர் பூசைபண்ணுநீதிகளும்
தவமுஞ்சிவமுஞ் சந்நியாசிவேடமுமாய்
ஆவமும்பவமும் அரிஞானமூலமுமாய்
செளியும்பெரியோர்கள் சிவஞானவேதமுமாய்
வழியுமணிமுழங்க மன்னவர்கள்தான்பார்த்து
மகிழ்ந்துகளிகூர்ந்து வந்தார்களைவருந்தான்
புகழ்ந்துமுனிபாதம் போற்றியடிபணிந்து
அப்பனேயெங்கள் ஆதிகுருபரனே
செப்பமுடனெங்கள் தெய்வசிகாமணியே
என்றுதர்மர்தெண்டனிட்டு இன்பமுடனேபணிய
நன்றுகாண்பஞ்சவர்கள் மன்னவர்கள்தான்பார்த்து
பாண்டுமைந்தர்தானும் பதியிழந்துவந்தவரை
வேண்டியேயிங்குவந்த விசாரமேதென்றுரைத்தார்
பொய்யானதோர்களியன் பூமியிலேவந்ததினுல்
வந்தோம்புவியிழந்து வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாயனுப்புந் தானுவேயென்றுரைத்தார்
தருமரிவைசொல்லத் தான்கேட்டுமாமுனியும்
இம்மைதனில்வைகுந்தம் எவர்சேர்ந்தாரிப்புவியில்
வேதனுடமாமுனிவர் விண்ணேருங்காணுத
சீதனமலர்விந்தபதம் தேடிநீர்காண்பீரே
ஆனுலுமாயன் ஐவருக்குமன்புடையோன்
தானனகோபாலர் தன்னிடத்திலேநீங்களுந்தான்
போனலுமுங்களுக்குப் புத்திநான்சொல்லுகிறேன்
சேனபதிக்கதிபர் செப்புகிறேன்கேளுமினி
வேதம்வெகுளி வெகுண்டய்தாருகோபம்
தாகம்பசியிளைப்புஞ் சஞ்சலங்களில்லாமல்
இடிப்புஞ்சேஷ்கனவு ஏதென்றுமில்லாமல்
கடுங்காமமோகங் கருதிலுற்றுப்பாராமல்

அன்றியுமோ கதைதானருளுமென்றுதானுரைத்தார்
ஐம்புலனையுள்ளடக்கி ஆத்துமத்தைசுத்திபண்ணி
எம்பெருமாள்தன்னை இருதயத்திலேநினைந்து
மனதுயிர்தன்னுயிர்போல் மனதுபரிபூரணமாய்
நடந்தால்தெரியும் நந்தகோபாலருடன்
இடந்தான்தெரியுமப்பா என்றனைதப்பாது
தாரார்துளசிமணித் தானணியுமூர்த்தி தன்னை
ஆராய்ந்து தேடி யருள்பெறுவீர்கண்டீரே
செல்லும்வழிதனிலே தீதொன்றும்வாராது
சொல்லுகிறேன்கேளும் துன்பமற்றபாதையிது
தீதானபேர்கள்வந்து செல்லாவழிகேளீர்
கேதாரம்போய்ச்சேர்ந்தால் கிட்டவதுதூரமில்லை
பக்கவிலக்குமில்லை பலபாதைதானுமில்லை
சொர்க்கமதுபோய்ச்சேர சொல்லுகிறேன்நீர்கேளும்
கதித்ததொருவாசல்வழி காவல்பத்திரகாளியென்றார்
துதித்தவளைப்போற்றித் துன்பமறவேகடவும்
என்றுதுறுவாசர் இவ்வசனந்தான்கூற
நன்றென்றுபஞ்சவர்கள் நமஸ்கரித்துமாமுனியை
நடந்தார்திசைநோக்கி நல்லதொருபஞ்சவர்கள்
அடர்ந்துவழிகூடி அம்மையுடகோயில்சென்று
பணிந்தார்களைவர் பத்திரமாகாளிதன்னை
துணிந்தார்களைவர் தோத்திரமுஞ்சொல்லலுற்றார்

விருத்தம்.

வக்கிரகெந்தமுகக்கமலவிழியிலகு செஞ்சடையடிமுடியும்
உக்கிரமகோரவுமைவிழிமருட்டு மோங்குநற்காமுந்தன்குலஞ்
சக்கிரவிஜயஞ்சாமுண்டிகௌரி துற்கைமாகாளிதிரிசூலினீலி
நிக்கிரசாலினிமலிதுதிததே னுனையேதுணைசெய்யாயே அ௧
காளிபகவதிகங்காளிமாரி கரியமால்தங்கைகாரிழையாளே
எளியார்தமக்கிரங்கும்பரிபூரணி யிடைவிடாவழியை
வெளியில்வந்தவுதாவே என்றுவந்தோமுன்பாதம்
தருவிலெந்தன்தாயேநின்பாதம் துணைசெய்வாயே அ௨
துந்துமிபிடாரிசொல்லி தோதகிமாயநத்ரி
சிந்துரதிலதமாதே திரிசூலபாலயேந்தி
வந்துமுன்தோன்றவேணு மாசுற்றவடிவினாளே
பந்துவைகுந்தஞ்சேரப் பதிவிடைதாருமம்மா அ௩
தாதுமலர்ந்தகுழலணங்கே சமயமிதுதாண்வழிகாட்ட
மாதுதனதும்சதாரம் மட்டுஞ்சேரமல்லவுதனை
ஏதுவினைகளணுகாம வெளியாரிடமேநீயிருந்து
தீதுவினைகள்வாராமல் செவ்வேவாடத்துந்தரியுனையே அ௪
நடக்குந்துயரமறிந்துனது நாட்டமதனால்கண்டிறங்கி
அடக்கமுடையபொருளறிய வம்மாவுனதுசெயலாலே

நடக்கவேணும்வழிதுலையக் காணவேணும்வைகுந்தம்
வடக்குவாசல்மடக்கொடியேவருவாய்வந்துதுணைசெய்வாய் ௮௭
துணையாயெனக்குமுன்னின்று துன்பவினைகளணுகாமல்
அணைவாய்மலைக்காதரவா யைந்துபுதல்வர்திகையாமல்
பிணைவாய்தனதுபிள்ளைகள்முன் பேசாதோடிவந்தருகே
இணைவாய்வருகவம்மாநீ யிப்போசமயமாதாவே ௮௮
வருவாய்கமலமாதாவே மார்க்கவழியேதீர்க்கமுடன்
குருவாய்நிசம்முன்னின்று குற்றங்குறைகள்வாராமல்
திருவாய்மொழிந்தபயமாவே சிந்தைமகிழ்ந்துசெயல்பெருக
தருவாய்பெரியவைகுந்தன் தாயேசரணஞ்சரணுமக்கே ௮௯
கதைமாதுகவுரி மகாமாயிராசகன்னி
சாதுவேமாகாளி தாயேபராபரியே!
சக்கரதிரிசூலி சாமுண்டிசங்கரியே
துர்க்கைபிடாரியம்மா துரியசடாட்சரியே
பஞ்சாட்சரத்தினிட பதியேபதியுரையே
அஞ்சலென்றுதாக்க அடைக்கலமேயுன்மீதில்
மாதாவேதாயே வழிகாட்டவந்தருளும்
ஆதரவுமில்லையம்மா அடியேற்குவந்துதவும்
என்றுதர்மர்சொல்ல இறங்கிவந்துமாகாளி
சொல்லுவாளப்போது துரைராசமன்னவற்கு
நல்லதர்மரேயுனக்கு நல்லவழியிதெனவே
வழிகாட்டிமாகாளி மறைந்தனளகாணம்மானை
தெளிவாகபஞ்சவர்கள் சென்றுவழிதான்கூடி
தாராளமாய்நடந்த சத்தியபத்திரகாளிதன்னை
நேராயிருதயத்தில் நெஞ்சுநடுவேநிறுத்தி
எண்பதின்காதவழி எய்யாமலேதாண்நடந்தார்
கண்புற்றகானகத்தில் நடக்கும்வழிதனிலே
அப்பாலொருமலைதான் அளவற்றவுன்னதமாய்
ஒப்பாருமில்லாத வுயர்ந்தமலைமீதேறி
அந்தமலைப்பெருமை ஐவருந்தான்பார்ப்பளவில்
இந்துமுடனரக்கன் கைலாசமென்றொருவன்
ஆகாசம்பூமி அளவாகவாய்பிளந்து
விகாசந்தன்னுடனே வயிறுகளையெக்கின்று
தீயெரிந்தகண்ணுங் சிறந்தவிழிநாசியுமாய்
பேயிருந்தவீடதுபோல் பேருடலும்நீள்வயிரும்
காட்டானைசிங்கம் காடுபுலிபன்றியுடன்
காட்டமுடன்காதவழி கடந்துதிரிவதுவும்
நாசிவழிசென்று நடமாடப்பட்டதெல்லாம்
யோசனைகாதவழி யுமன்றருண்டுதான்திரியும்
இட்டித்திலியதுபோல் இக்கியலைங்கிடவும்
வாட்டும்பெருங்காற்றால் வல்லரக்கன்தன்மூச்சு
எல்லையில்லாத்தூரம் எந்தமட்டோநாமறியோம்

தொல்லையுடல்பங்குந் தூரம்வெகுதூரம்
கடக்கமுடியாது கடற்கரைக்குமெட்டாது
இடக்கிறான்ராட்சதனைக்கிட்டியேசென்றாலும்
அடக்கமுடியாது ஆர்தனக்குக்கிட்டாது
நடக்கவழிகாணும் ராட்சதனைத்தப்பியப்பால்
யேகவழிசற்றும் யேதென்றுங்காணோமே
வேகமுடன்சென்றவன்மேல் வீரியங்கள்செய்தாலும்
எதிர்த்துப்பொருவான் ஈடல்லநாம்தாமும்
மதித்தவனுந்தின்னவென்றால் வாய்தனக்கும்பத்தோமே
கைகாலுலாவிவரும் காதமிருகாதவழி
ஐவருந்தான்பத்தாது அவன்வயிற்றுக்கிப்போது
என்றுமயங்கி இறங்கிவழிபார்ப்பளவில்
நின்றுமலைத்தவர நெடுமூச்சுதானெறிந்து
காவலர்கள்போகவழிக் காணாமலேயலைந்து
தாவியெங்குஞ்சுற்றி தவித்துவழிதிகைத்து
உற்றதொருராட்சதனை வுசுப்பினார்கிட்டவந்து
சத்தமிட்டுக்குதித்துத் தட்டிஎழுப்புகையில்
என்னமோவென்று எள்ளளவுந்தோற்றாமல்
விண்ணமாய்ச்சும்மா மெய்யசைந்துகண்ணுறங்கி
ஏதுசெய்வோமென்று எண்ணிமனம்புண்ணாகி
தீதுவினைதானிவனுந் திருவுளமேயுண்டெனவே
சுற்றும்போயாராய்ந்து சூழவழிகாணாமல்
மற்றுமினிப்போக வழியொன்றுமிலாமல்
நின்றுதிகைத்தளவில் நெடியதொருவல்லரக்கன்
குன்றுமலைபோலவனுங் கோட்டாவிகொண்டெழுந்து
ஐவரையுங்கண்டரக்கன் ஆவிபிடிப்பளவில்
தெய்வமேயென்று சினத்தெழுந்தான்வீமனுந்தான்
மண்ணும்விண்ணுந்தானதிற மலைகளிடுகிடென்ன
நண்ணும்புயவீமன் நாடிச்சினத்தெழுந்து
ஆர்பறித்துக்குற்ற அரக்கனுமேதானசினந்து
எற்பரித்துவீமனுடன் எதிர்த்துப்பொருதலுற்றான்
மலையும்மலையும் மற்கட்டிச்சேர்ந்தாப்போல்
அலைகடலுங்காற்றும் அலறிவெகுசந்தமிட்டு
காடுசெடிநெருங்கிக் கற்கடலுந்தூளாகி
ஈடுசெய்யமாட்டாமல் எடுபட்டுவல்லரக்கன்
மதியமூநுசாமம் வல்லரக்கன்றான்பொருதி
அதிகபலமெல்லாம் ஆங்காரமுள்ளடக்கி
தாக்கினான்வீமன் தலைகளுருண்டோட
நோக்கிவந்தராட்சதனும் நொறுங்கியேபட்டுருண்டான்
பட்டஅரக்கன் பாரில்பிழைத்தெழுந்தான்
துஷ்டனவன்தேடிநம்மைத் துரத்திபிடிக்கவென்று
தாராருந்தர்மர் தம்பியரைவாருமென்று

சீராகத்தானடந்தார் தெய்வமேயென்றுசொல்லி
வருத்தமுடனேக்கி வளர்ந்தவனக்காடுகளும்
திருத்தமுடனகடந்து சென்றார்வழிகூடி
நடந்தார்வெகுதூரம் நாற்பதிங்காதவழி
கடந்தார்வெகுதூரங் கானகமுந் தான்கடந்து
வரும்வழியில்வீமன் வார்த்தையொன்றுதானினைந்து
தருமரடிபணிந்து தான்தொழுதுமேதுசொல்வான்
நடக்கும்வழிதுலைய நாதனேயெங்களுக்கு
அடக்கமுள்ளமுற்கதையை அருளுமென்றான்வீமனுந்தான்
பொருளுமுறையும் போதமுடன்முற்கதைதான்
சாற்றுகிறேன்தம்பியரே தான்கேளுமென்றுரைத்தார்
போற்றுமுலகும் புவனம்பதினாலும்
வேதாவும்மாலும் மிக்கதொருருத்திரனும்
மீதானமூவர் விதித்தவிதிபாருமல்
நான்படைத்தோமென்று நான்முகனுந்தான்கூற
மான்பிடித்தருத்திரனும் வகைபலவுந்தானாகி
தூயதொருமாயவனுந் தோற்றமெல்லாந்தானாகி
நேயமுடன்மூவரிலே நீபெரியான்நான்பெரியோன்
என்றுபகையாக எதிர்த்துவழக்குரைத்து
மன்றிற்சபதமிட்டு வாய்த்தசத்தந்தானாகி
என்றிவர்மூவருமே நடக்குமதிகாரம்
படைப்பிக்கதேவன் படியளக்கமாயோனும்
முடிப்பிக்கருத்திரனும் மூவருமேயல்லாது
ஒன்றையொன்றைமிஞ்சாது வுண்மைபொருளாகுமிது
மன்றில்விளங்கி வழக்குரைக்கமூவர்களும்
பார்க்கிற்சரியெனவே பரமரகசியத்தை
ஏர்க்கவேமுன்னாள் எழுதிவைத்தார்மேருவினில்
ஆர்க்கும்பெரியோ னவனல்லால்வேறுமுண்டோ
தீர்க்கமுடன்மூவர் செய்தொழிலமிச்சமில்லை
அவனைமறந்துரைத்த அபசாரந்தீரவென்று
சிவனுமயனுந் திருமாலுந் தான்கூடி
ஒருவர்க்கொருவர் வுயர்ச்சிசொல்வதல்லவென்று
மருவித்தழுவி மகிழ்ந்தார்கள் மூவர்களும்
அண்டப்புவன மகண்டமெல்லாந்தானபடைத்து
அண்டங்கடந்துநின்றோன் ஆடுந்திருக்கூத்தை
கண்டறியமாட்டாதார் கருதியுரைத்ததெல்லாம்
கொண்டவினைப்பயனால் கூறினேமிவ்வார்த்தை
அவனேபெரியோன் அங்குமிங்குமொன்றாகி
எவனேயவன்காண எல்லையில்லாப்பேரொளியை
மறந்துரைத்தகுற்றம் யாருமல்லயிருக்க
இருந்துவனமிருந்து இருதயத்திற்றான்துதித்தார்
நல்லதம்பியரே இன்னமொருகதைதான்

மாயவரும் இந்திரரும் வானோரும் வேதியரும்
நாதமுனிரிஷிகள் நால்வகையிலுள்ளோரும்
அன்னாளிபமதேவர் அமுர்தங்கடையவென்று
பொன்னாருமேரும் பொருப்பேதான் தூணாக
நாகமதுகயிறாய் நாட்டியதோதோர் தூண்தனக்கு
வாகனையுமாமதியு மத்தாகத்தான்சேர்த்து
வானவர்களோர்புறமும் வாலியொருபுறமும்
ஆனவர்கள்பாற்கடலில் அமுர்தங்கடையுமன்னாள்
மலைதாங்கழன்றிடவே வாசுகியுமப்போது
நிலைதாங்கமாட்டாமல் நீள்விஷங்கள் தான்கழன்று
மீறியதோராலவிஷம் வெகுண்டிருண்டு தானெழுந்து
சீறியுலகெங்குஞ் சென்றுபுறக்கப்பாமலும்
அண்டமெடுக்கும் அகண்டமுதற்றான்பறந்து
விண்டலமுமூடுருவி விரிஞ்சனுடலோகமெல்லாம்
பொங்கவிஷம்பெருகி புகையெழுந்தகோபமுடன்
தாங்கிசியமூவுலகுந் தானுமுண்டுமீள்வதுபோல்
வாரவிஷந்தன்னை வானவருங்கண்டேகி
போறவழியெங்கும் போகவழிகாணாமல்
கண்டவிஷந்தன்னைக் கலக்கியேவானவர்கள்
அண்டமிடமெல்லாம் ஆனகலைஎன்றுபத்தி
தெண்டனிட்டுக்கண்டு சிவனையடிபணிந்து
தொண்டருக்குவந்த தோஷங்கள்தீர்த்தருளும்
பரனேபராபரனே பணிமதிவெள்ளெருக்கம்
அரவணியுஞ்செஞ்சடையான் அண்ணலேநீர்கேளும்
கடைந்தமிர்தந்தன்னில் காலவிஷந்தான்பிறந்து
அடர்ந்ததிரிலோகமெல்லாம் அந்தகாலமாமெனவே
தொடர்ந்துவருஞ்சுதனைத் தடைக்கவகைகாணாமல்
கடந்தோடிவந்தோம் காலவிஷந்தான்பிறந்து
எண்டிசையுந்தான்படைத்து இறையோனேகாவலென்று
யெண்டிசைசூழ்வையமெல்லாம சிவனேயினிக்காரும்
என்றவர்கள்கூடி இறையோர்க்கபயமென்று
நின்றவாகளைதன்னை நீள்சடையோனஞ்சலென்று
சென்றுபறந்துவாது நிதானஞ்சுதன்னை
ஒன்றுபோல்தான்றிரட்டி உட்கொண்டாரீச்சுரனார்
நஞ்சுண்டாரென்று நல்லதொருபார்ப்பதியும்
அஞ்சுவிரல்தன்னால் அருந்தினார்பார்ப்பதியும்
எவ்வுயிருங்காக்கவென்று ஈசுரனார்நஞ்சுநினைறார்
அவ்வுயிரெல்லாமயிழைக்கு மவர்மடிந்துபோமென்று

போலிவிஷம்பாயாமல்குறுக்கேமிடறடியில்
தாலிபிழைக்கவென்று தடுத்தாள்கரத்தாலே
கண்டத்தில்நின்று கறுத்தகறைவிடமாய்
நின்றதுகாணந்த நெற்றிமேலுச்சியிலே
அன்றுபிழைத்தார்கள் அமரர்முனிவரெல்லாம்
திரவிமுனிரிஷி தேவரோடுமூவரையும்
இரவாமலீசுரனு ரட்சித்தாரம்மானை
அதல்லால்வேறுகதை இன்னமொன்றுசொல்லுகிறேன்
ஆதலால்யிவ்வுளகில் அரசெனுமுப்புரத்தார்
இவ்வுலகிலுள்ளதொரு எண்பத்துநான்குபிறும்
அவ்வுலகுமிவ்வுலகும் அடங்கலும்கொள்ளைகொண்டு
இடுக்கங்கள்பண்ணி யிருந்தாரேஅசுரருமே
துடுக்குமுபத்திரமும் துன்பத்திற்காற்றாமல்
தேவர்களுமிந்திரருந் திசைநான்குமுகத்தோனும்
மூவர்களுமொன்றாய் மூர்த்தியெனுமீசுரரை
இன்றுமுதல்முப்புறத்தார் இடுக்கத்துக்காற்றாமல்
வந்தோமேபராபரனே வஸ்துவேகாருமென்று
அந்தமொழிகேட்டு அரனுருமேதுசொல்வார்
செங்கணசுரரெல்லாம் சிவபத்தராயிருக்கும்
அங்கவரைநம்மால் அழிக்கவேபோகாது
இறத்தவர்செய்யும் சிவபூசைதன்னையிப்போ
மறந்துவிடப்பண்ணிவைத்தால் வாகாயழித்திடலாம்
என்றுசிவன்சொல்ல எம்பெருமாள்தன்பதியில்
கண்ணுமுகுந்தா கரிமுகில்மேனியனே
அண்ணுதுளபமணி ஐபனேஅச்சுதனே
முப்புரத்தோரானாலும் மூவுலகம்கொள்ளைகொண்டு
இப்போதழிந்ததுகாண் என்செய்வோம்மாயவரே
வண்ணரேஈசுரர்பால் வாகாகப்போயுரைத்தோம்
திண்ணமுடன்முப்புரத்தார் சிவபத்தரென்றுசொல்லி
அவர்கள்செய்யும்பூசைதன்னை யகற்றினுலிப்போது
சிவனுருமுப்புரத்தைச் செய்கிறோமென்றுசொன்னார்
ஆகையினாலும்மை அடியேன்களதேடிவந்தோம்
மாய்கைபலசெய்து வல்லோர்சிவாலயத்தை
மறந்திருக்கப்பண்ணுமையா மாபாவிமுப்புறத்தோர்
இறந்துகெருப்பெறிய எம்பெருமாள்பண்ணுமிப்போ
வானவருந்தேவர்களும் மயங்கிநின்றுவார்த்தைசொல்ல

ஆனபெருமாள் பாவருக்குந்தானிறங்கி
விண்ணவரேயுங்கள்பயம் வேண்டாமெனத்தீர்க்க
தண்ணமுடன்முப்புறத்தோர் தக்கனுடனேவந்து
எண்ணமாய்நாளும் இருந்தார்கள்வயதனிமேல்
மண்ணையடிப்பதற்கு மாயமாய்த்தானிருந்து
தழுவியவாதனையுஞ் சதபனையேசெய்வதற்கு
வழுதாவேகாண்பார்க்க வருகிறோம்போங்களென்றார்
அகமகிழ்ந்துவானவர்க ளமராபதிசேர்ந்தார்
ஜெகநாதர்வந்து திரிபுரத்தைதீயெரிக்க
வந்தார்காண்முப்புறத்தில் மாயோனுபாயமதாய்
விந்தையாய்ப்பூசை விழுங்காட்டவேணுமென்று
புத்தாய்சமைந்து புத்தாய்வடிவுகொண்டு
வித்தகனார்போயிருந்தார் வீராசமுப்புறத்தில்
போயிருந்தார்புத்தர்தனைப் பொல்லாதமுப்புறத்தில்
தீவினைகளேதென்று சென்றார்காண்புத்தனிடம்
சிறந்துசிவபூசையிங்கே செய்யுந்தவதனிலே
மறந்துமொருபுத்தன் வருவானோவென்றுசொல்லி
புத்தனுடனெதிர்த்து புரத்திலுள்ளோரெல்லோரும்
தத்துவங்கள்பேசியிவர் தர்க்கித்தாரம்மானை
திற்றநிறுநிறுத்தி நிலைநிற்கவாதுசெய்து
தற்கித்துப்புத்தரவர் தனுசாஸ்திரப்படியே
சமையமெனும்வேத சாஸ்திரத்திலுள்ளபடி
அடையும்படிக்கி அறிவுரைத்தார்பத்தரென்று
வாதாடிமுப்புறத்தார் மலைத்திருந்துதான்தேடி
சூதனும்புத்தனிட சூட்சமறிவோமெனவே
புத்தரேநீரிருக்கும் பூமரத்தைநீங்களுமே
அத்தரித்துநீராய் அதுசாம்பலாகவேதான்
பார்க்கிறோம்நீரும் பசுமரம்போலாக்குமிப்போ
அக்கினிநீரானால் அரனாரும்நீரெனவே
வேதமெல்லாமும்முடைய வேதமேதான்படிக்க
பாதம்பணிந்து பலகாலும்பூசைபண்ணி
ஈஸ்வரனென்று வெல்லோருந்தான்பணிந்து
வாசமுடன்நீபுரததார் வகுத்துரைத்தசெய்தியினால்
புத்தாசிவந்து பூமரத்தைப்பாருமென்றார்
பத்தரவேமுப்புறத்தைப் பாருமென்றாரம்மானை
பூமரமும்வெந்து பொடிசாம்பல்நீராகி

பூமரத்தைப்புத்தனுந்தான் பூமரம்போலாக்கிவைத்தாய்
கண்டுதான்முப்புரத்தார் காட்சியிதுவென்றுசொல்லி
தெண்டனிட்டுப்போற்றிச் சிறந்திருந்தாரெல்லோரும்
மாயனிடமாய்கை மனமறியாமுப்புரத்தார்
நேயமுடன்முப்புறத்தார் நினைவுமிகவறிந்து
ஒருத்தார்தவங்கள் உபதேசந்தானமறந்தார்
வருத்தமின்றிஈசரிட வாசனையுந்தானமறந்தார்
பெற்றவரையிழந்தார் பெரியதவந்தான்மறந்தார்
எதிர்த்துவந்தபுத்தனையும் ஈசனென்றுதான்பணிந்தார்
பூமரத்தில்முப்புரத்தார் புத்தனையேதெய்வமென்று
நேமமற்றுவீற்றிருந்தார் நெடுமாலுமப்போது
ஈசர்தனைநினைந்து இப்போதுமுப்புரந்தான்
பூசைதவங்குலைந்தார் போர்பொருதமாட்டார்கள்
வேளையிதுவாகுமென்று மேகவண்ணர்தானினைந்தார்
காளைதனிலேறுங் கடவுளருந்தாமறிந்து
மூக்கிமனதில் முயலகனைத்தான்வளைத்து
செந்திமகாமேருவையுஞ் சிலையாகத்தான்வளைத்து
வாக்கியைநாணாக மால்காணும்அம்பாக
நேசமுள்ளவேதம் நெடும்பரிதேருக
சதுமுகன்சாரதியாய்ச் சங்கரனார்தானடந்தார்
மூதுமொழிதானெடுத்து மீறிச்சிலையேற்றி
திருமனவில்மாயனிட பாய்கைதனையறிந்து
வருமருவுமுப்புரத்தில் சென்றுநின்றுதான்சிவனும்
காயாம்புமேனி கண்ணருடசூட்சமதை
வாயாரச்சொல்லி வழுத்தமுடியாதெனவே
சித்தத்திற்கொண்டு சினந்துசிலைதானேந்தி
சங்கவொலிநாணசைத்தார் தராதலங்கள்தானடுங்க
கர்த்தனார்முப்புரத்தைக் கண்டுநகைசெய்தளவில்
பற்றவேமுப்புறமும் பற்பமாய்தானெரிந்து
மாபாவிமுப்புறத்தார் மாண்டார்களெல்லோரும்
பூபாலனென புண்ணியஞ்சேர்தர்மனுந்தான்
இக்கதையைஅன்றாய் இனிமேயார்க்குத்தானுரைக்க
அக்கதையைசொல்லி அடவிகருமாமலையும்
கடந்தமேருஞ்ஞாறு காதவழிதூரம்
கடந்ததைக்கேட்டு கல்லலதென்றுபோகையிலே
வெற்றியுள்ளவீமன் விரையவுந்தானிப்போது

மன்னவரேதம்பியரே மறுக்குமொருக்கதைதான்
இன்னமொன்றுசொல்லுகிறே னிப்போதுநீர்கேளும்
ஆட்கனென்றேயொருவன் அவனிதனிலேதோன்றி
நாடுதனிற்றன்பேர் நலமாய்விளங்கிடவே
முரணியதேனவன் மூவர்கள்நம்மிலுமே
வாழவன்றிவாழ்ந்திருக்கும் வல்லனிரணியனை
தேவர்களுமிந்திரனுந் திசைநான்முகத்தோனும்
ஏவல்செய்துநாளும் இரணியனைப்போற்றிசெய்து
ஆற்றுமலேயவர்க ளச்சுதனைப்போற்றிசெய்து
கூற்றானமாபாவி கொடுமையெல்லாந்தானுரைத்து
கேசவனும்நம்முடைய கிருபையினாலிரணியற்கு
வாசமுடனெந்த வகையினாலானாலும்
சாபமதுதீர்க்கத் தரணிதனில்பிறந்து
மாபாவிதன்கொடுமை மண்ணுவிண்ணுந்தாமறிய
தீர்க்கிறோம்நீங்கள் சிந்தைதனிற்றான்மகிழ
காக்கிறோமென்று கண்ணருந்தானுரைத்தார்
வந்துபிறந்தார்காண் மகிழ்ந்தானிரணியனும்
இந்தப்பிரகலாதன் றனையெடுத்துமுத்தமிட்டு
தந்தையருந்தாயுந் தானேபிரியமதாய்
காலுக்குதண்டையிட்டு கனத்தச்சதங்கையிட்டு
மேலுக்குமாரடி விதமாய்ப்பணிபூண்டு
அஞ்சுவயதாளவி லருமையிட்டுத்தான்போற்றி
வஞ்சனுடன்மைந்தன் மகனைமொழிகேட்டு
வாகாயவைகேளும் வந்தொதென்றுதந்தையுந்தான்
பாகாகவேபடிக்கப் பாலனையுந்தானழைத்து
முத்துமறைவேதியரே முகூர்த்தமிடுமென்றுசொன்னான்
மைந்தனுக்குநலவித்தை வருத்துமென்றுதான்மொழிந்தான்
அந்தமொழிகேட்டு அந்தணனுஞ்சம்மதித்து
இந்தவசன மிதுவேபிரியமென்று
தம்பிபிரகலாதன் தன்னையேயோதிவிக்க
தும்பிமதவாரணமே துணைசெய்யவேணுமென்று
ஏடுபிடித்து இரணியநமாவென்று
தேடுதமிழ்வேதியரும் செப்பினார்தம்பியற்கு
பேசாமலேயிருந்து பிரகலாதன்தவனுந்தான்
ஆசானைப்பார்த்து ஐயரேவேதியரே
உலகில்வளப்பம் வுரையாமலிப்போது
தலைகீழாய்ச்சொன்னால் சம்மதியோ ஆர்தனக்கும்
வளப்பமதைதவே மறையவனுந்தான்கேட்க
ஆளப்பொன்றமிலே அந்நடாவென்றுசொன்னால்
வேதமொழியுதானுய விண்மீனுடைந்தாலும்
ஆகயனுமப்புவி மண்டபமுமுந்தாலும்

ஒருகால்முமழியார் வுண்மைபொருளாகுது
திருமாலுநான்முகனுஞ் செப்புமொழிவேசாந்தம்
ஓம்நமோநாருயணா வென்றுமுபதேசம்
ஞானமிதுவுலகில் நற்றுணையாமெவ்வுயிர்க்கும்
மானவபிமானவென்றும் வழங்குதுகாண்லோகமெல்லாம்
என்றுசிறியோ னெடுத்துரைக்கவேதியரும்
சென்றுமறைவேதியரும் செப்புகின்றவார்த்தைதன்னை
மன்னனிரணியர்முன் வந்திருந்துவேதியரும்
தென்னவனேயுன்மகனை செப்புகின்றவார்த்தைதன்னை
கேட்டிலேயோவென்று கிருபையுடன்சொல்லலுற்றார்
தாட்டிகமாயென்மொழியைக் தம்பியறுமீறியிப்போ
இரணியநமாவென்று இன்பமுடன்சொல்லுமென்றால்
முரணியனைமூதுரையாய் மொழியேமாற்றுவதோர்
அரிநமோவென்றுசத்த மண்டமெல்லாங்கேட்டிருக்க
சரியாயிரணியனைத் தானெதிராய்ச்சொல்லுவாரோ
என்றானுன்மைந்தன் இரணியனேயென்றுரைத்தார்
நன்றாச்செனலே நாழிகையில்மைந்தனைத்தான்
கூட்டிவரச்சொல்லிக் குழந்தைதனைப்பார்த்து
பூட்டிவித்தசொல்லதனைப் பொருந்தாமலேபார்த்து
யேறுமாறுரைத்தா யேன்தள்ளாய்தம்பியரே
கூறுமிரணிய நமாவென்றுகூறுமென்று
அரிநமொவென்று அருளினான்பாலகனும்
எரிஎழுவேகோபம் இரணியனுந்தான்சினந்து
சொன்னபடிசொல்லென்று கடுமைமிகக்கொளுத்தி
என்னவதைசெய்தாலு மெடுத்துரையேனந்தமொழி
முன்னமேசொன்னமொழி யல்லாமல்வேறுமுண்டோ
மன்னவனேயெட்டெழுத்தை மறப்பதுவுஞாயமதே
ஆகாதசொல்லதனை ஆமென்றுசொல்லுவாரோ
சாகாவரமுனக்குத் தந்ததினாலிந்தமாதம்
வந்ததுகாணென்று மைந்தனிதையுரைக்க
சென்னியசைத்துச் சினமாயிரணியனும்
சொல்லடாவென்று சுதனைப்பிடித்தடிக்க
நில்லடாசொல்லுகிறேன் நிரந்தரமாகவெஞ்சும்
இருக்கிறார்கண்டாயே எள்ளுக்குளெண்ணெயைப்போல்
உருக்கமுடன்காட்டென்று வுதைத்தான்மகன்தன்னை
திரும்பிமகனுந் திருமால்தனைநினைந்து
துரும்பிலுமேயிருப்பார் தூணிலுந்தானிருப்பார்
என்றுபிரகலாதனுந்தானுரைக்க
மன்றுபுகாத்ள மணிவயிரத்தூண்களிலே
இருப்பாரோவென்று இரணியனுங்கோபமதாய்
நெருப்பாயெழுந்து நிலவாமோவென்றுரைக்க
அப்போதுபாலகன்தா னச்சுதனைத்தானினைந்து

இப்போதுயித் தூணி லிருக்கிறாரென் றுரைத்தார
எண்ணமறபிங்கே என்சேதி தானறிந்தும்
வண்ணமணித் தூணில் வந்திருப்பாரென் றுசொன்னாய்
எங்கேயடாவென்று எழுந்தரைந்தான தூணதனை
நங்கைபல்கலன் தூணில் நரசிங்கமாயெழுந்தார்
கண்டவுடன்மைந்தன் கடவுளிவர்தாமெனவே
தெண்டனிடவேணுமென்று செப்பினான் தந்தையிடம்
அந்தமொழிகேட் டார்ந்தானிரணியனும்
வந்தநரசிங்கமுடன் வாகாய்பொருதலுற்றான்
வாய்த்துதென் றுவேளையிது மாயன்மிகநினைந்து
சாத்தவனைப்பற்றித் தன்மடியிலேயிருத்தி
வாசற்படி தனிலே வந்திருந் துகூர்நகத்தால்
பாசக் குடல்மார்பும் பகர்ந்திரண்டுகூறாக்கி
குடல்பிடுங்கிமாலையிட்டு குடித்துதிரம்வீழாமல்
அடல்கதிரோன்பாதி அஸ்தமிக்கும்வேளையிலே
கொன்றாறிரணியனைக் கோபாலர்கைநகத்தால்
போனானிரணியனும் புழுநரகிலம்மானை
மாயோனைவந்து வானவர்கள்போற்றிசெய்து
நாயேங்களுக்காக நரசிங்கமாயெழுந்து
இடுக்கந்தவிர்க்கவந்த எம்பெருமாள்போற்றியென்று
நடுக்கந்தவிர்க்கவந்த நாரணரேதஞ்சமென்று
போனார்கள்வானோர்கள் பொன்னகரந்தானோக்கி
ஆனாலும்பஞ்சவர்கள் அநேகநெடுந்தூரம்
பாதைதலேவென்று பழங்கதைகள் தான்பேசி
தாதுபுகழ்நகுலன் சகாதேவன்வீமனுமாய்
பூண்டுகொண்டுசொல்லும் புகழ்பெரியஅண்ணாவே
மீண்டுமொருகதைதான் விள்ளுகிறேன்கேளுமென்றார்
கூறுமொழிசிவனார் கோயில்திருவிளக்கு
ஆறாச்சுடரொளிபோ லாறுகிறவேளையிலே
நீண்டவிளக்கதனில் நெய்பருகவேநினைத்து
மூண்டோரெலிவிளக்கை முகத்தினாற்றூண்டிடவே
அவியாமலோர்விளக்கு அழகாகநின்றெறிய
உவியாமல்தூண்டுகிற வுற்றவெலிதனக்கு
பரமசிவனும் பார்வதியும்தான்மகிழ்ந்து
வாமருளவேணும் வாவென்றெலிதனையும்
அண்ணலார்தாமு மரசாட்சியாளுமென்றார்
மண்ணுலகையாளுமென்று வரங்கொடுத்தாரம்மானை
பூவுலகிலேபிறந்து புரந்தரன்லோகமெல்லாம்
தேவரடிபணியத் தேசமெல்லாமோர்குடைக்கீழ்
ஆளுகிறான்லோகமெல்லா மயிராவதத்தனைப்போல்
வாழுகிறானமாபெலிதான் வையகமெல்லாந்தழைக்க
ஆயிரம்லிங்க மடைவுடனேபூசைபண்ணி

சோபில்குளமுன் குடிபடையுந்தான்றன்முக்க
தானதவமும் தன்பரிபாலினமாய்
வானவர்க்குமெட்டாத மகாபூசைகுருபூசை
ஞானசிவயோகியென் நற்குணம்விற்பனமும்
தானிரக்க மறப்போகலிதீர்த்து
இரப்போர்க்கொருநாளு மில்லையென்றுசொல்லாமல்
பசிபாலனுன்னைப் பாக்கியமுந்தானருளி
ரிஷிகள்தபோதனர்கள் நெறிமுறைமைதப்பாமல்
பாருளும்காளில் பச்சைமால்சோதனைக்கு
சீரார்புவியில் திருமாலறியவென்று
வந்தார்புவியில் மாவெலிதன்சேதிகண்டு
சந்தோஷமாகத் தவத்தின்பெருமைகண்டு
ஒருவிளக்குத்தான்றாண்டி உலகமெல்லாந்தானுண்டு
திருவிளக்குலோகமெல்லாஞ் சிறப்பாயிருக்குமென்று
இவனுடையகர்மம் ஈரேழுலகமெல்லாம்
இவனுடையருபதாய்த் தீபச்சுடரொளியாய்
எங்கும்விளங்குமொளியா யிருக்குதுகாண் தானதவம்
பொங்குதுகாண்பூலோகம் பொய்யாமல்யாருக்கும்
இவன்செய்யுந்தானதவம் எள்ளளவுங்குற்றமில்லை
அவன்செய்தழிக்கவென்றால் ஆகாதெவராலும்
வள்ளல்கொடுத்தவராம் வளருதுகாண்மாவெலிக்கு
உள்ளக்கருத்தி லுபாயமென்னசெய்வமென்று
கள்ளத்திருடன் காயாம்பூமேகவர்ணன்
வெள்ளமனதில்வெறேநினைவுகொண்டு
மாபோனுந்தான்கேட்க மாவெலியுமப்போது
கேபோனுந்தவம் நீணிலத்திற்செல்வதற்கு
உகந்துநதிமூழ்கி ஓடுகிறநதிக்கரையில்
புகழ்ந்துசிவபூசை பூரணமாய்த்தானமுடித்து
மாதானம்பூமி வஸ்திரதானமுதல்
கோதானமும்நதியில் கொடுத்தருளவேபலவும்
கன்னிகைதானங்கள் காவலனுந்தான்கொடுத்து
உன்னிமனதில் ஒருமித்தக்கையாலும்
கொடுக்கிறனென்று கோபாலர்தான்கேட்டு
அடுக்கவேசென்று அந்தணர்போல்தானுக
நரைதிரையுமூப்பும் நடுக்கமுடன்வாதமுமாய்
புகையிருமலோடிப் புகைத்திருணாடகண்களுமாய்
நாசிபொழுகிபுடல் நாடித்தளர்ந்திடவும்
பாசிப்பற்றிப்பல்லும் புழுவாய்ஒழுக்கமுமாய்
போற்றுமபுடவையது கொள்ளலாமகாற்றுட
பீற்றபுடவையது பிராமணனாய்த்தானிருந்து
ஆங்கந்தநுமர்பெலியே அட்சதையுந்தாவெனவே
பன்னவிரியுடனிடத்தில் வந்தேமனமேவுமான்

அட்சதையுந்தான்கொடுத்து அந்தணனுந்தேகியென்றான்
பட்சமுடன்றேகியென்ற பார்ப்பானைவாருமென்று
எதுக்குவேணுமென்று இன்பமுடன்மாவெலியும்
சாதுவுடன்கேழ்க்கத் தள்ளாதமாமறையோன்
இடறிவிழுவார்போல் இளைப்புமிளைப்புடனே
வடதேசமேயிருந்து வந்தேனுனம்மிடத்தில்
உன்னிடத்திலிவந்தேன் உத்தமனேஎந்தனுக்கு
நன்னிலத்தில்நானிருக்க நாட்டமுடனிப்போது
இருக்கவிடந்தாரும் உன்னுடையசாலாலே
சுருக்கமாம்மூன்றடிமண் சொல்லிதத்தஞ்செய்யும்
போதுமெனக்கு புண்ணியமேசெய்யுமென்றார்
வாருமையாநீர்தாமும் மற்றதொன்றுகேளாமல்
எவ்வளவுகேட்டீர் இப்போதுநான்தாரேன்
சூலவுபயமாவெலிதான் கொடுக்கவருமனதாய்
கெண்டிதனையெடுத்துக் கெஞ்சாசலமுவந்து
கெண்டிகரையில்வேதியற்கு தத்தமதுசெய்கையிலே
துக்கதொருசுக்கிரன்றான் தன்னுடையசிஷனென்று
மிக்கதொருகெட்டித் தரையில்மீன்வண்டாக
இக்கெண்டிவாதானடந்தான் தெரிந்துமறைவேதியனும
தொப்பையாற்குத்திடவே இட்டியொன்றுகேட்டுவிட
நிற்றனில்சுக்கிரனை நிந்தித்தாரெல்லோரும்
ஈவோர்தனைவிலக்கி இப்படியாய்க்கொற்றவரும்
தீவினையாய்க்காண்மூடியுஞ் செய்வோரைதான்விலக்கி
என்றுசபைசொல்ல இருந்தார் தலைகவிழ்ந்து
ஒன்றுமுறையாமல் ஊமையைப்போல்தானிருந்தான்
தாரையினால்தண்ணீர் தாராளமாய்வீழ்ந்த
பூசையென்னமாவெலியும் புகழ்ந்துதத்தஞ்செய்தானே
தோற்றமதுவாங்கித் திருமாலும்பூவுலகில்
வைத்தாரொருபாதமண்ணில வானிலொருவாத
மற்றுமொருபாதத்திற்கு வகைமேதெனக்கேட்டார்
சர்த்தன்திருமால் கருணைக்கடவுளர்தாம்
ஈரடிமண்தானு மிவ்வுலகுமவ்வுலகும்
ஓரடிமண்ணொங்கனுக்கு உன்மேனிலுவையென்று
மாவெலியைவன்சிறையில் வைத்தார்காணவானகத்தில்
தேவலோகஞ்சிறந்து சிறையிருந்தான்மாவெலிதான்
வானவருந்தேவர்களும் மயோனைத்தான்வணங்கி
தானவரும்வேதியருஞ் சதுர்வேதநான்முகனும்
மாயவனைவாழ்த்தி மகிழ்ந்திருந்தாரம்மானை
தூயதொருபஞ்சாருந் தலைகுரமேமணடந்து
ஆயனிடசந்நிதிக்கு ஆசையுடனேலுமாய்
வேசமுடனடந்து விந்தாதுகாணவென்று
தாகமுடன்வீடணுந்தான் மாதவனைத்தான்தொழுது

வைகுந்தஞ்சேர வழிநிலையவேணுமென்று
மெய்கொண்டமூர்த்திஇன்னம் விளம்புமொருகதைதான்
சொல்லுகிறேன்முன்னாள் சுருதிமுதல்முக்கதைதான்
புல்லும்புவியும் புனல்முகடு ஆகாசம்
கல்லுங்கரடுங் கடலித்திசைகளெட்டும்
அல்லும்பகலும் அட்டதிக்குவெண்டிசையும்
இல்லாசகாலம் இறையோனொருத்தனுமாய்
அல்லைறமேவளங்கும் அகண்டமெல்லாந்தானாகி
வெளியாகியெங்கும் விளங்கியொளியாகி
அழியாதவன்தொருதன் ஆதியாய்நின்றமுதல்
யேகவெளியாகி எல்லாநிரந்தரமாயி
ஆகமவேதமன்றி அசைவுலகந்தானுமன்றி
தானாகிநின்ற தருமதயாபரனாய்
ஊனாயுயிராய் உடலுயிருலோகமுமாய்
வானாய்நிலனாய் மலைகள்சராசரமாய்
பானாய்மதியாய் பலவகையாய்தோற்றமுமாய்
அண்டமடுக்காய் அண்டபகிரண்டமுமாய்
பிண்டமுதலண்டமுமாய்ப் பிரமாண்டகோளகையாய்
தட்டுநிலைதற்பரமாய் சராசரங்களூர்வலமாய்
எட்டுதிசையும் எழிலானபகவானும்
ஆகட்டுமென்று அருளிநினைவுகொண்டு
ஈசிட்டரூபமென்றார் வந்துமுன்னேநிற்கலுற்றார்
எல்லாமுண்டாக்குமென்று இறையோன்பரையிடத்தில்
சொல்லாமுடிந்ததுகாண் தோற்றமொடுக்கமெல்லாம்
தற்பரமாய்தோன்றிச் சராசரங்களுள்ளதெல்லாம்
பொற்பரத்திலேயிருக்கப் புண்ணியனுந்தான்தோன்றி
பரந்தோன்றிநின்று பரத்தில்சிவந்தோன்றி
சத்திதனிற்பூதநல்ல தத்துவத்தில்நாதமுமாய்
முத்தினொளிபோலே மூலவிந்துநான்தோன்றி
விந்துதனில்நால்வேதம் வியனாறுசாஸ்திரமும்
தத்வங்கள்தொண்ணூற் றாறுடனேதானமைந்து
கத்துமறுபத்து நாலுகலைக்கியானமுமாய்
ஆராதாரமுதலாய் ஐம்பத்தோரட்சரமும்
வீடுஞ்சதாகோடி வேதமுதல்மந்திரமும்
மந்திரத்தால்வந்ததுவும் மாகவந்தசதாசிவமும்
அந்தசதாசிவத்தில் அரியமயேச்சுரனும்
இந்தமயேசுரத்தில் ஈன்றதொருருத்திரனும்
வந்ததொருருத்திரனில் வாசமுள்ளவிஷ்ணுவும்
விஷ்ணுவிலேயிருந்து விதிப்பிக்கவேதாவும்
சட்டமிடும்வேதாவில் தரித்ததொருஆத்துமத்தில்
ஆத்துமாவிலேயிருந்து ஆகாசந்தான்தோன்றி
சாத்துமிவர்கள் தன்னிலேவாயுவுந்தன்

வாய்விலேதேயுவுந்தான் வந்திருந்துஇப்போது
தேய்விலேஅம்புவுந்தான் சிறப்பாகத்தான்தோன்றி
சிறப்பான அம்புவிலே சிறந்தொருமண்தோன்றி
அறப்பெரியமண்ணிலேதான் அருபிவித்தாயுண்டாக்கி
ஒன்றுபத்துநூறும் கோடி நூறுயிரம்
அன்றுவிதிக்கையிலே அனந்த நூறுயிரமாய்
வானும்புவியும் வகைபலவுந்தானுகி
ஊனுமுயிரும் ஊர்வனமும்பட்சிகளும்
திக்குதிசையும் திசைசூழ்ந்தவையகமும்
நிற்குமோர் அஸ்திகிரி நேரான அஷ்டகெஜம்
ஈரேழுலகமுமாய் எண்பத்துநான்குயிராய்
பாரேழுந்தானுகப் பண்ணுமுடிகளாயிரமாய்
யோனிபலவாகி உருவதுவுமெவ்வாராய்
மானிலமேற்பற்பூடாய் மரங்கள்விருட்சமதாய்
நால்வகையுஞ்சாதியுமாய் நால்வேதசாஸ்திரமும்
நூல்வகைகளாகமுமாய் நோன்புவிரதமுமாய்
ஆண்பெண்ணிருவகையாய் ஆகாயமுமுதலாய்
காண்பதுகண்காமக் கலைக்கியானமும்பெரிதாய்
ஆசையெல்லாங்கூட்டி அடக்கிவைத்தான்பொக்கிஷமாய்
ஓசைபஞ்சசுரூபம் உறுசுவைநாற்றமுமாய்
வாசலோரன்பதுவாய் மடமாண்டம்வீடாக
பாசமெனுமைம்புலனும் பரும்பூதநாதகணம்
தத்துவங்கள்தொண்ணூற்றுறுடையகஞ்சலமும்
மற்றுஞ்சாரசரங்கள் மண்டலங்கள்மூன்றுடனே
சுத்தனண்டகூடவருஞ் சுவருமடங்கலுமாய்
பித்தகனரட்சிக்கும் பெருஞ்சீவன்காமுதலாம்
சந்திரனுஞ்சூரியனுந் தாரைநக்ஷத்திரமும்
இந்திரனும்வானவரும் இமையோர்முனிவர்களும்
தந்திரமாய்த்தான்வகுத்துச் சகமெல்லாமுண்டாக்கி
அந்தரத்தில்பேச்சு ஆர்பெரியோனென்றறியும்
நாமேபுவியில் நால்வகையுமேபடைத்து
தாமேநமக்குச் சரியில்லையென்றிருக்க
மாலவன்நானெல்லாம் வகுப்பித்தோமென்றுசொல்லி
ஆலமரத்தேறி அவர்துயின்றுராமாகில்
வீரவிரதமுமாய் விபரிதங்கள்தான்வளர்ந்து
கார்முகில்மேனியனுர் கண்ணர்தனையிப்போது
சென்றவனைநாமுஞ் சிலுக்கிட்டுப்போர்பிடித்து
வென்றவனைநாமும் வெகுபெரியோன்வேதமென
நினைத்துமனதிலெண்ணி நெருப்பிருகண் தீயெரிய
மனைந்ததெல்லாம்பொய்யாய் வகுத்ததெல்லாமிவனேதான்
நன்றுச்செனவே நடந்தான்வைகுந்தமதில்
அன்றிடைச்சிகையால் அடியுண்டமாலிடத்தில்

சென்றானிருந்தான் சீராட்டுவார்த்தையதாய்
கன்றார்கனியெரிக்க காயாம்புமேனியனே
உன்பேச்சுமென்பேச்சு உலகறியவேண்டுமென்று
தன்பேச்சுமேலாகத் தானெண்ணிநீயிருந்தாய்
என்பேச்சுங்கீழா யிருப்பதுவுஞாயமோதான்
மூன்பேச்சுமூவருட முப்பத்துமுக்கோடி
தேவர்களுமற்ற சிவபலராசிகளும்
மூவர்களுந்தாமறிய முழுதும்படைத்திருக்க
என்படைப்புக்குள்ளாக யிருந்துபிழையாமல்
தம்பிரான்தானறியச் சத்தியமாய்நான்பொருந்தேன்
எம்பிரான்தானறிய இனிமேலபொருக்கேகான்
ஈரேழுலகும் இகபரமுந்தானறிய
பாரேழுநான்படைத்தேன் பச்சைமால்நீயேது
இப்பாலென்கையால் யீரேழுலகமெல்லாம்
மெய்ப்பானசத்த மேகமுடனேழ்கடலும்
அஷ்டகுலபர்வதமும் அஷ்டமாநாகமுதல்
அஷ்டகெஜமட்டும் அடங்கலுமேதானுத
மரீசமுதல்சத்தரிஷி மைந்தருமென்னுடைய
அருகாகநானீன்ற அன்புடையமைந்தர்கள்தான்
குருக்களொடுதேவர் குலவுசந்திரசூரியரும்
பெருக்கவேகாசிபரும் பெரியோர்முதலாக
அஷ்ட்டவசுக்கள் அரசரொடுராட்சதரும்
திட்டமுறுகாந்தருவர் சித்தவித்தியாதரரும்
கிம்புருடர்கின்னரர்கள் கனநாகர்தன்னுடனே
கிம்புருநாரதரும் தோற்றமெல்லாமென்னிடத்தில்
இந்திரனுமக்கினியும் இயமனுடனிருதி
வந்தருணன்வாய்வு குபேரன்பாயீசானன்
இட்டமுடனட்டதிக்குப் பாலகருமென்னாலே
இட்டமுடனகலச் சீவன்முதலென்னாலே
உண்டானதென்று உன்மனதிலெண்ணமல்
விண்டோமிவனேயென்று மேதினியிலிவனுடைய
உந்திக்கமலத் துதித்தானிவனெனவே
இந்திருந்ததெல்லாம் தீர்க்கமுடன்விட்டுவிடு
எதிநலொன்றாய் என்னுடையகைகிநேவாய்
வாதிநலெவ்வுயிரும் வகுத்துவிடாதிருந்தால்
ஆரைநீரட்சிப்பாய் அச்சுருபமில்லாதாய்
பேதையறியாத பேச்சுதான்பேசுவாரோ
சுவரில்லாச்சித்திரமுந் தொட்டெழுதவல்லாயே
எவரைமயக்குகிறாய் இத்தொழிலைவிட்டுவிடு
நால்வரையுமநீதான் ரட்சிப்போவென்றதெல்லாம்
பெருமாள்பேசாதே மறந்துவிடுமிப்போது
வுன்னைவிட்டுவேறே உன்னைப்போலொருவனுமாய்

பின்னையுண்டாக்கிப் பிரியமுடன் ரட்சிப்பேன்
ஆக்கமுடன்பாற்கடலில் அங்கேபள்ளிகொண்டால்
ஏற்கவேயோடி இப்போதொளித்திருப்போம்
என்னுடையபேரன் எல்லார்க்குமகாரிஷி காம்
உன்னுடையசெய்வினையா லுன்னையேதான்சபித்தான்
பத்துச்செனனம் பாரில்பிறந்திருந்தும்
முற்றும்மந்தச்சாபம் முழுதுந்தொடர்ந்தவர
விட்டதிரியாயோ விதித்தெழுமென்கையினால்
இஷ்டமுடனந்த எண்பத்துநான்குலட்சம்
எல்லாவுமிருக்கு மின்னபடியென்றெழுதி
கல்லாவெள்ளைகையுங் கருக்கதுவுங்காணீரோ
என்னுடையவுந்தியி லுதித்துவந்தோமென்றுசொல்லி
எனனுடையபேரை இகழ்ச்சியாய்ச்சொன்னீரே
மூந்தவொருதூணில் முளைத்தெழுந்தசிங்கமாய்
வந்தஇரணியனை மார்பைப்பிளந்துவிட்டீர்
அந்ததூணுனக்கு அன்னையோ தந்தையோதான்
தந்தையதுதானானால் தகப்பனுநீயெந்தனுக்கு
அக்கினிதான்மூங்கிலுக்குள் அவதரித்துவந்துபின்னும்
முக்கியமாய்மூங்கிலெல்லா முழுதும்வெந்தநீறாகி
போட்டதுபோல்நான் புந்திதனில்வந்துதித்தேன்
வாட்டமில்லாவுந்தனுக்கு மாற்றானாய்வந்துதித்தேன்
என்றுமலரோனிவை யுரைக்கமாயவனும்
நின்றுமனதின் நினையாதெல்லாம்நினைந்து
வேதனிவைசொல்ல வெந்தணலின்னாராசம்
காதில்வெகுதுன்பங் கையால்சொருகினர்போல்
அகோரம்பிறந்து அனலாய்புகையெழும்ப
விகாதமுடனகைத்து வேதனுக்குஇந்தவிதம்
வந்ததென்னவென்று மனதிலெண்ணிமாயோனும்
இந்தமகிமை யினியறியவேணுமென்று
வேதாவைப்பார்த்து விஷ்ணுவுங்கோபமதாய்
மாதாவுனக்கெந்தன வயிரியென்றறியாமல்
தீதாயுரைத்தாய் சிறுபிள்ளையாகையினால்
வேதாவுநீதான் விபரமறியாமல்
மீதாயச்சிறுபிள்ளாய் வெகுளியாய்த்தானுரைத்தாய்
தந்தையதுகுற்றமென்று தானெண்ணக்கலாகாது
எந்தவிதநம்மையுந்தா னிகழ்ச்சியாய்த்தானுரைத்தால்
இப்படிநீசொல்ல யெவர்பொறுப்பார்கண்டீரே
அப்படிக்கொற்றபிள்ளை அகங்கள்தான்செய்திடத்தில்
உன்னைப்போலெந்தனுக்கு உற்றபிள்ளைதானிருவர்
பிள்ளைப்புயபலமும் பராக்கிரமமுள்ளவராய்
ஈதுடன்முன்னாள் என்வயிற்றிலேபிறந்து

தந்தையென்றுபாராமல் தாளாண்மைதன்னுடனே
வந்தெதிர்த்துநம்முடனே மற்பொருதுந்தானவரை
கொல்லமுடியாமல்மனங் குழைந்துவெகுநாள்பொருதி
வெல்லவுபாயம் வேறேநினைவுகொண்டு
சற்பனையாய்க்கொன்று தாரணியிற்போட்டுவிட்டேன்
அப்படியேயுந்தனுக்கு அரிவுவரச்செய்தாக்கால்
உற்பனமென்றெண்ணாது உன்கந்தைநில்லாது
நற்புடையதேசமதில் நல்வினைகளாயிருந்த
பிணந்தனையுங்கீறிப் புறையரவேதானூற்றி
பண்புடனே தானிருந்தால் பதராதேயாறிவிடும்
அத்தன்மைபோலே அகந்தைசெய்தபிள்ளைகளை
உந்தன்சிரசிலோர் சிரசைஈசுரனார்
முந்தவேகிள்ளுகையில் முளைத்ததோவுன்சிரசு
அந்தமட்டுமுந்தனுக்கு ஆண்மையொன்றுமில்லாதான்
எந்தமட்டுமென்செயல்தான் எவர்தனக்குந்தலைவன்
அனந்தம்பலமுடிகள் ஆயிரந்தன்னிலொரு
கனத்ததனங்கள் கனத்தசிரத்தோன்றனக்கு
பாதாளலோகம் படைத்தோமெனும்பெருமை
மீதாகப்பேசுவது வீரியமோவுந்தனுக்கு
சொல்லுமுந்தன்வேதமெல்லாஞ் சோமுகாசூரனுந்தான்
நில்லுமெனவேபரித்து நெடுங்காலன்கண்டேகி
மீன்வடிவுகானெடுத்து வேதமதைநான்பறித்து
நான்மிகவுந்தந்த நன்றிமறந்தாயே
நச்சுமரமாலும் நட்டமரந்தன்னையிப்போ
அச்சமறநாமு மழிப்பதுவும்போகாதே
என்பதினால்நாமும் இந்தமட்டுந்தான்பொறுத்தோம்
உன்பலத்துக்காட்டாமல் ஒத்திருந்தோமெண்ணாதே
உயித்தம்பண்ணிநாமு முன்னைமிகக்கொல்வதற்கு
சயித்தின்றென்சுற்றமதைத் தள்ளியிங்கேமீறிவந்தாய்
இனிமேலுங்குற்றமில்லை என்றேநெடுமாலும்
கண்சிவந்தமாயன் கண்கள்பொறிபறக்க
ஓக்கெழுத்துவார்த்தைசொல்ல உந்திமலரோனும்
தூரத்திவெட்டுண்டாப்போல் துணுக்கென்றெழுந்திருந்து
ஒருவர்க்கொருவர் ஒருபூசலாய்விளைந்து
இருவருமப்போது மெதிர்த்துபொருவதற்கு
மட்டுமிஞ்சுவார்த்தைகளாய் வாதுபலதான்கூறி
கட்டுவிடப்பேசிக் காவலர்கள்தானடுங்க
குதித்தாரிருபேருங் கொடிமுடிகள்தானதிர
துதித்தார்பெருமாளும் துடைதட்டியேதுசொல்வார்
முன்னாளரக்காதன்னால் முறையிட்டார்நம்மிடத்தில்
மன்னவனுக்காக வந்துநான்ராட்சதரை
கொன்றுங்கள்தெய்வ பதவிகொடுத்தோமே

சென்றுக்கள்தெய்வ பகலிய துசேர்ந்திருந்தும்
நன்றிமறந்தென்னையிப்போ நையாண்டிபண்ணுகிறாய்
மன்றில்பொருத வாதாடிவந்தெதிர்த்தாய்
இனியறிவோமென்று எதிர்த்தாரிருபேரும்
பனிவரைகள்கொண்டும் பதைத்தெதிர்த்துநின்றுப்போல்
திக்கெட்டுந்தானதிர திசைகள்கிடுகிடென்ன
தர்க்கமிட்டுஇந்தத் தரணியெல்லாந்தானடுங்க
இடசாரியாக வெடுத்தடியும்வைக்கவுந்தான்
அடைவுடனேவேதன் அடுத்துவலசாரி
கால்களோடுகால்மாறி கைகளோடுகைசேர்த்து
மேல்களொடுமேல்சேர்த்து வேகமுடன்தானிருவர்
ஒற்றுமிருத்து ஓங்காரங்கொண்டெழுந்து
ஆர்த்துச்சினந்து ஆங்காரங்கொண்டெழுந்து
கடிங்கிமலைகலங்கி நட்சத்திரமுதிர
கடுங்கோபங்கொண்டு கதிரோனுந்தாமசைய
பூமியதிரப் புவனம்பதினாலும்
சாமிதிருமாயவனார் தர்க்கமதுகாற்றுமல்
அரவுகலைமாவ அண்டங்கிடுகிடென்ன
இரவுபகலாக எம்பெருமாளங்கேரம்
இருபேருந்தான்பொருந்தார் இமையோருந்தானடங்க
ஒருவற்கொருவ ரொத்துப்பொருகையினால்
குத்துகின்றசத்தமது கொண்டலிடிபோலாகி
எத்துகின்றகால்களினால் எடுபட்டுமாமலைகள்
தூளாய்நருங்கி தூளாய்பறந்துவிடும்
ஆளாயிருபேரும் அடைவாய்வெகுளிகொண்டு
வலசாரியாக மாயோனடிபணிந்து
மலயோனிடசாரி வருவதும்பூவுலகில்
இரவுவந்தழுநிகைபோல் எம்பெருமான்தன்மேனி
இப்படியொருநொடிக்குள் இரவுபகலாய்விடுமாம்
மற்பிடித்துசக்கரம்போல் வட்டமிட்டுசுற்றுகையில்
பூவலகிலுள்ள புல்பூண்டுசீவசெந்து
தாவுமிடமில்லாமல் தயங்குமாமந்தரத்தில்
ஆகையினாற்றேவர்கள்தான் அயிராவதத்தினிடம்
இவர்களுக்குமுன்னே எம்பிரான்தன்கலக்கம்
அனல்சிவனிடத்தில் அபயமிடவாருமென்று
போனார்கள்தேவரெல்லாம் பொன்மலையைத்தானோக்கி
பரனேயுனக்கபயம் பாருலகிலிப்போது
மாலோனும்வேதாவும் மல்லுத்தமாய்கையினால்
காலாவகைச்சீவன் நாங்கள்முதலிப்போது
நிற்கநிலையில்லாமல் நீந்திவந்தோமுன்பாதம்

தக்கதனைநீரெனவே தானுமேநம்பிவந்தோம்
சூறுவளிகாற்றுச் சுழல்காற்றுப்போலாகி
நீராகிலோகம் நெருப்பாயெரியுதையா
அந்தரமுவானம் அச்சழிந்துபோகுதையா
இந்திரனுமட்டதிக்கு யெல்லாமலையுதையா
சந்திரனுஞ்சூரியனும் தானெருந்துபோனார்கள்
மந்திரங்கள்வேதமெல்லாம் வரமழிந்துபோகுதையா
அடுக்குநிலைபோர்ந்து அலைகடலுந்தான்சுவறி
உடுக்களுதிர்ந்து உயர்முகடுந்தான்கிழிந்து
எல்லாந்தடுமாறி எங்குதுகாண்மூவுலகும்
நில்லாநிலையில் நிற்கும்பராபரமே
நாதனேயெங்கள் நடுக்கந்தவிர்த்தருளும்
வேதனிடபோறும் விஷ்ணுவின்தன்போரும்
பார்க்கமுடியாது பரனேபராபரனே
காக்கவிதுசமயங் கடைக்கண்கிருபையினால்
ஏரிட்டுப்பாருமையா இருவருடன்போரை
மரையவனேயெங்கள் இடுக்கந்தீர்த்தனே
முறையோமுறையோங்காண முக்கணனே தஞ்சமென்று
இமையோர்முறையிடவே ஈஸ்வரனுந்தானிரங்கி
அம்மையும்மையுங்கள் ஆபத்துதீர்ட்போம்நாம்
என்றுசிவனார் இருவருடபோர்விலக்க
குன்றுவடிவாய்க் கொழுங்கனலாய்தான்வளர்ந்து
ஒன்றாகலோகம் ஊடுருவிதான்வளர்ந்து
இருவர்தனக்கு இதமாய்நடுவாகி
உருவன்றிஅக்கினியால் ஓங்காரக்கம்பமதாய்
ஓருருவாய்நின்றார் உருகித்தணலாகி
ஆறுமரியாத அகண்டத்தெளியாகி
அந்தமட்டு அறியாமல்தானும்
சிந்தைகலங்கித் திகைத்துநெடுமூச்செரிந்து
அக்கினியைக்கண்டு அகண்டிருவர்தான்விலகி
நிற்கின்றார்கண்கள் நீலமதுதான்பறந்து
பக்கமெல்லாமக்கினியும் பலயணையுமக்கினியும்
திக்கெல்லாமக்கினியாய்ச் சிவந்ததுகாண்லோகமெல்லாம்
எந்தவிதமென்று இருந்தான்மதிமயங்கி
வந்திவசோதனையை வகுத்தரியமாட்டாமல்
நொந்திடைந்துநின்றளவில் நோக்கமுடனேசிவனும்
இந்தமகிமை இவரிவரென்றுசொல்லி
ஞானக்கண்கொண்டரிவர் நல்லோர்பெரியோர்கள்
ஊனக்கண்கொண்டரிய ஒவ்வாதெவராலும்
பார்க்கமுடியாது பாவியேயென்றுசொல்லி
தீர்க்கமுடனிருவர் தெளிந்துவகைபேசி
இந்தமலைப்பெருமை யாரரியவேணுமென்று

அந்தமலையை அடிமுடியுந்தானறிய
தங்களிலேசம்மதித்துத் தானேயிருபேரும்
அங்கெழுந்துவேதன் அன்னவடிவாகி
முடிதேடியேபறந்தான் மூகவெளியூடுருவி
அடிதேடிமாயன் ஆதிவராகமதாய்
மேலேழுலோகம் வேதனுமேபோரிய
சீலமுடனேபறந்து தேடிநொன்விண்ணுடைந்து
கீழேழுலோகங் கேசவனுந்தானிடைந்து
நீளநுழைந்து நெடியோனுங்காணாமல்
வாடிமனதிடைந்து வந்திருந்துமாயோனும்
தேடியுங்காணாமல் திரும்பினார்மாயோனும்
வந்திருந்துமாயன் மனதிற்பலநினைவாய்
இந்தயுலகம் ஈரேழுலோகமெல்லாம்
ஆராய்ந்துதேடி அரைட்சணத்திலாயிரமாம்
மார்பிளந்துங்காதவழி யாராய்ந்துங்கண்டறிவோம்
ஆதிவராகமென்னும அதிரூபங்கொண்டெழுந்து
சோதிதனைத்தேடி தொல்லுலகமூடுருவி
கொம்புகளுந்தேய்ந்து குளம்புகளுந்தான்றேய்ந்து
சாம்பசிவன்பாதந் தான்காணமாட்டாமல்
வருஷமொருநூறு மண்ணுலகுமோரேழும்
விரிக்கொண்டுபாதாள மெல்லாம்போயூடுருவி
இன்னபடியென்றறியோம் ஈசுரரின்தன்பாதம்
அன்னமுயர்த்தோ அவன்காண்டதென்ன
எண்ணிமனதில் இறையோனுந்தானினைந்து
மண்ணிலிருந்து மனதிற்றியானமதாய்
ஞானக்கண்கொண்டு நாட்டத்தில்நோக்கமதாய்
மாய்கையைக்கருத்தாய் மவுனமாய்தானிருந்தார்
பட்சிவடிவுகொண்டு பறந்தொருவேதாவும்
கட்சியொருகாதங் கணப்பொழுதளாயிரமாம்
வெளிகடந்துசென்று மேலேழுலோகமெல்லாம்
தெளிவுசற்றுமில்லாமல் திகைத்துமனமிடைந்து
அப்பாலும்நூறு ஆயிரங்காதவழி
மெய்ப்பாய்வெளித்தாண்டி மெய்யசைந்துவேதாவும்
சிரசிரண்டுதான்றேய்ந்து செயல்முழுதுந்தாண்டிரைந்து
அண்டகடாகமட்டு மாராய்ந்துமின்னமும்நாம்
கண்டதில்லைநாமுமினி கம்பமதுத்தன்முடியை
இத்தூரம்வந்து இப்படியேயல்லாது
சற்றுமலைகிட்டச் சமீபமதுகாணாமல்
அளவற்றசோதனைக ளாருயந்துபற்று து
களபமணிமாயன் கண்டானோவெப்படியோ
ஆரறியப்போறார்காண் அளவளவாய்நின்றானே
வேரறியச்சேதியிது பேச்சுக்குமெட்டாது

அங்குமிங்குமொன்ற யடிமுடி தானாகி
எங்குநிறைந்திருக்கும் ஈஸ்வரனையல்லாது
வேறேயுபாயம் விடைவுசற்றுமில்லையிங்கே
கூறேனொருவசனம் கொண்டல்வண்ணன் தன்னுடனே
பகைமுடித்துக்கொண்டதொரு பாவந்துலையாதெனவே
வகையாயுரவுசெய்து மகனுடனுந்தமும்
இணக்கமுடன்கூடி இருந்துவிடாமலிப்போ
பிணக்கமுடனாலும் பிழைமோசம்போனோமே
என்றுமலரோன் எண்ணிமனம்புண்ணாகி
ஒன்றுமுறையாமல் உள்ளமெல்லாம்புண்ணாகி
இருக்குந்தருவாயி லீசர்முடிமேலிருந்து
வருக்கமுள்ள தாழை மலர்தான்வருகிறதை
கண்டுமலரோனும் கற்பனையாய்த்தானினைந்து
உண்டுபண்ணிப்பொய்யை உரைக்கமனதிலெண்ணி
பொய்சொன்னோமானால் பொருந்துமேசொல்லவென்று
மெய்யாகச்சாட்சி விளம்புதற்கேதகையை
வசப்படுத்திக்கொள்ள மனதில்நினைத்துக்கொண்டு
சிறப்படுத்தவேதான் நேராகவாரதொரு
கேதகையேநீதான் கிருபையுடனெங்கிருந்து
மாய்கையாய்வாரீர் வருத்தமென்னசொல்லுமென்றார்
அப்போதுகேதகைதான் ஐயனே இனிகேளும்
இப்போதுஈஸ்வரனார் ஏற்றசடைமுடிமேல்
இருந்துதவறிவிழுந் தெடுபட்டுநான்வாறேன்
பொருந்தவேநான்பாவி டொல்லாதகாலமதாய்
தவறிவிழுந்து தங்குமிடமில்லாமல்
அவமிகப்பட்டு அந்தரத்திலேயலைந்து
வாடியிடைந்து வருகிறேனித்தூரம்
நாடியசைந்து நடைதளர்ந்துகால்கள்நொந்து
வருகிறேனையா மகாகோடிகாலயுகம்
ஒருத்தரையுங்காணேனுன் உந்தனைரெதிர்கண்டேனிப்போது
இன்னம்நிலத்தில்விழ எத்தனைநாட்செல்லுமதோ
தன்மையாய்ச்சென்று தமையாரநானிருக்க
எத்தனைநாட்செல்லுவதோ இன்னபடியென்றறியேன்
கர்த்தனிடசெயலைக் கணக்கிடவும்போகாது
எப்படியோவென்று இவ்வசனங்கேதகைதான்
செப்பமுடன்சொல்ல தீர்க்கமுடனான்முகனும்
நல்லதுதான்கேதகையே நான்சொல்லநீர்கேளும்
வல்லதொருமாயனுக்கு மாநிலத்திலெந்தனுக்கு
வாதுவந்துசண்டையிட்டு மற்றபோருதான்பொருதி
நீதிவந்துமூண்டிருவர் செலுத்தமுடியாமல்
நீபெரியோன்நான்பெரியோ னென்றுசிலகாலம்
வாய்பேசிக்கொண்டு வழக்குரைத்துப்போருடி

மார்பிழந்துலரன்மெ வலுத்துச்சினமாகி
மேற்படியாலோக மேலேழுந்தானதிர
அடுக்குநிலைகுலைய அண்டபகிரண்டமெல்லாம்
ஒடுக்கங்கள் தானதிர ஒலிதிரையுந்தான்கலங்க
பரிதிமதிகழலப் பருவரையுந்தானதிர
கருதியலோகமெல்லாங் கடுகிபொடியாக
தேவர்கள்வானவர்கள் திக்குத்திசைசூழ
மூவர்களுமாமுனிவர் முப்பத்துமுக்கோடி
யாவர்களும்பாரில் அந்திரமுந்தானசுழல
போராடிநின்றோம் புவனந்தனிலிறங்கி
சீராடியிப்படியால் சென்றுசிலகாலம்
ஒன்றையொன்றுமறவாமல் உருபூசலாய்விளைந்து
நின்றோஞ்சிலகாலம் நீணிலத்தோர்போவெனவே
அந்தமொழிகேட்டு அரனோடரனிருந்து
வந்துவிலசகவென்று மாய்கையாய்தான்தோன்றி
இருவருக்குநடுவே எழுந்துரேயக்கினியும்
ஒருவருக்குந்தோற்றாமல் ஊடேசுடர்வடிவாய்
வந்ததுகாண்சேதி மலைபாய்பருவதமாய்
அளந்ததுகாண்காணாது ஆகாயமூட்டுருவி
நின்றநெருப்பேதெனவே நிலையறியமாட்டாமல்
ஒன்றையொன்றும்பார்த்து உழன்றுமனம்புண்ணாகி
நின்றுமயங்கி நிலைகள்தெரியாமல்
நன்றுபதுமையிது நாமறியவேணுமென்று
தங்களிலேதாங்கள் சம்மதித்துக்கொண்டேதான்
இங்குவந்தகாரணந்தான் யென்னென்றறிவோமென்று
அடிதேடிமாயன் ஆதிவராகமதாய்
முடிதேடிநாமும் மொழிந்துவகைபேசி
கண்டார்பெரியோன் காணாதவர்சிறுவன்
பண்டோரறியாப் பழம்பொருளைக்கண்டறிந்தால்
அன்றுபெரியோர் அவருந்தானென்றுசொல்லி
எனதுவகைபேசி யிருவருமேசம்மதித்து
பாதாளஞ்சென்றார் பச்சைமால்கண்டிடரோ
பீதானவிண்ணகத்தில் வேகமுடனான்தானும்
வந்தேதகினைப்பாய் வலிவுமிகக்குறைந்து
உந்தனையேகண்டேன் உள்ளமெல்லாந்தான்குளிர்ந்தேன்
கண்டபோதிப்போ கவலையெல்லாந்தானதீர்ந்தேன்
அண்டினேனுன்னை ஆபத்துகாத்தருளும்
நாரணனுந்தான்மகிழ நமக்கோர்சகாயமென்று
ஆரணனுங்கேட்க அடைவுடனேகேதகையும்
எதுதான்சொல்லுமென்று யின்பமுடன்தான்கேட்க
சர்துவால்நான்முகனுஞ் சாற்றினார்நல்வசனம்
அந்தமொழிகேட்டு அரகராவென்றுசொல்லி

விந்தையுடன்கேதகையும் மெய்சோர்ந்தங்கேதுசொல்வார்
என்னவிதிப்பயனோ யீசர்முடிமேலிருந்து
அன்னமேகேளு மவதிவந்துபித்தாரம்
தவறினேன்கண்டீரே தரிக்கவிடமெல்லாம்
குவலயத்தீர்சொல்லக் கொம்பிறந்தமந்தியைப்போல்
ஆகாதபாவி யடியேனொருபொருட்டாய்
வாகாகயென்னுடனே வருத்தமாய்நீர்சொன்னீர்
எங்கும்நிரந்தரமாய் யென்னுக்குளெண்ணெயைப்போல்
அங்குமிங்குமொன்றாய் அடைக்கலமேயெவ்வுயிர்க்கும்
நிற்கும்பராபரனே நீக்கியென்னசொன்னாலும்
தங்களுடன்கேட்க தகுமோதானுன்முகனே
ஆலைமூன்றனில் அமரர்முதல்தேவர்களும்
வானோரமிர்தம் வாரிதனில்கடைய
ஆலவிஷம்பிறந்து அகிலமெல்லாந்தான்பறந்து
காலவிஷஞ்சீறிவரக் கண்டமரர்தாமோடி
அரனுக்கபயமென்று அமரருக்காயோடிவந்து
பரனுக்கடிபொருட்டாய் பானமாயவ்விஷத்தை
கொள்ளலையோவீசர் குவலயத்தோர்தான்பிழைக்க
தள்ளவில்லையீசர் சற்புருஷர்மீதனவே
பெரியோரிவையெல்லாம் பேதமொன்றுசொல்லார்கள்
தெரியாதார்க்கெல்லாந் தெளிந்துமனந்தேறி
என்னபிழைவந்தாலும் ஏற்பார்பெரியோர்கள்
இன்னதொன்றுஞ்சொல்லார்கள் மேலானநல்லோர்கள்
அடுத்தோரைக்காப்பார்கள் அடைக்கலமாய்வந்தவரை
விடுத்தேதுஞ்சொல்லார்கள் மேலானவேதியர்கள்
நமக்குமொருசெய்தி நாம்சொல்லநீர்கேளும்
உமக்குச்சுகிர்தமுண்டு ஒருசொல்லுரைத்தாலும்
ஈசர்முடிகண்டுநான் யியம்புமென்மாலிடத்தில்
ஓசையிடநீர்தாம் ஓமென்றுரையுமென்றார்
ஆபத்துவேளைதனில் அஞ்சாதேயென்றொருபொய்
பாவத்தைப்பாராமல் பயின்றோரைக்காக்கிலையோ
ஆர்க்குமொருசமயம் அவரவர்க்குமிப்படியே
பார்க்கவல்லோவேணும் பாவியோநாம்தாமும்
காக்கவல்லோவேணுமென்று கற்பித்தநான்முகனும்
தங்களுக்குத்தானே தங்கள்சஞ்சலபடவும்
பார்த்திரோநீரும் பாருங்காணவேதியரே
எப்போமுமக்காக யிசைவோங்காண்வேதாவே
உங்களுக்குநானும் உதவேனோபூவுலகில்
தங்களுக்குள்தானே சம்மதித்துதானுமப்போ
பொய்சொல்லக்கேதகையும் பொருந்திவேசம்மதித்து
மெய்சொல்வேமறந்து விதியோனுக்காகவேதான்
பொய்யொன்றுசொல்லப் பூமிதனில்வந்திறங்கி

ஞாயமறக்கேதகையு மன்னமுந்தானென்றாகி
மேதினியில்வந்து விஷ்ணுவைத்தான்பார்த்து
ஓதியபிரமாவு முயர்வாகனம்புகுந்து
அரைநிமிஷத்தன்னி லாயிரங்காதவழி
விரையவேயிப்படியாய் வெட்டவெளியூடேபோய்
கண்டேன்முடிநான் கண்டீரோசேவடியும்
கொண்டல்வண்ணரப்போ கொதித்துமனமிடைந்து
பன்றிவடிவெடுத்துப் பாதாளலோகமெல்லாம்
வென்றியுடன்தேடி மெலிந்தவந்தேனல்லாது
காலோன்சிவபாதம் காணவுந்தான்காட்டாமல்
வீணேதிரிந்து வெளியேறிவந்தோங்காண்
முடிகண்டோமென்று மொழிந்தாயேநீபெரியோன்
அடிகண்டோமென்றா லனலாயெரிந்திடுவேன்
கண்ணாரக்கண்ட காட்சிதனக்கொப்பினைதான்
விண்ணோரறிய விளம்புமென்றுதானுரைத்தார்
அப்போதுவேந்தன் சத்தியமோவென்வார்த்தை
இப்போதுநானும் யீசர்முடிமேலிருந்து
நான்கண்டபோது நமக்கிவர்சாட்சியென்றார்
ஆர்காணும்விஷ்ணுவே அப்போதுநான்கூட
என்றந்தக்கேதகையு மிவ்வார்த்தைதானுரைக்க
சென்றிந்தப்பொய்யைச் சிவனறிந்துகோபமதாய்
நெடுகவளர்ந்த நெருப்புமலைதான்கொதித்து
திடுதிடெனவேமுழங்க செந்தீயகோரமதாய்
நெறுநெறெனவேருமறி நேரேபடீரெனவே
கிறுகிறெனச்சக்கரம்போல் கீழேழுமேலேழும்
லோகமெல்லாந்தானதிர நொறுங்கிப்பிடியேறெனவே
சக்கரமுந்தான்சுழறி தரணியெல்லாஞ்செந்தூளாய்
வெடித்ததுகாணந்த வெந்தணல்போல்நின்றமலை
பிடித்ததுகாணெங்கும் பெருந்தீயகோரமதாய்
விண்ணுலகிலுள்ளோரும் மெய்பதறியுள்ளடங்கி
மண்ணுலகிலுள்ளோர் மதிமயங்கிமூர்ச்சையதாய்
இறையோனேயெங்கள் யீசுரனேயென்குற்றம்
முறையோவுனக்கபயம் மூர்த்தியேகாருமென்று
சகலமெல்லாஞ்சீவ சராசரங்களுள்ளதெல்லாம்
அகலாதசோதி அரனேயுனக்கபயம்
பராபரமாய்நின்றோனே பரனேயுனக்கபயம்
தாரகாமாய்நின்ற சர்வதயாபரனே
காருமிதுசமயம் காரணமாய்நின்றோனே
வாருமிதுசமயம் வள்ளலேயிப்போது
நோவினை தீரச் சித்தம்பொருத்தருளும்
வாறதகுற்றம் வந்தாலுமெங்களுக்காய்

வந்திப்போகாத்தருளும் வடிவேசரணமையா
சந்திப்பவாக்குத் தரவேணுமீசுரனே
அபயமென்றவெங்களுக் காச்சலொன்றுகாத்தருளும்
சயையதிரவேகடங் தாண்டவராயநின்றேனே
தங்கமுடியாது தாராதலங்களுள்ளதெல்லாம்
ஏங்கியிடைந்து யிடுக்கம்படுகுதுகாண்
ஓங்காரந்தானோங்கி உத்தமமாய்த்தானமர்ந்து
செஞ்சடர்போல்நின்ற சிவனும்தயவுவந்து
அஞ்சலென்றுவந்து அரனருமேதுசொல்வார்
ஏதுகாண்நான்முகனே என்முடியைக்கண்டேனென்று
வாதுசொல்லிமாயனுடன் வழக்குரைத்துநின்றாயே
காணுதகம்முடைய கண்டனென்றுசாட்சியதாய்
வீணவார்த்தை விளம்பினையேயிப்போது
காதாரக்கேளாமல் கண்ணாரக்காணாமல்
கேதகையேசொன்னக் கெர்வமென்னசொல்லுமென்றார்
முத்தொழில்போல்சற்றே மூருவலதுசெய்தளவில்
அண்டகடாகம் அகண்டவெளிக்கப்புரமும்
கொண்டலிடிமின்போல் கொழுங்கனலுஞ்சோதியுமாய்
விண்டலங்களெல்லாம் மின்வந்துதான்மூடி
கண்டஅசுரரெல்லாம் காலோடுகோல்பின்ன
வீழ்ந்துகிடப்பாரும் மெய்சோர்ந்தேநிற்பாரும்
தாழ்ந்துபணிவாரும் தர்மமோவென்பாரும்
சந்திரனுஞ்சூரியனுந் தலைகெட்டநாலதுபோல்
இந்திரனும்வானோரும் யிமையோர்முனிவோரும்
அந்திரமும்வானும் அடுக்குநிலைகுலைந்து
போனதுதான்கண்டேஇப் பொருமியலரோனும்
ஆனசவுரியமும் ஆங்காரமுள்ளதெல்லாம்
நீங்கிவனுக்குரைந்து நிலத்தில்வலைகவிழ்ந்து
தூங்கியிகவேங்கித் துக்கித்தானான்முகனும்
அப்போது தான்சிவனும் ஆயனைமுகம்நோக்கி
இப்போதுபொய்யுரைத்தா யிந்தவுலகுதனில்
கோவில்குளம்பூசை குவலயத்திலில்லையென்று
சேவில்வருமீசா செப்பினாரப்போது
செப்பியசொல்மாயன் திருச்செவியில்கேட்டவுடன்
மெய்ப்புடையஈஸ்வரனை விழுந்துநமஸ்கரித்து
ஆடினார்மாயன் அரனைமிகக்கொண்டாடி
பாடினார்மெய்மகிழ்ந்து பணிந்துபணிந்தவன்புருகி
ஆனந்தக்கூத்தாடி அருட்கண்ணால்நீர்சொரிய
தானந்தமாகின்ற சதாசிவமேயுன்மகிமை
ஆரறிவாருன்கோலம் அகண்டமெல்லாமொன்றாகி
பேரறியார்ஊரறியார் பெருமைதனையாரறிவார்
வேரறியார்தூரறியார் மேலறியார்கீழறியார்

ஆரறிவாரெங்கும் ஊடுருவிநின்றானே
சீரியாருந்தன் செயலறியார்யாவர்களும்
கூரியார்வீறுசெய்வார் குணமறியமாட்டார்கள்
நானேயறிகத் தகுமோதானுன்பாதம்
பேயேன்சிறியேன் பிழையேதுசெய்தாலும்
பொறுத்தருளவேணும் புரமூன்றெரித்தானே
சிறுத்தொண்டன்தன்மனையில் சென்றமுதுகொண்டானே
ஐயாபொறுத்தருளும் அடியேன்றனக்காரும்
மெய்யாசரணமென்று விஷ்ணுவுமப்போது
தோத்திரங்கள்செய்து தொழுததெல்லாங்கண்டுசிவன்
நேத்திரத்திறைமேல நெடுமாலேக்கண்டழைத்து
வதுவரமுமாளதெல்லாம் இப்போதேயுந்தனுக்கு
சாதுவாய்த்தேதம் சந்தோஷமாச்சுதென்று
ஈசர்புகழ்ந்துரைக்க எம்பெருமான்தானினைந்து
நேசமுடனிருந்தார் நீணிலத்திலப்போது
பொய்சாட்சிசொன்னதொரு பூவேநீகேதகையே
இச்சாட்சிசொன்னதினால் இங்கேநீயுமிடத்தில்
வேண்டாமினிமேல் விலகுமென்றுசாபமிட்டார்
தீண்டாமற்கேதகையுந் திருவுளமேயென்றுசொல்லி
ஈஸ்வரன்மேற்குற்றமில்லை யிதுநம்மால்வந்தகுற்றம்
பேசக்கணக்கில்லை யெம்பிரானெனப்போனான்
வேதன்மனையினடைந்து வேகாமல்வெந்துருகி
நாதனேநாயடியேன் நடந்ததெல்லாங்குற்றமையா
பொல்லாதான்செய்ததை பொறுத்தருளவேணுமையா
வல்லோனேயெந்தனுக்கு வகுத்ததுகாணபுத்திமதி
இனிமேலுமைவர் ஈடேறவேண்டியதாய்
தனியேதனிப்பொருளே தற்காக்கவேணுமையா
பாவிகுச்சாபம் பலித்துவிட்டார்பூவுலகில்
கேள்விக்குநாயடியேன் இருபைசெய்வதெக்காலம்
சத்தசமுத்திரந்தான் தான்கொதித்துபொங்கிவந்தால்
மற்றுமொருகண்ணீர் மாநிலத்திலுண்டாமோ
கற்றுங்கருணை கடலேவெளியொளியே
சற்றுஞ்சரவண பதனேபராபரனே
முப்புரத்தைதானெறித்து மூவரையுங்காப்பாற்றி
அப்புரத்தைக்காக்கிலையோ அரனேயவர்க்கிரங்கி
காமனையுந்தானெரித்தீர் கடவுளரேயிப்போது
பூமனையேதிரும்பிப் போகமுடன்காக்கிலையோ
மார்க்கண்டனுக்காக மறலிதலையுதைத்தீரே
தீர்க்கமார்க்கண்டனையுஞ் சிறப்பாகத்தான்காத்தீர்
மூன்றுமதமுள்ள மும்மதத்துயானைதன்னை
தோன்றுமொருதாருகா குானவனைவிட்ட
ஆனைதன்னையுரில்லை அடைவுடனேதான்போர்த்தீர்

ஏனைரிஷிமருண்டு எக்கியத்தாலக்கினியை
கோபமுந்தாபமுமாய்க் கூடியேமுச்சுடராய்
தீபமுள்ளவக்கினியைச் சிவனென்றுபாராமல்
ஏவினனப்போ எடுத்தீர்மழுவாலே
பாவினன்செய்த பகைதானெனியாதோ
மூடனுக்குள் தீயை முகனையறியாமல்
காடனும்பொல்லாக கஸ்மாலவருஞானம்
போலிருந்துநாயேன் பொசங்கியோடிவந்துவிட்டேன்
கோவியெக்தன்மீதிருந்து கிழைரயெல்லாந்தான்பொருத்து
காத்தருளவேணுமையா கஞ்சன்படுந்துயரம்
பார்த்திருந்துநாதன் பஞ்சபணியவேந்தனுக்கு
அஞ்சலென்றுசொல்லி அருளினர்காணம்மானே
வஞ்சமெனும்பூவுலகில் மாமறையோர்வேதியர்கள்
செய்யும்சிவபூசையெல்லாஞ் சிந்தித்தோமுந்தனுக்கு
உய்யும்பலபடைப்பும் வுலகுமுதலெவ்வகைக்கும்
எப்போதும்போலே இருந்துபடையுமென்றார்
அப்போதுவேந்தனுக்கும அச்சுதற்கும்வந்தவகை
ஒருவற்கொருவர் வுறவாயிருங்களென்று
இருவர்க்குநல்ல சிவபதமுந்தான்கொடுத்து
லோகத்திலப்போது வுலகத்திலுள்ளவர்கள்
மாலுக்கும்வேந்தனுக்கும் வஞ்சமினிவாராமல்
நேராகவிருமென்று நீதியுடன்தான்தீர்த்து
அவரவர்கள்செய்தொழிலே அவரவரேசெய்வதென்று
வைரமுடன் தாளிரண்டு வித்தகனார்தாமுரைத்து
அந்தமொழிகேட்டு அயனு மதானிருந்து
விந்தைமலர்பாதமதில் விழுந்துநமஸ்கரித்து
எங்கள்தனைக்காக்க இவ்வடிவந்தானெடுத்து
தங்கமயமாகத் தணலவடிவாய்த்தான்தோன்றி
ரட்சித்துக்காக்கவந்த நாதாபராபரனே
பட்சிவடிவெடுத்துப் பன்றிவடிவெடுத்துந்
தேடியுங்காணாத சிவமேசிவக்கொழுந்தே
நாடியேநாள்கள் நாட்டமதிற்கண்டிருக்க
வேணும்பராபரனே மேதினியிற்கண்டிருக்க
அணுவுக்கணுவாய் அடியேங்கள் தான்பிழைக்க
பூசையனுதினமும் புட்பமலர்தான்சாத்தி
ஆசையறுத்து அரனடியைச்சேர்வதற்கு
தற்சொரூபங்காட்டித் தரிசிக்கவேணுமையா
தற்சொரூபங்காட்டித் தயவருளுமீசுரரே
இந்தச்சொரூபம் இப்படியாய்த்தானிருந்தால்
அந்தச்சொரூப மறிந்தேதுபூசைசெய்வோம்
மேகசலமுமக்கு மேனியெல்லாம்நீர்சொரிய
செகமெல்லாங்குலுங்கச் சிரசின்மேல்புட்டமலர்

பூசிக்கவிற்றிருக்கும புண்ணியரேஉம்முடைய
ஆசித்தலாலாணைதையும் அடக்குமையாயிப்போனு
வேதனுமாலும் விரும்பியிவையுறைக்க
போகமுடனீதர் பூரித்தகமகிழ்ந்து
அக்கினியாய்நின்ற அனலைமிகநிறுத்தி
மெய்க்கனிளிச்சாந்தவாய் மேதினியிலெந்நாளில்
நிற்கவொருமலையாய் நேமித்தாரப்போது
தக்கதொருமலைக்குச் சாத்தினார்நாமமதை
அருணையொளிவாணனினால் அருணாசலமெனவே
கருணாகடாட்சமதாய் கற்பித்தார்பொன்மலையை
அம்மலையிலீசர் அதிசயமாய்த்தானிருந்து
செம்மலையாலிங்கமதாய் சிவசொரூபமாயிருந்து
அந்தமலையில் அயனுந்திருமாலும்
கந்தமலர்சோலைகளும் கற்பகமுமுன்பண்ணி
தெய்வக்கண்ணாளர்தனையுஞ் சீக்கிரமாய்வரவெனவே
சைவர்க்குகந்த தலமாமருணையென்று
கோவிற்றிருப்பணியுங் கோபுரமுந்தானமைத்து
ஆவலுடன்பட்டணமும் அலங்காரமாய்முடித்து
திருப்பினவயுமென்னுந் திருமாலுமநான்முகனும்
அறப்பெரியச்சனுக்கு அருளினாரிவ்வசனம்
அந்தட்சணமே அரைநொடியிலெல்லாந்தான்
அந்தட்சணமேமுடித்து ஏகினான்கண்ணாளன்
வானுலகிலுள்ள மறையோர்முனிவரையும்
தானுலகிலந் தலத்திற்குடியேற்றி
அறம்பையரைத்தானழைத்து ஆடல்செய்யகோவிலுக்கு
உரம்பெறவேதானிருத்தி உகந்துசிவபூசைசெய்து
மாலுமயனு மகிழ்ந்தார்காணம்மானை
அருணாசலந்தனிலே அயனுந்திருமாலும்
ஒருநாளும்பேதமற உகந்திருந்தாரம்மானை
என்றுதர்மர்தம்பியற்கு எடுத்துரைத்தாரிக்கதையை
சென்றுசிவதாரஞ் செழித்துவழிதொலைய
ராமர்கதையும் நானிலத்தில்முக்கதையும்
வீமனுக்குந்தம்பியர்க்கும் விபரமாய்த்தானுரைத்து
சஞ்சமலர்மாயவென்றன் கஞ்சன்றனைவதைத்து
வஞ்சமெனுஞ்சகட்டை வாநாயுதைத்ததுவும்
அலகைமுலையுண்டு அவ்வருவைக்கொண்டதுவும்
உலகுதனில்மாயன் உயர்ந்தவிளாமரத்தை
கன்றுவெறிந்து கனியுதனையுண்டதுவும்
ஒருத்தரறியாமல் உபாயங்கள்செய்ததுவும்
நச்சாவிலுச்சதனில் நடித்தவகைதனையும்
அச்சமறதம்பியர்க்கு அன்பாகத்தானுரைத்து
வாசமுடன்தர்மர் வருகிறாரென்றுசொல்லி

நேசமுடன்மாயன் நினைவறியவேணுமென்று
ஆதிகெருடனையும் அங்கேவரவழைத்து
நீதியுடன் தர்மர் நினைவாயறிந்துவாருமென்று
அன்னமெனும்வடிவாய் ஐவரெதிர்த்தாறோடி
தன்மையாய்நின்று தர்க்கமிட்டுவார்த்தைசொல்லி
உண்மையென்னவென்று உட்புலனையாராய்ந்து
செம்மையறநன்றாய்த் திற்கமாய்ச்சோதியென்று
ஆமென்றுதான்கெருடன் அன்னவடிவெடுத்து
ஓமென்றுசம்மதித்து உளகளத்தார்விருட்சமதில்
வந்திருந்துதர்மர் வருந்துவழியிலன்பாக
இந்தக்கதைப்பயனை யேதென்றுகேட்கவென்று
பேசாமலேயிருந்தார் பெரியால்விருட்சமதில்
ஆசாரமுள்ளதர்மர் ஆலமரத்தடியில்
இருந்துகதையை இளையோர்க்குந்தானுரைக்க
இருந்தவேதம்பியர்கள் செவியினுறத்தான்கேட்டு
விசாரமெல்லாந்தீர்ந்து மெய்மகிழ்ந்துதானிருந்தார்
உயரவிருந்தவொரு உற்றபுகழன்னமுந்தான்
மன்னவரேநீங்கள் வருந்தியுரைத்தகதை
இன்னவகையொன்று எனக்குரையுமென்றுசொல்ல
சீரானதர்மர் சிறப்புடனே அன்னமதை
நேராகநோக்கி நினைத்தகதைதனையும்
சொல்லுகிறேன் அன்னமே சுகமாகநீர்கேளும்
சொல்லுங்குலதெய்வங்காண் செங்கண்மாலெங்களுக்கு
எம்பெருமான்தன்பெருமை எல்லாமென்தம்பியற்கு
நானுரைத்தேனிப்போது நடந்தகதைதாரணியில்
காரணங்களெல்லாங் கதையாகத்தான்முடித்து
பூரணமாய்தானுரைத்தேன் புண்ணியனார்தன்மாய்கை
எவ்வுயிர்க்குந்தானாய் இருந்துலகந்தமுதல்
அவ்வுயிர்க்குமீந்து அறஞ்செலுத்திநின்றமுதல்
பாரதப்போர்செய்யப் படையெடுத்துநின்றமுதல்
சாரதியாயெங்களுக்குச் சாங்கமாய்நின்றமுதல்
மாயவனுமாயன் வாயன்புவிராஜன்
ஆயன்சகாயன் ஐவருக்குநாயகனும்
மெச்சும்புவிராஜன் விஷ்ணுபதந்தான்தேடி
நாயகனெங்கேயென்று நந்திசைநோக்கி
நேயமுடன்தேடி நெடுகவந்தோமித்தூரம்
செய்யதொருவைகுந்தஞ் சேர்வென்றுவந்தோங்காண்
ஐயமில்லாநாங்கள் அண்ணன்தனைத்தேடி
வாறோம்வழிதொலைய வாய்த்தகதைதம்பியற்கு
பேராகச்சொல்லிபெரியவனைத்தூடவந்தோம்
என்றுதர்மர்சொல்ல இன்பமுடன்அன்னமுந்தான்
ஒன்றுமறையாமல் உரைத்திரேமன்னவரே

மண்ணுலகிற்கிட்டாது மலைதனிலுங்காணாது
விண்ணுலகிற்காணாத வெளிதனிலுங்கிட்டாது
மெய்யுகத்துநீங்கள் வியர்த்துதான்தேடுகிலும்
வைகுந்தங்காண வசமோதானுங்களுக்கு
மாயனைக்காண வலுவுண்டோ ஆராகிலும்
சேயனிடவஞ்சம் திமைதெரியாதயாவருக்கும்
சிந்தைகலங்காமல் திரும்பியுங்களூர்தனிலே
விந்தையுடன்போயிருந்தால் வேணுமென்றதுண்டாகும்
மாயனையுங்காணலாம் வைகுந்தங்காணலாம்
போயிருங்காணுன்பதியில் புண்ணியரேநீர்தாமும்
உங்கள்தெய்வமாயனென்றீர் யோனித்தழும்புபட்டு
இக்குலகுதன்னில் இறந்துபிறந்தேதிரிவார்
மானிடவர்தன்னை மாயனென்றுநீர்நினைத்து
தேனிடருஞ்சோலைதனில் தேடிவந்தீர்த்தூரம்
தேவனேயாமாகில் சிறந்தவைகுந்தமதில்
போவதினாலென்ன போயிருந்தாலென்னபலன்
மண்ணிலுள்ளோர்தன்மரென்று வாழ்த்துவதும்பார்த்திருந்து
எண்ணறியவேந்தேநீர் இருந்துபசியாளாமல்
வந்தீரேசும்மா மறந்தீரோசுற்றவங்கள்
தந்தீரேதனம்மெல்லாஞ் சகலமெல்லாம்விட்டீரே
நாடுதனையாண்டிருந்தால் நற்றவங்கள்செய்திடலாம்
வீடுபெறலாமெனவே கிருபையுடனோர்வசனம்
கேளாய்நீயன்னமே கிருபையுடனோர்வசனம்
நாளாய்வெகுதூரம் நாடிமூந்துவந்துகதை
மண்ணாசைபொன்னாசை மற்றுமுள்ளபெண்ணாசை
பெண்ணாசைவிட்டுப் பின்னைமேலாசையற்று
கேடுந்திரவியமுஞ் சேனைமன்னராசையற்று
வீடுவிட்டுக்காடுரைந்து வித்தகனைத்தான்தேடி
வந்தவர்க்குஅன்னம் வறிவுண்டோயிப்போது
இந்தமட்டுமில்லை யினிமேலுமெப்படியோ
உடலுலுயிரிழந்து உணர்வுசெய்யுமோராசை
அடருப்பிணிதீர்க்க அபிஷேகமோராசை
நடத்ததிருத்தல் நகைசுகியுமோராசை
கிடத்தலுறக்கங் கேள்விசெய்யுமோராசை
காவில்மூள்ளுதைத்ததென்று கலங்குவதுமோராசை
மேவிலெருப்பூவிதென்று விளங்கவதுமோராசை
குளிருங்கனலதேடி குளிர்காயுவதுமோராசை
துளிருமலரெடுத்துத் தொழுவதுவுமோராசை
மேடுபள்ளங்கண்டு விளங்குவதுவுமோராசை
சாடுசெடியென்று கடும்பயமுமோராசை
வெயிலுக்கொருநிழலை விரும்புவதுமோராசை
துயிலுதற்குநல்லநிலஞ் சூதானமோராசை

தாகத்துக்குண்ணுமொரு தண்ணீருமோராசை
நாகத்துக்கஞ்சி நடப்பதுவுமோராசை
அரித்திடவிடஞ்சொரிதல் அறப்பசியுமோராசை
விரித்தபலசாஸ்திரங்கள் விளம்புவதுவுமோராசை
கரடிபுலியானைகண் டஞ்சுவதுமோராசை
குரடுசடிகொண்டு வுயிர்கொல்வதுவுமோராசை
இடறுவதுமீதெனவே எண்ணுவதுமோராசை
படருமபாபோகம் பண்ணுவதுவுமோராசை
எப்போதுமண்ணில் இருப்பதுவுமோராசை
ஒப்பாதபெண்களையும் உறவுசெய்யுமோராசை
கன்னல்சென்னைவிட்டுக் கருதுவதுமோராசை
பொன்னும்வெள்ளிதேடிப் புதைப்பதுவுமோராசை
நாடாளுந்தெங்கோல் நடத்துவதுமோராசை
மாடாடிதேவி மகிழ்ந்திருப்பதுவுமோராசை
பலகொலைகள்செய்யப் பொருந்துவதுமோராசை
மலைகடல்களேறி வருவதுவுமோராசை
மெய்மறந்துபொய்புரைக்க விரும்புவதுமோராசை
கெய்யால்தவிரென்று நினைப்பதுவுமோராசை
வெளிதாண்டியேகவனம் விளையாடுமோராசை
அழியாமல்கற்பம் அருந்துவதுவுமோராசை
மனைதோறும்பிச்சை வாங்குவதுமோராசை
புனலாடவென்று போனதுவுமோராசை
ஒடுக்கமதுகுகையில் ஒடுங்குவதுமோராசை
எடுக்கம்மலகோலம் எடுப்பதுவுமோராசை
இந்தமட்டுமாசை இருக்குதுகாணிவ்விடத்தில்
அந்தாசைதன்னில் அதிலுமொருபேராசை
தம்பியர்க்குமெந்தனுக்கும் தானேதவிட்டாத
எம்பெருமாளாசையென்றால் நாங்கள்மனதிலுந்தான்
அளவற்றஆசையது அன்னமேயெங்களுக்கு
களபமணிவாசனையே கண்டால்துயர்தீரும்
ஆசையதுதீரும் அச்சுதனைக்கண்டாக்கால்
நேசமுடன்மகிழ்ந்து நெடுமால்தனைத்தொழுவோம்
என்றுதர்மர்சொல்ல இன்பமுடன்அன்னமுந்தான்
நன்றுகாணென்று நன்மையுள்ளதர்மரென்று
மனமகிழ்ந்துபட்சி மரத்தைவிட்டுக்கீழிறங்கி
வனங்கடந்துநல்ல வைகுந்தந்தானேகி
சென்றுதிருமாலுடனே தெண்டனிட்டங்கேது சொல்லும்
ஒன்றுபத்துநூறு யுண்மையொருதன்மையுமாய்
மாற்றிற்பஞ்சவர்கள் மனதையெல்லாமாய்ந்து
எத்துயரம்வந்தாலும் எதுபிழைவந்தாலும்
அத்துயரந்தன்னை அணுவளவுமெண்ணார்கள்
காலேதுணையென்று வருகிறார்பஞ்சவர்கள்

ஆலேதுயிலுகின்ற அச்சுதனே தஞ்சமென்று
வாக்குமனமொன்றாய் வருகிறார்பஞ்சவர்கள்
தீர்க்கமுடன்காக்கச் சித்தமருளுமையா
காத்தசிறையைக் கடைத்தேறப்பாருமையா
எத்தவரைமுற்று மிங்கிருக்கப்பண்ணுமையா
செங்கருடன்சொல்லச் செங்கண்மாலப்போது
அங்கக்குளிர்ந்து ஐவர்மேலன்புவைத்து
செங்கைநெடுமாலுந் திருவாய்மலர்ந்தருளி
தர்மருந்தம்பியரும் தடையவேநம்மிடத்தில்
சென்மமதுகொண்டுவரத் தெய்வவுலகேறுது
இம்மைதனில்சென்மம் மிகத்திலேதான்போட்டு
நன்மைசெய்தாலே நம்மருகில்தானிருக்க
நால்வருங்கூடவிட்டு நல்லவைகுந்தமதில்
பால்போலும்நம்மிடத்தில் பட்சமுடன்தானிப்பார்
ஈடத்துடனேதர்மர் தருகாமல்நம்மிடாதில்
இடத்திலேவைத்திருப்பா ரிந்தவைகுந்தத்தில்
என்றுதிருமா லிவ்வார்த்தைதானுரைக்க
அன்றலர்ந்தபுஷ்பமென ஆள்வாராமனமகிழ்ந்து
சிக்கெனவேவான்கருடன் திருமால்தன்பாதமதில்
முக்கியமாய்தோத்திரங்கள் விழுந்துநமஸ்கரித்து
சக்கரத்தைவாருமென்று தாமழைத்துகோபாலர்
இக்கணமேசென்று உம்முடையபஞ்சவர்கள்
காணுமல்நீகலந்து காவலாய்வாருமென்று
ஊணுகவட் டமுத்தைஉபதேசமேபுரிந்து
பஞ்சவர்களைவர்களில் பகருகின்றநால்வருந்தான்
துஞ்சமுடன்போட்டுத் தோற்றமுடனம்மிடத்தில்
வருவார்சுகம்பெருவார் வைகுந்தந்தான்சேர்வார்
வருவாருந்தர்மர் வருவார்தனியாகி
வாரவழிதனிலே மறுத்துமொருவிக்கினங்கள்
சிராகயானைபுலி சிக்காமல்நீதானும்
பக்கமேவாருமென்று பட்சமாய்புத்திசொல்லி
சக்கரத்தைபோவெனவே சாற்றினார்மாயனுந்தான்
மிக்கதொருவனமும் வெகுமலையுந்தான்கடந்து
வண்டுளபமேனியனை வரதாகவேநினைத்து
கண்டுதொழவென்று கடுகிநடக்கலுமே
சுத்தமுடநூறு யோசனைக்காதவழி
வித்தகனார்பாதம் விவரமாய்க்காணவென்று
போயிருந்துசக்கரமும் புவிராசன்மன்னரிடம்
ஐவரையுங்கண்டு அரிநமாவென்றிருந்தார்
மாயோனைத்தஞ்சமென்று மகிழ்ந்தாலின்கீழிருந்து
இருக்கிறாரைவ ரியல்பாய்ச்சகாதேவன்

18

நருக்கும்விதிவசத்தை நேராயறிந்துகொண்டு
தனக்குவருங்கருமம் தானறிந்துசகாதேவன்
என்சருவருங்கருமம் இன்னபடியென்றுசொல்லி
தர்மர்தனக்குந் தமயன்மார்மூவருக்கும்
வன்னமுள்ளதெல்லாம் வகையாகயின்னதென்று
தத்துவத்தைபார்ப்பளவில் சக்கரந்தானிந்தமட்டும்
முத்திலுமேயெந்தனுக்கு முடிவுஞ்சரியாச்சு
தன்னையறிந்த சகாதேவனீதுரைக்க
நமக்குள்ளசாஸ்திரங்கள் நன்றாய்முடிப்பித்து
சுமக்குஞ்சுமையென்று துன்பமற்றோமென்றுசொல்லி
நாராயணர்பாதம் நாளுமறவாமல்
சீரானவைகுந்தஞ் சேருமென்றுதானுரைத்து
அண்ணமார்நால்வருக்கு மங்கிருந்தசல்வசனம்
எண்ணமறநிஷ்டைதனி லிருந்தான்சகாதேவன்
மாலேசரணமென்று மன[illegible] தியானமதாய்
சாலோகசாமீப சாரூபமுந்தெரிந்த
மூலத்தெழுந்தீயை மூட்டிச்சுழிமுனையை
ஞாலத்திருந்த நாராயணரைப்போற்றிசெய்தான்

விருத்தம்,

ஏதுமறியேனென்வறியே னெல்லாவுயிர்க்குங்கடையாகி
வாதுசிறியவழக்கோர மன்றிலிருந்துவழக்குரைத்த
தீதிபயிலும்நாயேனை சென்மமிறந்துவருகவென்று
தூதுவரவுமிருபபாலே சுதந்தரமுகுந்தானையெங்கே
வீமன்விசையநகுலனுடன் வேதனென்தர்மருமாய்
நேமமான்வைகுந்தம் நெடியேனடியே துணையாக
ராமதாசனெனவேதான் நந்தாயன்பதிதேடி
ஏமதூதனணுகாம லிதமாயுதவிசெய்வாயே,

(கதை)நாட்டமுடனிருந்து நாரணனைநெஞ்சில்வைத்து
வாட்டமறச்சிந்தை மயங்காமல்வாழ்குவதை
மூட்டியனலெழும்பி மூச்சுடரையொன்றாக்கி
கூட்டித்திரட்டிக் கொழுந்துமுனைவாங்கி
நான்முகனைக்கண்டு நமஸ்கரித்தப்பாலும்
மாயன்பதந்தேடி மணிபூதந்தனிலே
நின்றுவணங்கி நெடியோனைப்போற்றிசெய்து
அன்றுபுரமெரித்த ஆரணனார்தன்பதத்தை
வருந்தியேமனதில் வணங்கியடிபணிந்து
திருந்திமகேஸ்வரனை தியானமாய்த்தான்றொழுது
சுண்டுமகேஸ்வரனைக் கருணைமிகவணங்கி
தொண்டுபண்ணியப்பால் தொழுதுசகாதேவன்
அக்கினியிற்சென்று அடங்கியொடுங்குகையில்
தக்கபந்துசிவன தடுமாறிமூலமிட்டு
பிருதிவியில்வந்தொடுங்கி பேசாமல்மேல்நோக்கி

அருளின்னுமண்ணையிட்டு அப்புவிலேவந்தொடுங்கி
வாய்வுசதாசிவத்தில் வந்தொடுங்கியேசுரனை
போயடைந்துதெண்டனிட்டு பூரணமாயுள்ளடங்கி
தேடிவைகுந்தமதில் சேர்ந்ததுகாணம்மானை
ஓடியொடுங்கியபின் உடலுமிகக்கிழிந்து
கழுத்துவிழுந்துழன்று கனத்ததலைசாய்ந்து
அழுத்தமுடன்மண்ணி லடித்துவிழுமுன்னே
எடுத்துச்சமமாக இருக்கியேநால்வருந்தான்
அடுத்திருந்துசாஸ்திரங்கள் ஆகமவாய்த்தான்முடித்து
நிலத்திலடங்கியபின் நீலவண்ணதஞ்சமெனறு
அலத்தினார்நாலவ ரச்சுதர்க்குத்தான்கேட்க
வந்தான்சகாதேவன் வைகுந்தந்தான்சேர்ந்தான்
நந்தாமுகுந்தா நாரணனேநீர்காரும்
மாயோனேயென்தம்பி வந்தடைந்தானுன்பாதம்
ஆயாவுனக்கபய மச்சுதரேகாத்தருளும்
தந்தைதாய்போலாகத் தற்காத்தீர்யெம்பெருமாள்
என்தம்பிவந்தான்காண் யினிக்காருனக்கபயம்
கண்ணரேகாத்தருளுங் காயாம்பூமேனியரே
வண்ணரேநாங்கள் வருகிறோங்கண்டீரே
என்றுதர்மர்தானு மியல்பானதம்பியரும்
நன்றுசகாதேவன் நடந்தான்சபக்குமுன்னே
என்றுமனந்தேறி எழுந்திருந்தார்நால்வருந்தான்
வாழ்த்திமனந்தேற்றி மாயனையேதான்போற்றி
எத்தித்தொழுது இருகையால்தான்குவித்து
அஞ்செழுத்தாய்த்தேகம் அஞ்சுபஞ்சபூதமதாய்
அஞ்சுமுகமா யகண்டமெல்லாந்தானுடை
அஞ்சுபஞ்சலோகமதாய் அஞ்சுபஞ்சவர்ணமுமாய்
அஞ்சுதலமு மைம்பொன்மகாமேருய்
அஞ்சுதலனுகியுள்ளே அஞ்சுபொறியாகி
அஞ்சுமலர்வேள்தனக்கு அஞ்சுபூதபாணமுமாய்
எங்குநிரந்தரமா யிப்படியாய்த்தானிருக்க
ஐவரென்றும்பேரா யன்றளவுமின்றளவும்
தெய்வமென்றுநாங்கள் சேர்ந்திருந்தோமிப்போது
ஐவர்தனிலொருவ னங்குவந்தான்கண்டீரே
மெய்வருந்திநால்வர் விட்டகுறைதீர
எத்தனைநாளோ இப்போதேயிக்கணமோ
அத்தனையுன்பெருமை ஆரறியப்போறார்காண்
சித்தமுடனெங்களையுஞ் சீக்கிரமாய்ச்சேருமையா
வித்தகரேவாரும் விண்ணப்பங்கேளுமையா

விருத்தம்.

கேசவாமுகுந்தாவாரோங் கிருஷ்ணதேவாவாரோம்
ராசகோபாலாவாரோம் நரசிங்கரூபாவாரோம்

தாசமீல்தாசர்வாரேன் தடைகளில்லாமல்நன்றாய்
நேசமாயுன்பாதம் நெடியவாகாருங்காரும்
காரணம்பாதந்தேடி நால்வரும்நம்பிவந்தோம்
வாரணமயாளிசிங்கம் வல்லியகரடிபன்றி
கோரணக்கோழிபன்றி கோவிந்தாவுன துபாதந்
காரணமாய்வந்து காக்கவேணுமையா

கதை,

தோத்திரங்கள்சொல்லிக் தொழுதுநமஸ்கரித்து
சாத்திரமுஞ்சொல்வேதச் சகாதேவனைநிறுத்தி
வழிதேடிசொல்வோ மாயன்றனைதேடி
தெளிவாகநாய்வர் திசைநோக்கியேநடந்தார்
நடந்தார்வெகுதூரம் நல்லதொருநால்வர்களும்
கடந்தார்மலையளவுங் காடுவனந்திரமும்
ஊடேநடந்து உகந்துவரும்வழியில்
கோடேறிவீமன் கும்பிட்டுவாய்புதைத்து
அண்ணாவேயிப்போது அடியேன்சொல்விண்ணப்பம்
கண்ணனதம்பி கருத்துடையசகாதேவன்
விட்டுபிரிந்ததென்ன மேஇனியில்நம்மைவிட்டு
கட்டுடனேயெந்தனுக்குக் காவலரேசொல்லுமென்று
வீமனுங்கேட்க விளப்புகிறார்தர்மருந்தான்
பூமானேமுன்னாள் பொருகின்றபாரதத்தில்
பேரிட்டுநாள்முகூர்த்தம் பேசினார்சாத்திரத்தில்
சீரிட்டுப்போர்முடியத் திருத்தமுடன்அரவானை
கட்டெலியென்றேயிவனுங் கணக்கிட்டதாகையினால்
அளப்பொன்றுமில்லை அதுக்காயிவன்தடத்தை
பழிதொடருமென்ன் பார்மீதிலேஒட்டித்தி
வழிநடையிற்போட்டான் வகைவேறுமில்லையென்றார்
அந்தமொழிகேட்டு ஆமென்றுவீமனுந்தான்
சிந்தைதெளிந்துச் சேகரமாய்நால்பேரும்
வைகுந்தம்நோக்கி வனத்தூடேசொல்லுகையில்
மெய்கண்டதீர்த்தமென்று விளம்புவாரோர்வசனம்
சந்திரகாந்தமென்னுஞ் சாந்தமாமிந்தமலை
இந்திரன்வந்தென்னாளு மிருந்துசிவபூசைசெய்யும்
அந்தமலைமீதிருந்து அந்தமுள்ள தீர்த்தமது
விந்தைமளரெங்கும் விபரிதமாய்பூர்த்திருக்கும்
கண்டார்கள்கங்கையது காசிநதிபோலவே
கொண்டார்கள்தீர்த்தமள்ளிக் கோபாலர்தன்னருளால்
அப்பெரியபொங்கைதனி லரம்பையருந்தேவர்களும்
செப்பமுடன்வந்து தீர்த்தங்களாடுகையில்
கன்னியருந்தேவர்களுங் கண்டார்கள்நால்வரையும்
மன்னியசீர்கன்னிகைகள் வந்துகரையேறிநின்று
பார்த்தார்கள்நால்வரையும் பாதாதிகேசமுதல்

மாய்த்தார்களென்று மனமகிழ்ந்துகன்னியர்கள்
மாறுமயனு மன்மதனும்போலாகி
மேலுமிருந்து விளையாடும்பாவனைபோல்
நால்வரையுங்கண்டு நங்கையர்தங்களிலே
மேல்விழுந்துசானழுது விள்ளாமலுள்ளடைந்து
மெத்தமயலாகி மெல்லியர்கள்நால்வரிடம்
உத்தமாபோலநேராய் வுகந்துகிட்டவந்திருந்து
மன்னவர்களேநீங்கள் வந்தேயித்தூரம்
தென்னவரேநீங்கள் தேசமெங்கேநீங்களெங்கே
எந்தநாடெந்ததேசம் எங்குவந்தீர்சொல்லுமென்றார்
விந்தமுறுகன்னியர்கள் விளம்புமென்றுகேட்டார்கள்
அப்போதுதர்மர் அன்புடனேதானிருந்து
இப்போதுசொல்லுகிறோம் ஏந்திழையேகேளுமென்று
சீரார்குருநாடு தேசமெங்கள்தேயமென்று
தாராரும்பாண்டிமன்னன் தன்புதல்வர்நாங்களுந்தான்
ஏராளமாய்க்கலியன் இவ்வுலகில்வந்ததினால்
நேராகநாங்கள் நிலைவிட்டுதான்கன்றோம்
மாதுதிருலட்சுமிதன் வைகுந்தஞ்சேரவந்தோம்
சாதுவாயுங்களையுந் தான்கண்டோமிப்போது
எதுவாகத்தன்மர் இவ்வசனந்தானுரைக்க
ஓதுவார்கன்னியர் உற்றகன்மர்தன்னிடத்தில்
பாரீர்காண்முன்னாள் மாதாக்கள்சொற்கேட்டு
பாரீர்புருஷ மிருகமதுபாய்வாங்கி
வீமன்றனையனுப்பி மெய்ப்புடையகானகத்தில்
நேமமுடன்வீமன நிமிஷமேசென்றுபுக்கி
தந்திரத்தினாலே சம்மதாய்ப்பாய்வாங்கி
மந்திரத்தினாலே வலுவீமன்தன்வரவு
தொடர்ந்துமிருகமது சொன்னபடிதப்பாமல்
அடர்ந்துவருமிருகம் ஆருபிடிக்கையிலே
சலுதியொருகாலும் தார்வனத்திலோர்காலும்
எதிர்வந்துபன்றி இழுக்கவேவீமனுந்தான்
தர்க்கமிட்டுக்கொண்டு சமராடிநின்றிருந்தான்
மிக்கபுகழ்தன்மரிடம் விளம்புவதுஞாயமென்று
சென்றுமிருகமுந்தான் தீர்கமுடன்வீமனுமாய்
அன்றுதர்மர்முன்போய் ஆசமுடன்ஞாயமதை
கேளுமென்றுவல்மிருகம் கிருபையுடன்வீரமுடன்
வாழுவீர்ஞாயம் வகையாகச்சொல்லுமென்று
ஒருவர்க்குச்சாய்க முண்மைசற்றுமில்லாமல்
தம்பியெனறுசற்றுந் தயவுவைத்துப்பாராமல்
தம்பியுடமேனியிலே தயவாகப்பேர்பாதி
நிறையாகவுன்னுடலே நேராகத்தான்பிளந்து
குறையாமலேறுபல் கொடுத்துவிடுவீமரென்று

தச்சரெனையழைத்து சதுராகநூற்போட்டு
மெச்சவேதச்சன் உளியுடன்வர்துங்க
மிருகமதுகண்டு வெகுவாய்மனமகிழ்ந்து
தருகாமஸ்நான்போறேன் தன்மரேயுந்தனுக்கு
பொருத்தேனிதுஞாயம் பூவுலகிற்கண்டதில்லை
ஒருத்தேனமிருகம் உயர்கானகந்தன்னிலே
பேனதுவுங்கேட்டிருப்போம் புண்ணியவான்தன்மரென்று
ஆனதினாலுங்களைப்போல் அவனிதனிலில்லையென்றார்
பின்னையுமேவீமன் பிரபலமுங்கேட்டிருப்போம்
முன்னமேபாரதப்போர் முண்டசமர்தனிலே
வல்லிடும்பன் தன்னுடனே வலியமாகசூரனையும்
சொல்லரியகீசகனுந் துஷ்டதுரியோதிரனும்
நல்லசராசரந்தனையும் நாட்டிலுள்ளவேந்தரையும்
வீரமுடன்காலனுக்கு விருந்துதனையளித்து
பாரமுள்ளவீமனுட பராக்கிரமங்கேட்டிருப்போம்
ஈதெல்லாப்பார்த்தனுந்தான் ஈஸ்வரனைத்தானோக்கி
பேதமில்லாப்பாசுபதம் பெற்றதுவுமல்லாமல்
அசுரர்தனைவென்றதுவும் அமரர்சிறைவிட்டதுவும்
பசியுடையஅக்கினிக்குப் பாந்தமிரதமீய்ந்ததுவும்
பாலாலபிமனையும் பாராமற்றேத்தரசன்
சூலமதாற்கொன்ற துயரமதுவைத்திருந்து
தேற்றரசன்தன்னுடனே தேருருமபாகனையும்
மாற்றரசர்சேனையும் மன்னரையுங்கொன்றுழக்கி
அர்ச்சுனனுமென்றார் அப்போதுங்கேட்டிருப்போம்
விரிதானமேதினியில் விரசுடையசூரனென்று
பரிகுலமென்று டாங்குடனேகேட்டிருப்போம்
மற்றும்நிகழ்காலம் வருங்காலஞ்செல்காலம்
முற்றுஞ்சகாதேவன் மொழிவதுங்கேட்டிருப்போம்
அப்படியேநாங்கள் ஐவருடையசெய்தியெல்லாம்
இப்படியாய்கேட்டிருப்போம் இன்னமுருக்கண்டதில்லை
அவரவரைப்பார்க்க ஆச்சரியமெங்களுக்கு
இவரிவர்தாமென்று எங்களுக்குச்சொல்லுமென்றார்
மங்கையர்கள்தாம்கேட்க மகிழ்ந்துதர்மராசனுந்தான்
சங்கையுள்ளபெண்கள தர்மரென்பேர்கண்டீரோ
மெல்லியரேநல்ல வீமன்விஜயனிவன்
சொல்லும்நகுலனிவன் தோகையரேயின்னமுந்தான்
வேதன்சகாதேவன் மின்னார்த்ரோபதையும்
போதமுடன்வைகுந்தம் போய்புகுந்தாரெந்தனைத்தான்
திருந்துமதிகன்னியருந் தேவேந்திரன்மகளும்
இருந்துதர்மர்சொன்ன இயல்பதனைக்கேட்டிருந்து
வாருமையாஎங்களுட வானவர்கோன்தன்னிடத்தில்
சேருமையாவுங்களுக்குத் தெய்வலோகந்தானளித்து

மன்னவரேநாங்கள் மறுவிதனையாளாய்ச்
சொன்னபடிக்கேட்டுக் கொண்டுசெய்தோம்நாங்களுந்தான்
எங்கள்பொறுட்டால இனிகேளும்மன்னவனே
நங்களிலேவேள்விசெய்து தவம்பண்ணிநிற்போரும்
அக்கினியிலூசியின்மேல் அணிவிரலைத்தானிறுத்தி
சிக்கெனவே தவசு செய்துமுடிப்போரும்
கால்மேலுந்தலைகீழாய் கடுந்தவசுநிற்போரும்
பால்போலுமெக்கியங்கள் பண்ணிமுடிப்போரும்
தெய்வப்பெண்களென்று தெய்வபதியென்று
மெய்வருடியாகம் விரும்பிவளர்ப்போரும்
வேண்டியல்லோவித்தவசு வேண்டுமென்றுசெய்தார்கள்
ஆண்டிநினையாமல் சொற்பனத்திற்கேளாமல்
வலியவேநாங்கள் வரவழைத்தநீங்களுந்தான்
பொலியாகுமென்று பூரணமேளங்களுடன்
வந்துபுரந்தானை வணங்கியனுதினமும்
மூன்றுதெய்வமேலாம் முழுதுந்தணலாகி
இருக்கலாமென்று எந்திழைமார்தானுரைக்க
வருக்கமுடனின்ன வகையுமக்குச்சொல்லுகிறோம்
தீர்க்கமுடன்வைகுந்தம் சேரவேவேணுமென்றால்
ஆர்க்குமுடியாது அருந்தவத்தோர்க்கெட்டாது
இயந்தோர்க்குமேதினியில் இல்லவேயென்பதுகாண்
கேளீரோபூவுலகில் கிருபையுடன்மன்னவரே
ஆளீரோதெய்வவுலகம் அன்பாகனங்களுடன்
ஈஸ்வரனும்பெண்களா இருவர்தனையேவருகில்
வாசமுடன்வைத்து மறுவியிருக்கிலையோ
பாவிக்கலைமகளைப் பண்ணுமறைவேதியனும்
நாவிலதரித்துமவர் நட்பாயிருக்கிலையோ
சீதைதனைநெஞ்சில் திருமாலும்வைத்திருந்து
கோதையுடன்கூடிக் குலாவியிருக்கலையோ
தேவேந்திரனுஞ் சிறப்பாயிந்திராயுடன்
கோவேந்தேகூடிக் குலாவியிருக்கிலையோ
மதனும்ரதியு மறுவியிருக்கலையோ
அதன்முடன்தவசில் அறிவாயிருந்தோமே
கண்டாசைகொண்டு கலந்தாசைதீர்க்கலையோ
விண்டாசையெல்லாம வெறுத்தமுனிவர்களும்
நன்றாயதையறிந்து நாதாக்களெல்லோரும
ஒன்றாகிச்சர்த்தாவை உடுருவக்கண்டோரும்
பூதபோரைந்து புலன்பொடிகள்தானடக்கி
நாதமொடுவிந்துமொழி நடுவணையுந்தானுறுத்தி
நாடிதனையறிந்து நடுவானவட்டமதில்
தேடியநிதந் தெவிட்டாமலுருண்டிருக்கும்
போகிகளுமிப்போது வுலகந்தனிலிறங்கி

போமெனும்விந்துதனைப் புரம்போக்கிருக்கிலையோ
அறவேவெறுத்து அவனிதனிலாசையிட்டு
துறவாகவந்ததென்ன சொல்லுமென்றார்கன்னியர்கள்
இன்பமுள்ளகன்னியர்க ளிவ்வசனந்தான்கூற
அன்புடனேதர்ம ரவர்களுடனேசொல்லுவார்
ஈதெல்லாம்நீங்க ளெடுத்துரைத்தீரிப்போது
ஆதலாலந்த அற்பமாவாழ்வைநம்பி
கூடழிந்துநாங்க ளெடுத்ததவங்குலைய
கூடழிந்துபொல்லாத கொடுநரகில்வீழ்வதற்கு
சொன்னீரேயெண்கள் சோதனையோயெந்தவிதம்
முன்னீர்பொழியும் முகில்வண்ணர் தன்னருளால்
இப்படியுஞ்சொல்லுவரோ ஏந்திழையேஎங்களுக்கு
கற்பனையுங்கேட்கக் கருமமோவெங்களுக்கு
சீரானவைகுந்தஞ் சேரவென்றுபோகையிலே
நேராகநின்று நில்லுமென்றுசொல்வீரோ
ஒன்றுமுரையாமல் ஓவியமேநீங்களுந்தான்
நின்றுவிடுமென்று நெடுமால்தனைநினைந்து
வாகுடையதர்மருமாய்த் தம்பிமார்மூவருமாய்
ஏகுவோமென்று இதமாய்வனத்தூடே
நடந்தார்வனவாசம் நால்வருமேதான்கூடி
கடந்தார்வெகுதூரங் காடுமலைதான்கடந்து
வானோரெனப்புவியும் வாளகிரிகாமலையும்
போனார்கள்நல்ல புதுமையெல்லாந்தானறிந்து
சேர்ந்தபலநதிகள் தீர்த்தமதுதானாடி
வாய்த்தநல்லருத்திராட்ச மரங்களுஞ்சந்தனமும்
கற்பகக்காவுகளுங் கண்டுமிகத்தோன்றி
கற்புடையசோலையென்று நடந்தனர்கள்நால்வோரும்
அந்தமலைக்கப்பால் அறைந்துயோசனைதான்
வந்தவர்கள்முன்னே வழியில்வெகுவானரங்கள்
கண்டுமனமகிழ்ந்து காவலரேநீர்கேளும்
புண்டரீகமாயனிட பூமிதனில்வந்தீர்காண்
இன்னாளிலுங்களையும் இவ்வுலகில்நாம்காணோம்
என்னாடுஎத்தேசம் எங்கிருந்துஎங்குவந்தீர்
மன்னாநீர்சொல்லுமென்று வானரங்கள்தான்கேட்க
பொன்னாருந்தர்மர் புரையுடையோரேதுசொல்வார்
பன்னார்குருகுலத்தில் பாண்டுமைந்தர்நாங்களுந்தான்
மண்ணாசைவிட்டு வந்தோங்கலிதேவனால்
அத்திப்புரத்திலிருந்து அச்சுதனைத்தான்நோக்கி
பத்தியுடன்கானகத்தில் பரிந்துவந்தோங்காணடரே
சீதமதிவானரங்கள் செய்தியெல்லாந்தான்கேட்டு
ஆதலாலெங்கள் அனுமார்க்கிளையவன்காண்
வீமனல்லோவென்று விஜயனிடத்தேதர்தனக்கு

கோமானைவெற்றிக் கொடியவரே வாராங்களுந்தான்
உம்மானையெங்கெட் குறியோர்காணீங்களுந்தான்
எம்மானையிங்கே யிருந்திரேயாமாகில்
நாமிம்மைவந்ததென்றால் நாங்களேவெற்றிகொண்டு
ஈடுபண்ணியுங்களுக்கு ஏவல்செய்துதானிருப்போம்
இங்கிரும்நீரென்று யெடுத்துரைக்கவானவர்கள்
தங்கும்புகழுமன்னன் தர்மர்தானேதுசொல்வார்
துங்கமுடிமனுக்கு தொண்டுசெய்யும்நீங்களல்லோ
அடலம்புவியோர்க்கு ஆற்பறித்துநின்றவர்கள்
ஆனதினலென்னை அஞ்சாதேயென்றுசொல்லி
மானமுடன்காக்க வானவர்கள்தானிரல்லோ
ரீலகந்தனில்காக்க உங்கள்மேல்பாரமல்லோ
புகழ்ந்துதான்தர்மர் பூரித்துவார்த்தைசொல்ல
மகிழ்ந்துதான்வானரக்கன் வைகுந்தமாளிகைக்கு
போதமுடன்தோரம் போனவழியாதெனவே
உதமுடன்காட்டில் நெடுந்தூரங்கூடவந்து
சத்துபதிவந்தான் தாலிவழிகாட்ட
மெத்தமகிழ்ந்து விரைந்துவழிகூடி
சற்றவந்தன்வேண்டி நடந்தார்வனத்தூடே
இடக்கர்பதியும் விராட்சதர்கள்தான்பதியும்
மயக்கும்புலையர் வல்வேடர்தனபதியும்
கொலைஞர்பழிக்குஞ்ஞர் குறவரிடதன்பதியும்
மலையிற்பலசாதி வாழுகின்றோர்தன்பதியும்
கானல்வெகுதூரங் காவலர்கள்தன்பதியும்
கடந்துமலைகடந்து நாற்பத்தெண்காதவழி
மீதானகானகத்தில் வேகமுடன்தான்கடந்தார்
நாதாகமூவர்க் கிளையநகுலனுக்கு
மெய்கலங்கியுள்ளசைந்து விதிப்பயனுந்தான்முடித்து
கைமறந்துகாலசைந்து கண்ணுமிகச்சுழன்று
வாக்குதடுமாறி மதிமயங்கிவாய்குளறி
தாக்கத்துநின்று தள்ளாடும்வேளையிலே
ஸ்ரீமன்விசையன் மிக்கானதர்மருந்தான்
பீமன்குலனையும் போயணைத்தார்மார்புடனே
தார்மறலிதூதுவர்கள் கட்கவாவென்றுசொல்லி
பேர்நகுலன்தன்னுடனே போராடிவார்த்தைசொன்னார்
தூதுவர்கள்வந்து துடுக்கமிகவறிந்து
ஏதுவாகநெஞ்சில் யெட்டெழுத்தைத்தானினைந்து
மாதுதிருமால்பதத்தை மனதிற்றியானமதாய்
ஓதுவானபோர்நகுலன் ஓதுங்கியேகாவலுந்தான்
ஏகாகவேநடந்து மயேந்திரமலைதன்னில் வந்து
ஏகாந்தமாக யிருந்தசனைதாண்டி

வந்துசுகமென்று மலைமீதிற்றானேறி
புத்திமிகமகிழ்ந்து புயமென்றுமாமுனியே
பாதம்பணிந்து பரிவுடனே தானிருந்தார்
ஏதுநீங்குவந்தீரியம்புமென்றார்மாமுனியும்
தாங்கள்வரலாறு தன்னைத்தம்முனிக்குரைக்க
வேங்குழதிகேட்டுவுகந்தெதுவாய்வார்த்தைசொல்லி
பேராகவுந்தனுக்கு பெண்களையாயிரந்தான்
மாராமல்நீங்கள் மணமுடிந்துயிங்கிருக்கு
காடுதனைக்கடந்து காவலரேயிப்போது
நாடுதனையாண்டு நம்மிடத்திற்றானிருந்து
பெரியவரைச்சார்ந்தால் பிறைபோலநாள்தோறும்
வரிசையாய்த்தான்வளர்ந்து வாழ்வுமிகவுண்டாகும்
சீர்முனியைச்சேர்ந்தால் சிறுமைபெருமைதான்
கார்முனிவன்சொல்லத் தர்மர்தானுர்வசனம்
பார்முனியெங்களுக்கு பேராசையொன்றுமில்லை
கார்முனியேயெங்களை நீர் கடைத்தேற்றவேணுமென்று
எங்களுக்குவைகுந்த மிருப்பிடமேயல்லாது
தங்குவதுமில்லை தரிப்பதுதானில்லைகாண்
கஞ்சமலர்ப்பதத்தை காணவிடைதாருமென்று
தஞ்சமெனவேமுனியைத் தரணிதனிலேபணிந்தார்
பணிந்துவிடைவாங்கிப் பாங்காகமூவருந்தான்
துணிந்துகாவலமன்னர் துயரவேதானடந்தார்
அப்பாலுங்கானகத்தி லன்பதுயோசனைதூரம்
மெய்பாகவேநடந்து மெல்லடிகள்கொப்பளமாம்
வருத்தமுடனடந்து வடவாலின்கீழிருந்தார்
கருத்துடனேயங்கிரண்டு கன்னியர்களூசியின்மேல்
பாதமதையூன்றிப் பாரில்விழுநீள்சடையாள்
நீதமுடன்தபசு நின்றார்கள்கன்னியர்கள்
கன்னியரைக்கண்டு காவலர்கள்தான்பணிந்தார்
மன்னரேநீர்தாமும் வந்துதானேதெனவே
கன்னியர்கள்தான்கேட்க கனத்தபுகழ்தர்மருந்தான்
பன்னயசீர்மாதே பத்தினியேவுத்தமியே
சீரார்குருநாட்டில் சேர்ந்ததொருஅத்திபுரம்
பாராபுவிராசன் பாண்டுமன்னன்தன்புதல்வர்
திருவணையதர்மரென்பார் வாய்த்ததம்பிமாரிருவர்
மருவணையமாதேநீ செய்தவத்திலிங்குவந்தோம்
கண்டபோதெங்கள் கர்மமெல்லாந்தானதீர்ந்தோம்
கொண்டதவம்பெறவே சொல்லுமென்றார்தர்மருமே
தர்மர்மொழிகேட்டு தயவுவந்துகன்னிகையும்
இம்மைதனில்வேணுமென்ற தெல்லாந்தாரேனென்
உங்களுக்குவேணாதை யுண்மையாய்க்கேளுமென்றார்
எங்களுக்குவேண்டியதை யித்தலமேபோதுமென்றார்

சொன்னவுடன்கன்னியர்கள் கோத்திரமாய்த்தான்வாழ்த்தி
மன்னர்பெருமாளும் வைகுந்தந்தான்பெறுவீர்
என்றுவிடைகொடுத்து ஏந்திழைமார்தானிருந்தார்
அன்றுவணங்கிநடந்து ஆழியந்தீர்ப்பொய்கையின்மேலே
தீர்த்தங்களாடித் திருநாமந்தான்தரித்து
கார்க்கவியிட்டோது கடந்தார்வெகுதூரம்
மோசமிலாய்வளர்ந்த வீரமயேந்திரத்தில்
மாதழுயமலைமேல் வந்தார்கள்தாமேறி
அங்குள்ளமாமுனிகள் அடிகபணிந்தேற்றி
பொங்குபுனலாடிப் புண்ணியர்களப்போது
அந்தமலைகடந்து அடவிகளுந்தான்கடந்து
நந்திவளர்கோசமலை நாட்டிலேதானேறி
பவளமணிமேனிப் பரஞ்சுடாரமாமுனியே
துவளவணங்கி தொழுதார்காணம்மானை
அம்மலையில்வாழு மகஸ்தியர்புலஸ்தியனை
வெம்மைவிஸ்வாமித்திரர்வசிஷ்டரையும்
ஜனகன்ஜனக்குமாரன் ஜனகமுனிதனையும்
மனவுறுக்காளமுனி வாகனமேகாமுனியும்
சுகருடனேகாசிமுனி சொற்பெரியகீசமுனி
டகருமொருபேர்பெரிய பாராசமாமுனியும்
சென்றுவணங்கித் திருந்தாள்சரணமென்று
நின்றுபலமலையும் நேமமுடன்கண்டுசென்று
நடந்தார்வனத்தூடே நாகமலைதான்கடந்தார்
கடந்துவெகுதூரங் கடுகநடக்கலுற்றார்
அடர்ந்தகொருஆறு மருவிகளுமாமலையும்
தொடந்துவருமாளிசிங்கம் தொழுதுபணிந்திடவே
மகிழ்ந்துகிருடாழ்வார் மலையதுவுந்தான்கடந்து
புகழ்ந்தெண்பதுகாதம் போனார்கள்மூவருமாய்
அவ்விடத்திலுள்ள அதிசயந்தான்பார்த்து
எவ்விடத்தில்கண்டதில்லை யிந்தவதிசயந்தான்
கண்காட்சியெல்லாங் கண்டோங்களிகூர்ந்தோம்
விண்காட்சிகாணவென்று விரைவாய்நடக்கலுற்றார்
நடக்கும்வழிகளில் நல்லமருந்துமலை
அடக்கமாய்நின்ற அதிசயமுந்தான்பார்த்து
மோகனும்வந்து திருக்கூட்டமாயிருக்கும்
பாவமுந்தீர்க்குமந்தப் பன்னகசாலையிலே
இருந்துகளிப்பாறி எண்ணமெல்லாந்தான்தீர்த்து
அருந்துபுனல்மூழ்கி அமிர்தமள்ளித்தானுணர்ந்து
சிறந்துவளர்ந்தோங்கிநின்ற தென்னவனந்தனில்வந்து
துறந்தோர்முனிவருக்குந் தொண்டுபண்ணியப்பாலும்
சிந்தையகமகிழ்ந்து திருமால்தனைநினைந்து
இந்திரசோபமென்று மேகமலைமீதேறி

சொல்லுகின்றபோதே சித்தாதிசித்தரெல்லாம்
நல்லவர்களென்றறிந்து நட்பாகவார்த்தைசொல்லி
எங்கிருந்துவந்தீர் இம்மூவர்நீங்களுந்தான்
துங்கமுடிவேந்தர்களே போமெனறார்சித்தர்களும்
சித்தர்களுந்தான்கேட்கச் சீரானதர்மருந்தான்
அந்தரேகாங்க ளத்திபுரநகரில்
பாண்டுமன்னர்புதல்வர் பஞ்சவர்கள்நாங்களுந்தான்
வேண்டுமென்பேர்தர்மர் வீமன்விசையனிவன்
ஆண்டதொருநகுலன் அரியபதந்தான்சேர்ந்தான்
மாண்டுசகாதேவன் வைகுந்தந்தான்சேர்ந்தான்
அஞ்சுபேர்தன்னி லடியோங்கள்மூவருந்தான்
பிஞ்சுமொருவைகுந்தம் வித்தகசேரவென்று
வந்தோம்வனத்தூடே மலைகடந்துஇத்தூரம்
சந்தோஷமாச்சுதுங்கள் சந்நிதியைக்கண்டவுடன்
இனிமேல்துயரமது எத்தனை தானாலும்
பனியதுபோல்நீங்குமுந்தன் பாததரிசனையாய்
இன்பவைகுந்தங்காண எத்தனைநாள்சொல்லுமையா
அன்புடனேசொல்லுமையா அடியேங்கள்போய்ச்சேர
என்றுதர்மர்கேட்க இயலானசித்தர்கள்தான்
நன்றெனவேசொல்லுகிறேன் நன்மையானபஞ்சவரே
அந்தரத்திலேதிரிந்து ஆகாசமூடுருவி
தந்திரத்தினால்குளிகை சாதமாயண்டமெல்லாம்
கெவனமாயோடியொரு கேசரிமார்க்கமதாய்
மவுனமாய்நாடிருந்தும் வைகுந்தங்கண்டதில்லை
வைகுந்தஞ்சுற்றி வருமோமடுத்தறியோம்
மெய்யன்னகண்டு விளங்கினாம்வந்ததில்லை
அந்தமட்டுங்கண்டறியோ மச்சுதரேநாம்தாமும்
இந்தமட்டுநீங்க ளெல்லாந்தனை வெறுத்து
நாடுவிட்டுவந்து நவநாதிசித்தரையும்
காடுதனிற்கண்டீர்காண் கருத்துடையயெங்களைத்தான்
நுமக்குச்சோடு உதிருண்டோமன்னவனே
மாயனிடசீர்பாதம் மன்னவரேநீர்பெருவீர்
தூயதொருதன்மரென்று சொல்லுவார்கேட்டிருப்போம்
கண்டோம்நாமுங்களையும் காவலரேயிப்போது
விண்டோம்நாமுங்களுடன் மெய்விட்டுவாய்திறந்து
கேதாரந்தூரமல்ல கிட்டசமீபமினி
பாதாரவிந்தமதில் பஞ்சவரேசேர்த்திருப்பீர்
என்றுநவசித்தர்கள்தா னேகினர்காணம்மானை
அன்றுதர்மர்வீம னருச்சுனனுமந்நேரம்
செங்கமலமாது சீதைமகாலட்சுமியாள
பங்கரேதஞ்சமென்று பாதமீதிலேகிடந்தார்
எல்லைகடந்தப்பால் எண்பதுயோசனை தூரம்

முல்லைபிச்சிசெண்பகமும் மல்லிகைபூத்துநிற்கும்
இல்லைவனங்கடந்து செந்திநதிதான்மூழ்கி
வில்லைவனங்கடந்து வெள்ளிலைறாமேடேபோய்
குன்றுபருவதமுங் கொடுஞ்சரமுங்தான்கடந்து
சென்றுதிருமனைமேல் தீர்த்தங்கள்தானாடி
புட்பமலரெடுத்துப் பூசைகளுந்தான்முடித்து
நிற்பளவிலேவிசையன நீலவிழிநீர்சொரிய
நெஞ்சுலர்ந்துகண்சுழன்று நெடிமால்தனைநினைந்து
தவமாசவூழியஞ்செய் தாசனென்றுதானறிந்து
வித்தகரேயும்மையுநான் விட்டுபிரிந்தேனே
நாரணரேகேளும் நான்விருத்தம்பாடுகிறேன்
காரணரேகாக்கக் கடவுளரேகண்பாரும்

விருத்தம்.

கண்ணுங்கருத்துமொன்றாகிக் கவளட்பொறியினுயிரகளைந்து
எண்ணுமெழுத்துமயாம லெட்டக்ஷரத்தைதரியாமல்
நண்ணும்பாரிலனுதினமும் நாராயணரேதஞ்சமென்றேன்
விண்ணும்புவியுமளந்துநின்ற விந்தைமலர்த்தாள்தருவாயே

கடியமாளிகானேது கமலக்கண்ணனிங்கிருக்க
முடியும்வினைகளணுகாது முகுந்தர்வனத்துதிக்க
விடியவதித்தகர்போல் விந்தைமலரம்மைவைகுந்தம்
நெடியபதவியுண்டாக்கி நீயேயருள்வாய்கோபாலா

கதை,

இரண்டுவிருத்தம் இன்பமாயத்தான்பரிந்து
தொண்டுதிருமால் தொழுதமனமகிழ்ந்து
வாசமுள்ளதூதுவரும் வானவரும்வந்தெதிரே
நேசமுடன்பார்த்தனையும் நேராகத்தானழைத்து
புஷ்பவிமானத்தில் பூரணமாய்தானிருத்தி
செப்பமுடன்ரதத்தைக் சிங்காரமாய்நடத்தி
பொன்னுலகமெங்கும் பூப்பந்தல்தானிறைத்து
மின்னுலகத்தோரணங்கள் வீதியெங்குந்தானிறைத்து
தோரணங்கள்நீளமுகால் ஜோடித்தார்தானழகினால்
பூரணகும்பமெங்கும் பூரித்தாரம்பையர்கள்
ஆலாத்திகற்பூரம் அலங்கரித்தார்கன்னியர்கள்
தாலத்திருவிளக்குத் தாமெடுத்தார்பூவையர்கள்
கற்பூரவாசனை கமகமென்றுதான்மணக்க
பொற்புடையவானோர்கள் பூரித்துச்சூழ்ந்துவர
நாரணனூர்தன்பதிக்கு நல்லவழியிதெனவே
பூரணமாய்வானோர்கள் போற்றிமிகத்தேற்றி
அசுரர்தனையறுத்த அவரவர்பயந்தீர்க்க
விஜையனேவானோர்கோன் வேந்தரிடபுத்திரனே
குஞ்சரமாமலையைக் குறிந்தேயருகிலவந்து

அங்கமலைபிறந்து அருள்முனிவரைப்பணிந்து
இந்நிலவுமாமலையில் இருடிகளைத்தான்பணிந்து
சீருலவுமவர் சீதமெனுமாமனுக்கு
பாருலகுதன்மருடன் பாங்காகவேகடந்து
நீண்டமலையருகே நெறியோனைத்தஞ்சமென்று
ஆண்டவனைப்போற்றி அநேகநெடுந்தூரம
நந்தவனமும்நல்லவருஞ்சோலைசூழ
மந்தாரைப்பிச்சி மல்லிகைபூங்காவனமும்
அந்தமுள்ளபார்த்தனுக்கு அச்சிவந்துதோன்றியதே
கொந்துலவுமிப்போது குணங்கிவெகுதோத்திரமாம்
காலைசந்துகண்ணமைந்து கண்ணுமிகச்சுழன்று
மேலைசந்துபாசம் மெய்யசைந்துநாவுளர்ந்து
அங்கங்குளிர்ந்து அக்கினியுந்தானொடுங்கி
பொங்குஞ்சுவாசம் பொறிகலங்கிமேல்நோக்கி
நாடிதளர்ந்து நரம்புமிகப்பதறி
ஓடியொடுங்கும் உண்மைதனைத்தானறிந்து
பொறிகலங்கும்போது போர்விசையனுமறிந்து
நெறிகலங்கும்நெஞ்சை நிறுத்தியசையாமல்
இருநான்கெழுத்தை இருதயத்திலேயிருத்தி
ஓருநான்கெழுத்தை உள்ளடக்கமேல்நோக்கி
நின்றெழுத்தைபார்த்துவினைவெளித்திறலறிந்து
குன்றெடுத்தமாலே கோவிந்தாவென்றுசொல்லி
அத்தனேநீங்கள் ஆதிநாராயணரே
சித்தனேபோற்றியெங்கள் நீலவண்ணாதான்போற்றி
மெய்யனேபோற்றிஐயாவிண்ணோர்பெருமாளே
ஐயனேபோற்றியெங்கள் அடியார்க்கெளியோனே
வேந்தன்றனைப்பயின்ற வித்தகனேமெய்ப்பொருளே
பாதத்தைமறக்கேன் பச்சைமுகில்மேனியனே
பேய்முலைப்பாலுண்ட பூரணனேயுனைமறக்கேன்
கண்ணனேஎந்தன்கருத்திலேதானிருந்து
அண்ணனேகாரும் அடியேன்சரணையா
நேயனேயெந்தன் நெடுமால்சரணையா
மாலையழகா வடிவழகாமாயவனே
சோலையழகா துணையெனக்குமுன்பாதம்
நம்பினேன்காத்தருளும் நாரணனேதஞ்சமென்று
வெம்பியுயிர்மாளாமல் விவரமறியுடனே
அவதாரம்பத்தும் அடியேன்பணிவிடைதான்
காண்டிபத்தார்குரவையும் கட்டுவதேசேவாறுத்து
வேண்டியவானவரை மெய்மகிழவைத்தேனே
வானவருந்தேவர்களுவந்துமலர்சொரிய
தானவருந்தேவர்களுந் தர்மசெயமென்றுவர
அந்தணர்கள்சூழ்ந்து அரம்பையர்களாடிவர

கெர் திருவர்களை நாதர் இப்புருடாடிவர
தேவேந்திரன்புலவர் தேர்மீதிலேறிவர
கோவேந்திரனே குபேரனேயென்பாரும்
தக்கப்புகழ்செலுத்தும் தனஞ்செயன்காணென்பாரும்
மெய்க்கும்புகழ்ரம்பையர்கள் மெய்மலர்கள்தான்சொரிய
அந்தரத்தில்துந்துமிகள் ஆலாத்தியேந்திவர
தந்திரக்கின்னரங்கள் சங்கீதம்பாடிவர
சொற்பனங்கள்சொல்லித் தோகையர்களாடிவர
பூமனருச்சுனனும் புட்பகவிமானத்தில்
தேவர்கள்கொண்டாட செயசோபனத்துடனே
மூவர்களுங்கண்டு முத்திபெற்றாரெனறுசொல்லி
தாமனர்ச்சுனனுஞ் சந்திரன்போல்தானிருந்தான்
நாமர்வைகுந்தத்தில் நாராயணனெனவே
கொண்டுவந்துவானவர்கள் கோவிந்தரென்றுசொல்லி
விண்டுவடபதியில் வீற்றிரென்றுவைத்தார்கள்
வந்தானிருந்தான் வைகுந்தந்தான்சேர்ந்தான்
இந்தமகாவிந்தபதம் விசையனுமேசேர்ந்தபின்பு
பார்த்தனுயிர்போகப் பார்த்திருந்துதர்மருமே
நேற்றிருந்தாரின்றிருக்க நிச்சயமில்லாதவுடல்
காத்திருந்துகூற்று கழன்றோடிப்போனவழி
பார்த்திருந்தநேசம் பதறாமலுள்ளடக்கி
கார்த்திருந்தானிருவர் கைக்கருமந்தான்முடித்து
செய்துமுடித்துத் தீர்த்தங்கள்தானாடி
எய்தகருமமெல்லாம் இருபேருந்தான்முடித்து
வீற்றிருந்தபார்த்தனுக்கு வேணுமென்றுசாஸ்திரமும்
சிவனே திருமாலே சிவராமாகாருமென்று
ஆரனே அரிராமா அச்சுதனேகாருமென்று
தர்மருடன் வீமனுமால் தானிருந்துமாயனையும்
திருமாலேயுந்தன் சீர்பாதமெப்போது
மறவாமலேயடைந்து வருவோம்பதிசேர்வோம்
திறமாகவும்முடைய சீர்பாதந்தாருமையா
இத்தராணிகன்னிகள் இருவோர்க்குந்தான்துணையாய்
வித்தகரேவந்து வீமனையுமெந்தனையும்
மெய்கலங்கிதில்லாமல் விபரமுடனறியும்
ஐயரேகாருமென்று அச்சுதரேநீர்துணையாய்
மெய்யுடையதர்மருமாய் வீமனுடன்தானெழுந்து
வைகுந்தஞ்சேர வழிநடக்கலுற்றார்
ஓங்குமொருபட்சிக ளொருசிறகுவீழ்ந்தாற்போல்
தாங்குமொருசிறகு தனிவீமன்றானே
இருசிறகுகொண்டு எதிரில்லையென்றிருந்தேன்

ஓநசிறகுகொண்டு உள்ளவழிநடந்து
தீதில்லாநீள்தருமர் சென்றாவனத்தூடே
வேதரியவீமனை யொருவனுமே தானாகி
அன்னவர்கள்நால்வர் அருங்கானிலேநடந்து
மன்னரிநபெரும் வராகமலைதான்சேர்ந்து
சேர்ந்திருந்துதங்கள் தியக்கந்தமாறி
வாய்ந்துபுயவீமன் மனதாமிகவுமன்று
காராருந்தர்மரிட தாளிணையைத்தான்தொழுது
ஞானநல்விசையன் சீவிக்கானிவ்வனத்தில்
ஏதையாசொல்லும் எனக்கரிவின்னதென்று
சீரானபாரதத்தில் தேர்ப்பாகன் தானாகி
மேகவண்ணர்தேர்நடத்த விசையதனிவ்வனத்தில்
தேகமதைவிட்டெறிந்து திருமாலிடஞ்சேர்ந்தார்
விசாரமினிவேண்டாம் வீமரேயென்றுசொல்லி
சாவதுணைநமக்கு உலகளந்தாருண்டெனவே
சிறகிழந்தபட்சிகள்போய் துயரமெல்லாமுள்ளடக்கி
கூவியேசென்று குமுதமலராறுதன்னில
நாடியேபாதை நடந்தேவெகுதூரம்
தொடர்ந்துவனங்கடந்து தொண்ணூற்றுகாதவழி
நடந்துமலைகடந்து நாற்பதுயோசனைதூரம்
உற்றசுநமலையும் ஓடகிரியென்னுமந்த
அஸ்தகிரிமலையும் அவ்வனமுந்தான்கடந்து
சாகாமுமாமலையும் தாங்கள்மிசக்கடந்து
வராகிமாலைதன்னை வந்தடைந்தாரம்மானை
நன்றியுள்ளதர்மருமே நாடிச்சினந்தெழுந்து
பன்றிகொன்றுவந்தெதிரே பகட்டியதட்டுகையில்
பரித்துவீமன் பன்றிதனைப்பிடித்து
தெரிந்துகழுத்தைத் திருகுமந்தவேளையிலே
வேதியன்போல்நின்றான் மிக்கதொருபன்றியுந்தான்
நீதியுள்ளதர்மர் நினைவேதெனக்கேட்டார்
ஓதுவான்வேதியனும் உள்ளபடிதப்பாமல்
சாதுவுள்ளதர்மருடன் தானுரைத்தான்வேதியனும்
கருதித்தவம்புரியுங் கார்மேகமாமுனிவர்
பருதித்தவசு பக்கத்தில்மேலிருப்போர்
தக்கதொருவேள்விக்குச் சமிதைகொடுவாவெனவே
சிக்கெனவேவாவென்று செப்பினார்மாமுனிவர்
சமித்தெடுத்துப்போகத்தாமதமாகின்றுவிட்டேன்
குமுட்டிமனங்கோபங் கொண்டெழுந்துமாமுனியும்
அமட்டியெனைவேண்டி அகோரித்துசாபமிட்டார்
இச்சாபமிட்டார்காண் இவ்வடிவமானேநான்
அச்சாபந்தீருமெப்போ அருளுமெனவுரைத்தான்
தர்மருடன்வீமன் தனித்துவரும்வழியில்

வீமனவுந்தர்மர்தன்னை வெண்கிசினக்தெதிர்ப்பாய்
வாலுவீமன்கண்டு வாரிபிடித்துணையும்
தன்னைத்திருகையிலே தான்தீருஞ்சாபமென்றார்
ஆனதினல்சாப மகன்றதுகாணும்மாலே
தானவர்கள்வைகுந்தம் மன்னவரேசேருமென்று
போனான்மறையோனும் புகழ்பெரியகானகத்தில்
தேனாருந்தன்மர் சிவனேசிவனேயென்று
இந்திரகிரிசந்திரகிரி என்னுமொருமாமலையும்
அந்தகிரிவானமலையப்பாலுந்தான்கடந்து
ஓங்கிவளர்ந்தவொரு ஓமகிரிதான்கடந்து
மூங்கில்வனங்கடந்து மூப்பதிங்காதவழி
பாங்குடனேபாதாள மூடுருவியப்பாலும்
தாங்குநிலைத்துவாரம் தான்கடந்துஅப்பாலும்
வெளியேறிவந்து விமலனுந்தன்மருமாய்
வழிகூடியேவந்தார் மலைகள்வனங்கடந்தார்
இப்பாலிருபேரும் எண்பது யோசனைதூரம்
மெய்ப்பானகாட்சிகளும் வேணதெல்லாந்தான்பார்த்து
சோமகிரிகண்டு தொழுது அடிபணிந்து
சேமமுடன்கானகத்தில் நெடியோனைநினைத்து
ஆரணமானதொரு அடவிதனிலேகடந்து
பூரணமானதொரு புட்பகநீர்தானாடி
கீர்த்திபெறுஞ்சக்கிரகிரி கிரவுஞ்சமாமலைத்தான்
கார்த்திகைமாமலையுங் கடம்பவனந்தான்கடந்து
இப்பாலிருபேரு மெண்பது யோசனைதூரம்
அப்பாலுந்தான்கடந்து அகண்டவருகையிலே
அவ்வனத்திலேநிமித்த ஆர்பாரித்துதான்கூற
இவ்வனத்திலேநிமித்த மேதென்றுபார்ப்பளவில்
நாலுருவும்வீமருக்குச் சக்கரமாச்சதென்று
கோரகவேநிமித்தம் நிஜமாயுரைத்ததென்று
முன்மாநினைத்து தனியாளேனென்றுசொல்லி
நம்மைதனிலெல்லா மிகழ்ந்தோமேவென்றுசொல்லி
சிந்தையுள்ளதம்பியரே வீமரேவுந்தனுக்கு
சந்தையுமாய்க்கூத்துஞ் சரியென்றுதானுரைக்க
பாரியசொல்வீமன் பட்டமுடன்தர்மரையும்
ஆரியரேஅண்ணாவே அடியேன்தானோர்வசனம்
உம்மைத்தனியேவிட்டு வுடல்சூழந்துதான்போக
கல்மனதுசொல்லக் கவலைதுலையாது
இறப்பதுவுமெய்யாகு மிருப்பதுவும்பொய்யாகும்
சிறப்புடையவைகுந்தஞ் சேர்வதேயுண்மையென்று
எமக்குப்பயமில்லை எம்முடைய அண்ணாவே
உமக்காகஎன்மனது வுழன்றதுவேயல்லாது

வேறேகவனம் விடசற்றுமில்லேஐயா
கூறேனெநவார்த்தை கோவிந்தாநீயறிவாய்
தனியானேனென்று சலியாமல்நீர்தாமும்
இனியவைகுர்த மிப்போதுசேருமென்று
கண்ணர்தனை நினைந்து கருத்திற்றியானமதாய்
எண்ணமற அண்ணலே இருமென்றுதானுரைத்தார்
சொல்லுகின்றயோகது சோத்தியமும்வந்ததுவே
மல்லுபுயவீமனுக்கு மதிமயக்கம்வந்தவுடன்
ஐம்புலனையுள்ளடக்கி அறிவைமிகத்திருத்த
செம்பொன்னிறநெடுமால் திருத்தான்சரணமென்று
அரிநமவென்று அஷ்டாட்சரந்தன்னையும்
பிரியாமல்நெஞ்சில் பிடித்தானிருபாதம்

விருத்தம்,

ஐவர்க்குஞ்சகாயமுன்னாளடைக்கலங்காத்தமாலே
தெய்வற்கும் தெய்வமாகித் தேவனாயிருந்தமூர்த்தி
உய்வதற்கருளியென்று உள்ளத்திலன்புவைத்து
மெய்வர்க்கமாகினின்ற வேதநாரணனேபோற்றி
அருமறைப்பொருளேயுந்த னடைக்கலமைவரென்றே
இருகரையடைவார்நால்வர் திருவடிசரணஞ்சேர்ந்தோம்
தர்மரும்பிரதேவாரூர் தனிவழிதனியானாகி
வரும்வழிபயமில்லாமற் மாயனேவந்துகாரும்
இன்பமும்பொருளும்நீயே ஈஸ்வரசுகமுமநீயே
அன்பருக்கன்புநீயே அச்சுதாபச்சைமாலே
துன்பமும்மிகழ்ந்துநாயேன் சுருதியேபொருளென்றெண்ணி
இன்பதிதேடிவாரேன் நெடியவாபோற்றிபோற்றி
மூன்னாள்முதல்வா முகில்வண்ணாமுகுந்தாநந்தகோபாலா
உன்னாலாகிபிருந்தபடியே னுடலைக்கிடத்திவுயிர்பிரிந்து
இன்னாள்வந்தபடியதனை யிப்போவந்தென்னைவருந்தம்
தன்னைனைவேதற்காத்து சாமிசரணந்தருவாயே
அங்குசகரனேபோற்றி அரிநமசிவாயாபோற்றி
எங்குமாய்நின்றாய்போற்றி ஏழைபங்காளாபோற்றி
சங்குசக்கரனேபோற்றி சாரங்கதரனேபோற்றி
பொங்குபூரணனேபோற்றி பூமகள்கணவாபோற்றி

கதை

ஆபனே அச்சுதனே அன்றர்பெருமானே
நேயனேபாண்டவர்க்கு நேத்திரமாய்நின்றோனே
விண்ணகத்துக்கெல்லா மெய்ப்பொருளாய்நின்றோனே
கண்ணனேயுன்பாதங் கார்க்கக்கடனுமக்கே
எனக்குமதிமயக்க முற்றிமுடிவாகி
உனக்கபயமென்று வோதினேன்யான்விருத்தம்
கடைக்கனிருளாக்கிக் காத்தாலைசவேனுக்கி
உடைக்கலமுர்தாணிழந்து வுயிர்பிரிந்துவானேக்கி

அடைக்கலமென் றுனையே அடியேன்மிகநினைந்து
வந்தாவடியேர்க்கு வைகுந்தந்தானருளி
காத்தருளவேணும் சடையஞ்சமயமையா
பொய்கொண்டநெஞ்சன் புலையனுமாயென்னையிப்போ
வைகுந்தஞ்சேர்த்து வைத்தருளுமாயோனே
பஞ்சாயுதத்துடனும் பசுந்துளபமாலையுடன்
கஞ்சமலர்மாதனையும் கனத்ததிருமார்புடனும்
செம்பொன்மணிமாலையுடன் சிறந்தபசுமேனியுமாய்
அம்பொன்முடியிலங்கி மழைசாறடியேன்முன்
ஆடுங்கெருடன் அரியதொருவாகனமேல்
நீடுந்திருக்கோலமுடன் நீரிங்கெழுந்தருளி
அடியேனான்செய்தபிழை அடிமையெனவேநினைந்து
அடியாரும்வைகுந்தம் பதிதனிலேவைத்தருளி
கட்டழகன்வீமன் கருணைக்கடலாகி எட்டெழுத்தை யுச்சரித்துஇல
ஞ்சுமினம்மானை. மேகவர்ணன்தன்பதத்தை வீமனுந்தானுச்சரித்து
தாகமுடனியையோர் தங்கவிமானமதில்
கொண்டுவந்துவீமனையுங் கூப்பிட்டிருத்தி
விண்டுசங்குசின்னம் வீராணந்தான்முழங்க
பைங்கொண்டநாகமிசை படத்தின்மேற்பள்ளிகொள்ளும்
வைகுந்தவாழ்பதியில் வைத்தனர்காணம்மானை
தாமன்றருமன் தனியாகவுள்ளயர்ந்து
வெம்பிமனமுடைந்து வெதும்பிமனம்விண்ணாகி
தம்பிபரைக்காணாத் தனிமையதாயிருந்த
கண்ணீர்தனைநினைந்து கவலையெல்லாந்தானொழிந்து
எண்ணமெல்லாம்விட்டு எம்பெருமாளுண்டெனவே
இன்றைக்கிருப்பதும்பொய் எனதுடைமையென்பதும்பொய்
அன்றைக்கிருந்தபடி யல்லாதுவேறுமுண்டோ
பூமிதனில்வந்து பிறந்தோம்புவியாண்டோம்
சாமிதிருமால் சகாயமதுபெற்றிருந்தோம்
ஐவரென்றுபாரி லரசாகத்தானிருந்தோம்
ஐவர்தனில்நால்வராக நின்றார்களென்னைவிட்டு
ஏதுசெய்வோமென்று இடைத்துருகிநொந்தாலும்
வாதுமலரோன் வகுத்தபடியாமிதுவும்
விட்டுப்பிரியாத வீமனருச்சுனனும்
பட்டுபடாநகுல வாய்த்தசகாதேவனுந்தான்
மாண்டுவிட்டாரென்று மயங்கியழுதாலும்
மீண்டுவ வாரோ மிக்கான தம்பியரே
என்றுதர்மர்தேரி இருந்துமனந்தேற்றி
அன்றுதம்பிவீமனுக்கு அருகாசத்தானிருந்த
செய்யுங்கருமமெல்லாஞ் சீக்கிரமாய்த்தான்முடித்து
உய்யும்பொருள்நமக்கு வுலகளந்தானாமெனவே
சிந்தைதனிலெண்ணித் திருமாலைத்தானினைந்து

சங்கையமாம்வாழ்விதென்று தானடந்தாரம்மானை
நடந்துவனத்தூடே நாமரேதஞ்சமென்று
கடந்துவெகுதூரங் கைவிட்டசூஸ்திரம்போல்
திகைத்துமருகித் திசையறியமாட்டாமல்
வகைக்குவகையிதெனவே வகைசொல்லுந்தம்பியரே
விட்டுப்பிரிந்து வெறிகொண்டபித்தரைப்போல்
முன்னேவல்செய்து முன்னேவழிகூவி
பின்னேவல்செய்யும் பிறவிகளைக்காணமல்
வானத்தைப்பார்த்து மயங்கிவழிதிகைத்து
கானகத்தைப்பார்த்து கவலைபெரிதாகி
இரகுதிர்ந்தசசலைப்போ லேங்கிமனமுழன்று
பிரவிமயக்கப் பிரமையதுதான்முடித்து
வாசமுள்ளதன்மருக்கு மயக்கமவந்துமூடியபின்
நேசமறந்தொரு நினைவுதடுமாறியொரு
மெய்மறந்துநாலசைந்து வேறுபட்டமானதுபோல்
கைமறந்துவாய்மறந்து கண்ணிரண்டுமாசடைந்து
நாடிமூந்துமிந்த நடுக்கம்பிடியாமல்
சோடிமூந்துநின்ற துயரமேதான்பிடித்து
நல்லறிவுகுன்றி ஞானமிருளடைந்து
புல்லறிவுவடைந்து புலம்புவார்தன்மருமே

கொச்சகம்,

அந்திரமேயேகவழி யம்பரமேமங்குரங்கள்
சந்திரனேசூரியனே தம்பிமார்நால்வருந்தான்
இந்திரனேயிறையவனே எந்தவழிவந்தார்சொல்
செந்திருமால்வைகுந்தஞ் சேர்ந்தாரோசேர்கிலரோ
பாரேபருவரையே பனிமலர்கள்செண்பகஞ்சேர்
மேரேபரிமளமே மேதினியிற்கானகமே
சீரேசிறந்தபொங்குஞ் சிந்துரதிவாசிகளே
நேரேயெனக்கிளைய நெடுவீமன்காணீரோ
நாகமேசீன்சாராய் நற்குணக்குமாவிரிய
பூதகமேவானரமே போற்றுஞ்சிறுபுள்ளினமே
காகமேமேகவண்ணர் கண்ணனிடவைகுந்தத்தில்
தேகமேவிமனவ ரிங்குவரக்காணீரோ
நாத்தரசேபோரமேல நாகவல்லிபூரவல்லி
நோக்காரியமூங்கில்களே நூதனமாயிங்குமொரு
போர்க்கரியவில்லிபுரந் தாஞகதாமருளும்
மார்க்குமிருந்தழக னர்ச்சுனரைக்காணீரோ
காட்டுப்புலியே கரடிபுலியாளிகளே
கோட்டுதிகிரிமல குஞ்சரமேயிப்போது
நாட்டுப்பரிநகுலனை நாரணரைத்தான்தேடி
மேட்டுக்கரையேடு விரைந்துவரக்காணீரோ

ஆடிமயிலன்னங்கா ளன்னங்காள்கிஞ்சுகங்காள்
யாகுயிலனங்கள் நீலவர்ணர் தாமிருக்கும்
விடுவைகுந்தமெனும்வேதசகாதேவர்
ஓடுவதுமிங்கெனக்குஉண்மையாய்ச்சொல்வீரே
ஏதறியேன்யானும்இடமும்வலமறியேன்
தீதறியேன்பொய்யுரையேன் திருவுளமேயல்லாது
சூதறியேன்வஞ்சம் தொடுக்கறியேன்நீயறிவாய்
மானதுமார்பாவின் வைகுந்தந்தாருமையா.

விருத்தம்.

வழியுந்திசையிதென் றுவழிதானறியத்தெரியாமல்
விழிநீர்சொரியமெய்சோரவிட்டாயேவெட்டவழிதனிலே
இளையோர்பிரிந்தநாள்முதலாயெளியேன்மனதுந்தெளியாமல்
அழியாதிருக்கும்பெரியோனே அடியேனமலையா தருள்வாயே
தாருமெனக்குச்சீர்பாதந் தனியேயனத்தில்லையாகில்
வாருமெனக்குவழிதுணையாய்வந்தாலென் துயர் தீரும்
ஆருமெனக்குத்துணையில்லையடியேனொருத்தனொன்றுள்
காருமுனதுபதஞ்சேரக்கண்டாய்நந்தகோபாலா.

கதை

பொருள்மயக்கமில்லையிங்கே பூமிமயக்கமில்லை
அருள்மயக்கமானதில்லை அரியதலத்தாசையில்லை
இருள்மயக்கமாகியிப்போயேதுந்தெரியாமல்
மருள்மயக்கங்கொண்டுமனதுமிகவுழன்றேன்
பித்தரைப்போலாகிப்பிரமைபிடித்துழன்று
அடுத்தகநெடுமால் அரியவைகுந்தமதில்
நோக்கிவருகுப்போது நொந்துமனம்புண்ணாகி
தாக்குவருவினைக்குத்தம்பிமாரில்லாமல்
தனியேவழிநடந்துதானிங்கொருவனுமாய்
இனியார்நமக்குதவும்பெருமானுண்டெனவே
கந்ததனில்ஜூல்நிழலிற்கையேதலைவணையாய்
தங்கியேகண்துயின்றார் தன்மருதானம்மானை
சத்துருவுமன்னவனைத்தானிறையாமென்றுசொல்லி
ஐந்துதலைநாகமது அருந்தாலேதான்விழுங்கி
ஆலிலைமேற்றுயிலுமென்றஅச்சுதநாராயணர்தான்
தலைநாளுரைமொழிதப்பாமல்சக்கரமும்
மற்றொருகால்வாமடிந்தபின்புதன்மனையும்
பத்துடபோகாதுவேந்தபரிவானசக்கரமும்
வடவாளிற்கண்துயிலும்மன்னனையேகாணாமல்
அடவாகநாகமதை அறுத்ததுவேசக்கரமும்
அறவுதலைப்பிளந்து அடிவயிற்றிலுள்ளிருந்து
தர்மர்தலையெடுத்துச் சாந்தமாயால்நிழலில்
துலங்காமலையிடத்துத் தூரநின்றதம்மானை
புத்திரவுமுண்டதுவும் பூலோகசக்கரந்தான்

அந்தரலைமுண்டாதுவும் அறுத்தெரிந்துபோட்டதுவும்
சற்றுமறியாமல் தன்மருந்தான்கண்டுயின்றார்
நித்திரையுங்கொண்டு நேராமமேழுந்திருந்து
ஆசறிவார்போலேஅண்ணர்தமைநோக்கி
ஊரறியப்பாதையொருவருமேதானடந்து
கல்லுங்கரடுங்கடியவனாந்திரமும்
அல்லும்பகலும்ஆகவழிநடந்து
இளைந்துமலைந்துத்திசைகொட்டுமானதுபோல்
தளைத்துத்தனியே தவிப்புமிளைப்பாகி
பேச்சுத்துணையும் பின்துணைவுமில்லாமல்
மூச்சிவிடச்சற்றும் முத்திணையுமில்லாமல்
பக்கத்துணையுமற்றுபரதேசிபோலாகி
துக்கஞ்சுகமிரண்டுமின்றித் தலைதூரந்தானடந்து
உன்னிநடந்துதர்மர்ஒன்பதுயோசனைதூரங்
கன்னிமலைகடந்துகடியவனந்தான்கடந்து
வருணன்மலைகடந்துவாய்வுமலைகடந்து
தருணநதிகடந்துதவலைமலைதான்கடந்து
திக்கதொருபொய்கைமிகுந்தபெருக்குடைய
புட்கரணிகண்டுபுனலாடிபூசைபண்ணி
வீமன்விஜயனுக்குமிக்ககுலனுக்கும்
தர்மன்சகாதேவனுக்குத்தர்ப்பணமுந்தான்முடித்து
சொல்லிமுடித்த சூரியனைத்தெண்டனிட்டு
நலைதம்பிமாருக்குகாரணரேதஞ்சமென்று
தன்துயரந்தீராமல்தனியேவனத்தூடே
என்துயரந்தீரத்தனைநாட்சொல்லுமென்று
சிந்தைதனிலெண்ணிச்சிவனேசிவாயமென்று
விந்தையிதுபாருலகில்மேகவண்ணர்தான்கூத்து
பார்க்கும்பொழுதுபலவிதமாய்கைகளாய்
தீர்க்கமுடன்தோழர்தெளிந்ததன்மரப்பாலும்
மார்க்கமுடன்செல்லும் வழிதனிலேஓர்மலைதான்
ஆர்க்குமபுகவரிவாய் அண்டகடாகமட்டும்
ஓங்கிவளர்ந்துநின்ற உன்னிதத்தைகண்டவுடன்
எங்கிமலைத்துநின்று இதற்குவழியெங்கெனறு
நாலுதிக்குமோடி நன்றாகஆராய்ந்து
காலைகெட்டுந்தூரமெல்லாங் கடவுள்சற்றுமில்லாமல்
வெம்பிவிழுன்று மெய்மறந்துதனமருந்தான்
தம்பியாரில்லாஇப்போ தாழ்வுவந்ததென்றுசொல்லி
நான்செய்வேன்கோபால எவ்விடத்திலேயுரைப்பேன்
முன்செய்ததீவினையோ மூதாக்கள்செய்ததுவோ
ஏதுமயக்கமினி என்செய்வேனச்திரத்தில்
வாதுமயக்கம் மதிமயக்கமால்மயக்கம்
சூதுதிரூபால் யோசனையாவிதமயக்கம்

இப்படியோவென்னை இடறுபண்ணிபார்ப்பதுவும்
அப்படியுமானால் அடியேன்மலைப்போனேன்
கண்ணாவுனக்கபயங் கானகத்திலாருமில்லை
அண்ணாவுனக்கபயம் அருகில்லாருவரில்லை
அனந்தசயத்தோனே அபயமுனக்கபயம்
வனந்தனிலேவந்து வழிமயக்கந்தான்தீர
அபயமென்றசக்ரம் அச்சுதற்குகேட்கிலையோ
உபயமென்றசக்கரந்தான் ஒழிந்தோடிப்போனதுவே
சங்குதொனிபண்ண சமயமுனக்கிலையோ
மங்குமதிமயக்கம் மலர்ந்துதோமரயோனே
ஆயிரநாமம் அசந்துதோஎன்றலே
பாயிரமாலிலே பள்ளிகொள்ளப்போகீரோ
உன்சித்தமென்று உன்னைநம்பிவந்திடத்தில்
என்சத்தங்கேளாயல் இருந்தென்னமாயோனே
தம்பியருமாண்டு தட்டழிந்துநான்றானும்
தம்பிமுகம்வாடித் தாவிபாதவித்து
நம்பினேனுன்னையென்று நான்வரவும்நீர்தாமும்
வம்புசெய்துஎன்னை மயக்கிவைக்கலாமோதான்
மனதுதடுமாறி மதிமயங்கியிப்போது
தனக்குக்கூறிய சபர்த்தறியவேணுமென்று
சித்தமேயல்லாது செயல்வேறுமில்லையென்று
சுத்தமாயந்தர்மர் தோத்திரங்கள்பண்ணியபின்
காத்திருந்தசக்கரமுங் கண்ணரிடயேவலினால்
பேர்த்தெடுத்துமாமலையைப் பெருங்கடலிற்போட்டதுவே
ஏகவெளிபாதி இடையூறுதானீக்கி
போகவழிகண்டு பூரித்தகமகிழ்ந்து
வேகமுடன்தர்மர் விரைந்துவழிகூடி
தாகமுடனற்காதந் தாண்டியேயப்பாலும்
அஞ்சனமாமலையும் அதிலுள்ளகூடுகளும்
கஞ்சமலர்வாவிகளுங் கண்டுபுனலாடி
மஞ்சுலவுசோலை வனமும்பலகடந்து
பஞ்சமலைநீங்கும் பாரமலைதான்கடந்து
சென்றார்வழியூடே சீரானகானகத்தில்
நின்றார்திகைத்து நெடுமாலெனக்கூற
காட்டகத்தில்வாழுங் கரடிபுலியாமிருகம்
கேட்டவுடனே கிருபையுடன்தர்மரையும்
ஆரவர்தானென்று அறிவுடனேதான்கேட்க
நீரோயினிகளும் நீதியுடன்சொல்லுகிறேன்
அத்திபுரநாட்டில் ஆளுதொருபாண்டுமன்னர்
புத்திரனார்தர்மர் புண்ணியரேநீர்கேளும்
காசினியிற்காலங் கலியுகமும்வந்ததினால்
தோஷக்கலியன் தொடராயல்நாயகளுந்தான்

பாஞ்சாலிதானும் பஞ்சவர்களைவருமாய்
வந்தோம்வனத்துடனே வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாயிருக்க தம்பிமார்பாஞ்சாலி
மாண்டிறந்துமுன்னே வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
ஆண்டிபோலாயிங்கே அரதேசியாகிநின்று
தனியாகிநானுந் தாமரையில்தண்ணீர்போல்
இனியொருவர்காணாமல் இங்குவரவுன்னையுந்தான்
கண்டேனென்று கவலைதெளிந்ததென்று
விண்டேன்பரூஷர் மிருகந்தனக்குறைக்க
கேட்டுவருமிருகம் கிலேசமிகவுண்டாகி
நாட்டிற்புகழ்தர்மரேயுன் னாயமதுக்கொப்பாக
இப்புவியில்காணேன் இங்குவந்தீர்நீர்தனியே
ஒப்பெரியவீமன் உயிர்துணையாமெந்தனுக்கு
வீமனிறந்ததொரு விசாரமெனக்கரித்து
நேமமுடன்நீர்தான் நீதமாயெங்களுக்கு
முன்னாள்வழக்கு மொழிந்ததுவும்நீர்தானே
இன்றுனுன்னைமறந்தால் ஏடேரமாட்டேன்
நீதியுள்ளதர்மரிங்கே நெடுகவுந்தாரித்துரம்
செய்நீயுடனுனுஞ் சினேகமறவாமல்
வருவேன்துணையாக வைகுந்தஞ்சேருமட்டே
குருவேசரணமென்று கோரியபின்னாக
வராமிருகமதை வகையுடனே தர்மருந்தான்
தேரவேசிந்தை தெளிவேவஆதரவாய்
எந்தன்மனந்தேற்றி இத்தூரம்வந்தீரே
சந்தோஷமாச்சுதென்று தாயேநீபோவெனவே
தர்மரிவையுரைக்கத் தனிமிருகமேதுசொல்லும்
இன்மையுடவைகுந்தம் எவர்சேர்ந்தாரிப்புவியில்
நன்மைதுன்மைரெண்டும் நாட்டிலனுபவித்து
சென்மக்கடைத்தேறச் செய்வார்கள்தானேதர்மம்
வைகுந்தஞ்சேர்ந்து வாரியெடுப்பதென்ன
வைகுண்டதேர்பலன்காண் காவல்கள்யான்தாரேன்
அசுரசதிலோகம் அடங்கலுமேயுண்டாக்கி
விசுரமுடிசூடி வேந்தரைப்போலிங்கிருந்து
வைக்கிறேனும்மை மன்னவரேதானிரென்னூர்
தக்கமிருகமது தர்மருடன்கூற
கல்லதென்றுதர்மர் நகைத்தேதுசெப்பலுற்றார்
அல்லவேபெந்தனுக்கு அன்பாகவேயுரைத்தீர்
செல்லவேவைகுந்தஞ் சேரவென்றுதான்போக
நில்லென்றுசொல்லி நிறுத்துவதுஞாயமல்ல
தம்பியர்தர்மரண்டை சலிப்பென்றுபாராமல்
நம்பியினியரசு நாட்டுகிறோமென்றுசொன்னால்
நந்தகோபால நரசிங்கருபன்னையே

எந்தவிதமானாலு மிதவாகவேநடந்து
விஷ்ணுபதஞ்சேர்ந்து மெய்மகிழ்ந்துதான் தினமும்
கிருஷ்ணவதாரனுடன் கிலேசமெல்லாமங்குவைத்து
பாதம்பணிந்து பரிவுடனேபோற்றிசெய்து
நீதமுடனென்னை நீயனுப்பவேணுமென்று
புருஷாமிருகமுடன் போதனையாய்ச்சொன்னவுடன்
பிரியமுடன்மகிழ்ந்து பிரியமாய்த்தர்மரையும்
பாங்காகப்பின்தொடர்ந்து பாதைவழிதான்கேட்டு
நீங்காமற்பாதை நெறியாய்வழிநடந்து
சீரானவைகுந்தஞ் சேர்ந்திருபபீரென்றுசொல்லி
பேரானமாமிருகம் பிரியமுடனே தழுவி
போமென்றுசொல்லி போதமுடன்தானனுப்பி
தாமேவும்வைகுந்தந் தானுமேதூரமில்லை
மெத்தசமீபமது விசாரமதுவேண்டாங்காண்
கர்த்தரிடசீர்பாதங் காண்பீரெனவுரைத்து
அனுப்பியேவனமிருக மருங்கானல்போனதுவே
சனிப்போலுந்தன்மர் சருகாமலேநடந்தார்
அரியதிருமாலே அருகாகஎன்னுடனே
பிரியாமல்நேரே பின்னேதுணையாக
வரவேணுமாயன் வைகுந்தவாசவனே
தரவேணுஞ்சீர்பாதந் தரணிலேயென்றுதன்மர்
நடந்தார்திசைநோக்கி நாரணரேதஞ்சமென்று
சங்காதரனுங் காலகண்டநாதரையும்
சங்கரனார்தான்வாழுஞ் சத்திசித்திமலையும்
அன்புதிரிகோணர் அருகாகவந்தின்று

விருத்தம்.

என்றுமழியாப்பொருளாகி ஏகாம்ப முந்தானுகி
மின்றுமுதலாயின்றளவு மளவாயுதத்தீர்க்கமதாம்
நின்றுநெடியபுவனமெல்லாம் நீயேநிறைந்தபரஞ்சுடரே
ஒன்றுமறியேனுமைபாகா வுடையாநடையபடிகாரும்
காசினிதனிலேவாழ்ந்து கருமமேமிகவுஞ்செய்து
பாசினீர்போலேயானும் பாரைவிட்டகன்றுசெல்வேன்
தேசிகனுகியிந்தச் சடத்தையேசுமந்துகொண்டு
வாசனையுடனேயுந்தன் மலரடிபெருகவாரேன்
மாயனேவாழுகின்ற வைகுந்தந்தன்னிலென்னை
ஆயனேவருகிருக்க வவனியேகடாட்சம்தாரும்
தூயனேநமசிவாயா சோதியேஆதிமூலம்
நாயனேதுணையதாக நடத்துவாய்நமச்சிவாயா

கவை.

தொழுதுவணங்கித் துதித்தவுடனேயரனுர்
முழுதுமனமகிழ்ந்து முன்புநின்றரம்மானே

சாம்பசிவருத்திரனர் தன்மலையில்தீர்த்தமெல்லாம்
இன்பமுடன்தானுடி இருந்தங்கிளைப்பாரி
துன்றுமணிரத்தினகிரி சுனையின்புனலாடி
வேறுகதியில்லையெனும் வெள்ளிமலைக்கப்பாலும்
ஆரியர்தன்மலையு மாண்டார்திருப்பதியில்
சூரியதோர்வாழ்கிரியுங் கொடுமலையுந்தான்கடந்து
கால்கண்டவேகங் கடிவேகமாய்நடந்து
பால்வடிவமேனிப் பரஞ்சுடரைத்தானினைந்து
எண்பத்திருகாத மோயாமலேநடந்து
பண்பற்றுநேசம் பசுந்துளபமேனியெல்லாம்
ஆசைகொண்டுதர்ம ரனேகநெடுநேரம்
பாஷைபலபேசிப் பலமிருகம்பட்சியோடு
பேசிநடந்து பெருந்துயரந்தான்தீர்ந்து
தேசிகன்போல்வந்தவரைச் சிவலோகபட்சியொடும்
இத்துயரங்கொண்டு எங்குவந்தீராமெனவே
அத்துயரங்கேட்க அரிபட்சிதன்னுடனே
இப்புவியிலத்திபுர மியல்பானதன்மரென்பேர்
மெய்ப்புடையதம்பியரை விட்டுப்பிரிந்தமையால்
வைகுந்தவாழ்பதிக்கு வழியரியமாட்டாமல்
மெய்தளர்ந்துயானும் வெகுதூரம்வந்தேன்காண்
தாழ்ந்துமனந்தேற்றிச் சலியாதிருமெனவே
வாழ்ந்தநெடுமால்பதத்தை மனதிலுன்னிச்சொல்லுமென்று
புள்ளதுசொல்லப் பூரணமாயுளமகிழ்ந்து
வள்ளல்திருவைகுந்தம் மன்னவனேதூரமில்லை
கிட்டவதுதூரமல்ல கேதாரஞ்சத்திரங்காண்
சட்டமுடன்தன்மரேநீர் சலியாமலேநடந்து
போமென்றுசொல்லி பூரித்தகமகிழ்ந்து
நாமெங்கிருந்தாலும் நமக்குநீயுண்டெனவே
எண்ணியிருப்பான்கா ணென்னுடையபுள்ளரசே
புண்ணியரேபோமெனவே போவென்றார்தன்மருமே
தன்மருந்தான்புள்ளரசைத் தானனுப்பிப்போனபின்பு
மின்மருவுஞ்சோலை யவ்வனமுந்தான்கடந்து
இப்பால்வெகுதூரம் ஓயாமலேநடந்து
அப்பாலிருக்கின்ற அந்தவனந்தனிலே
கீதாடகியென்னுங் கிரணபிரகாசமதாய்
நீதமுடனங்கிருந்து நீராரெனக்கேட்க
சாதுபதில்தர்மர் சாற்றுவாருள்ளதெல்லாம்
ஓதும்பயனெல்லா முண்மையாய்க்கேட்டிருந்து
எல்லாங்கழித்துஇங்கே இத்தூரம்வந்துவிட்டீர்
பொல்லாங்கினியுமக்குப் போச்சுதுகாணம்மானை
அடுத்தீர்வைகுந்தம் அன்பானதருமரேநீர்

கொடுத்தீர்பிடித்தீர் துயரமெல்லாந்தான்தீர்த்தீர்
எடுத்தீர்தவமுழுது மேருவதுவைகுந்தம்
கொடுத்தீர்முதலருத்தீர் கோபாலருண்டெனவே
நன்மம்பலித்ததுகாண் தன்மரேயுந்தனுக்கு
கன்மமெல்லாம்போய்கண்டு கண்ணர்பறம்வந்ததுகாண்
ஜென்மமுடன்வைகுந்தஞ் சேர்வீர்தவம்பெருவீர்
இம்மைதனிலுன்னைப்போ லிப்புவியிலாருமில்லை
என்றந்தப்பட்சி எடுத்துமிகத்தானுரைக்க
நின்றந்தகன்பர் நீயாரெனக்கேட்க
ஈசனடியார்கள் ஏஸ்வரியேதான்வளர்ந்து
வாசமுள்ளபிள்ளைதனை வஞ்சகஞ்செய்தேனாகையினால்
சோபமுடன்பாசியுந்தான் சூழ்ந்ததுகாணல்லவென்று
அந்தகயிலைவிட்டு அகன்றுதானிப்போது
இந்தப்படிவைகுந்த மிவ்விதியேகிவந்தேன்
செங்கணெடுமாலுடைய திருக்கோலமுள்ளதெல்லாம்
பொங்கமுடன்சொல்லிப் பூங்காவனந்தனிலே
இங்கிருக்கும்பொய்கைகள்தானென்னுதுகாண்மன்னவரே
இந்தத்தலத்தி லினியதவமிருந்தால்
எந்தப்பலனுமெய்திடுங்காணிப்போது
தாகமுடனீயிருந்து தவமுடிப்பீரித்தலத்தில்
மேகவண்ணர்தம்மை விரைந்துநானிங்கழைத்து
மவுலிதபத்து மகுடமுடிசூட்டி
பவுரியமாயும்மைப் பாராளவைப்பேன்காண்
அரசர்மடந்தையரு மரம்பையருமுந்தனுக்கு
முரசுடையமன்னு முடிசூடுமென்றுரைக்க
பகருமொருபட்சியைத்தான் பார்த்துமிகத்தருமருந்தான்
செகதலமுமுண்டான ஈசனைதனையிழந்து
தாரணிமேலாசைவிட்டுச் சற்றுமனமில்லாமல்
நாரணனார்வைகுந்த மடையவென்றுபோகையிலே
பின்னுமிசைவைத்துப் பேசுவரோபுள்ளரசே
என்னாசையானாலு மினிமேலுமெள்ளளவும்
இல்லைஇங்கேசற்றும் என்மனதுக்கேறாது
கல்லையுருவாக்குவித்த காரணருண்டெனவே
புகலுமொழிகேட்டுப் புள்ளரசேதுசொல்லும்
இகலுடையவேந்தே என்மொழிகாநீர்கேளும்
ஆதிதிருமாலுடைய அன்புற்றநீர்தாமும்
நீதியுடன்தம்பியரை நினைந்தால்காரியமோ
வேறுநினைவு விசாரமதுதானுமின்றி
ஒருமொருநினைவு கோவிந்தாவென்றுசொல்லி
பார்த்திபரேதம்பியர்மேல் பாரமதையகற்றி
எத்தியமால்பதத்தை இறைஞ்சுமென்றாரம்மானை

ஓதரியமுன்னுளி லூழ்வினையும்மாலே
வேந்தர்விதியை விலக்குவரார்பாருலகில்
என்றுபுள்ளுஞ்சொல்ல யின்பமுடன்தர்மருமே
ஒன்றுமறியாம லுரைத்திரேபாருலகில்
ஓங்குபஞ்சபூத மொன்றொன்றுகூடாமல்
தூங்குமயக்கமென்னுந் துயர்கடலிலேவிழுந்து
அழுக்கவினையகற்றி அச்சுதனையல்லாது
தொழுந்தகமேயாற்குந் தோற்றுமேபுள்ளரசே
என்றுதர்மர்சொல்ல வியலானபட்சியுந்தான்
நன்றுதான்தர்மரென்று நன்றேகிப்போனதுவே
பட்சியுமப்பால் பறந்தேகிப்போனபின்பு
காட்சியுள்ளதர்மர் கதிக்கவேதானெழுந்து
அந்தவிடம்விட்டு அனேகநெடுந்தூரம்
வன்றலருஞ்செண்பகமும் வனமுமிகக்கடந்து
திரிகோணமாமலைமேற் சென்றங்கிதவாகி
பார்த்துமனமகிழ்ந்து பாலாறுதன்னில்வந்து
சாற்றுமொருநாளு சதுர்வேதமாமலையும்
தாராருந்தர்மர் தயவாய்மனமகிழ்ந்து
சீராரும்பாறையின்மேல் சென்றிருந்தாரம்மானை
பாரியமலைதன்னில் பன்றியொன்றுதான்வரவே
கரியதிருமாலை கண்டீரோபன்றியென்றார்
இவனுரெனவே யேதொன்றுங்கேளாமல்
கவனமதுவேறாய் காட்டகத்திலோடியதாம்
ஓடியதோர்பன்றிகளை யுத்தமனேபோமென்றார்
நாடியொருநினைவாய் நடந்தார்வழிகூடி
புலிகரடியாளிசிங்கம் பேரானமற்றுமுள்ள
நலிவுகண்டுமண்மேல் நடக்கலுற்றாரம்மானை
சேனையுடைய ஜெகவீரராசனுந்தான்
கானையவர்வந்து கண்டார்கான் தர்மருந்தான்
ஆதவனுஞ்சென்று அடைந்தானேயவ்விருளில்
போதமுடன்தர்மர் பூமியேமெத்தையதாய்
நேமமுடன்கானகத்தில் நெடுமரத்தின்கீழாக
தாமிசமாய்கண்துயின்றார் தர்மருமேதானசைந்து
அங்கேபரிதி அருணனுதயமதாய்
பங்கயம்போலாகி பருதிவந்துதோன்றியபின்
வெண்மையுடனெழுந்து வேதவிதியாறுதன்னில்
செண்மையுடன்புட்கரணி தீர்த்தமேயாடுதற்கு
செந்திருவையொப்பான தெய்வமடந்தையர்கள்
அந்தநதிதீர்த்த மாடலுற்றாரம்மானை
நீராடிகன்னியர்கள் நீர்கரையிற்றானேறி
சீராய்துகிலுடுத்தி சிகையாற்றியேமுடித்து

பூசைகளுந்தான்முடித்து புஷ்பமலர் தான்சாற்றி
ஒசையுடன்காவில் உலாவிவருகையிலே
சோபமுடன்தர்மர் சோலைநிழல்தனிலே
தாபமுடனிருக்கத் தான்கண்டார்கன்னியர்கள்
காவுதனில்வந்திருந்தக் காரணந்தானேதெனவே
வந்தருகில்நின்று மாதரெல்லாந்தான்கூடி
இந்தவனந்தனிலே யித்தூரம்வந்ததென்ன
என்றுசொல்லகன்னியர்கள் ஈதுரைத்தார் தர்மருந்தான்
மன்றுலகில்நானும் வாசமுள்ளஅத்திபுரம்
பாண்டுமன்னன்மைந்தர் பஞ்சவர்களைவருமாய்
மீண்டுகலியதனால் விரைந்தேகிகானகத்தில்
இருந்துசிலகாலம் எல்லாந்தான்விட்டிழந்து
திருந்துமொருவைகுந்தஞ் சேரவென்றுவந்திடத்தில்
மடிந்தார்கள்தம்பியர்கள் வனத்திலேநால்பேரும்
இடிந்துமனமுழன்று யிங்குவந்தேனொருவன்
வழியறியேன்யானும் மற்றதிசையறியேன்
வெளியேதனியாக வேற்றுமுகமாகவந்து
களிகூறக்கண்டேன் கன்னியரேயுங்களைத்தான்
தெளிவாச்சுதெந்தனுக்கு தெள்ளமுதேயிப்போது
உங்களைநான்கண்டவுடன் உற்றதுணையெனவே
திங்களொளியதுபோல் தெரிசித்தேன்கண்டீரே
விந்தைமலர்வைகுந்தம் வீடுமேயெந்தனுக்கு
எந்தநாளோவறியேன் எத்தனைநாட்செல்லுமென்று
மாதர்களேஎந்தனுக்கு வழிதானும்நீங்களுமே
ஆதரவாய்ச்சொல்லி அனுப்புமென்றார் தர்மருமே
அந்தமொழிகேட்டு அரம்பையர்களந்நேரம்
விந்தமதுகோடி விரைந்துவந்தீர் தர்மருமே
அதிலும்பதின்மணங்கு அரசனேயுந்தனுக்கு
சதியும்பழியுஞ் சம்பத்துமவனுக்கு
உம்மைமுடிசூட்டி உமக்கேவல்செய்துநிற்போம்
நன்மையுடனெங்களைநீர் நம்பியேபாருமென்று
கன்னியர்கள்சொல்ல கருத்துடனேதர்மருந்தான்
மன்னியதோர்பெண்ணரசே மண்ணாசையில்லையினி
உண்மையாய்ச்சொல்லுகிறேன் உற்றதர்மரென்று
தண்மையாயெந்நாளுந் தற்காத்துநின்றதொரு
அச்சுதனார்பாதமல்லால் யாசைவேறில்லையென்று
நாகவிழிமாதே நடவென்றாரம்மானை
விந்தனிவைசொல்ல விரைந்துதான்கன்னியர்கள்
வேகமுடன்கானகத்தில் நடந்தார்காணம்மானை
மாதரந்தகன்னியருந் திசைநோக்கிப்போனபின்பு
மூறலுடன்தர்மர் எமன்பதிநோக்கி

மனேமனமேசாட்சியதால் வள்ளல்திருமரலே
அனுதிபொருளான ஆதிமகாமூலம்
வஞ்சியெனுமின்னுள் மாதுமகாலட்சுமியை
நெஞ்சிலனுதினமும் நீங்காமல்வைத்தருளும்
நீலவண்ணர்தம்மை நினைந்துவெகுதூரம்
சீலமுடன்மேருகிரிச் சிகரமதுதான்தெரிந்து
அங்குள்ளதீர்த்தமது ஆடிக்கரையேறி
துங்கமுடிவேந்தன் தொண்ணூற்றுக்காதவழி
கடந்தங்கொருவருமாய் கங்கைமலைதானேறி
அடர்ந்துமலைச்சார்பில் அருகாகத்தர்மருமாய்
சென்றுகங்கைநீராடி சிவபூசைதான்முடித்து
குன்றுமலைகடந்து கோவிந்தாவென்றுசொல்லி
கேசவனைத்தெடிக் கிருபையுள்ளதர்மருந்தான்
இராசகோபாலர்திரு நாமமிடும்பூரணமே
ஆறுதனில்வந்துநின்று ஆழமதுவென்றறிந்து
வேறுவெளியெங்கும் விசாரித்துகாணுமல்
நின்றுதிகைத்து நெடுமாலைத்தானினைந்து
ஒன்றுமுறையாமல் உழன்றுமனம்புண்ணுகி
சென்றிந்ததர்மர் திருமாலைத்தானினைந்து
(விருத்தம்.) ஆழியும்நதியுங்கேட்டே னக்கரைகடக்கவென்றல்
நீழியவாறிதன்னை நீந்தவுமாட்டேனிப்போ
வாழியேவீமனில்லை மற்றுமென்தம்பியில்லை
சூழியதுணையுமில்லை சுந்தரநந்தகோபா. ௱௯
ஆக்கமுநீயேயெந்த முற்றுமமதுவுநீயே
பக்கமுநீயேயல்லாற் பாலனைவேறுகாணேன்
திக்கமுந்திசையுநீக்கித் தீரவேபுனலைத்தானே
நிக்கவோநிலத்தோடொன்றோ நீயருள்நந்தகோபா. ௱௰
எல்லாப்பாடுபட்டறிந்தே னிளையோன்பிரிந்தநாள்முதலாய்
பொல்லாப்பொழியவேறில்லை பூததயவுமுனக்கிலையோ
சொல்லாய்பெரியவைகுந்தா துரையேநாடினுன்வந்தால்
எல்லாப்பகைகளெதிர்விடுத்தா யேழையெளியேன்கோபாலா. ௱௰௧
வருந்திபுனேயயான்தேடி வரவேவெளியில்வெகுமாய்கை
பொருந்திமயக்கிமிகப்பகட்டி பொல்லாநின்றுள்வேறுகத்
திருந்தநினையிற்றுனினைந்தாற் சிறியனதற்குயிடலவே
அந்தியுனதுபதஞ்சேர வருவாய்நந்தகோபாலா. ௱௰௨
கல்லோமரமோதுணையெனக்கு காடோசெடியோதுணையெனக்கு
அல்லோபகலோதுணையெனக்கு வகண்டமேதிருமால்நீயிருந்தாற்
புல்லோபுனலோதுணையெனக்கு பூடோநிலமோதுணையெனக்கு
வல்லோர்புகழும்பெரியோனே மாயாதுணைவாகோபாலா. ௱௰௩
ஆறுகுளமுமலையதுபோல் அரியகரடிபுலிசிங்கம்
ஏறுங்களிறும்பூதகண மிருண்டஜெகநாதனைப்போல்

ஆருங்கா பவிருப்போகத் தோன்றியெதிரேசோர்வுசெய்தார்
நேருங்கருமமெந்தவிதந் தெளிபுந்திரமுநீர்தானே. ௩௰௪
கெருடாவுனதுவிளையாடல் நேராயறியேன்கோதமுதற்
றிருடாவுனதுதிறமறியச் செவ்வாயுனதுதொருவறியேன்
வருடாய்தனையும்வருடாய்நீ மாயாமாயாவுபாயநீ
கெருடாழ்வாரேயுன்செய்தி கேட்டேயிருப்பேன்கோபாலா. ௩௰௫
தொடரும்வினைகளுகாமற் றன்பச்சடத்திலழுந்தாமல்
அடரும்பசைகளெதிராம லருளாய்ப்பொருளாயடியேற்கு
இடரும்காலத்துணைப்பதத்தை யெனதுசிறமேலனுதினமும்
படரும்படியாய்க்கிருபையது பாராய்நந்தகோபாலா. ௩௰௬
சிறியதேவாபோற்றி செந்திருமாலேபோற்றி
ஆரியராமாபோற்றி யாழியிற்றுயில்வாய்போற்றி
பாரிய்வாறுதாண்டப் பரிவுடன்பாதைதோன்றக்
காரியமாகவந்து கண்ணினிற்றோன்றுவாயே. ௩௰௭
மாமணிதுளபமாலை மார்பினிலிலங்கவெய்யோன்
பூரணகளபமணிப் புளகிதநளிதமாக
நாமணிவயிரமுத்தும் நவமணிபத்துமெந்தன்
தாமணிசிரமேல்நிற்குஞ் சச்சிதானந்தகோபாலா. ௩௰௮
(கதை.) நல்லதிருவிருத்தம் நாரணனார் தான்கேட்டு
மெல்லச்சிரித்து மெய்மகிழ்ந்துபூரணமாய்
ஆறுதனைப்பார்த்து அமருமென்றுகோபாலர்
மாறுபுனல்சுவரி வழியாகத்தோன்றியதால்
அந்தவழிகடந்து அப்பாலும்போகையிலே
விந்தைமலர்தர்மர் மெய்யறியவேணுமென்று
நந்தகோபாலரப்போ நமனைவரவழைத்து
கந்தமருந்தன்மருட கருத்தினைச்சோதியென்றார்
அந்தமொழிகேட்டு ஆனதொருமாமரலி
சிந்தைமகிழ்ந்துவருஞ் சிக்கிரமாய்த்தான்மரலி
இணங்குமுடல்வாய்க்கண் ணெங்கும்புழுச்சொரிய
சுணங்கனெனும்வடிவாய்த் தோன்றினாரம்மானை
வந்துதர்மர்முன்னே வால்தனைத்தான்குழைத்து
நொந்துமனமுடைந்து நோக்கிமுகமண்ணாந்து
ஓலமெனஊளையிட்டு ஓடியோடியேதிரும்பி
காலடியில்வந்துநின்று காலனெனும்நாய்தானும்
ஆய்ந்துடலிற்புண்ணாய் அடர்ந்துபுழுச்சொரிய
சோர்ந்துவிட்டேன்மெத்தத் துன்பவினைக்கியாருமில்லை
சாருந்துணையில்லைச் சஞ்சலந்தீர்ப்பாருமில்லை
ஆருந்துணையில்லை ஆதரவுதானுமில்லை
என்துயரந்தீர்க்க இனியாருமில்லையையா
உந்தன்பிறகே ஓடிவந்தேன்காருமென்று
இந்தச்சுணங்கன் எடுத்துரைக்கதன்மருந்தான்

வாராய்சுணங்கேகோன் வகையுனக்குசெய்வதென்ன
சீராகச்சொல்லுமென்று செப்பினாம்மானை
சாந்தமுள்ளதர்மரேநீர் ததியொருவனுகவந்தீர்
நான்தான்துணையும் நம்பினேனுன்பிறகே
வருகிறேனென்னை மனதுவைத்துக்காப்பாற்றி
அருகேளனையழைத்து ஆதரவாய்க்கொண்டுவந்து
நம்பினபேரை நட்டாற்றில்தள்ளாமல்
தம்பிறுனைதொரு தர்மரேசாட்சியென்று
தாழ்ந்துசுணங்கன் தஞ்சமாய்வார்த்தைசொல்ல
ஆழ்ந்தசுணங்கனுக்கு அஞ்சலென்றுசம்மதித்து
மாற்கமுடன்பிறகே வாவென்றுதானழைத்து
போகையிலேயோராறு பூமிதனிற்பெருக்கா
ஏகும்வகைகண்டு இவர்கள்மதிமயங்கி
நிற்குமளவில் நீலவார்சுணங்கனுந்தான்
அக்கரையிலென்று ஐடரேகொண்டுசென்று
விட்டுவிடுமுந்தனுக்கு வேண்டுஞ்சுகிர்தமுண்டு
கட்டுடனேதர்மர் கருத்தில்மிகமகிழ்ந்து
பேராறுதாண்டவென்று பேணியந்தயாறுதன்னில்
தானேறுந்தர்மர் தானிறங்கியாறுதன்னில்
வாட்டமிகவேசுணங்கே வாருமெனவழைத்து
சேட்டமுடன்கையாலே சேர்த்தணைந்துபையவொரு
மார்பிலணைத்து வயிற்றளவில்வெள்ளமது
சோர்வரிந்துதர்மர் சுணங்கனையுந்தானெடுத்து
வாய்த்தளவுதண்ணீர் மார்பளவுந்தான்வரவே
புயத்திலேதானேந்திப் போனார்சுணங்கனையும்
கழுத்தளவுதண்ணீர் கண்டவுடன்தர்மருமே
அழுத்தமுடன்சிரசில் அன்பாய்ச்சுணங்கனையும்
வைத்துச்சுமக்க வழிந்தொழிகவேகிருமி
மொத்துவழிந்து முகத்துவழியாக
மிகுத்துகிருமி வெகுதிரளாய்த்தானுதிர
முகத்துவழியாக முதுகிநெஞ்சுநாயுதடு
அள்ளியெறிவதுபோல் அங்கமெல்லாந்தானெறிய
தள்ளிவிடவென்று சற்றுமனமில்லாமல்
அல்லலறத்தர்மர் ஆற்றுநடுவாக
செல்லுமளவிற்சுணங்கன் செய்ததொருசேதிசொல்லும்
நான்செய்ததீவினையை நல்லவரேநீர்கேளும்
ஊன்சேருங்கோவையை உண்ணவென்றுகொன்றுவிட்டேன்
தேவமறையோர்தம் விரதமழித்துவிட்டேன்
காதலுடன்மங்கையரைக் கற்பையழித்துவிட்டேன்
நேசமுள்ளசற்குருவை நிந்தனைகள்செய்துவிட்டேன்
வாசமுள்ளவேதியரை வகைப்படுத்தியாண்பிழைத்தேன்

தந்தைதாய்மாமன் தமயனுடனேமூத்தோரை
எந்தனுக்குள்ளாளாகி ஏவல்செய்யுமென்றுவிட்டான்
சூதுசெய்வார்தன்னுடன் துஷ்டருடன்கூடி
தீதுசெய்யும்பாதகங்கள் செய்துவிட்டேனிப்போது
அழிவுவழக்குரைத்து அரியமனங்குலைந்து
பழிகுலைகளைவிரும்பிப் பாவங்கள்செய்துவிட்டேன்
செய்நன்றிதான்மறந்து தீவினைகள்செய்துவிட்டேன்
ஏதுமனைநம்பிவந்தோர் இடுக்கங்கள்செய்துவிட்டேன்
காசினியோர்தங்களிட கட்டையருத்துவிட்டேன்
வீரியத்திலுள்ள வேலிபரித்துவிட்டேன்
அணையிலிருந்தோரை அரவேவதைத்துவிட்டேன்
பணையுடையபாகங்களையும் பொல்லாங்குசெய்துவிட்டேன்
எண்ணியபாவ மெத்தனையோசெய்ததினால்
புண்ணியவான்மேனியெல்லாம் பழுச்சொரியவுன்றலைமேல்
வைத்துச்சுமக்க வழிந்தொழுகவேசலமும்
சற்றுமனங்கோணாமல் தான்சுமந்துபோனதினால்
உமக்குச்சுகிர்தமுண்டு ஒப்புடனேசொர்க்கமுண்டு
எமக்குநரகமுண்டு என்னையுந்தானீள்தலத்தில்
போட்டுவிடுமுந்தனுக்கு புண்ணியமேயுண்டாகும்
நாட்டுபுகழ்தருமரோநீர் தண்ணீரில்போட்டுவிடும்
பாவமேயான்செய்தேன் பார்நதியில்போட்டுவிடும்
சாதகமாம்வாசமுள்ள சவ்வாதுமிகப்பூசி
துற்கந்தம்போக்கிச் சுகந்தமருகேபூசி
நற்கந்தமாக நடவுமென்றாரம்மானை
தலைமேல்சுணங்கன் தானிருந்துசொன்னதெல்லாம்
அலைமேல்துரும்பதுபோல் அந்தமொழிகேளாமல்
பாதகமேசெய்தாலும் பழிதலைகள்செய்தாலும்
ஆதரவாயுன்னை ஆறுகடக்கவிட்டு
போவென்றுசொல்லப் புல்லறிவுகொண்டேனான்
சாவென்றுசொல்ல தள்ளுவேனோஆறுதன்னில்
வேறொன்றுஞ்சொல்லாமல் வெண்சுணங்காநீயொன்று
ஆறொன்றுநீந்தி அக்கரையில்தானேறி
வந்துநின்றுதர்மர் வருந்துஞ்சுணங்கனுக்கு
நொந்தோவுன்னுடம்பு ரோமமெல்லாம்புண்ணாச்சோ
வேந்தோயெந்தன் வேர்க்கைபட்டுமேனியெல்லாம்
நைந்ததோசிந்தை நடுங்குதேயுன்மேனி
என்றுசுணங்கனையும் இகமாயிறக்கிவிட்டு
மென்றுதிருக்கால்நாலும் செவ்வைபிடித்துருவி
ஆற்றிமிதப்போற்றி அன்பாய்வரவழைத்து
தோற்றியிளைப்பாற்றி தேகமெல்லாந்தான்றடவி

இன்பங்குளிர்ந்துதப்போ எமதருமராசனுக்கு
அன்புடையமைந்தனுக்கு அழகாகத்தான்வடிவு
கட்டிமகிழ்ந்தணைத்துக் கானகத்தைமுத்தமிட்டு
நாட்டிலெந்தன்புத்திரனே நன்மைசெய்தார்தருமமொன்று
கீர்த்தியின்றுபுத்திரனே கிடைத்ததுகாணுந்தனுக்கு
பார்த்திபனே வைகுந்தம் பதிதனக்குச்செல்லுமென்று
எமதருமர்தானும் யெமலோகம்போய்புகுந்தார்
நேசமுள்ளதருமர் நீதியொன்றுந்தப்பாமல்
விருடனேயிப்பால் விரைந்துவெகுதூரம்
கூறுஞ்சிகரக் கொடியென்னுமாமலையும்
பார்த்துமிந்திராணி பஞ்சமிர்தம்பாரையென்னும்
ஏத்துமொருகோடான் இதலிமலைதான்கடந்து
உற்றதலமெல்லாம் உண்மையைத்தான்பார்த்து
சந்திரகேசமென்னும் சத்திசிவமாமலைதான்
இந்திரவிமானம்போல் இருக்குமலங்காரம்
பார்த்துபரிந்து பரிவுடனே தானடந்தார்
சாத்துமொருமால்தான் தரணித[illegible]முன்னாளில்
மண்டலத்தில்மாபெலியால் மண்ணுவிண்ணுமோரடியாய்
அண்டமுழுதளந்த அரியோன்பலர்பதத்தை
தோத்திரங்கள்பண்ணித் துதித்துமிகப்பணிந்து
ஏத்தியிருதாளை இருதயத்திலேநினைந்து
நோக்கியேதருமரிடம் நால்வேதசாஸ்திரமும்
ஆடலுடன்பாடலுமாய் அரம்பையர்களாடிவர
ஏடவருந்தருமனையும் எதிராகக்காண்பதற்கு
ஓடிவருவாரும் உபகாரஞ்செய்வாரும்
பார்க்கவருவாரும் பரிமளங்கள் தூவுவாரும்
எதிர்த்துவருவாரும் இமையோர்கள்தான்முதலாய்
வானவர்கள்வந்து மார்க்கமுடன்தருமனையும்
தானவர்கள்வந்தெதிரே தழுவியுறவணைத்து
வந்தார்தருமருடன் மகிழ்ந்துமுகம்நோக்கி
முந்தியேபாரதப்போர் முடித்ததொருபாவமெல்லாம்
போகவேநீருமந்தப் பொய்கைகளில்முழுகி
பழையவுருவாகிப் பசும்பொன்னிறந்தானாகி
அழகானதருமருக்கு அமலர்மலர்தூவ
இந்திரரும்விமானமதில் ஏறியேதருமனையும்
அந்தரத்தேவதைகள் அமரருமங்கிருக்க
தேர்நடத்திவானவர்கள் சிறப்பாய்மலர்சொரிய
வார்பிடித்திரண்டருகில் மடந்தையர்களாடிவர
தயக்கமிகவான தருமரோதேரேறி
மற்றுந்தருமன் மலையமலைச்சார்வுகளும்
நீடுயர்ந்தகாவும் நிந்தமலர்பொய்கைகளும்

காடுஞ்செடியுங் கடந்துவந்துயிப்பாலும்
மன்னன் திருக்கேதகையும் மாமலையில்வந்திருந்தார்
அன்னவனைக்காக்க அடைக்கலங்காணென்றுமொரு
சக்கரமுஞ்சொல்லிச் சார்வுமிகப்பண்ணியபின்
மிக்கதொருசக்கரத்தால் விசனமெல்லாந்தான்கேட்டு
செங்கண்மால்தான் மகிழ்ந்து சீர்கருமனுக்கெதிரே
இங்குள்ள இந்திரன்போல் எதிர்கொண்டழையுமென்றார்
அந்தமால்தானனுப்ப அமரர்கோனிந்திரனும்
பூந்தவேமுப்பத்து முக்கோடிதேவரெல்லாம்
சித்தவித்தியாதரரும் தேவரிடகாந்தருவர்
சத்தரிஷிமாமுனிவர் தபோதனர்கணநாதர்
கின்னரர்கிம்புருடர் கெருடகாந்திசித்தருடன்
சொர்ணமயமான தூருவாசமாமுனியும்
தேவரிஷிமாதவரும் தெய்வகன்னிமாதருடன்
பாவகரும்பாடகரும் பாங்கானவேதியரும்
வாத்தியங்கள்தான்முழங்க வானவர்கள்தான்கூடி
கிதம்பயிலுமந்த கிதாரமாமலையும்
ஓதுமொருபத்து யோசனைதூரமென்று
வளர்ந்திருக்குமந்த வடவாய்விருட்சமதில்
தளர்ந்துமிகத்தவித்து தருமருமேவந்திருந்தார்
இருந்துதவப்பாரில் எழுந்திருந்துதான்பார்த்து
பொருந்துமிடமும் பொருப்பிமிகக்கடந்து
செவ்வையோர்கானகமும் சீர்மலையுந்தான்கடந்து
கொவ்வைபடர்ந்தமலை கோபுரமுந்தான்கடந்து
தோற்றுந்திருக்கேதாரஞ் சோதிமலைகண்டதின்பின்
போற்றியேயிப்பதியில் போய்புகுந்தார்தருமருமே
மேடைகளுமண்டபமும் வெற்றிச்சிகரமுடன்
மாடநெடுங்கூடமுமாய் மதில்கள்திருவீதிகளும்
நீதிதனையும் நிறைந்ததொருவாவிகளும்
ஆதிமதவேழம் ஐயரிடசன்னிதியும்
கூடுஞ்சிவாலயமும் கொண்டல்வண்ணராலயமும்
நாடுந்திருக்கோதாரம் நாகரிகமாமெனவே
ஆடுங்கொடிவேந்தன் அங்கிருந்தாரம்மானை
மிக்கவைகுந்தமதில் மேவியேசக்கரமும்
திக்குள்ளோர்போற்றுந் திருமால்தனைப்பணிந்து
பத்தியின்மேலாசையல்லால் பார்மீதிலாசையில்லை
இயக்கர்பதிதனிலே எய்தினாரம்மானை
மன்னவனேயின்னகரில் வந்திருப்பாய்வாருமென்ன
பொன்னகரஞ்செல்லப் போர்வேந்தன்மார்க்கமதாய்
என்னுடையதம்பியர்கள் யிருக்குந்தலந்தனிலே
பன்னுமறைவேதியரே பரிவுடனேகொண்டுசெல்லும்

பருதிவாசமது பார்த்திபரேயுந்தனுக்கு
சுருதிமுடிசூட்டுகிறோம் சுருக்குடனேநீருங்காண்
அச்சுதனார்தான்வாழும் அரியவைகுந்தமதில்
அச்சுதனார்பாதமதில் தர்மருமேசேருமென்றார்
அப்பதியைத்தான்கடந்து அரிராமர்மன்னவரும்
செப்பரியருத்திரர்கள் சிறந்திருக்குமன்னகரில்
சென்றுதருமருக்கு சீராயமாரெல்லாம்
அன்றுமுடிசூட்டவென்று அருள்பெற்றார்வானவர்கள்
இராசனேயெம்பெருமாள் யிருக்குமிடந்தனிலே
வேறேபதியொருநாள் விரும்பேமெனவுரைத்தார்
உடுக்கர்பதிதன்னில் உறையுமென்றுதானுரைத்தார்
இடுக்கம்வருவேளைதன்னி லிமையோரேயுங்கள்தர்மம்
நடுக்கந்தவிர்த்து நயமாகஎத்தனையும்
அடுக்கவேகாத்தருளும் அச்சுதனார்தன்பதிக்கு
போகவென்றுசொல்லி பொன்னுலகந்தன்னில்வந்தார்
தோகைமலர்மாதினருள் துலங்குமுடிமன்னவரே
தீதில்லாமானகரில் சிங்காசனத்திருந்து
மாதர்கள்ரம்பையர்கள் வயிரங்கவரியிட
அந்தமுடனிங்கிருன்று அமரர்கோன்தான்கூடி
இந்தவுலகாச யெனவுரைத்தார்தர்மருமே
வானோர்களந்த மறலிதனைவந்துகண்டு
தீனோறுடையதர்மர் தேசமெல்லாம்விட்டகன்று
கலிதானும்வந்தமையால் காடுமலைதான்கடந்து
வலியவிந்தமானகரில் வந்தான்காண்மன்னவரும்
அழைத்தேயவன்றனக்கு அறியதவமீயுமென்று
தழைத்தோங்கவாழுமென்று சாற்றுமென்றாரப்போது
மறலியுந்தான்மகிழ்ந்து மைந்தனையுமன்னேரம்
விரைவுடனேயிங்கழையும் விண்ணவரேயென்றுரைத்தார்
அந்தவன்பால்தர்மனையும் அழைத்துமுன்னேவிட்டார்கள்
வந்துபணிந்ததொரு மைந்தனையுந்தான்தழுவ
சிந்தைமகிழ்ந்து செப்புவார்தர்மருக்கு
உத்தமனேஎன்பதியை உனக்கருள்வேணிப்போது
எத்திசையும்போற்றி இருமென்றார்மாமாலி
அப்போதுதர்மர் அன்புடனேதுசொல்வார்
இப்போதுவப்பதியி லிருக்குமனதாசையில்லை
அண்ணாறுகில்வைகுந்தம் அடைவதற்குயென்னையுமே
புண்ணியரேயந்த பொன்னகர்க்கேகுமென்றார்
பாசமுடனீர்பொறுத்தும் பாரதப்போர்தனிலே
நேசமுடன்துரோணர் நின்றுசமர்போர்தறவே
மாமுனிவன்கைச்சிலையில் வலிமைகண்டுமாயோனும்
ஆமுனிவரேவந்த னசுவத்தாமாயிறந்தான்

சொல்வாயென்மாயன் சொல்லேவெனநீயும்
அல்லவெனுமாய னப்போவெகுண்டுரைக்க
கோபிக்கப்பயந்து கூறுகின்றபொய்மொழியால்
தாலிக்குப்பாவமென்று தானிருக்குதுன்பேரில்
அந்தசம்போக அருநாகங்காண்பதற்கு
வைத்தார்மணிமார்பர் மன்னவனேசொல்லுமென்றார்
இன்றேதான்பாருமென்று எழுமாயன்நாங்களுமே
சென்றவருங்காட்டித் திரும்பியேவாருமென்று
நாரதனைத்தானனுப்பச் சொற்பெரியதர்மருமாய்
போகமுனிநீர்தாமும் புண்ணியரோபாருமென்று
பார்த்துவரும்போதையிலே பலவிதமாய்நாகரீகம்
தோற்றுதுகாணெதெனவே சொல்லுமென்றார்தர்மருமே
கற்பகப்பூங்காவில் கமலசிங்காசனத்தில்
விற்பனமாய்வந்துநின்று வேண்டியதெல்லாங்கொடுக்க
சொற்கந்தனில்கன்னியர்கள் துலங்குகுடைநிழலிற்
களித்தேயிருப்பாரைக் கண்டேபிரியமுடன்
செழித்துமுகந்தர்மர் சிந்தைகுளிர்ந்திருப்பார்
இவர்செய்தகர்மம் யேதோவெனக்கேட்க
தவமுடையகிங்கிலியர் சாற்றுவார்தர்மருக்கு
தக்கவரஞ்செய்து தர்மருந்தழைத்தோங்க
துக்கமெனும்பாவம் தொலைத்தோரிவர்காணும்
ஓதுகின்றநல்லுயிரும் ஒன்றாகவேபாரில்
நீதமுடனடத்தும் நிருபரிவர்காணும்
சீரிலுங்கீர்த்திச் செலுத்தினோரிவர்காணும்
விளங்கவேதர்மம் மேதினியிலெந்நாளும்
களங்கமாகச்செய்து கண்டாரிவர்காணும்
பூசைமயேசுர பூசைகளுந்தான்முடித்து
ஈசுதமிழ்வேதியற்கு ஈந்தோர்முகம்பார்த்து
ஏற்போர்தமக்கு ஈந்தோரிவர்காணும்
அடைந்தோர்கள்தம்மை ஆதரித்தோர்காணுமிவர்
இடைந்தவரைத்தாங்கி இளைப்பாறறிவந்தவர்கள்
மிகுந்ததவமுனிவர் வேள்விகளைக்காத்தோர்காண்
பகுத்தறிவாய்நால்வகையும் பட்சம்வைத்துக்காத்தவர்
மறையோர்க்குநல்ல மாதானஞ்செய்தார்காண்
குறையேதுசெய்தாலுங் குற்றம்பொருந்தார்காண்
கசித்ததுயர்தீர்த்துக் கனத்தனங்கள்செய்தோர்காண்
கோதானபூதானங் குருபூசைசிவபூசை
பூதானமீய்ந்து புண்ணியரோசெய்தார்காண்
கன்னிகைதானமது காசினியில்செய்தோர்காண்
மன்னியதானமெல்லாம் வாகாய்முடித்தோர்காண்
இந்தனையுஞ்செய்து இங்குவந்தீர்கண்டீரோ

மூத்தரிவர்தர்ம மூர்த்தியேயென்றூர்காண்
தருமமதுசெய்து தார்வேந்தர்சொற்கமது
இம்மைதனிலிப்போது இங்குவந்தார்காணுமிவர்
குன்றுவதுபாழ்நரகம் கொற்றவனேபாற்பதற்கு
இன்றுநீர்வாருமென்று ஏகிஞர்தர்மருடன்
ஒன்றுநரகம் ஒருநூறுயோசனையாம்
பொருந்துதிருமகளாய்ப் பேருடலுமுள்ளதுவாய்
வருத்தமறியாமல் மாண்டாரைத்தான்பிடுங்கி
நெளியப்புழுவுகளும் நிறைந்தவுதிரங்களும்
உளையமுதலையுடன ஊருகின்றஅட்டையுடன்
பாம்புடனேநீர்நாயும் பற்றியழுத்திழுக்க
சோம்புவார்தம்மைத் துயரமுடன்தர்மர்கண்டு
சிவசிவாவென்று செவியிலிருகையைவைத்து
தவமேதுசெய்கிலேயோ தம்பியிவர்தாமும்
பொய்யும்புரட்டும் பொருந்தாக்கொலைகளவும்
செய்யாதகாரியங்கள் செய்தோரிவர்காணும்
இந்தநரகமதில் ஏழாநரகமதை
வந்துநீபாருமென்று மலைத்துசொன்ஞர்தர்மருக்கே
நாடியேஏழாம் நரகிலுள்ளபாவமதை
ஓடியேதர்மர் வுலாவியேபார்ப்பளவில்
ஏழாநரகமதில் கீழாகநின்றருளும்
பாழாநரகமது பாதாளபாதகமும்
தாழாமுடிமன்னவனைத் தான்கண்டுதர்மருமே
ஆழாநரகமதில் அலறிக்கிடப்பாறை
பாசமுடனருகில் பரதவிக்கும்நூற்றுவரை
வாசமுடன்தர்மர் வாகுடனேகண்டாராம்
பொல்லாதநூற்றுவரைப் புழுக்களெரித்துடம்பை
இல்லாதகொட்டாலே யிருசெவிகள்மூக்கதிலும்
ஊடுருவியேதுளைத்து உலாவித்திரிவதையும்
வாடுமுடல்கிடந்து மயங்கித்தவிப்பதுவும்
கவ்விமுதலை கடித்துப்பிடித்திழுக்க
மதித்ததொருநூற்றுவர்கள் மயங்கும்வருத்தமெல்லாம்
கதித்தபுகழ்தர்மர் கலங்கியுடல்பதறி
கண்டவுடன்தர்மர் கலங்கியுடல்பதறி
அண்டமுறநின்று அரிநமோசிவாயமென்று
ஓதுமுலகம் ஒருகுடைக்கீழாண்டதொரு
மாதுபழிமன்னன் மாநரகிற்குள்ளாஞன்
என்றுசொல்லித்தர்மர் ஏங்கிமனதிடைந்து
நின்றளவிலிந்த நெடியதிரியோதிரனும்
விண்டுரைக்கமாட்டாமல் விசாரமாயுள்ளயர்ந்து
கண்டுதர்மர்தன்னைக் கலங்கியேயேதுசொல்வான்

விருத்தம்.

தம்பிதுணையேயான்செய்த சதிகேடனைத்தும்பொருத்தருளி
வெம்பித்துயரிலழுந்தாமல் வேண்டுகிறீரெனையேகரையேற
நம்பிக்கரத்தாலெடுத்தணைத்து நன்மைபெறவேதர்மரோநீ
எம்பிஎனையேவைகுந்தத் திருக்கணையுந்தவமுனக்கே. ௱௰௯

யான்செய்தவினையினாலே யழுந்தினேன்நரகில்வீழ்ந்து
தான்செய்ததவத்தினாலே தர்மரோநீரிங்குவந்தீர்
ஊன்செய்தபகையினாலே உடல்தனைக்கிடத்திப்போட்டு
வான்செய்தழந்தால்வாடு மயக்கமுந்தீர்ப்பாய்தம்பி. ௱௨௰

பேராற்பெரியதர்மரெனப் பெற்றாய்பெருமையதனாலே
நேராயானும்தர்மரொன்றே நின்றேகொடுமையதனாலே
பாராய்புவியிலுன்னையென்னைப் பகைவர்பெரியபாரதத்தில்
சீராய்தயவுமனதுடனே சிரமமாய்வந்துவகைதாரும். ௱௨௧

பஞ்சவரைஞ்சுபேர்க்கும் பாஞ்சாலிதனக்குநானே
வஞ்சமாய்செய்தபாவ மட்டல்லோசொல்லக்கேளும்
கொஞ்சமாய்நினைந்தபத்தி கொடியதோர்நரகில்வீழ்ந்தேன்
தஞ்சமென்றுன்னைச்சொன்னேன் தர்மரோகையைத்தாரும். ௱௨௨

சூதுநான்கபடஞ்செய்து துரத்தினேன்வனத்தில்யானும்
ஏகினார்குவலயத்தி லிப்படிநரகம்புக்க
வாதினாற்கொலையேசெய்து வங்கிஷமுழுதுமாண்டு
தீதினால்நரகஞ்சேர்ந்தோம் செய்தர்மர்கையைத்தாரும். ௱௨௩

மாயனார்தூதுவந்தார் மதித்துநான்துதித்ததில்லை
ஆயனார்மனதுக்கேறு தாகவேவரசுபெற்றேன்
தூயவர்பாதம்போற்றித் தொழுதவர்க்கெதிரோபோற்றி
வேயனார்காகத்தர்மர் விரைந்துநின்கையைத்தாரும். ௱௨௪

பொருமையுடையதர்மரோ போனாலெனக்கெதியிலையே
கிருமியுடலைத்துணைக்குதுபார் கெஞ்சியழுதுபரதவிக்க
உருமியகட்டுநீர்காயு முறுக்கிமுதளைபிடித்திழுக்க
சிறுமைகெடுநாள்பட்டலுத்தேன் தெய்வப்பிறப்பேகைதாரும். ௱௨௫

வேற்றுமையுனக்கேயப்பா மெய்யுயிராசையெல்லாம்
பார்த்தீபனைமூர்த்தி பராபரம்வந்தாய்சேர்ந்தாய்
நாற்றிசைபுகழுங்கீர்த்தி நரகம்விட்டகலவென்னை
ஏற்றியேகரையில்விட்டு இருக்கவைகுந்தஞ்சேர்ப்பாய். ௱௨௬

உந்தனைக்கண்டபோதே வுடலுயிர்மகிட்சிபெற்றேன்
எந்தனைவிட்டுப்போனா லெனக்கினிதுணைவேரில்லை
சிந்தனைதூர்த்துத்தம்பி திருவுளமறியநீயும்
வந்தெனத்தன்மகாநீர் வைகுந்தஞ்சேருமிப்போ. ௱௨௭

கதை. தேர்வேந்தனுனக்கிச் செய்ததொருதீவினையால்
ஓர்கசடுதானும் வுன்மனதிற்காணுமல்
தருமநெறிமுறையுந் தவமுந்தயிரியமும்
உரிமையும்நீயிருந்தால் வுற்பனத்திலும்பரிடம்
வந்தீர்வைகுந்தம் வாழ்பதியுந்தான்பெருக
மூந்தனுன்செய்த மோசமெல்லாம்விட்டுவிடு
மன்னவனேயான்செய்த வன்மமெல்லாம்விட்டுவிடு
என்னைநரகம்விட்டு ஈடேற்றத்தான்பாரும்
ஏராதபாவி யிவையுரைக்கத்தான்கேட்டு
தாராருந்தர்மர் தயவுடனேதானேக்கி
பேதமறப்பார்த்துநின்ற. பேர்பெரியதர்மருக்கு
ஓதரியகிங்கிலியர் உகந்தேதுசொல்வார்கள்
பார்த்திபன்செய்ததெல்லாம் பாவமேயல்லாது
ஏத்ததொருதர்மர் யிவன்செய்தானில்லையென்றான்
இவன்தான்பரகெதிக்கு எய்வதுமெப்படிகாண்
தவமுடையதர்மரேநீர் சாற்றுகிறீரென்றுரைத்தார்
திருத்தவேதானதர்மஞ் செய்திலரேயாமாகில்
பொருந்தியிப்போநான்செய்த புண்ணியத்தில்பேர்பாதி
மன்னனுக்குநன்றாய் மகிழ்ந்தேதானிப்போது
சொன்னேன்காண்தூதுவனே சுகமாகநீர்காணும்
பூலோகராசனையே பழுக்குழியைவிட்டேக
மேலாகத்தூக்கிவிடு மென்றுரேதர்மருமே
அந்தமொழிகேட்டு ஆனதொருதூதுவனும்
வந்ததொருகாந்தாரி மைந்தனையேகைதூக்கி
கூசாமல்தானெடுத்து கூட்டினார்மன்னவனை
ஆதாரமாக அண்ணன்திரியோதனனை
காராருந்தர்மர் கடுந்தோடுறவளைத்து
சீராய்மகிழ்ந்து தீவினையெல்லாமாற்றி
தாரறிமன்னன்முன்னே தான்சென்றாரம்மானை
பாரார்புகழேமன் பாண்டுமைந்தன்தான்வருக
இருவர்வரக்கண்டவுடன் ஏமராசன்தான்கலங்கி
அறுவினைகள்மாபாவி அவன்வருவதேதெனவே
எமதர்மன்கேட்க என்றதொருதூதுவனும்
நியமுடன்வாய்புதைத்து நின்றேதுசெப்பலுற்றார்
புகழ்தருமன்செய்துவந்த புண்ணியத்தில்பேர்பாதி
இகழாதிந்வேந்தனுக்கு ஈந்தானெனவுரைத்தார்
கேட்டுமகிழ்ந்தேமன் கிட்டவேமுன்னிருத்தி
வாட்டமில்லாமன்னனுக்கு மகிழ்ந்துரைத்தாரம்மானை
நடந்துதவம்செய்தவர்கள் நல்லதவப்பெருவார்
அடர்ந்துவினைசெய்தவர்கள் அவதிமிகப்படுவோர்
இன்றேதான்கண்டோம்நாம் எமதர்மன்றான்மொழிந்து

முன்னேபெரியோர்தான் மொழியுநான்கேட்டிருப்போம்
ஆயநெடுமாலிவற்கு ஐந்தூர்விடுக்கவென்று
ஈயிருக்கத்தானும் இடமில்லையென்றூர்காண்
தெரிந்தவன்றுன்செய்த தீமைபொருத்ததொரு
பரிந்துதர்மர்புண்ணியத்தில் பாதிஇவர்க்கீந்ததினால்
ராஜரிஷிகாணுமிவன் ரத்தினமுடிசூட்டுமென்றூர்
பாசமுள்ளஎமதர்மர் பகுந்துரைத்தாரிவ்வசனம்
இமையோர்மகிழ்ந்து இராஜரிஷிஎன்றுபட்டம்
அமையமுடிசூட்டி அங்கிருக்கவேதருமன்
தோற்றுமாநகரம்விட்டுச் சுற்றத்தாருள்ளோரை
ஏற்றுங்கரையென்று எமதருமர்தானுரைத்தார்
வையமகிழ்ந்தமன்னர் வங்கிஷத்திலுள்ளோரை
எமதர்மர்சொற்படிக்குச் சொர்க்கததிலேற்றினரே
துதிக்குந்தருமனையே மகிழ்ந்துநல்லவானோர்கள்
சுற்றமெல்லாம்பூவுலகில் சூழ்ந்துநித்தம்வந்ததுபோல்
வற்கமுள்ளசொர்க்கமதில் வைத்தானனவேதான்
தேனர்தொடைமார்பன் தெய்வத்தருமனையும்
வானோர்களெல்லாம் மகிழ்ந்தனர்காணம்மானை
அந்தச்சிறுமைந்தனையே அன்பாய்முகம்நோக்கி
உந்தனுக்கேயிந்த உலகமெல்லாம்நான்தருவேன்
துங்கமுடிசூட்டி சொர்க்கந்தனையாளுமென்றூர்
அங்கேமறலி அருளினார்மைந்தனுக்கு
தர்மரதுகேட்டுச் சரணமெனப்பணிந்து
சென்மமழிந்தாலும் செய்ததர்மம்போனாலும்
எம்பிரானெம்பெருமான் இறையோன்வைகுந்தமல்லால்
நம்பியேயோரிடத்தில் நான்தரியேனென்றுரைத்தார்
மகன்றனக்குமாற்றி வைகுந்தவாழ்பதிக்கு
உகந்துநீர்செல்லுமென்று உபசாரமாயுரைத்தார்
சிந்தைமகிழ்ந்திப்போ செல்லும்வைகுந்தமென்றூர்
கிடந்தசுற்றமுள்ள துரியோதனன்றனையும்
அடைந்துசொர்க்கஞ்சேருமென்று அன்புடனேதாருமென்று
வானோர்கள்தன்மறையும் மகிழ்ந்துரதமேறி
சேனபதிதர்மர் செல்லலுற்றாரம்மானை
அந்தரத்தில்துந்துமிகள் ஆர்ப்பரிக்கும்பேரொலியும்
முந்தினபேரிகையும் முரசினிடபேரொலியும்
எழுகடல்போல்வானுலகம் எத்திசையுமேமுழங்க
அகத்தியனும்கோச்சுரரும் அந்தவிமேலாசனரும்
மகத்திலெகவுதமரும் வசிஷ்டர்அரசருடன்
சொல்லுஞ்சவுமியரும் நாருமாசகாசிபரும்

மல்லுடையமாதரும் வருணன்முதலுள்ளோரும்
எட்டுதிக்குபாலகரு மேற்றவசுக்களுடன்
கொட்டுச்சத்தலோகங் குமுகுமுமென்றுதான்முழங்க
மாணிக்கத்தால்சமைத்த வச்சிரமணிமண்டபமும்
ஆணிக்கனகம் அழுத்தியசிங்காதனத்தில்
ஓதுபதினாலும் உலகம்படைத்தோரும்
வேதரும்நன்றாக வீற்றிருக்கும்வேளையிலே
தெரிந்தமுனிவர்களும் தேவர்களுஞ்சூழ்ந்துவர
பரிந்துவருந்தர்மர் பணிந்தனர்காணம்மானை
இசைநான்முகத்தோன் இவராரெனக்கேட்க
நிசவான்குருகுலத்தில் நீள்பாண்டுதன்புதல்வன்
தருமனிவன்றான்காணும் தரணிதனிற்கலியன்
பெருமையுடன்வந்ததினால் பேருலகைத்தானிழந்து
ஆதிநெடுமால் அரிகேசவன்பாதம்
நீதிவைகுந்தம் நினைத்துவந்தாரென்றுரைத்தார்
தானவன்போய்த்தர்மர் தனுக்கங்கெதிராக
வானவரேசெல்லுமென்று மாமறையோன்றான்கூற
அழைத்துவந்துமுன்னே அடிபணியவிட்டார்கள்
தழைத்தோங்குந்தர்மமென்று சாற்றினார்வானோர்கள்
செப்பரியநான்முகத்தோ சிந்தைதனில்மகிழ்ந்து
ஒப்பரியதர்மர் உலகமதிலெப்போதும்
நன்றாகச்செங்கோல் நடத்துவிசேஷமெல்லாம்
குன்றாதமாமுனிவன் கூறினான்கேட்டிருப்போம்
நண்ணிசெய்யகாயமுடன் நன்றாகவிங்குவந்தான்
புண்ணியவானென்றுமிகப் போதமிகமகிழ்ந்து
இன்னமிந்தப்பூவுலகில் இவற்காதைபுண்டோவென்று
அன்னத்தில்மீதில்வரும் அவனுமெடுத்துரைப்பார்
எவ்வுலகும்வேண்டியது இப்போமுடிசூட்ட
அவ்வுலகந்தன்னில் அரசாளவைப்பேனான்
வேண்டியதுகேளெனவே வேந்தன்மகிழ்ந்துரைக்க
ஆண்டவனேவைகுந்தம் அமையுமென்றார்தருமருக்கு
ஏதுமிவற்காசையில்லை இறையவனேயிப்போது
தாதுரையும்வேதர் வேதத்தைபலம்வேண்டி
வந்தாரிவரெனவே வானோருரைத்தபின்பு
சிந்தாகுலமடைக்குந் திசைமுகனுமேதுரைப்பார்
தருமன்றனக்கிப்போ தானவரேவானவரே
அறத்திலுள்ளோர்வானோரும் அருமுனிவர்நாதர்களும்
பிரமரிஷிதீர்த்தம் பிரமரிஷியென்றுரைத்தார்
மெய்கண்வாழ்தருமன் விருப்பிவருவதற்கு
நன்கணிசேர்மண்டபமும் நற்கனகமண்டபமும்
மற்றும்வைடூரியஞ்சேர் மாணிக்கமண்டபமும்

உற்றுங்கடல்முத்துடனே கனகத்தூண்மண்டபமும்
புஷ்பராகம்பதித்த புதிதானமண்டபமும்
சப்பமிகுரத்தினமணி தான்சமைத்தமண்டபமும்
துய்யகோமேதகத்தால் தூண்சமைத்தமண்டபமும்
வையமகிழ்புட்பராகத்தூண்மண்டபமும்
சிங்காரமண்டபமும் சீர்பளிங்குமண்டபமும்
பங்காரமண்டபமும் வச்சிரத்தூண்மண்டபமும்
வீரானபாட்டை மேற்கட்டுமண்டபமும்
மாறுதகண்ணுள் மாளிகையின்மண்டபமும்
விரைந்துநல்லசந்தனத்தால் மெழுகியதோர்மண்டபமும்
நிறைந்துநல்லசந்தனத்தால் நிலமெழுகிமண்டபமும்
மந்தாரைப்பிச்சி மலர்தூக்குமண்டபமும்
கந்தபொடிகரசங் கமகமென்றமண்டபமும்
சாம்பிராணிகற்பூரந் தான்மணக்குமண்டபமும்
ஆரகிதகஸ்தூரி யால்மணக்குமண்டபமும்
ஆறிரண்டாழ்வார்கள் அமர்ந்திருக்குமண்டபமும்
கூறுமொருபொக்கிஷங்கள் வைத்திருக்குமண்டபமும்
நீண்டகெருடக் கொடியுடையநீண்மதிலும்
கூண்ட அனுமக் கொடிநிறைந்தகோபுரமும்
உப்பரிகைமேடைகளும் உயர்ந்தசிகரமுமாய்
அப்பெரியதேவர் அலங்கரித்தமாளிகையும்
துப்யதொருமாணிக்கத் தோரணமுந்தாரணமுந்தான்கட்டி
மாயனிடமாளிகைகள் வகையாயலங்கரித்து
போத்தியிவ்வீதியெல்லாம் புனுகுமணம்வீச
தெப்பரிமளங்கள் கெந்தபொடிசந்தனமும்
வாசனைகளாக மல்லிகைமுல்லைபிச்சி
பேசரியவெட்டிவேர் பெரியமருக்கொழுந்து
கமகமெனவாசங் களபமொடுதுளபம்
பொன்னெனவேவைகுந்தம் போதவலங்கரித்து
மாசில்லாத்தர்மருடன் வானவர்கள்தேரேறி
ராசகோபாலரிட நகர்தனிலேவந்துபுக்கார்
மண்ணுலகில்வாழ்தர்மன் வைகுந்தம்வாழ்பதிக்கு
எண்ணரியதேவருடன் யிங்குவந்தோமென்றுசொல்லி
கேசவனுந்தான்மகிழ்ந்து கெம்பீரமாகவேதான்
வாசமுனிவர் மற்றுமுள்ளதேவருடன்
சக்கரமுஞ்சங்குந் தரித்தமணிமாலையுடன்
எங்கெங்குங்கொண்டாடச் செங்கருடன்மீதேறி
மாலைதுளபமணி மாலையதுதானணிந்து
சோலைமலையழகர் சொர்ணமயமாக
வாகனைதர்மரென்று வந்தனர்காணம்மானை
அண்டபகிரண்டம் அகண்டமெலாமொன்றாக

உண்டதொருபாதமதில் ஒடிந்துன்பமேருமாக
பண்டுகானசெய்த பாக்கியமாயீதேது
கண்டுனதுபாதங் கண்குளிரதெண்டனிட்டு

விருத்தம்.

கண்டபோதேகளிகூர்ந்தேன் கனகவிணையிற்கசடறுத்தேன்
அண்டர்புகழும்பொற்பாத மடியேன்பணியக்கவ்வங்கள்பெற்றேன்
தொண்டனிவனுமென்றெண்ணிச் சொல்லும்பெரியவைகுந்தம்
குண்டந்தனிலேயெனையிருந்துங் கோவேநந்தகோபாலர். (௱௨௮)
ஆதரவாயுன்னைக்கண்டே னல்லிருளகன்றதிப்போ
மாதவாயென்றசிந்தை மயக்கமுந்தீர்ந்ததிப்போ
சீதவாதுளபமார்பா தேவகிநந்தகோபா
சீதவாயிறையன்சேருங் கிஷ்ணவைகுந்தஞ்சேர்ந்தேன். (௱௨௯)
ஜானகிராமராமா சாரங்கராமாராமா
மானகாயோத்திராமா மாதவாவாசுதேவா
ஓம்நமோராமாராமா வுலகினையளந்தமாயா
தானவாவுனதுபாதஞ் சரணமேகண்டேன்கண்டேன். (௱௩௰)
பட்டேன்புவியிலுன்னடியேன் பாசங்களைந்துவருமளவும்
விட்டேனுணர்வுதனைமறந்து விரதமுனதுவைகுந்தம்
மட்டேயறிகடந்துவந்தேன் மறலிமறையோன்வானவருந் (னே.
தொட்டேயழைத்தார்சுகம் பெற்றேதொழுதேனுனைநான்றொழுதே

க தை.

மாயாமுகுந்தா மாபாரதந்தனிலே
ஆயர்குறிப்பறிந்து ஆதவனைத்தான்மறைத்து
சீராகவிமனுக்கால் மற்றரசனவென்று
தாரார்விசையனையுஞ் சாகாமற்காத்தனையே
ஞாலநின்றுமூலமென்ன அந்தமடுக்கரையில்
தானில்வந்து அன்றுசென்றுகாருத்தகவென்றுசொல்லி
தொழுதான்பணிந்தான் துயரமெல்லாந்தான்தீர்ந்தேன்
சாற்றும்புகழ்கர்மருந்தான் சரணமென்றுமாயனையும்
போற்றித்தப்பூசைபண்ணி பெற்கோவில்தானிருந்தார்
வுற்றதொருமாயன் யிருமென்றுதானுரைத்தார்
வீற்றிருந்தார்தர்மர் விதரணிந்துமாளிகையில்
பொய்யில்லாவாசகனே புவிராமமன்னவனே
ஐயன்முகந்தன் அரிகேசவனுடனே
செய்யும்புகழ்தர்மருந்தான் திருமாலிடம்நடந்தார்
கூறியமாபெலிதன் கோவிலும்வாசல்தன்னில்
வீறுடனேதானடந்து மேகவண்ணர்தாமும்நின்றார்
மாயனுந்தர்மருமாய் வாசலில்வந்தாரெனவே
தூயதொருமாபலிக்குத் தூதுவர்தான்போயுரைத்தான்
விரைந்தங்கேமாபெலியும் வேகமாயோடிவந்து

நாணுமற்றேவர்களும் நான்முகனுந்தான்தேடி
காணாதபாதமதை கடையேன்பொருட்டாக
கொடியேன்சிரசில் கோபாலர்வந்தாரென்றார்
அடியேன்பொருட்டாக ஐயருமிப்போது
இங்கேளழுந்தருள ஏதுதவஞ்செய்தானோ
சங்கேந்துமாலே சரணஞ்சரணமென்றார்
திருமாலேயிங்குவாராய் செப்புமென்றார்மாபெலியும்
குருகுலத்தார்தர்மரிவர் குணமும்பெருமையுள்ளோன்
சாதகமாய்நாள்தோறுஞ் சத்தியவான்காணுமிவர்
நீதமுடையவன் நீணிலத்தில்மன்னவர்க்கு
தக்கபுரைநெறியுந் தவமுடையவான்காண்
மிக்கனைநாணவென்று வேண்டியேவந்தேன்காண்
மாபெலியேயென்றுரைக்க மாயோனேநம்முடைய
ஏவலினாலேவருந்தா னிருந்தாரேரூபமதில்
தாழ்ந்ததொருசற்றேராய் தாழ்ந்திருப்பீர்கண்டீரே
வாழ்ந்தாரிவர்பெருமை மாதாவேசொன்னீரோ
தங்குசெம்பொன்மேரதனில் தற்காலஞ்சேர்ந்திருந்தாய்
புறுகுமந்தக்காதம் பொன்னிறமாகிலையோ
அழுதான்கருணைவிழி ஆனந்தநீர்சொரிய
தொழுதுதாண்மாபெலியுந் தோத்திரங்கள்சொல்லியபி
ஆடினான்மெய்மகிழ்ந்து அரிகரியென்றுசொல்லி [ன்
பாடினானுளமகிழ்ந்து பச்சைமால்பாதமதில்
செங்கைமலர்பாதஞ் சேர்வைபண்ணிநித்தமுமே
இங்கிருக்கப்போறேனான் என்னதவஞ்செய்தேனோ
என்றுசொல்லிதர்மர் ஏற்றுகின்றதோத்திரங்கள்
மன்றலருமாயோனே மனமகிழ்ந்துதர்மனையும்
வாருமென்றுதானழைத்த வானவர்களந்நேரம்
தானவரும்வானவருஞ் சதுர்முகனுமிந்திரனும்
தேடறியபாதந் தெரிசிக்கப்பெற்றனையோ
ஆடல்புரிதர்மரேநீர் அறிபாதஞ்சேர்ந்தனையோ
என்றுசொல்லிவனத்தி லிமையோர்மகிழ்ச்சியுடன்
அன்றுதான்கட்டி அணைத்ததற்காணம்மானை
மன்றுமந்தவானவர் வானோர்தனைநோக்கி
கொற்றவனைக்கொன்றுசெம்பொற் கோவிலிலேவாருமென்றார்
பரிந்துதர்மர்கோவில்பக்கம் பச்சைமால்தான்மகிழ்ந்து
இருந்தங்கிமையோரை எம்பெருமாள்தானனுப்பி
என்றுதான்மாபெலியு மிவ்வசனந்தானுகந்து
நின்றதொருமாயோனும் நேராகயிப்போது
ஆகிலும்காணின்னமொன்று அருளக்கேள்மாமுனியே
தாகமுடன்கேளுமென்று சாற்றினாரம்மானை
பரிந்துநல்வேதியர்கள் பதினாயிரம்பேர்க்கு

தெரிந்துமொருகேள்வி தினந்தோறும்பண்ணிவைத்தார்
மற்றுமோராயிரம்பேர் மாமறையோர்தங்களுக்கு
நிற்றகனன்தர்மர் நிறையக்கொடுத்தவன்காண்
நன்றாய்மனுநீதி நடத்துமுறைதனிலே
குன்றுன்மலாறிலொன்று கொண்டாரிவன்காணும்
இல்லோரிறப்போர் இளைத்தோர்கள்தங்களுக்கு
எல்லோருயிரு மிவனுயிர்போற்காத்தவன்காண்
சத்தியவாழ்வை தவறாமல்பூவுலகில்
நித்தியம்நீதி நிலைநிறுத்தும்புண்ணியர்கள்
திங்கள்மும்மாரி சிரக்குமிரம்பொழியும்
பொங்கும்புலியும் புல்வாயில்மோர்துறையில்
வுண்ணுமது தண்ணீரில் வுரவுமிகவுமுண்டாம்
மண்ணுலகிலிந்த மகிமையிவநீதியிது
வழக்காகவீமனுடன் வரும்புருஷர்மாமிருகம்
பழவாருந்தன்மருடன் பக்கலிலேஞாயமிது
வந்திருவர்தானும் வழக்கென்றுதான்கூற
பிந்தினன்வீமன் பிளந்துகொள்ளென்றனன்காண்
தெரிந்துதுரௌபதையைத் திரியோதனன்பிடித்து
பிரிந்துதுகிலுரியப் பார்த்துநின்றநால்பேரும்
வில்லம்புதீட்டி வெகுண்டுசினத்தெழுந்து
வில்லம்புதன்னை விலக்கியேநின்றவன்காண்
பாரின்மேலாசையற்றுப் பரிந்துமேயிங்குவந்தான்
சேரவேதானிருந்து தீங்கொன்றும்பேசாமல்
ஆவலுடனிங்குவந்தான் அன்பாகநம்மருகில்
மாபெலியேயென்று மகிழ்ந்துரைத்தார்மாயோனும்
பென்றளவில்மாபெலியும் இருதரமும்தான்முழுகி
சென்றுதருமனையுஞ் சிந்தையுறத்தான்தழுவி
மன்னவரேநீர்காண் வருந்தியேசெய்தவத்தில்
இன்னகரில்வந்தாய்நீ என்றுமிகப்புகழ்ந்து
உற்றதொருதர்மருக்கு உபசாரமாயுரைத்து
மற்றுமந்தமாபெலியுங் வணங்கினாரம்மானை
மாபெலியுந்தானிருத்தி மாயோனேயுன்பாதம்
காவலனார்தருமனையுங் கையுடனேகொண்டுசென்று
பேராரும்பார்த்தனு பிரகலாததேவருடன்
தாராருநாரதனுஞ் சதுர்வேதமாமுனியும்
பக்தியுள்ளஆழ்வார்கள் பன்னிருபேர்தன்னுடனும்
வீற்றிருக்குஞ்சோலைதன்னில் மேகவண்ணர்கோவிலிலே
போற்றியேவானவர்கள் பொற்றாளடிபணிந்து
தங்கும்புகழ்தருமருக்குச் சக்கரமுந்தான்தரித்து
பொங்குந்திருமால்பாதம் போற்றிநின்றுவாழ்னோர்கள்
ஆங்கவர்தம்மை அச்சுதனார்தாமிருத்தி

திங்கள்முதல்மெய்ந்தருடன் திருமாவெழுந்தருளி
குளிர்ந்தமலைச்சோலைதன்னில் கோபாலர்தானடந்தார்
அழுந்தநவரத்தினத்தில் அலங்கரித்தார்மேடைதனில்
செல்லும்பொழுது திரல்வீமன்விசையனுடன்
சொல்லுமொருநகுலன் தோற்றமுள்ளசகாதேவன்
தோராதுரௌபதையுஞ் சுகிர்தவாவதர்மரையும்
இருவரையுங்கண்டு எதிரேஎழுந்திருந்து
அரியபொருள்கண்டவர்போல் அரியினிடபாதமதில்
வந்துபணிந்து மலர்கள்மிகச்சொரிந்து
சிந்தைபணிந்து சேவித்துநிற்பளவில்
தம்பிமார்தங்களையும் தர்மரெடுத்தணைத்து
எம்பிரானசீர்பாதம் இரைஞ்சினோம்பாருமினி
நந்தகோபாலர் நரசிங்கரூபருடன்
விந்தமதில்நடந்து மெய்தளர்ந்துவிட்டீரோ
என்றுரைத்ததம்பியரே இயல்பாகஐவருந்தான்
மண்ணுலவுமாயோனை மகிழ்ந்துரைத்தாரம்மானை
இன்னகரிலிப்போதும் இருமென்றுதானுரைத்தார்
ஆனந்தப்பருதிகொண்டு ஐவரும்நீராட்டி
தானந்தமானவள்ளல் சாத்திமுடிசூட்டி
மாபலனார்தாமும் மனமகிழ்ந்துதான்வாழ்த்தி
நேயமுடன்கொண்டுசென்று நித்தியஞ்சேர்மண்டபத்தி [ல்
அன்பாகநம்மிடத்தில் அருகேயிருமெனவே
இன்பாகமாய னிருமென்றாரம்மானை
நாரதனார்தாமுதலாய் நவமுனிவர்தான்கூடி
சீரானநால்வேதந் திருந்தவேபாருமென்று
வீரசிங்காசனத்தில்மேவி யிருமென்றுதானுரைத்தான்
பாரதங்கொள்மாவேந்தர் பரிந்துமிகவீற்றிருந்தார்
வெங்கவரிதான்வீச விருதுபலமுழங்க
தங்கமணிமண்டபத்தில் தம்பியருந்தர்மருந்தான்
எந்திழையோர்தம்மோடு இருந்துபணிமாற
ஆய்ந்தமடமாதர் அரம்பையர்களாடல்செய்ய
அச்சுதனார்நேசம் அகலாதபஞ்சவர்கள்
மெச்சும்புகழ்வைகுந்தம் வீற்றிருந்தாரம்மானை
பொய்யில்லார்கையில் புண்ணியமேசெய்ததினால்
செய்யும்வெகுதர்மமெல்லாம் தேடியேசெய்தபலன்
பரிதிமதிகாணாத பச்சைமால்தன்பதத்தில்
விளிதபசுபஞ்சவர்கள் மேவினர்காணம்மானை
கவிருற்றபஞ்சவர்கள் காணாதவிந்தநகர்
கண்டாரிவரென்னை கனகசபைதான்முழுதும்
அண்டர்முனிவோரும் அதிசயமாய்க்கொண்டாடி
மெய்கண்டார்கண்டார் வெளியிலொளியாயிருந்தார்

வைகுந்தங்கண்டார் வாசமுள்ளபஞ்சவர்கள்
என்றுகதைசொல்ல ஏற்றசெனமேசயன்றான்
சென்றுதிருச்செவியில் செவிடுமதுநன்றாக
ஓசையாய்க்கேட்டு உளமகிழ்ந்துதானிருக்க
வாசமுடன்போற்றுகிற பழையகருப்பட்டதுவும்
வெண்பட்டுமாகி விருமையதுதானீங்கி
பண்பட்டுவார்த்தை பழையபடிதான்பேசி
விருமையகன்றுவென்று மேதினியோர்கொண்டாட
பொருமையுள்ளபஞ்சவர்கள் புவியாண்டுவிந்தமதி
போனவதிசயந்தான் புதுமைபுதுமையென்று
ஆனசனமேயற்கு அறிவுமிகவந்ததினால்
சத்தியவான்விசனம் சத்திவிளங்குதென்று
பத்தியுடனப்போது பஞ்சவர்கள்கோவிலொன்று
கட்டிமுடித்துக் கைகுவித்துபூசைபண்ணி
திருஷடிகழித்துத் திருக்கோவிலாலயமாய்
பூமிதனிலந்த பூலோகங்கொண்டாட
ராமனேராமாவென்று நாதமணிதானுட
திருவிளக்குநின்றிலங்கத் தீபமுடன்தூபமதாய்
பரிமளங்கள்வீசப் பஞ்சவர்கள்கோவிலொன்று
வருவார்பணிவார் தன்வினைகள்தானகல
மெய்யடிகள்காட்டி விளங்கியலோகமெல்லாம்
ஐயரதிசயங்க ளன்புடையோர்கொண்டாட
தர்மர்கதையென்று தாரணியிலேதுதிக்க
கர்மமகலக் கற்பனைகள்விட்டோட
நோய்கள்பலதீர நொந்துமனங்களிக்க
பேய்களகல பிரமஹத்திதான்தீர
குட்டங்குலைநோய் குலைமுட்டிநீராமை
அட்டங்குணவாய்வு அடங்காதபிணிசமும்
வெட்டைக்கரப்பன் வெடிகுலைமேகமுதல்
துட்டகிரந்திபல சோகைகாமாலையுடன்
அந்திரவாய்வு அண்டப்பவுத்திரமும்
முந்திஇடுப்புவலி முழங்கால்கரப்பனுடன்
கன்னிகரப்பன் கடியாண்டமாயூடன்
அன்னக்கிருமி அழிநீரழிவுமுதல்
பல்குத்துப்பல்லரணை பாண்டுநீராம்பலுடன்
உடக்குத்துடன்பருதல் ஒசுங்கச்சுரமுதலாய்
ஈளையிருமல் இளைப்புப்பெருவயிரும்
கோழைகுவளைக் கொடியநீர்பிணிசமும்
வாதகரப்பன் மண்டைசொரிகரப்பன்
காதிரைச்சல்கண்புகைச்சல் கண்மாசடைமுதல்
வைப்புவதைப்பு வலுத்தபில்லிசூனியமும்

வெப்புவெதுப்புவிரணம்பலபலவும்
முகவாதசன்னிமுடங்கள்தலையசைப்பும்
பகராதபித்தம்பழுத்தரத்தக்காசலமும்
கடுத்தவயிற்றுளைகள்கண்டிப்புக்கொண்டையுடன்
அடுத்தநீக்கல்அருசிதந்திவாதமுதல்
வலிப்புவிஞ்சப்புவாகோய்வரட்சியுடன்
கலிப்புபிளவைகண்ணோசைவிப்புருதி
சண்டிவலிவுப்பிருமல்தாதுநட்டமானதுவும்
ஆண்டிவனுக்கோர்நோய்அத்தனூர்வாய்வுமுதல்
பருப்பவெனசிலவிஷங்கள்பண்டிப்புத்தொண்டைவலி
கருப்பழிகளூர்கிருமிகளுமிகச்சொற்பனமும்
உள்ளுக்கிருவாட்டுமுடலிவெலும்புருக்கும்
வெள்ளுளுவைவெள்ளுகடுவீகரும்பெரும்பாண்டு
எரிபிடவைகரிபிடவைகூடுமுண்றப்பாடுமுதல்
அரிபிளவைசப்பாணிஆனந்தவாய்வுடனே
அழல்நோய்பொருமலடைப்புநீர்கல்லடைப்பு
வெள்ளைக்குழந்தைகட்குவந்தவியாதிகளும்
சீதஞ்சுபாவைசேட்டுமத்தின்கொட்டாலே
வாதசுரம்பித்தசுரம் வலுத்தசுரமானதும்
எழுநாயராகி எழுந்தவியாதிகளும்
பழுநாயரான பாரிசவாய்வுமுதல்
தீருமென்றுமாயன் திருவாய்மொழிந்தபடி
ஆருந்தவமுடையார் அரிகரியென்றுசொல்ல
வாக்குமனமொன்றாய் மகிழ்ந்திருந்துதான்கேட்க
பார்க்கும்பழிபாவம் பரந்துவிடுஞ்சத்தியமே
என்னதவமானு மிட்சித்துகேட்போர்க்கு
சொர்னமயமாக சொரிவாள்துரௌபதையும்
பிள்ளைத்தவமும் பெருந்தவமுந்தான்கொடுத்து
இள்ளைத்துரௌபதையுங் கேட்டவரந்தானீய்ந்து
நேமமுள்ளகாரியந்தான நிமித்தத்தில்வேணுமென்று
விமனுதவிசெய்ய விசையன்மனமகிழ்ந்து
சென்றுசெலுத்தித் திசைகளெட்டுங்கீர்த்திபெற்ற
வென்றநகுலன் வெகுவரங்கள்தானீய
மருத்துஞ்சகாதேவன் மற்றுமுள்ளநோய்பலமும்
பன்னுமொருஞானப் பார்வையாள்தான்தீர்க்க
தருமர்குருவாகத் தான்கொலுவில்லையிருக்க
கருமம்பரந்தோடக் கசடுவினைதீர
சத்திவிலங்கச் சகலபிணிதீர
வெற்றிகொண்டதன்மரென்று விண்ணுலகும்மண்ணுலகும்
அங்குத்திருமா லிடத்திலவர்சிறந்திருக்க.
இங்குமவர்தானிருந்து ஏற்றவரங்கொடுக்க

பெற்றார்பெருமையென்று பேருலகோர்கொண்டாட
உற்றாருரவோர் உகந்துபணிமாற
பூங்காவில்வாசனைகள் போதவேதான்வளக்க
தூங்காமணிவிளக்குச் சந்நிதியெல்லாமணக்க
சாம்பிராணிவாசம் சந்நிதியெல்லாமணக்க
தேம்பாமல்நாதமணி திருச்சங்குதான்முழங்க
தீராவினைதீர்க்கும் திரமும்சவுரியதும்
தாரணசெனமேசயன் தானறிந்துபோற்றிசெய்ய
பொருமையுள்ளபஞ்சவர்கள் பூலோகந்தனிலிப்போ
வெறுமைபிடித்திருந்த மெய்மறதிதான்தீர்த்தோம்
விதிவசத்தையாராலும் விலக்கமுடியாதெனவே
அதிசயமாய்க்கொண்டாடி அத்திபுரநகரில்
வீற்றிருந்துசெங்கோல் விளங்குமுடிசூட்டி
பார்த்திபருஞ்சூழப் பார்மன்னர்தான்சூழ
சிங்காசனத்திருந்து செங்கோல்செலுத்துதற்கு
மங்காவுயிர்கருட வாக்கியமுந்தான்கேட்க
நினைத்துசெனமேசெயன் நெஞ்சுருகித்தான்வேட
அனைத்துயரும்வேத வியாசரதுவரிந்து
பொன்னுலகம்விட்டு பூலோகந்தன்னில்வந்தார்
மின்னுலவுமந்த வேதவியாசரையும்
கண்டுசெனமேசெயன் கண்களிக்கத்தான்போற்றி
தொண்டனுக்குப்புத்தி தோற்றமுடனுரைத்தீர்
அந்தவிவரமதை யாராய்ந்துபாராமல்
வந்தபிர்மஹத்தி மற்றிவிக்கவேண்டியென்னை
பஞ்சவர்களைவர் பாராண்டுபாரிழந்து
வஞ்சமில்லாவைகுந்தம் வாழ்பதிக்குப்போனகதை
கேளுமென்றுசொன்ன கிருனப்படிதானும்
நாளுமொருமாதம் நன்றாகத்தான்கேட்டான்
நாளும்பிரமையது அகன்றதுகாண்தாமுனியே
போனநிலைவர் பதுமைவரசயத்தின்
ஞானமுடன்கோவில் தான்சமைத்தபூசைபண்ணி
வானவரேயெப்போதும் வைத்துவணங்கிறேன்காண்
நாமுந்தன்பாதம் நாள்தோறும்நான்மறவேன்
என்றுசெனமேசெயன் நாள்தோறும்நான்மறவேன்
என்றுசெனமேசெயன் இவ்வார்த்தைதான்கூற
அன்றுகுருவேத வியாசர்கவிகளது
சத்தியவாண்மை தவறாதாரிப்போது
நித்தியமாயெங்கும் நிரந்தரமாய்நின்றவர்கள்
இங்குமிருப்பார் எவ்வுலகுந்தானுள்வார்
அங்குமிருப்பார் அமரரோடாதனத்தில்

நல்லவர்கள்பஞ்சவர்கள் நற்றவம்பெற்றாரெனவே
வல்லவர்கள்மாமுனிவர் மகிழ்ந்துசெனமேசனுக்கு
ராசசிங்காதனத்தில் நன்றாயிருந்துசெங்கோல்
வாசமுடன்பூவுலகில் மன்னாயிருமெனவே
வாழ்த்திவிடைகொடுக்க மகிழ்ந்துசெனமேசனுமே
போற்றிநமஸ்கரித்துப் பொற்பாதம்பூண்டுகொண்டு
சாற்றிய மாமுனியைச் சரணமென்றுகைதொழுது

விருத்தம்.

பூருவத்தரசுநாட்டில் பூவுலகனைத்தும்பூட்டி
வேறுசொற்பகையுங்காட்டி மித்திரபேதமாக்கிக்
கூறுமுற்கதையுங்காட்டிக் குலத்தொழில்புரியவீட்டில்
பேர்பெற்றஐயரென்று பெருமையைமுடித்தாய்போற்றி ௱௩௨
அடியேன்செய்தபிழைபொறுத்தீராகநிறுத்திவினையறுத்தீர்
சிறியேனுனதுபயலாகச் சித்தமிரங்கியவைதினமும்
வெறியோய்க்கல்விவகைபுரிந்தீர் விட்டகுறையும்நிறைவேற்றி
குறியாய்மகுடமுடிசூட்டுங்கோவேயெனதுகுலக்கொழுந்தே ௱௩௩
இன்னஞ்சிதயேன்கலியுகத்திலிருந்துமெலிந்தவுழலாமல்
முன்னஞ்சுதோர்க்குநூற்றுவற்கு மொழியும்விவாகமதுபோக
வின்னஞ்சுமாரநெடுஞ்சயம் விரும்பியுரைத்துவடியேனை
தன்னஞ்சுறிவத்தானதுபோற்றற்காத்தருளுஞ்சற்குருவே ௱௩௪
முன்னாள்நடந்தவழிவசமு முதையுமெனக்குத்தெரியாது
இன்னாள்நமக்குவிபரித்தமா லென்னைமறந்துசகியாமல்
அண்ணாட்கலியன்வந்திநாலேவர்நடந்தாரரியிடத்தில்
இன்னாளுமக்குநானடியேன் பேசாதடிமைவாழ்வேனே ௱௩௫
குருகுலத்தரசர்க்கெல்லாங் கொற்றவாயற்றபோது
வருமெனச்சமையமென்பேன் தந்தருள்புரிந்துநீரும்
இருவெனத்தடுத்தாட்கொண்டுயேங்கியவடியின்மீதில்
தருவெனக்கனகமீயுஞ் சற்குருநாதாபோற்றி ௱௩௬

கதை.

தோத்திரமுஞ்சொல்லித் தொழுதசெனமேசனையும்
வாழ்த்திவிடைகொடுத்து மகாமுனிவர்தான்போனார்
வேதவியாசர் விண்ணகத்துக்கேகியபின்
சாதுசெனமேசயன் தாரணியோராசன்
இருந்தான்கொலுவி லேகசிங்காதனத்தில்
வருந்தார்தமக்கு வணங்காதகோடறியாம்
கலியுகத்திலேயிருந்த காரணமாம்நற்கதையை
சலியாமல்கேட்கத் தான்பிரமைதீர்ந்தமையால்
பலிதமுள்ளதன்கதையைப் பட்சமுடன்தான்கேட்டு
வலியவர்கள்தன்கதையை மனமகிழ்ந்துகேட்டோரும்
எழுதிப்படித்தோர்க்கு மின்பமுற்றுக்கேட்டோரும்
தொழுதுவைகுந்தகதை சொல்லிமுடித்தோர்க்கும்
வைகுந்தமென்றொருகால் வாயினாற்சொன்னோர்க்கும்

செயகண்டவாசன் விஷ்ணுபதமுண்டாகி
வந்தவினையும் வருவினையுந்தான் தீர்த்து
செந்திருமால்பாதஞ் சேர்ந்திருப்பீர்கண்டீரே
இந்தவைகுந்தகதை இயல்பாகமுன்னாளில்
சிந்தைமகிழ்ந்து ஸ்ரீரங்கர்தான்சீஷன்
வேங்கியருளவடவான் விளம்பினானிக்கதையை
பொங்கியசொற்றமிழைப்பூரித்துநன்றாக
முதலில்முதல்தெரிந்து முற்கதையையாராய்ந்து
அதிலும்பொருள்விரித்து அத்தன்செயலாலே
ஒருசொற்பொருளை ஒன்றுபத்தாய்தான்விரித்து
கருவாகவேதெரிந்து கற்பித்தோன்விற்பனமாய்
திருந்துபுகழ்வசைத் தென்வீரையம்பதியான்
பொருந்துதமிழ்பெற்றோன் புகழேந்திதன்புதல்வன்
மன்னவனும்பொன்னழகு மகிபனிடதன்மருகன்
அன்னதருவானவற்கு மன்புடையோர்தங்களுக்கும்
மின்னுதமிழ்வாணருக்கு வேந்தரமைச்சருக்கும்
சொன்னபடிகேட்டுத் தொழுதுமிகவணங்கி
சீஷனடியார்க்கும் சீஷனாய்த்தானிருந்து
தாசனென்றுகூறி தமிழில்லிக்கதையை
தேடிதமிழாராய்ந்து திருவிருத்தந்தான்கடந்து
நாடிபொருளாராய்ந்து நமஸ்கரித்துமுற்கதையை
சேத்திரம்போலநன்றாய் திரட்டினானிக்கதையை
கோத்திரமுந்தான்வாழ்கக் கூறினானிக்கதையை
வாழிமிகவாருமங்காதநூல்வாழி
ஆழியுஞ்செங்கோல்செலுத்து மரசர்மிகவாழி
கேட்போர்படிப்போர் கிளைகளுடன்தான்வாழி
ஆழ்ந்தபெரியோரனைவோருந்தான்வாழி
அன்னைசுற்றம்வாழி அருந்தமிழோர்தான்வாழி
சின்னஞ்சிறுபிள்ளை செல்வமுடன்தான்வாழி
ஆல்போல்தழைத்து அலகதுபோல்வேரூன்றி
மூங்கில்போலன்னை சுற்றமுசியாமல்வாழியதே
பால்பசுவுபாண்டநடுப் பாரில்மிகவாழியதே
ஓங்கியேநால்வேத முயிர்பலவுந்தான்வாழி

விருத்தம்.

அரிகரிராமாவென்றால் அனேகமாஞ்செல்வமாகும்
அரிகரிராமாவென்றால் அனேகமாம்பொருளுஞ்சேரும்
அரிகரிராமாவென்றால் அறங்களுமிகந்துவாழும்
அரிகரிராமாவென்றால் அவர்கள்மெஞ்ஞானியாமே

மகாவிந்தமென்னும வைகுந்தஅம்மானை:

முற்றிற்று.